

# மலையின் அடுத்த பக்கம்

சிவசங்கரி

# மலையின் அடுத்த பக்கம்

## 1

**வி**டிய இன்னும் நேரம் இருந்தது.

தலையைத் திருப்பி, ஜன்னலுக்கு வெளியில் பார்வையை அலைய விட்டபோது, அலட்சியமாய் வெட்டிப் போடப்பட்ட நகத்துண்டாய் நிலா தென்பட்டது

எங்கோ, ஒற்றையாய்ச் செல்லும் ஆட்டோ ரிக்ஷாவின் சத்தத்தையும் மீறிக் கொண்டு கவர்க்கோழியின் கத்தல் ஓங்கி ஒலித்தது.

மூச்சை நீளமாய் உள்ளுக்கு இழுத்து வெளிவிடுகையில் தோட்டத்தில் மலர்ந்திருந்த பாரிஜாத மலர்களின் வாசம் நாசி வழியாகச் சென்று நெஞ்சை சுகமாய் நிறைத்தது.

இரைச்சலும், கண்சிமிட்டும் சிகப்பு விளக்குமாய் தாழப் பறந்த விமானம் ஒன்று சில கணங்களுக்கு கண்களைக் கட்டிப் போட்டு விட்டு, மெள்ள மறைந்தது.

இருட்டை ரசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அந்த நிமிஷத்தில் மனசு சந்தோஷமாக இருப்பதை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

புரிந்து கொண்டது சந்தோஷத்தை இன்னும் அதிகமாக்க, சின்னதாகப் புன்னகை ஒன்று உதட்டோரத்தில் ஜனித்தது.

''என்ன சிரிப்பு, அர்த்த ராத்திரியில்?''

திரும்பினாள்.

நீல நிற விடிவிளக்கு மெல்லியதாய்ப் பரப்பிய வெளிச்சத்தில் கோபி தூக்கக் கலக்கத்தோடு கண் விழித்திருப்பது தெரிவானது.

"அடடா சரியான கழுகுப் பார்வைதான் உங்களுக்கு... நா விழிச்சது எப்படித் தெரிஞ்சுது? உங்களுக்கும் தூக்கம் வரலியா?"

"ஏன் வராம? இத்தனை நாழியா தூங்கிட்டுதானே இருந்தேன்?...ஆமா."

"நீ தூங்கலியா? இருட்டுல என்னைத்த பாத்துச் சிரிச்சுகிட்டு இருக்கே? ம்?"

சித்ரா சிரித்தாள். கணவனின் தோளில் தலை வைத்துப் படுத்தாள். கண்களை உயர்த்தி அவனைப் பார்த்தபடி சின்ன குரலில் பேசினாள்.

"தூக்கம் வரலை."

"ஏன் வரலை?"

"மனசு ரொம்ப பரபரப்பா இருக்கு..."

அவள் நிலை புரிந்த நிலையில் சிரித்த கோபி, அவளுடைய தோளுக்கு அடியில் கையைக் கொடுத்து, தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"உங்களுக்குச் சந்தோஷமா இல்லியா?"

"இருக்கே!"

"அப்ப, நிச்சிந்தியா எப்படி தூங்க முடியுது?"

"நிம்மதியா தூங்கினேனா? எங்கே! அதான் விழிச்சிட்டேனே... ஆமா, தெரியாமத்தான் கேக்கறேன், இப்படி நடுராத்திரியில கொட்டக் கொட்ட விழிச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கறதும், தனக்குத்தானே சிரிக்கறதும்தான் சந்தோஷமா இருக்கறதுக்கு அர்த்தமா என்ன?



கேலியாய் அவன் கேட்க, சித்ரா அவன் மார்புக்குள் இன்னும் கவிழ்ந்து முன் தலையால் முட்டினாள்.

"ஹேய்...ஹேய்...இச்சு இச்சு முட்டாதே... வேணாம் இந்தச் சந்தோஷத்துக்கு அதே தேவலை... நீ பராக்கு பாரு சிரி...நா தடுக்கலை..."

பலவந்தமாய் அவளைத் தூக்கி மார்பில் கிடத்திக் கொண்டு கோபி சிரிக்க, சித்ராவும் வாய்விட்டுச் சிரித்தாள்.

"மணி என்ன தெரியுமா? மூணு! என்ன கூத்து இது இந்த நேரத்துல? ம்?"

குப்புறப் படுத்து, கையை மடித்து, உள்ளங்கையில் முகவாயை சித்ரா ஊன்றிக் கொண்டாள். பின், முகத்தைத் தீவிரமாக வைத்துக் கொண்டு பேசினாள்.

"சாயங்காலம் ஆபீஸிலேந்து வந்து 'சேர்மன் கூப்பிட்டிருந்தார். போயிருந்தேன்; வர்ற ஒண்ணாம் தேதிலேந்து என்னையும் ஒரு டைரக்டரா நியமிக்க போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் மீட்டிங்ல தீர்மானம் ஆயிருக்காம்'னு நீங்க சொன்ன நிமிஷத்துலேந்து மனசு பூரா ஹா ஹானு சந்தோஷம் கும்மாளம் போடுது. கோபி, சமாசாரத்த கேட்ட உடனேயே எங்க வீட்டுக்குப் போய் அப்பா அம்மால ஒண்ணா நிக்க வச்சி எங்க கல்யாணத்துக்குச் சம்மதிக்க ஆயிரம் யோசனை பண்ணீங்களே—பத்து வயசு வித்தியாசம் இருக்கே; ஜாதி விட்டு ஜாதி திருமணம் அவசியமா? பிள்ளை வீட்லேயும் அப்படி ஒண்ணும் ஒஹோனு கொட்டிக் கிடக்கலியேனு வேண்டாத காரணங்களை எல்லாம் காட்டி எங்களை பிரிக்க நினைச்சிங்களே—இப்ப பாத்தீங்களா? கல்யாணமாகி ஏழு மாசம் ஆகலை, அதுக்குள்ள என் கோபி கம்பனில டைரக்டர் ஆகப்போறார். அடுத்த மாசத்

நிரேந்து வாசல்ல கார் நிக்கப் போகுது...பணம், அந்தஸ்து எல்லாம் உயரப் போகுது... இப்ப என்ன சொல்றீங்க'னு தலை நிமிர்த்திக் கேக்கணும்போலத் துடிப்பா இருக்கு—ராத்திரி நேரமாயிட்டதால முடியல... காலைல உங்களை ஆபீசுக்கு அனுப்பினதும் முத வேலை அதான்."

கண்களை ஒருவித் திர்மானத்துடன் அவன் ஏறிட்டுப் பார்க்க வேடிக்கையாய் இருக்க, குனிந்து அவள் தலையில் செல்லமாகக் கோபி முட்டினான்.

"இந்த நைட் லைட் வெளிச்சத்துல, இப்படி முகத்தை வச்சுக்கிட்டுப் பேசறப்போ இருபத்திரெண்டு வயசு நிரம்பின புத்திசாலி பொண்ணுக்குப் பதிலா, அஞ்சரை அடி உயரத்துக்குள்ள பதுங்கிட்டு இருக்கற ஒரு சின்ன குழந்தையாத்தான் எனக்கு நீ தெரியற... உன்னை அப்படியே இழுத்து அணைச்சு, மடில போட்டுக் கொஞ்சமாட்டமானுதான் எனக்கு இப்ப பரபரப்பா இருக்கு..."

பேசிக்கொண்டே எழுந்து உட்கார்ந்து, சொன்னதைச் செயலில் காட்ட முற்பட, சித்ரா அவன் பிடிக்கு அகப்படாமல் உருண்டாள்.

"என்ன, என்ன? திரும்பச் சொல்லுங்க... என் பேச்சு குழந்தைத்தனமா இருக்கா? அ...அ...இதானே வேணாங்கறது... கல்யாணத்துக்கு முன்னால நீ மெச்சூர்டா சிந்திக்கறது, பேசறது எனக்கு ரொம்பப் பிடிக்குது...அதான் கல்யாணமே வேணாம்னு இருந்த என்னை மாத்தி உன்னை நினைக்க வச்சிது'னு— இதே வாயால நீங்க சொல்லலை? இல்லேன்னு சொல்லாதீங்க... உங்களுக்கா, அதான் என் புரொபஸர் அந்தப் பேச்சுக்குச் சாட்சி...எப்ப கூப்டுக் கேட்டாலும் 'நீ சொல்றதுதான்



நிஜம் சித்ரா'னு சொல்வாங்க... இப்பவே போய்க் கேக்கலாமா? அப்படியே அவங்ககிட்டேயும் உங்க ப்ரமோஷன் பத்தி சொல்..."

அவளை முடிக்க விடாமல் மேலே பாய்ந்து, முரட்டுத்தனமாய்க் கோபி அணைக்க...

"ஹா... மூச்சு... மூச்சு... மூச்சுவிட முடியலை..." சித்ரா கத்த...

"மெதுவா...ஏன் இப்படி கத்தறே... அடுத்த வீட்டுக்காரங்க நா உன்னை என்னமோ கொடுமைப்படுத்தறேன்னு நினைக்கப் போறாங்க..." என்று கோபி... கெஞ்ச...

இரண்டு பேரும் சேர்ந்து சிரித்தார்கள்.

"நிஜமாவா நா—குழந்தைத்தனமாவா பேசறேன்?"

"நிஜமாத்தான்...சிலசமயம் அதிக புத்திசாலித்தனம், பேச்சு, வயசுக்கு மீறின அழுக்கம், மனோதத்துவ ஆராய்ச்சி...சிலசமயம் வயசுக்குப் பொருந்தாத குழந்தைத்தனமான எண்ணம், சிரிப்பு... இப்பமாதிரி... ஆனா, இந்த 'காம்பினேஷன்'தான் உன்னை அடுத்தவங்ககிட்டயிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுது... யூ ஆர் ஏ பண்டில் ஆஃப் காண்ட்ராடிக்ஷன்ஸ் அண்ட் ஐ லவ் திஸ் காண்ட்ராடிக்ஷன்ஸ் இன் யு..."

விளையாட்டாக ஆரம்பித்து, தீவிரமாகக் கோபி பேசி முடிக்க, உடனடியாகப் பதில் ஏதும் சொல்லத் தெரியாத மாதிரி சித்ரா அவனையே வெறித்துப் பார்த்தாள். தொடர்ந்து அவன் புஜத்தில் தலைவைத்துப் படுத்து, மார்பின் குறுக்காகக் கையையும், அவன் கால்களுக்கு மேல் தன் காலையும் போட்டு இறுக அணைத்துக் கொண்டாள்.

கோபி அவன் முடிக்குள் விரலை விட்டுக் கோதி விட்டாள்.

"உங்க வீட்டுக்குப் போய், அப்பா அம்மாகிட்ட பேசப் போறதா சொன்னியே, அது விளையாட்டுக்குத் தானே?"

"இல்லையே...இதுல என்ன விளையாட்டு?"

"நோ...நோ...அது தப்பு சித்ரா?"

"எது தப்பு?"

"ஏதோ ஆதங்கத்துல பெரியவங்க அப்ப அப்படிச் சொன்னாங்கன்னா, அதைப் போய்ப் பெரிசா பாராட்டலாமா? இப்ப நம்மகிட்ட நல்லாதானே இருக்காங்க? பழசை நினைச்சு கசப்பு வளக்கறதைவிட, உறவை சுமுகமாக்குற வழிய தேடறதுதானே சரி...? அது தவிர, இன்னிக்குத்தான் சேர்மன் கூப்டு பேசியிருக்கார்...இது 'அஃபிஷியலா' லெட்டர் மூலம் என் கைக்கு வந்து சேர்ற வரைக்கும் வெளில யாருக்கும் சொல்லாம இருக்கறதுதான் முறை, ஒத்துக்கறே இல்ல?

படுத்திருந்த சித்ரா எழுந்தாள். கணவனின் முகத்தைக் கையில் ஏந்தி எம்பி இரண்டு கண்களிலும் மென்மையாய் முத்தமிட்டாள்.

"உங்ககிட்ட எனக்கு ரொம்பப் பிடிச்சது என்ன தெரியுமா? இந்த நிதானம்தான்...இப்படிப் பொறுமையா தெளிவா பேசி எதையும் எனக்குப் புரியவைக்கிற, என்னை ஒத்துக்க வைக்கிற, இந்தக் குணம்தான்... பல சமயங்களில் என்னை நானே அலசிப் பார்க்கறப்போ ஒரு காட்டாறு மாதிரி இருக்கேன்றது புரிஞ்சு, உணர்ச்சி வசப்பட்டு கண்மண் தெரியாம ஏதாவது, செஞ்சிட்டா என்ன பண்றதுனு நா கவலைப்பட்டிருக்கேன். ஆனா, உங்களோடு வாழத் துவங்கினப்புறம், அந்தக் கவலை



துளித் துளியா குறைஞ்சிக்கிட்டு வர்றது நிஜம். காட்டாற்றுக்குக் கரை மாதிரி எனக்கு நீங்க... உங்க விவேகம் என்னையும் நிதானப்படுத்திடும்ன்ற நம்பிக்கை எனக்கு இருக்கு...

பேசியது போதும் என்கிற மாதிரி கோபி அவள் தோள்களைப் பற்றித் தூக்கித் தன் மார்பில் படரவிட்டுக் கொண்டான். உதடுகள் வலிக்க அழுத்தமாக முத்தமிட்டான்.

சில நிமிஷங்கள் அப்படியே படுத்துக் கிடந்த பின் நினைத்துக் கொண்டு சித்ரா எழுந்து உட்கார்ந்தாள்.

"தூக்கம் வருதா கோபி?"

"தூங்கிட்டு இருந்தவனோட அரை மணியா கூத்தடிச்சிட்டு மஹா சாதுவாட்டம் இது என்ன கேள்வி?"

"நானா? உங்களை எழுப்பினேனா? என் பாட்டுக்கு நிலாவ பாத்து, என்னென்னவோ கற்பனைல இருந்தவள..."

"சரி...சரி...உன்னை வம்புக்கு இழுக்கிற குஷில நானாத்தான் எழுந்தேன்—போதுமா? இப்ப சொல்லு... தூக்கம் வருதா கோபி—னு எதுக்காக பீடிகை? வரலைனு சொன்னா என்ன செய்யறதா உத்தேசம்...?"

கண்கள் குறும்பில் மின்ன அவன் கேட்க, சித்ரா சிரித்தாள்.

"எதுவும் செய்யறதா உத்தேசம் இல்ல... உங்க கூட கொஞ்சம் பேசலாமேனுதான்..."

"போச்சுடா... இத்தனை நாழியா அதத்தானே செஞ்சோம்?"

"அ...அ... வெறும்மனே பேசிட்டுதான் இருந்தமா? விட்டா முழு பூசணிக்காய சோத்துல அமுக்கிடுவீங்களே சாமி..."

சிரித்த கோபி முன்னால்சாய்ந்து அவள் கையைப் பற்றித் தன் கைகளுக்குள் கெட்டியாய் இறுத்திக்கொள்ள, "ப்ளீஸ்—சீரியஸாத்தான் சொல்றேன்—கொஞ்சம் பேசலாமா?" என்றாள் சித்ரா தொடர்ந்து...

"ஓ.கே...நா ரெடி. ஆனா, வழக்கம்போல ஹார்லிக்ஸ் சாப்டுகிட்டே பேசலாமா?"

திருமணமான இந்த ஏழு மாசங்களாய் இப்படி நடு இரவில் எழுந்து உட்கார்ந்து சிரிப்பதும், சமையல் கட்டுக்குச் சென்று வெந்நீரில் ஹார்லிக்ஸ் கரைத்து பருகிய படியே வம்படிப்பதும் பல சமயங்களில் நடந்திருக்க, இன்றும் எழுந்து போனார்கள்.

காஸ் ஸ்டவ்வை எரிய விட்டு, வெந்நீர் கொதித்த பின், இரண்டு தம்ளர்களில் ஹார்லிக்ஸ் போட்டு, கலந்த நாழிகையில் அவள் இடுப்பைப் பற்றி, காதைக் கடித்து, பின் கழுத்தில் ஆள்காட்டி விரலால் 'ஐ லவ் யூ' என்று எழுதி கோபி சேஷ்டை செய்தான்.

சமையல் அறையிலேயே ஒரு பக்கமாய் இருந்த சாப்பாட்டு மேஜையில் தம்ளர்களையும், பிஸ்கட்டு டப்பாவையும் எடுத்து வைத்தார்கள். நாற்காலிகளை நெருக்கமாய் அருகருகே இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார்கள்.

"சொல்லு, என்ன பேசணும்?"

வாய் நிறைய பிஸ்கட்டைப் போட்டுக் கொண்டே சித்ரா பேசினாள்.

"ராழ்ழி ழீங்க ழொன்ன ழெல்லாம் தெழம்தானே?"

"என்னாச்சு உனக்கு? தமிழ்லதானே பேசற?"

வாயிலிருந்த பிஸ்கட் துண்டங்களை மென்று விழுங்கி, அவசரமாய் ஒரு வாய் ஹார்லிக்ஸ் குடித்தவள், சற்று முன் கேட்டதையே மீண்டும் கேட்டாள்.



"ராத்திரி நீங்க சொன்னதெல்லாம் நிஜம்தானே?"

"அப்பாடி! இதத்தான் கேட்டியா? ஏதோ பாஷைல கன்னா பின்னானு திட்ட நயாக்கும்னு நினைச்சு பயந்திட்டேன்."

"விளையாடாதீங்க கோபி...ப்ளீஸ்...நா கேட்டதுக்கு பதில் சொல்லுங்க..."

"என்ன சொன்னேன்? திரும்பிச் சொல்லு?"

"வர்ற ஒண்ணாம் தேதி நீங்க டைரக்டர் ஆயிட்டீங்கன்னா, கம்பனி வீடு, கார், எல்லாம் கிடைக்கும்னு சொன்னீங்களே, அதெல்லாம் நிஜம்தானே?"

"நிஜம்...நிஜம்...நிஜம் தவிர வேறில்லை..."

"கம்பனி வீடுன்னா?"

"டைரக்டர்களோடு உபயோகத்திற்குனு வசதியாக வீடுகளை வாடகைக்கு எடுத்து வச்சிருக்காங்க...அதுல ஒண்ணு குடுப்பாங்க..."

"டைரக்டர்ஷிப் வரும்னு கனவுலகூட நாம எதிர் பார்க்காதப்போ...இது... எப்படி? திடும்னு? நினைக்க, நினைக்க, நம்ப முடியாம இருக்கு கோபி..."

அவள் கையை வாய்க்கு எடுத்துச் சென்று கோபி உள்ளங்கையில் முத்தமிட்டான்.

"உன்கிட்ட சொல்லலியே தவிர, ஏதாவது பதவி உயர்வு வரும்னு நா எதிர்பார்த்தேன்தான்...ஒரு வருஷமாகவே சேர்மன் நேரடியா என்கிட்ட சில வேலைகளை விடறார், தனியா கூட்டு கம்பனி சம்பந்தமா ஆலோசிக்கிறார்...ஆனாலும் இப்படி நாலு படிகளை ஒரேடியா தாண்ட வச்சு, டைரக்டர் ஆக்குவார்னு நா நினைக்கல தான்..."

"பின்னே? சீனியர் மேனேஜர், ஜெனரல் மேனேஜர் எல்லாரையும் ஒதுக்கிட்டு, அட்மினிஸ்ட்ரேட்டிவ் எக்ஸிக்யூடிவ்வாக இருந்தவரை டைரக்டர் ஆக்கறதுன்னா, சும்மாவா? மத்தவங்க இதை எப்படி எடுத்துப்பாங்க?"

கோபி உதட்டைப் பிதுக்கி, தோளைக் குலுக்கித் தெரியாது என்று அபிநயித்தான்.

"இதுபத்திக் கவலைப்பட வேண்டியவன் நா இல்லை... திஸ் ஈஸ் சேர்மன்ஸ் ஹெட்ஏக்"

"டைரக்டர்ஸ் க்வார்டர்ஸ் எங்க இருக்கு கோபி?"

"ஹாரிங்டன் ரோட் தெரியுமா? அங்கதான்... லவ்லி ப்ளேஸ்... பெரிய காம்பவுண்ட்ல பத்தோ, பன்னிரண்டோ இருக்கு... எல்லாம் தனித்தனி பங்களா... நிறைய மரங்கள்... பொது ஷட்டில் கோர்ட், கூட இருக்கு... சித்ரா நீ அசந்துதான் போவே..."

"பாக்கி டைரக்டர்ஸ் எல்லாம் ரொம்ப பணக்காரங்களா?"

"இது என்ன அசட்டுக்கேள்வி?"

"இல்ல அவங்களுக்குச் சரியா... நாம... வந்து... என்னால..."

சொல்ல வந்ததைச் சொல்லத் தெரியாமல் அவள் விழிக்க, கோபி பற்றி இருந்த அவள் கையின் ஆட்காட்டி விரலை மெல்லக் கடித்தான்.

"ஆ"

"அசட்டுச் சந்தேகம் எல்லாம் வந்தா, இதான் பனிஷ்மெண்ட்... வாடகை வீட்டைப்பத்திச் சொன்னதுக்கே இப்படி மலைச்சுப்போயிட்டியே... இன்னும் சேர்மன் சொன்ன பாக்கி விவரங்களையும் கேட்டா என்ன பண்ணுவியோ?"



"பாக்கி விவரமா?"

"யா... சம்பள உயர்வு, வீடு, கார், ஆள் எக்ஸ்ட்ராவோட, அடுத்த வருஷத்துலேந்து எனக்கு கம்பனி இலாபத்துலேயும் பங்கு உண்டு... வருஷத்துக்கு ஒரு தரம் கம்பனி செலவுல குடும்பத்தோடு எங்கவேணா—காஷ்மீருக்குக்கூட—பதினைந்து நாள் போயிட்டு வரலாம். சொந்த வீடு வேணும்னா, கட்டிக்க கம்பனி குறைஞ்ச வட்டியிலே பணம் கடனா கொடுக்கும்... அப்புறம்..."

சித்ரா நிஜமான கலவரத்துடன் இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டாள் "போதும்பா... நமக்கு இதுக்குமேல தாங்காது... இன்னிக்கு இத்தனை கேட்டது போதும். இதெல்லாம் ஜீரணிச்சப்புறம் மெதுவா பத்து நாள் கழிச்சு பாக்கிய சொல்லுங்க..."

அவளுடைய பிரமிப்புப் புரிய, கோபி உரக்கச் சிரித்தான்.

"இதுக்குத்தான் ஐயா சாயங்காலம் ஆபீஸ்லேந்து வந்ததும் உன்கிட்ட அத்தனையும் விவரமா சொல்லல... எப்படி நம்ம ஸஸ்பென்ஸ்... டட்டடாய்ன்..."

சித்ரா எழுந்து காலி தம்ளர்களை ஸிங்கில் வைத்தாள். கோபிக்குப் பின்னால் வந்து அவன் கழுத்தை கட்டிக் கொண்டு, உச்சந்தலையில் முகவாயினால் தேய்த்தாள்.

"சொந்தமா வீடு... நமக்கே நமக்கா?"

"நமக்கே நமக்குத்தான்..."

"தனி வீடா, ப்ளாட்டா?"

"உன் இஷ்டம்—உனக்கு எது வேணும்?"

"ம்ம்? தனி வீடு ரொம்ப ஆகும், எதுக்கு வீண் செலவு... ப்ளாட் போதாது?"

''போதும்...''

''எவ்வளோ வெட்ரும்?''

''நீ சொல்லு''

''மூணு''

''போதுமா?''

''நமக்கொண்ணு...நம்ம பசங்களுக்கு ஆளுக் கொண்ணு''

''அப்ப, ரெண்டோட நிறுத்திக்கணும்னு சொல்லு''

''ஏ...அப்பா—ரெண்டை ஆளாக்கினா போதாதா?''

''சரி, விருந்தாளிங்க வந்தா?''

''வந்தா—பசங்கள ஒண்ணாபடுக்க வச்சிடலாம்—இல்ல, நம்ம கூட படுக்க வைக்கலாம்.''

''யாரு? விருந்தாளிங்களயா...''

''ச்சி—நம்ம குழந்தைகளச் சொன்னா...''

''அதானே பார்த்தேன்...அப்புறம்?''

''லைப்ரரி அறை விசாலமா, காத்தோட்டமா, இருக் கணும், வயசான காலத்துல அக்கடானு உட்கார்ந்து புஸ்தகங்களைப் படிச்சு விவாதிக்க, நல்ல சங்கீதம் கேட்க, எல்லாத்துக்கும் லைப்ரரிய தயார் பண்ணணும்''

''உத்தரவு...''

''சமையல்கட்டு வெளிச்சமா இருக்கணும்...நா முக்கால் வாசி நேரம் அங்கதானே இருப்பேன்''

''அடக்கடவுளே—பெட்ரூம்ல இல்லியா?''

''விளையாடாதிங்க...அப்புறம்...''



''பாக்கி ப்ளானிங்க நாளைக்கு வச்சுக்கலாமா? இன்னும் கொஞ்ச நாழி போனா கண் இமை ரெண்டும் தானே ஒட்டிக்கிடும் போல இருக்கு...மணி என்ன தெரியுமா? நாலு...''

''கறவை மாடுகளைப் பால்காரர் ஓட்டிக் கொண்டு போவதை, சைக்கிள் மணி ஒலிக்க பேப்பர் போடும் பையன்கள் தெருவில் செல்வதை, யார் வீட்டு வாசலிலோ ஜருப் ...ஜருப் என்று நீர் இறைக்கப்படுவதை, தோட் டத்து மரத்துக் காகங்கள் உறக்கம் கலைந்து கரைவதை கேட்டபடி, நெஞ்சு கொள்ளாத கனவுகளுடன் கோபி யும், சித்ராவும் உறங்கத் துவங்கின அந்த சனிக்கிழமை யின் பதினோரு மணி அளவில்தான், ஆபீஸுக்குப்போன கோபி, விபத்தில் சிக்கி ஸ்தலத்திலேயே மாண்ட செதி வந்தது.

## 2

''நா கிளம்பட்டுமா?''

''ஏழாந்தரம்...''

''அப்படியா?''

''ஏழாவதுதரமா 'நா கிளம்பட்டுமா?'னு கேட்கறீங் கனு அர்த்தம்''

''ஏழுதரமாயிடிச்சா? எதுக்கு அரைகுறையா விட் டுட்டுப் போகணும்? இருந்து பத்து தரமாக்கிட்டுப் புறப் படறேன், என்ன சித்ரா?''

''என்னாச்சு உங்களுக்கு இன்னிக்கு? பதவி உயர்வு செதி வந்ததுல ஆளே மாறிட்டிங்களா? எட்டரை மணி

ஆயிடுச்சன்னா நாழியாச்சு, நாழியாச்சுன்னு ஓடுவீங்க... இன்னிக்கு என்னடான்னா..."

"என்னடான்னா?"

"எட்டே முக்கால் ஆகியும், இன்னும் கிளம்பற வழியா காணோமே! நாழி ஆகலை?"

"ஆகலைம்மா என் ராஜாத்தி..."

"அடிச்சக்கை கொஞ்சல் எல்லாம் அதிகமாகத்தான் இருக்கு..."

"என்னிக்கு என் கொஞ்சல் குறைஞ்சிருக்கு, இன்னிக்கு அதிகமாக?...நேத்து ராத்திரி கூட..."

"ஐயோ வேணாம் சாமி...ராத்திரி நடந்ததையெல்லாம் பகல்ல விவரிக்க ஆரம்பிச்சிடாதீங்க...நமக்குத் தாங்காது...இப்ப கிளம்பப் போறீங்களா, இல்லையா?"

"என்ன நீ! கிளம்பு, கிளம்புனு, வெரட்டிக்கிட்டே இருக்கே!"

"விரட்டாம? இனியும் சேர்த்து வச்சு உழைச்சு நல்ல பேர் வாங்கினாத்தானே உங்களை டைரக்டராக்கின சேர்மனுக்கும், நமக்கும் பெருமை?"

"ஆமா...பெரிய்ய பெருமை...அதவிடு...டைரக்டரா ஆகப்போற சேதி சொன்னதுக்கு 'விசேஷமா'...ஒண்ணும் கிடையாதா?"

சித்ரா தலையில் கையை வைத்துக் கொண்டு போலி அசதியுடன் உட்கார்ந்தாள்.

"ராத்திரி, தப்பு தப்பு, காலைல நாம தூங்கறப்போ மணி என்ன தெரியுமா? அஞ்சு! அத்தனை கூத்தடிச்சப் புறமும் 'விசேஷமா ஏதாவது'னு இழுத்தா?"



"அட, தூங்கறப்போ மணி அஞ்சு ஆயிடுச்சா என்ன? வார்விக்ல குடிச்சிட்டு வந்து படுத்ததும்...

"ஐயோ சாமி, தெரியாம நானே அந்தப் பேச்சு ஆரம்பிச்சிட்டேனே... மன்னிச்சிடுங்கப்பா.. கிளம்பப் போறீங்களா? இல்லியா? சமையல்கட்டுலேந்து ஆயா ரெண்டுதரம் எட்டிப் பாத்திட்டா. இங்க என்ன நடக்குதுனு..."

"இதுக்குத்தான் அப்பப் பிடிச்சுச் சொல்றேன் படுக்கை அறைக்கு வா...அங்க..."

"இப்ப நீங்க கிளம்பப் போறீங்களா...இல்லியா?"

"சரி...சரி...கோபம் வேணாம்...அப்ப, நா போயிட்டு வரட்டுமா?" சித்ரா! பக் கென்று சிரித்தாள்.

"என்ன எட்டாவது தரமா? அதுக்குத்தான் இந்தச் சிரிப்பா?"

"இல்ல கோபி, ஒரு துணுக்கு ஞாபகத்துக்கு வந்திடுச்சு...புதுசா கல்யாணமான தம்பதி ஏழெட்டு குண்டுக் குடித்தனம் இருக்கற ஒரு வீட்டுல குடி இருந்தாங்க. அன்னிக்குத்தான் கல்யாணம் ஆகி முதத்டவையா புருஷன் ஆபீஸுக்குப் போறான்...போயிட்டு வரட்டுமா, போயிட்டு வரட்டுமானு?' கேட்டுக்கிட்டு வாசவரைக்கும் வந்தவன் புறப்பட மனசு வராமலேயே இன்னொரு தரம் 'போயிட்டு வரட்டுமானு' கேட்டதும், ஏழெட்டு ஜன்னல்களைத் திறந்துகிட்டு மத்த எல்லாக் குடித்தனக்காரங்களும் "போய்த் தொலையேண்டா பாவி..."னு தாங்கமாட்டாம...கத்த..."

முடிக்க முடியாமல் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சித்ரா சிரிக்க, கோபி, பொய்க் கோபத்துடன் முறைத்தான்.

"பழசு...மஹா பழசு... எனக்குச் சிரிப்பே வரலை... அப்ப இன்னும் ஒருதரம் 'போயிட்டு வரட்டுமா'னு

கேட்டா என்னையும் 'போய்த் தொலையேன்டா'ன்னு திட்டுறீலே... அதத்தானே சொல்லாம சொல்லறீங்க?"

"சீச்சீ...மரியாத இல்லாம அப்படிப் பேசுவேனா? என்ன நீங்க? 'போய்த் தொலைங்க கோபி'ன்னு தான் சொல்வேன்."

"அப்ப என்ன...இல்லெனா குத்தம்...சொல்லு பாக்கலாம்..."

அந்தப் பொய்க் கோபத்தால் பாதிக்கப்பட்டு விட்டது போல சித்ரா ஓரடி பின்னால் நகர்ந்து "கோபம் வந்திருச்சா? இதுக்குத்தான் வயசிட்ட வாயி கொடுக்கவே பயமா இருக்கு..."—என,

கோபி, 'நிறுத்து' என்கிற பாவனையில் கையை நீட்டினான்.

"வாய் கொடுக்காட்டிதான் கோபம் வரும்...நீ கதைய மாத்தாதே...ஐயா, முப்பத்து முக்கோடி தேவர்கள் சாட்சியா லைசன்ஸ் வாங்கி இருக்கேனாக்கும்."

அவன் என்ன சொல்கிறான் என்பது புரியாமல் கால் நிமிஷம் விழித்து, பின்னர் புரிந்ததும், "நா சொன்னது மஹா பழசன்னா, இது ஹைதர் காலத்து பழசு...கேட்டுக் கேட்டுக் காதே புளிச்சுப் போச்சு... பாருங்க...இப்பக்கூட காதுலேந்து 'ஹொய்'ன்னு சத்தம் வருது பாருங்க..." என்றவாறு தலையைச் சாய்த்துச் சித்ரா வினவ, இருவரும் சிரித்தார்கள்.

கோபியின் பொய்யான அதட்டலைக் கேட்டுவிட்டு என்னவோ, ஏதோ என்று சமையல் கட்டிலிருந்து எட்டிப் பார்த்த ஆயா, தொடர்ந்து எழுந்த சிரிப்புக்குக் காரணம் புரியாமல் நிற்க. அவள் முகத்தில் தெரிந்த



பயமும், வியப்பும், இவர்களின் சிரிப்பை இன்னும் அதிகமாக்கின.

கொஞ்சம் அடங்கினதும், நிஜமாத்தான் கேக்கறேன் இன்னிக்கு ஆபீஸுக்கு லீவா?" என்று சித்ரா கேட்டாள்.

"ம்ஹூம்"

"அப்புறம்?"

"ஸ்கூட்டர் ரிப்பேர்—நேத்தே நா ஆபீஸ் கார்லதானே வீட்டுக்கு வந்தேன்..."

அவனை முடிக்கவிடாது சித்ரா குறுக்குக் கேள்வி கேட்டாள்.

"நா கவனிக்கவேயில்லியே!"

"அதெல்லாம் அக்கறை இருக்கிறவங்கதான் கவனிப்பாங்க...உனக்குத்தான்..."

"அ...அ...சமயம் கிடைச்சா ஆளை எறக்கறதுல மன்னன்...ஸாரி மன்னர்...சொல்லுங்க...இப்ப எப்படி ஆபீஸுக்குப் போப் போறீங்க? கம்பனி கார் வருதா?"

"அனுப்பறேன்னு சொன்னாங்க...நாதான் வேணாமுட்டேன்...என்னா இப்படி உன்கூட ஜாலியா வம்படிச்சிட்டு மெதுவா போயி, பஸ் கிடைக்கலைனு சொல்ல முடியாது பாரு..."

கோபியின் கிண்டலை இரசித்துப் பதில் கூறுவதற்குள், வரவேற்பு அறை கடிகாரம் சுநாதமாய் ஒன்பது மணி என்பதை அறிவிக்க, சித்ரா திடுக்கிட்டாள்.

"ஒம்பது! ஐயோ...விளையாட்டு ஆரம்பிச்ச பத்து நிமிஷம் ஆயிருக்குமே!...யாரு'டாஸ்' ஜெயிச்சாங்களோ "

பரபரப்புடன் தொலைக்காட்சி பெட்டியிடம் ஓடினவள் அதை ஓட விடவும், கோபி சிரித்தான்.

''ஓ! இன்னிக்கு ஒரு நாள் கிரிக்கெட் பந்தயம் இருக்கா? அதான் கிளம்புங்க கிளம்புங்கனு விரட்டிவிட்டே இருக்க...கல 'பாய் ஸ்ப்ரெண்ட்ஸ்' விளையாடறாங்க இல்லே? ஸ்ரீகாந்த், கபில்தேவ், ரவி சாஸ்திரி இவங்களைப் பார்த்திட்டா உனக்குதான் சோறு தண்ணி வேணாமே...''

''ஆமா...பாய் ஸ்ப்ரெண்ட்ஸ்தான்... ஏன் முழு பேரோட நிறுத்திட்டீங்க...டீம்ல இருக்கிற பாக்கி பேரையும் வரிசையா சொல்லிடறது...''

பதில் கூறியபடி நாற்காலியில் உட்கார்ந்த சித்ரா கண்களை ஆட்டத்தில் பதிய வைக்க இவள் கவனத்தை இனித் திருப்புவது அசாத்தியம் என்று புரிந்து கோபி ''சித்ரா கிளம்பறேன்'' என்றான் மீண்டும்.

''ம்''

இரண்டடிகள் வைத்த கோபி நின்றான். கையை உதறினான்.

''உன்கிட்ட முக்கியமான விஷயம் ஒண்ணு சொல்ல மறந்திட்டேன் சித்ரா.''

''என்ன?''

''டி.வியை நிறுத்து, சொல்றேன்.''

''அப்ப நீங்க சொல்லவேணாம்.''

''ரொம்ப...ம்ப முக்கிய சேதி...''

''சாயங்காலம் சொல்லுங்க. பரவா...''

அதற்குள் ஸ்ரீகாந்த் ஒரு பவுண்ட்ரி அடிக்க, சித்ரா கையைத் தட்டி மகிழ்ந்தான்.



''ப்பா...என்ன ஷாட் பாத்தீங்களா?''

''சித்ரா வந்து...''

''ப்ளீஸ்...கிளம்புங்க...நாழி ஆச்சு, எனக்கு ஆட்டம் பாக்கணும்...ப்ளீஸ்.''

ப்ரீஃப் கேஸை அவன் கையில் திணித்து, இழுக்காத குறையாய் வாசல் வரைக்கும் கொண்டுவிட, கோபி சிரித்துக் கொண்டே கிளம்பிப் போனான்.

'துவரம்பருப்பு இல்லேன்னியே, வாங்கியாரட்டுமா? காய் ஏதாச்சும் வேணுமா?' என்று தொண தொணத்த ஆயாவிடம் 'நாளைக்கு வாங்கிக்கலாம்...வேலை முடிஞ்சாச்சின்னா நீ போயிட்டு சாயங்காலமா வா.. இப்ப எதுக்காகவும் என்னால எழுந்திருக்க முடியாது' என்று கூறி அவளையும் அனுப்பிவிட்டு ஸ்ரீகாந்த், கவாஸ்கர், அஸாருதீன், என்று ஒவ்வொருவராக அடுத்தடுத்து ஆட்டம் இழந்தது எக்கச்சக்க பரபரப்பை உண்டாக்க, நகத்தைக் கடித்தவாறு டி.வி.யின் முன் உட்கார்ந்திருந்த நிமிஷத்தில் சுமார் பதினோரு மணி அளவில், வாசல் மணி அழைத்தது. எரிச்சலுடன் எழுந்து சென்று கதவைத் திறந்தவளின் புருவங்கள் வியப்பில் உயர்ந்தன.

போலீஸ் இன்ஸ்பெக்டர்; பின்னால் கேட்டருகில் போலீஸ் ஜீப்.

''இது மிஸ்டர் கோபி வீடுதானே?''

''ஆமா...''

''நீங்க...?''

''மிஸஸ் கோபி.''

''வீட்டுல கூட யாராவது பெரியவங்க இருக்காங்களா?''

''எதுக்கு? எ...என்ன விஷயம்?''

"உள்ளேபோயி உட்கார்ந்துகிட்டுப் பேசலாமாங்க?"

இன்ஸ்பெக்டரின் முகமும் குரலும் அளவுக்கு அதிகமான மென்மையுடன் இருக்க, திடீரென அடிவயிற்றில் புழு ஒன்று ஊருகிற சங்கடத்தில் சித்ரா வாசக்கதவில் சாய்ந்து கொண்டாள்.

"சொ...சொல்லுங்க...என்ன விஷயம்?"

இன்ஸ்பெக்டர் பதில் கூறுமுன் ஜீப்பை ஒட்டி அம்பாஸிடர் கார் ஒன்றும் தொடர்ந்து பியட் ஒன்றும் வந்து நின்றன. இறங்கி இவளை நோக்கி வந்த நால்வரில், மூவரை சித்ராவுக்குத் தெரியும்...

சுந்தர், ராம்ஜி, ரகுபதி கோபியின் அலுவலக நண்பர்கள். திருமண வரவேற்பிலும், பின்னர் அவர்கள் இல்லத்துக்கு இவர்களை அழைத்த போதும் சந்தித்திருக்கிறாள். நால்வர் முகங்களிலும் பதட்டம், வேதனை—என்னவாயிற்று?

அருகில் வந்ததும், சித்ராவுக்கு பரிச்சயமில்லாத நபர் இன்ஸ்பெக்டரைப் பார்த்து "இன்ஸ்பெக்டர் முருகன்! நா செல்வராஜ்...என்கூடத்தான் பேசினீங்க..." என்றவர் ஓரிரு கணங்கள் தாமதித்துவிட்டு, சின்ன குரலில் வினவினார்.

"சொல்லிட்டீங்களா?"

"இன்னும் இல்ல...நானே இப்பத்தான் ரெண்டு நிமிஷம் முன்னால வந்தேன்...வீட்டுல பெரியவங்க யாராச்சும் இருக்காங்களான்னு—கேட்டுக்கிட்டு இருந்தேன்...அதுக்குள்ளே நீங்களே வந்துட்டீங்க..."

பேசியவர்களை சித்ரா மாறிமாறிப் பார்த்தாள்.

பெருங்குடலில் உண்டான அலஸ்லதை இப்போது மெள்ள மெள்ள மேலே ஏறி, மார்புக்கூட்டில் பரவி,



மூச்சை அடைக்கிற மாதிரி தோன்ற, மூவரில் கோபிக்கு நெருக்கமான நண்பராக இருந்த ராம்ஜி பக்கம் திரும்பிப் பதட்டமாய்க் கேட்டாள்.

"என்ன விஷயம் மிஸ்டர் ராம்ஜி? எதுக்காக எல்லாரும் கூட்டமா வந்திருக்கீங்க? கோபி ப்ரமோஷன் சம்பந்தமா பாராட்டவா? அப்படின்னா இன்ஸ்பெக்டர் எதுக்காக வந்திருக்கார்? எனக்கு ஒன்னுமே புரியலை... விஷயத்த சட்டுனு சொன்னீங்கன்னா தேவலை".

"இவர் நம்ப கம்பனி சேர்மன்... மிஸ்டர் செல்வராஜ்..." மேலே பேச முடியாமல் முகம் கோணிப் போக ராம்ஜி தலையைக் குனிந்து கொள்ள, சித்ரா நிஜமாகப் பயந்து போனாள்.

பதவி உயர்வு என்று அறிவித்த மறுநாளே கொஞ்சம் கூடப் பொறுப்பு இல்லாமல் கோபி தாமதமாக அலுவலகத்திற்குச் சென்றதில் கோபமா? அதுதான் கண்டிக்க நேரிலேயே வீட்டுக்கு வந்து விட்டாரா?

குழந்தைத்தனமாய் அர்த்தமற்ற கேள்விகள் உள்ளுக்குள் எழ, சித்ரா அவசரமாய்ப் பேசினாள்.

"வாங்க ஸார்...உள்ளே வந்து உட்காருங்க...கோபி உங்களைப் பத்தி, எப்பவும் உயர்வாகப் பேசுவார்... இன்னிக்கு ஸ்கூட்டர் ரிப்பேர்; அதுதான் பஸ்லே...நா கூடக் கேட்டேன் நாழியாகலியா?னு..."

இன்ஸ்பெக்டரும், சேர்மனும் ஒருசேர வந்து நிற்பதற்கும், தான் பேசுவதற்கும், சம்பந்தம் இல்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிந்த நிலையில் சித்ரா பேச்சை நிறுத்தினாள்.

தொடர்ந்து "என்ன ஸார் விஷயம்?"—என்றபோது குரல் ரொம்ப கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது.

அவன் கேள்விக்குப் பதில் கூறாமல், சேர்மன் ராம்ஜியைப் பார்த்தார்.

"மாடிலேர்ந்து ஒரு வயசான அம்மா எட்டிப் பாக்கறாங்க... நீங்க எதுக்கும் மேல போயி விஷயத்த சொல்லிக் கூட்டிக்கிட்டு வாங்க...அப்படியே இவங்க, கோபி வீட்டு' பெரியவங்க வீட்டு விலாசமும் தெரியும்மான்னு கேளுங்க... தெரியும்னா, உடனடியாக அம்பாஸிடரை எடுத்துட்டுப் போயிக் கூட்டிட்டு வந்திருங்க..."

அவர் பேசியதும் ராம்ஜி மாடிப்படியை நோக்கி நகர, இத்தனை பலமான ஏற்பாடும் இரண்டு வீட்டு பெரியவர்கள், மாடிவீட்டம்மாளை அழைத்துவர வேண்டும் என்றால் சேதி ஏதோ பயங்கரமானதுதான் என்பதைப் புரிந்து கொள்ள முடிய, சித்ரா சட்டென்று குரல் எடுத்துக் கத்தினாள்.

"விஷயத்தச் சொல்லாம எதுக்காக இந்த ஏற்பாடெல்லாம் பண்றீங்க? என்ன விஷயம்? கோபி எங்க? ஆபீஸ்ல இருக்காரா" அவரையும் கூட்டிக்கிட்டு வர்றதுதானே! எதுக்காக இப்படி கூட்டமா வந்து என்னவோ, ஏதோன்னு என்னைப் பயப்பட வைக்கறீங்க..."

"ப்ளீஸ், மிஸஸ் கோபி...பதட்டப்படாதீங்க...உள்ள வாங்க...ப்ளீஸ்..."

"இல்ல மாட்டேன்...நீங்கள்ளாம் எதுக்கு வந்திருக்கீங்க? சொல்லுங்க...என் முகமெல்லாம் எப்படியோ இருக்கு? சொல்லுங்க?... சொன்னாத்தான் உள்ளே விடுவேன்?"

இதற்குள் வீட்டுக்காரம்மா கண்களில் நீர்பெருக மாடியிலிருந்து ஓட்டமாய் ராம்ஜி பின் தொடர ஓடிவர சித்ராவின் கலவரம் அதிகமாயிற்று.

"ஜானகியம்மா... இங்க பாருங்க... இவங்கள்ளாம் கும்பலா வந்து 'பெரியவங்க எங்க? உள்ளார போய்ப்



பேசலாம் வாங்க'ன்னு சொல்றாங்களே தவிரவும் என்ன ஏதுன்னு தெளிவா...ஜானகிம்மா...நீங்க ஏன் அழறீங்க? ஐயோ! விஷயத்த சொல்லுங்க...யாராவது சொல்லுங்களேன்..."

ஜானகியம்மாளின் கைகளைப் பற்றிக்கொண்டு படபடப்பாய் சித்ரா, வினவ, அவர் அவளை அணைத்துக் கொண்டு புலம்ப...

மெது மெதுவாய் நாலு வரிகளில், நாலே நாலு வரிகளில், சேர்மன் விவரத்தை வெளியிட்டார்.

பெஸண்ட் நகரிலிருந்து அடையாறு டெர்மினசுக்கு வந்து, அங்கிருந்து அண்ணாசாலை செல்லவேண்டி பஸ் மாறின போது விபத்து நடந்து விட்டதாம். நகரும் பஸ்ஸில் தாவி ஏறினவேகத்தில் கால் சறுக்கிவிட கைக்குப் பிடிமானம் ஏதும் அகப்படாமல் போக, அப்படியே நழுவித் தரையில் விழுந்ததில் பெரிசாய் எதுவும் இல்லையாம். ஆனால், கோபி விழுவதற்கும், பின்னால் நின்ற பஸ் கிளம்புவதற்கும் சரியாக இருக்க, வயிற்றுப் பகுதியில் பஸ்ஸின் இரண்டு சக்கரங்களும் ஏறினதில்... வேண்டாம் விவரங்கள்...வேண்டாம்!

ஒன்பது மணி வரையிலும் பெண்டாட்டியிடம் வம்பு பண்ணி, சிரித்து, ஆஜானுபாகுவாய், இடகாத்திரமாய் வளைய வந்து, எதிர்காலத்தைப்பற்றி நம்பிக்கையுடனும் கோடானு கோடி கற்பனைகளுடனும் வாழ்ந்த கோபி என்ன நடந்தது என்று கூடப் புரிந்து கொள்ள முடியாமல் ஸ்தலத்திலேயே மாண்டது இப்படித்தான்...

வீட்டுக்கார அம்மாளுக்கு நல்லவேளையாக சித்ராவின் பெற்றோரின் வீட்டு விலாசம், கோபியின் அக்கா துர்கா வேலை செய்யும் கல்லூரியின் பெயரும் தெரிந்திருக்க சமாசாரம் உடனடியாக அவர்களுக்குத் தெரி

விக்கப்பட்டு அரை மணியில் அவர்கள் வந்து சேர்ந்த போது சித்ரா இன்னமும் அதிர்ச்சியிலிருந்து விடுபடாத நிலையிலேயே இருந்தாள்.

நம்ப மாட்டேன்... நீங்கள் அத்தனை பேர்களும் சொல்வது பொய் என்று இறுகிப்போன முகம், பொட்டுக் கண்ணீர் துளிர்க்காமல் காய்ந்து கிடந்த கண்கள்.

ஆனால், அலறிக்கொண்டு வந்த அம்மா அப்பாவின் அழுகையால் பாதிக்கப்படாமல் அப்படியே கல் மாதிரி உட்கார்ந்திருந்தவள், கோபியின் அக்கா துர்கா — இவளுக்கு புரொபஸராக இருந்தவர்—கிட்டத்தில் வந்து, ஒரு வார்த்தையும் பேசாமல் ஆரத்தழுவிக்கொண்டு, சன்னமாக விசும்பினதும், நிலைமையின் பிரத்யட்சம் லேசாக புரிய, உடைந்து போய்த் தன்னை வெளிப்படுத்திக்கொண்டாள்.

''இல்ல...என் கோபி சாகல... இவங்க எல்லாரும் பொய் சொல்றாங்க...இல்ல அவர் செத்திருக்கமுடியாது... இல்ல...இல்ல...நா நம்ப மாட்டேன்.''

இந்த வார்த்தைகளையே திரும்பத் திரும்பக் கூறி கதறினவள், போலீஸ் இன்ஸ்பெக்டர் ''கணவன் உடலை அடையாளம் காட்ட இவங்கதான் வரணும்'' என்ற போது காதுகளைப் பொத்திக்கொண்டு இரண்டாக மடிந்து ''மாட்டேன்...கண்டிப்பா வர மாட்டேன்...என் கோபி சாகல...முழுசா எனக்குள்ள அப்படியே இருக்கார் ...நீங்க சொல்ற சின்னாபின்னமான கோபிய நா பார்க்க விரும்பல...பார்க்க மாட்டேன்...அது என் கோபி இல்ல... வேற யாரோ...என் கோபி நா கடைசியா பார்த்த மாதிரி தான் எனக்குள் எப்பவும் இருப்பார்...நீங்க சொல்ற கோபிய நா பார்க்க மாட்டேன்...நா வரமாட்டேன்... கோபி சாகல...நீங்கள்ளாம் பொய் சொல்றீங்க... சாயங் காலம் என் கோபி ஆபீஸ்லேந்து வருவார். அதுவரைக்கும்



நா எங்கேயும் வரமாட்டேன்'' என்று அடிவயிற்றிலிருந்து குரல் எடுத்துக் கத்திவிட்டுப் படுக்கை அறைக்குள் ஓடிச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டதும்—

அவள் நிலை, வேதனையோடு அந்த முடிவில் உள்ள அர்த்தத்தை புரிந்து கொள்ள முடிய ''அவளை அவ இஷ்டத்துக்கு விடறதுதான் சரி'' என்று துர்கா கூற,

இனியும் காத்திருப்பதில் அர்த்தம் இல்லை என்று மேற்கொண்டு ஆகவேண்டியவைகளைக் கவனிக்க இன்ஸ்பெக்டருடன் சேர்மனும், சித்ராவின் தந்தையும் புறப்பட்டுப் போனார்கள்.

## 3

அழைப்பு மணியை அழுத்திவிட்டு, கதவு திறந்ததும் தெரியப்போகும் பேராசிரியரின் முகத்துக்காகக் காத்திருந்த சித்ரா, கொஞ்சம்கூட எதிர்பார்க்காத வகையில் ஓர் ஆண் கண் முன்னால் தோன்றி, ''யார்?'' என்றதும் லேசாகத் திகைத்துப் போனாள்.

அவளுடைய பேராசிரியர் துர்கா, கல்யாணமாகாத ஒண்டிக்கட்டை என்பது அவளுக்குத் தெரியும். இதற்கு முன்னால் இரு முறைகள் பேராசிரியரின் வீட்டுக்கு வந்திருந்ததில், அவர் இல்லத்தில் வேலைபார்க்கும் ராணி என்கிற வேலைக்காரிகூட இவளுக்கு அறிமுகம் ஆனவள் தான். ஆனால் அது பழைய விலாசம். இந்தப் புது வீட்டுக்குக் குடி வந்து ஒரு மாசமோ என்னவோதான் ஆவதால் இதுதான் முதல் விஜயம்.

உடனடியாக சில புத்தகங்கள் தேவைப்படுவதை எடுக்க கன்னிமாரா நூலகத்துக்குச் செல்ல வேண்டும் என்று யதேச்சையாய் வகுப்பு முடிந்து வெளியில்வந்ததும் இவளிடம் துர்கா கூற, ''மதியத்துக்கு மேல அங்க போய்

போறேன்—விலாசம் கொடுங்க. நானே எடுத்துத்துட்டு வந்து, நாளைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே, உங்க வீட்டிலயே தந்துடறேன் மேடம்'' என்று சித்ரா உதவ முன் வந்ததுதான் இப்போது புத்தகங்களுடன் இங்கு வந்திருப்பதற்குக் காரணம்.

விலாசம் மாறி வந்து விட்டேனா

ஏழாம் எண், முதல் குறுக்குத் தெரு...சரியாய்த்தானே வந்திருக்கிறேன்?

கதவைத் திறந்து கொண்டு வந்து நின்ற ஆணுக்கு இவளுடைய யோசனைகள் எரிச்சலைத் தந்திருக்க வேண்டும்.

புருவங்களை உயர்த்தி மீண்டும், ''யார் வேணும்?'' என்று கேட்க, சித்ரா சின்ன குரலில் ''இது...புரொபஸர் துர்கா வீடுதானே?'' என்றாள்.

''ம்.''

அப்பாடி—தவறான விலாசம் இல்லை.

''அவங்க இல்லியா?''

''இல்லை...''

''பதினோரு மணிக்கு என்னை வரச் சொல்லி இருந்தாங்க. நா அவங்க மாணவி...''

''ஓ''

ஒற்றை வார்த்தையில் பதில் சொல்பவனிடம் மேற்கொண்டு என்ன பேசுவது என்று புரியாமல் சில கணங்களுக்கு விழித்து விட்டு, பிறகு இவர் யாராக இருந்தால் எனக்கென்ன, மேடம் வரும் வரையில் காத்திருந்து, வந்ததும் புத்தகங்களைத் தந்த பின் புறப்படுவதுதான்



சரி என்று தனக்குத்தானே முடிவு எடுத்துக்கொண்டு, ''ராணி இல்லை?'' என்று கேட்டாள்.

''ம்ஹூம்...அவளைக் கூட்டிக்கிட்டுதான் உங்க புரொபஸர் வெளியே போயிருக்கார்...''

''எப்ப வருவாங்க தெரியுமா?''

''வர்ற நேரம்தான்...''

''அப்ப, இருந்து புத்தகங்களைக் கொடுத்திட்டே நா போறேன்...''

இத்தனைத் திட்டவட்டமாகக் கூறியும், வழியை விட்டு அவன் நகராமல் நந்தி மாதிரி நின்றதை இலட்சியம் பண்ணாமல் ''கொஞ்சம் வழி விடறீங்களா? நா உள்ள வந்து உட்கார்ந்துக்கறேன்...'' என்று சித்ரா தனக்குத்தானே அழைப்பு விடுத்துக்கொண்டதும், அவன் சிரித்துக்கொண்டே ஒதுங்கினான்.

வரவேற்பு அறைக்குள் வந்து நாற்காலி ஒன்றில் உட்கார்ந்த சித்ரா, கையிலிருந்த புத்தக மூட்டையை பக்கத்தில் வைத்துவிட்டு இது நாழிகை தன்னோடு பேசிக்கொண்டிருந்தவனை நன்றாக ஏறிட்டாள்.

உயரம்தான். ஒல்லியும் இல்லை, பருமனும் இல்லை... வயசு என்ன இருக்கும்? ம்ஹூம்...சொல்லத் தெரியவில்லை. மெல்லிசு கறுப்பு உலோகச் சட்டம் கொண்ட கண்ணாடி, கச்சிதமாய் மீசை, பைஜாமா, பழுப்பு நிற குர்தா...

யார் இது?

மேடத்துக்கு உறவா? இல்லை நண்பரா?

இவன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே எதிர் நாற்காலியில் அமர்ந்து, பக்கத்து முக்காலிமேல் கவிழ்த்து

வைத்துவிட்டுப் போயிருந்த புத்தகத்தைக் கையிலெடுத்து, விட்ட இடத்திலிருந்து படிக்கத் துவங்கினான்.

தி. ஜானகிராமனின் 'மோகமுள்.'

யமுனா என்கிற பெண் பாத்திரத்தைக் கதாநாயகியாகக் கொண்டு படைக்கப்பட்ட அற்புதமான நாவலை ஏற்கனவே இரண்டு தரம் இரசித்துப் படித்திருந்ததை நினைத்துப் பேச வேண்டும் போல இருக்க, ''மோகமுள்' படிச்சிருக்கீங்களா? அருமையான கதை...'' என்றாள் சித்ரா.

என்ன தொணதொணப்பு என்ற எரிச்சல் அவன் முகத்தில் தென்படுவதைப் புரிந்து கொள்ளாமல், ''எத்தனை தரம் படிச்சிருக்கீங்க?'' என்றாள் தொடர்ந்து.

முகச்சுளுக்கல் மாறாமலேயே அவன் கேட்டான்.

''நீங்க படிச்சிருக்கீங்களா?''

''ரெண்டு தரம்...''

''பிடிச்சிதா?''

''பிடிக்காட்டி ரெண்டாவது தரம் படிப்பேனா?''

தயக்கமில்லாமல் வந்த பதில் இரசிக்கும்படி இருக்க, அவன் சிரித்தான்.

அந்தச் சிரிப்பு அந்த முகத்துக்கு இளமையைக் கொடுத்ததில், ஐந்து வயசு குறைந்து விட்ட மாதிரி தோன்ற, 'உன் சிரிப்பு அலாதி கவர்ச்சியாய் இருக்கிறது. நீ அடிக்கடி சிரிக்க வேண்டும்' என்று யாராவது இவரிடம் சொல்லி இருப்பார்களோ என்று சித்ரா நினைத்தாள். ஆனால், இது என்ன அசட்டு எண்ணம்! இந்த ஆள் சிரித்தால் எனக்கென்ன சிரிக்காவிட்டால் எனக்கென்ன என்று உடனே மறு கேள்வி எழுந்ததில் கவனத்தை செப்பிலிருந்து புத்தகத்துக்கு மாற்றினாள்.



''இதுல யமுனா கதாபாத்திரம் ரொம்ப வித்தியாசமா சொல்லப்பட்டிருக்குனே நா நினைக்கறேன்...''

அவள் கூற்றை ஏற்று ஆமோதிக்கும் தினுசில் அவன் தலை அசைத்தான்.

''ஜானகிராமனோட எல்லா கதாபாத்திரங்களுமே தனித்தனியா மனசுல நிக்கக் கூடியவங்கதான்...''

''இருந்தாலும் சில பேர் அழுத்தமா பதிஞ்சு போயிடறாங்க... 'மோகமுள்' யமுனா, 'மரப்பசு' அம்மணி மாதிரி...''

'அம்மா வந்தாள்' அலங்காரத்தை விட்டுட்டீங்களே.'

சித்ரா இல்லை என்று மறுத்தாள்.

''அம்மா வந்தாள்' கதைக்கு எக்கச்சக்கமா விளம்பரம் கிடைச்சதால 'அலங்காரமும்' பிரபலமாயிட்டாங்க. ஆனா, 'மரப்பசு' அம்மணி அளவுக்கு நுட்பமான குணங்கள் கொண்ட கதாபாத்திரம் அவங்கனு என்னால ஏத்துக்க முடியாது... 'மரப்பசுவ' ஒவ்வொரு தரம் படிக்கறப்பவும் புதுப்புது கோணத்துலேந்து அம்மணிய நல்லா புரிஞ்சுக்க முடியுதுனே நா நினைக்கிறேன்...''

அவள் விமர்சனம் தனக்குச் சந்தோஷத்தைத் தந்த மாதிரி புருவத்தை உயர்த்திச் சிரித்தவன், ''தேவலையே... ரொம்ப ஆழமாத்தான் ஜானகிராமனப் படிச்சிருக்கீங்க... அப்ப, நீங்களும் அவரோட அபிமான வாசகினு சொல்லுங்க...'' என்றான்.

''அவரோட மட்டுமில்ல, புதுமைப்பித்தன்லேந்து இன்னிவரைக்கும் எழுதற அத்தனை எழுத்தாளர்களோட எல்லா நல்ல எழுத்துக்களையும் நா விரும்பிப் படிக்கறதுண்டுதான்...''

''இன்னிக்கு எழுதற எழுத்தாளர்களோட நல்ல

எழுத்துக்களா? அப்படி யாராவது எழுதறாங்களா என்ன? எல்லாம் குப்பையும், சந்தையுமா தானே இருக்கு?''

கேலியாய் அவன் வினவ, சித்ரா அதற்குப் பதில் கூறாமல் எதிர்க் கேள்வி கேட்டாள்.

''அப்படின்னா இன்னிக்கு வர்ற பத்திரிகைகளை நீங்க படிக்கறதில்லையா?''

''லட்சக்கணக்கா விக்கற வியாபாரப் பத்திரிகைகளைத் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டேன்... இலக்கிய தரமுள்ள சிறு பத்திரிகைகளை விரும்பிப் படிப்போம்.''

''ஒரு பத்திரிகையைத் தொட்டுக்கூடப் பார்க்காம அதுல வர்ற கதைகளை 'குப்பை'னு விமர்சனம் செய்ய நியாயம்னு நினைக்கறீங்களா?''

''வியாபார நோக்கத்தோட எழுதப்படற கதைகளைக் குப்பைனு சொல்லாம இலக்கியம்னா ஏத்துக்க முடியும்?''

''குப்பையோ, இலக்கியமோ எதுவானாலும், ஒன்னைப் படிச்சுப் பார்க்காம விமர்சிக்க முன் வர்றது ஆரோக்கியமான வளர்ச்சியா எனக்குப் படலை... ஓர் எழுத்தாளர் பிரபல பத்திரிகைல எழுதறான்றதுக்காக, அவரையும் அவர் எழுத்துக்களையும் புரிஞ்சுக்காம, படிச்சுப் பார்க்காம, கண்ணை மூடிக்கிட்டு 'அ' அவரா? அந்த பத்திரிகைகளை எழுதறவர்தானே!'னு மட்டமா அபிப்ராயம் சொல்றது தப்புனே நா நினைக்கறேன்... கலை சம்பந்தப்பட்ட எதையும் 'தரமானது, மட்டமானது'னு பிரிக்கலாமே தவிர, இது கமர்ஷியல்-அதனால மட்டம், அது ஆர்ட்,— அதனால உயர்வுனு கட்டம் கட்டிப் பேசறதுல எனக்கு உடன்பாடு இல்லை ஒவ்வொரு எழுத்தையும் அதனதன் தகுதியோட எடை போட்டுத் தனித்தனியா விமர்சிக்கறதுதான் சரியானதுனு நா நம்பறேன்...''



முன்பின் தெரியாத தன்னிடம் இத்தனைத் தீவிரமாக அவள் வாதாடுவது வியப்பைத் தர, அது எழுப்பிய புன்சிரிப்போடு அவன் உட்கார்ந்திருப்பதைப் பொருட்படுத்தாமல் சித்ரா மேலே பேசினாள்.

''ஒரு பானை சோறுக்கு ஒரு சோறு பதம்'னு சொல்ற வசனமெல்லாம் கலை சம்பந்தப்பட்ட விஷயங்களுக்குக் கண்டிப்பா பொருந்தாது. நல்ல பாடகர் ஒருவர் பிரபலமான சபால கச்சேரி செய்யப் போறாங்க... அவங்களுக்குத் தொண்டை கட்டி இருக்கறதுல கச்சேரி சிறப்பா அமையாமப் போச்சுனு வெச்சுக்கங்க அதுக்காக இந்தப் பாடகர் இந்த சபால பாட வந்தது தப்பு—இனிமே இவங்க கச்சேரிக்கே போக மாட்டேன்னு முடிவு எடுத்துடுவீங்களா? சொல்லுங்க. அந்த மாதிரிதானே எழுத்தாளர் நிலையும்? ஒரு கதை பிரமாதமா அமையலாம் இன்னொன்னு மோசமா இருக்கலாம்... குறிப்பிட்ட எழுத்து எப்படி இருக்குனு பார்க்காம, அவர் எழுதற பத்திரிகை பல லட்சம் விக்குது, அதனால இதுவும் வியாபார நோக்குள்ள எழுத்து, அப்படி இப்படினு பழிக்கறது நியாயமான செயலா உங்களுக்குத் தோணுதா? ம்?''

அவள் பேசி நிறுத்தி அரை நிமிஷம் போல ஆகியும் எதுவும் பதில் கூறாமல் அமர்ந்திருந்தவனிடம் மீண்டும் படபடப்பாக ''கேக்கறேனே—பதில் சொல்லுங்க...'' என, அவன் வாய் விட்டுச் சிரித்தான்.

பின், ''நீங்க எப்பவுமே இப்படித்தான் பேசுவீங்களா?'' என்றான்.

சம்பந்தா சம்பந்தமில்லாமல் அவன் கேட்டது குட்டியாக எரிச்சலைக் கிளப்ப, ''அப்படீன்னா?'' என்று சித்ரா வினவிய சமயத்தில் வாசலில் ஆட்டோ வந்து நின்றது-

துர்காதான்.

ராணி பின் தொடர உள்ளே வந்தவர், ''பதினொரு மணிக்கு சித்ரா வர்றதா சேதிய சொல்லாம போயிட்டோமேனு கவலைப்பட்டுக்கிட்டே வந்தேன். கோபி! உன்னே கூப்பிட்டு உட்கார வெச்சிருக்கியா... நல்ல வேளை. எங்க நா இல்லேனு சொல்லி அப்படியே அனுப்பிட்டிருப்பியோனு கவலைப்பட்டுக்கிட்டிருந்தேன்...''

பேசியவரைக் குறுக்கிட்டு, ''அவர் அனுப்பத்தான் தயாரா இருந்தார், ஆனா நா விடலை...வாசலை அடைச்சுக்கிட்டு நின்னுட்டு இருந்தவரைத் தள்ளாத குறையா நானாவே உள்ள வந்து உட்கார்ந்திட்டேன் மேடம்'' என்று சித்ரா கூற, அவள் கோபம் புரிந்து கோபி சிரித்தான்.

''உங்க மாணவி நல்லா படிப்பாங்களோ மாட்டாங்களோ, பிரமாதமா பேசறாங்க'' என்று சிரிப்பினூடே கூற, துர்காவும் மகிழ்ச்சியோடு அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

''ஆக, நா இல்லாட்டி கூட அறிமுகம் செஞ்சிகிட்டுப் பேசிட்டு இருந்தீங்கன்னு சொல்லுங்க.''

''அறிமுகம் ஆகலைக்கா, ஆனா பேசிட்டு இருந்தோம்...தப்பு, தப்பு...பேசிட்டு இருந்தாங்க...'' என்று கூறின கோபி மீண்டும் சிரிக்க, சித்ரா முறைத்தாள்.

''சரி...சரி...விடு சித்ரா... இப்ப நா முறையா அறிமுகப்படுத்தி வைக்கப் போறேன்... இது சித்ரா, என்னோட மாணவி. கெட்டிக்காரி... படிப்புல மட்டுமில்ல பேச்சிலயும் தான்...''

''இந்த அறிமுகம் தேவையே இல்லக்கா... அரை மணி நேரமா என்ன செஞ்சிட்டு இருந்தேன்னு நினைக்கறீங்க? இப்ப நீங்க சொன்ன விவரத்தை அனுபவ ரீதியா தெரிஞ்சுகிட்டிருந்தேன்...''



சிரிப்பவனோடு தானும் சேர்ந்து கொண்டால் அது சித்ராவுக்குக் கண்டிப்பாக எரிச்சலைத் தரும் என்பது புரிய, துர்கா கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டாள்.

''எல்லார் மாதிரியும் சும்மா வளவளன்னு சித்ரா பேசமாட்டா கோபி, எதுலேயும் ஓர் அழுத்தமான சிந்தனை இருக்கும்...தெரியுமா? பேசிப்பாரு அப்புறம் நீயே புரிஞ்சிப்பே...சித்ரா இது கோபி, என் ஒரே தம்பி... அப்பா அம்மா வெச்சபேர் கோபாலகிருஷ்ணன்...முதல்ல எம்.ஏ இலக்கியம் படிச்சான்; சரி, ஆராய்ச்சி பண்ணி டாக்டரேட் வாங்கப் போறான்னு நினைச்சேன். ஆனா, தொடர்ந்து எம்.ஏ. எகனாமிக்ஸ் படிச்சான். என்னை மாதிரி வாத்தியார் வேலை பார்க்கப் போறான்னு எதிர்பார்த்தேன் அதையும் பண்ணாம விவேகானந்தா கேந்த்ராவுல சேர்ந்து நாலு வருஷம் இந்தியா பூரா சுத்தி சம்பளம்னு பெரிசா எதுவும் வாங்காம வேலை பார்த்தான். அதுக்கப்புறம் என்ன தோணிச்சோ தெரியலை, எம்.பி.ஏ. சேர்ந்து பட்டம் வாங்கினான் என் தம்பிங்கறதுக்காக சொல்லலை, ஆனா, மஹா புத்திசாலி...எல்லாப் பட்டப் படிப்புலேயும் தங்க மெடல்தான். அதுக்குக் குறைஞ்சு எதுவும் வாங்கினதில்லை...மேல என்ன பண்ணப் போறான்னு யோசனை பண்ணிக்கிட்டேயிருந்தேன். அதிசயமா ஒரு வருஷமா நல்ல கம்பெனி ஒண்ணுல 'மார்க்கெட்டிங் எக்ஸிக்யூடிவா' ஒழுங்கா வேலை பார்க்கறான்...பங்களூர் கிளைல இருந்தவன் இங்க வந்து ரெண்டு மாசமாச்சு...அதிசயத்திலும் அதிசயமா 'சேர்ந்து இருக்கலாங்கா'னு சொன்னான்...அதான் இந்த வீட்டுக்குக் குடி வந்தேன்...''

அவர் நிறுத்தியதும் கோபி மடமடவென்று கை தட்டினான்.

"உங்களை அடிக்கடி எல்லாச் சங்கங்களும் ஏன் பேசக் கூப்பிடறாங்கனு இப்ப இல்ல புரியுது! அடேயப்பா! மூச்சு விடாம எப்படிப் பேசறீங்க, அரசியல்வாதியாட்டம்!" என்றவன் சித்ரா பக்கம் திரும்பி லேசாக வணங்கி, "மன்னிக்கணும், நீங்க அதிகமா பேசிட்டீங்கன்னு அவசரப்பட்டுச் சொல்லிட்டேன்... உங்க புரொபஸர்கிட்ட முன்னால நீங்க ஒண்ணுமேயில்லை... பரவாயில்லை கவலைப்படாதீங்க.. கூடவே இருந்தீங்கன்னா சீக்கிரமே குருவை மிஞ்சின சிஷ்யை ஆயிடலாம்..." என்றும் கூறிச் சிரிக்க, மற்ற இருவரும் அந்தச் சிரிப்பில் கலந்து கொண்டார்கள்.

"ஆனா அக்கா எனக்கு உங்க மேல கோபம்தான்... இத்தனை சொன்னவங்க என் பிறந்த தேதியும் சொல்லியிருந்தா, வாழ்க்கைக் குறிப்பு முழுமையா ஆயிருக்கும்... இப்ப என்ன இருந்தாலும் அவனுக்கு அது ஒரு குறை தான்...என்னவங்க?"

அடங்கி இருந்த சிரிப்பு மீண்டும் பீறிட்டுக் கொண்டு எழ, அன்றைக்கு மதியம் மூன்றுமணி வரையிலும் அங்கே தள்ளிவிட்டு, சித்ரா வீட்டுக்குப் புறப்பட்ட நிமிஷம் வரை ஏதேதோ பேசி, ஓயாது மூவரும் சிரிக்கவே செய்தார்கள்.

அன்றைக்கு மட்டுமல்ல, அடுத்து வந்த மாசங்களில் வாரத்துக்கு ஒருதரம் என்று துவங்கின அந்தச் சந்திப்பு, சீக்கிரமே இரண்டு, மூன்று தரம் என்று மாறி, மூவருமாகச் சேர்ந்து மாட்னி காட்சிக்குப் போவதிலும், மன இயல் சம்பந்தமான துர்கா பேசும் கூட்டங்களுக்குச் செல்வதிலும், ஒன்றும் இல்லாவிட்டால் வீட்டில் உட்கார்ந்து ஒன்றாக ரம்மி ஆடி சிரிப்பதிலும் வந்து நின்றது.

இப்படி எந்தப் பரபரப்பு ஆர்ப்பாட்டமும் இன்றித் தான் பாட்டுக்கு வளர்ந்து கொண்டிருந்த அந்த நட்பில்



புதுத் திருப்பம் உண்டானது, மீண்டும் ஒரு ஞாயிற்றுக் கிழமையில்தான்.

சென்னையில் உள்ள மாதர் சங்கங்கள் ஒன்றுகூடி, 'தனிமனித விழிப்புணர்வு மூலம் சமுதாய மேம்பாடு' என்கிற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடத்தினதில் துர்கா தனிமனித விழிப்புணர்வு தோன்ற வழிகள் எவை என்று கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் போல அலசி, ஆராய்ந்து, பேசுவதைக் கேட்க, வழக்கம்போல கோபியும் சித்ராவும் வந்திருந்தார்கள்.

காலை பத்துக்குத் துவங்கின கூட்டம் முடிந்து பன்னிரண்டு மணிக்கு மேல் வீட்டை நோக்கி ஆட்டோவில் மூவருமாய்ப் போய்க் கொண்டிருக்கையில் அன்றைய பேச்சின் ஆழத்தையும் தெளிவான கருத்துக்களையும் சித்ரா பாராட்ட, ஏதோ யோசனையில் இருந்த கோபி கேட்டான்.

"தனிமனித விழிப்புணர்வுக்கு, தன்னம்பிக்கை, என்னால் முடியும் என்கிற பாலிஸி, தன் பலம் பலவீனம் புரிந்து கொள்ளுதல் எல்லாம் முக்கியம்னு சொன்னீங்க... ஒத்துக்கறேன். ஆனா, சாமானியனுக்குக் கூட இந்தக் குணங்களெல்லாம் வளரணும்னா அதுக்கு அடிப்படை அஸ்திவாரம் சுய அலசலும், சுய விமர்சனமும்னு சொன்னதைத்தான் என்னாலே ஏத்துக்க முடியலைக்கா!

சுய அலசல்—எப்பேர்ப்பட்ட வார்த்தை, செயல் இது! பெரிய பெரிய வேதாந்திகள் படிப்பாளிகளே இதைச் சாதிக்க முடியாம இருக்கறப்போ சாதாரண மனுஷனுக்கு இது எங்க கூடற சமாசாரம்னா நீங்க நினைக்கறீங்க?"

அவன் கேள்வியை மனதில் வாங்கிக்கொண்டு அதற்கான பதிலைக் கூற துர்கா முனையும் முன், சித்ரா குறுக்கிட்டாள்.

''வகுப்புல அடிக்கடி நீங்க சுய அலசல் பத்திப் பேசிக் கேட்டு, அது குறிச்சு எனக்குள்ளயும் சில அபிப்பிராயங் களைத் தெளிவா உருவாக்கிட்டவன்ற முறைல இந்தக் கேள்விக்கு நா பதில் சொல்லலாமா மேடம்?''

வினவின சித்ரா, ஒரு கணம் தாமதித்துவிட்டு, ஆட்டோவின் இரைச்சலையும் மீறிக்கொண்டு குரல் உயர்த்திப் பேசினாள்.

''சுய அலசல்ன்ற வார்த்தையை வேற ஏதோன்னு நினைச்சு அனாவசியமாக மிரண்டு போயிட்டீங்க கோபி...வேதாந்தங்களையும் படிப்பாளிகளையும் தூண்டி வைக்கற விஷயம் சுய அலசல் இல்லை—அது—சுயதேடல். சுய அலசல்—இது Self analysation சுயதேடல்—இது Self Realisation இது யதார்த்தம், அது வேதாந்தம். நமக்கு இப்போ வேதாந்தம் வேணாம்...நிஜத்தை எதிர் நோக்கற பலத்தை, நிதானத்தைக் கொடுக்கக்கூடிய மனப்பக்குவம்தான் தேவை. சுய அலசல்ன்ற வார்த்தையைக் கண்டு பயப்படவே வேணாம்...படிப் பறிவே இல்லாத பாமரனால் கூட சுலபமாக செய்யக்கூடிய விஷயம் இந்த சுய அலசல். எப்படின்னு கேக்கறீங்களா? சொல்றேன்...போன வாரம் நாம சந்திச்சபோ 'வயத்துல புண். அதனால காரம் வேணாம்'னு சொன்னீங்க— நினைவு இருக்கா? நாகூட ஒரு தரம் 'வெயில் எனக்கு ஒத்துக்காது, தலைவலி வந்திடும்'னு சொன்னேன்... ஞாபகம் இருக்கா? இப்படி அவரவர் உடம்புக்கு எது ஒத்துக்கும், ஒத்துக்காதுன்னு புரிஞ்சு அதன்தை எடுத்துக் கறதையும் ஒதுக்கறதையும் செய்யறோம்...சரிதானே? இதே மாதிரி மனசுக்கு எது ஒத்துக்குது; ஒத்துக்கலைன் றதை நமக்கு நாமே அலசித் தெரிஞ்சுக்கறதுதான் சுய அலசல். அம்மாகிட்ட பதில் பேசினது மனசுக்கு வருத் தத்தைத் தருதா? அப்படீன்னா இது பலவீனம்; பக்கத்து வீட்டுக் கண் தெரியாத பாட்டிக்குக் கதை படிச்சுச்



சொன்னது சந்தோஷத்தைத் தருதா—அப்படீன்னா இது பலம்...ஆக நம் மனசுக்கு சந்தோஷம், நிம்மதி, நிறைவு, தரதெல்லாம் பலம்; வேதனை, வருத்தம், கோபம், உறுத்தலை உண்டாக்கறது பலவீனம். பலத்தை வளர்த் துக்கிட்டு, பலவீனங்களைக் குறைக்க முயற்சி பண்ணறதுக்கு நாம எடுக்கற முதல் அடிதான் சுய அலசல்—அப் புறம் சுய விமர்சனம். நமக்கு நாமே உண்மையா இருக்க, விடாம முயற்சி பண்ணினோம்னா, அதுதான் தனி மனித விழிப்புணர்வு...இது ஒவ்வொரு நபருக்குள்ளும் தனித் தனியா வளரத் தொடங்கிருச்சின்னா இன்னிக்கு சமுதா யத்துல இருக்கற பல பிரச்னைகளுக்குத் தீர்வு வந்திடும், என்ன மேடம், நா விளக்கினது சரிதானே?''

கண்ணைகல, தீவிரமான நம்பிக்கையுடன் சித்ரா பேசினதும், சந்தோஷத்தோடு துர்கா அவள் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

தலையைப் பின்னுக்குத் தள்ளிச் சிரித்த கோபி ''உங்க மாணவி இத்தனை திறமையா விளக்கம் கொடுக் கறதைக் கேட்கறப்போ எனக்கு ஐன்ஸ்டீன்—அவர் காரோட்டி கதை தான் நினைப்புக்கு வருது...'' என்று கூறினதும், ''அது என்னப்பா புதுக் கதை?'' என்றாள் துர்கா

''ஒரு தரம் ஐன்ஸ்டீனோட காரோட்டி, 'என்ன பிரமாதமா நீங்க பேசிடறீங்க? சொன்னதையே திருப்பித் திருப்பி எல்லா கூட்டத்துலேயும் சொல்றீங்க...இதை நா கூட நல்லா சொல்வேன்'னு பொருமினாராம். ஐன்ஸ்டீன், 'அப்படியா...சரி. உன்னால முடியும்ன்னா அடுத்த கூட்டத்துக்கு எனக்குப் பதிலா நீ பேசிடு... எனக்கு ஓய்வு கிடைச்ச மாதிரி இருக்கும்'னு சொன்ன ராம். திட்டமிட்டபடி, வெளியூர்ல நடந்த கூட்டத்துக்கு ஐன்ஸ்டீன் வண்டி ஓட்ட, காரோட்டி ஜம்முனு பின்னால உட்கார்ந்துகிட்டு போயி, விஞ்ஞானிகள் நிறைஞ்ச

அந்த சபையில கொடுத்த தலைப்புல தடபுடலா பேசினதும், ஏகக் கைத்தட்டல்கள். அமர்க்களம் குறைஞ்சதும், ஒரு விஞ்ஞானி எழுந்து 'உரை அற்புதமா இருந்தது. ஆனா எனக்கு ஒரு சந்தேகம்'னு புதுசா எதையோ கேட்க, காரோட்டி திகைச்சாராம்... ஆனா உடனே 'இத்தனை சின்ன சந்தேகத்துக்கு நா பதில் சொல்லத் தேவையில்லை. என் காரோட்டியே விளக்குவார்'னு சொல்லி வெளியில வந்து நிஜ ஐன்ஸ்டீனை அனுப்பி நிலைமையைச் சமாளிச்சாராம்...எப்படி ஜோக்?"

கோபி கூறியதைக் கேட்டு அவர்கள் சிரித்து சிரிப்பில் ஆட்டோ ஓட்டுநரும் கலந்துகொள்ள, வீட்டுக்கு வந்து சேர்ந்த பின்னரும் காரோட்டியின் சாமர்த்தியத்தை நினைத்து நினைத்துச் சிரித்துத் தீர்த்தார்கள்.

"இன்னிக்கு இங்கேயே சாப்பிட்டுடு சித்ரா" என்று துர்கா கேட்டுக் கொண்டதற்கு இணங்கி சித்ரா அங்கேயே மதிய உணவை உட்கொண்டாள்.

"நாளைய வகுப்புக்குக் குறிப்புகள் தயார் பண்ணணும்" என்று துர்கா எழுந்து உள்ளே போனபோது, "நானும் கிளம்பறேன், வீட்டுல தேடுவாங்க" என்று புறப்பட்ட சித்ராவை, "என்ன அவசரம், இருங்க... ஒரு ஆட்டம் ரம்மி ஆடிட்டுப் போகலாம், ப்ளீஸ்" என்று கோபி சின்னக் குரலில் கேட்க, அந்த 'ப்ளீஸைத்' தட்ட முடியாமல் சித்ரா மீண்டும் உட்கார்ந்தாள்.

"மூணு ஆட்டம் போடுவோம்...யார் ரெண்டுல ஜெயிக்கறாங்களோ, அவங்க கேட்டதை இன்னொருத்தர் கட்டாயம் கொடுக்கணும்..." என்று கோபி, சீட்டுக்களைக் கலைத்துப் போட, "அ...அ...குடுப்பாங்க குடுப்பாங்க...மலையைக் கயிறா திரிச்சுகிட்டு வான்னு சொன்னா முடியுமா? இது அடாவடி, நா ஒத்துக்க



மாட்டேன்" என்று சொல்லிக் கொண்டே சித்ரா ஆட முற்பட்டாள்.

முதல் ஆட்டத்தில் வெற்றி கோபிக்கு...

இரண்டாவதிலும், ஆடத் துவங்கின மூன்றாவது சுற்றில் 'டிக்ளேர்' செய்த கோபி, "கேட்டதைக் கொடுக்கணும்னு பேச்சு" என்று கூற—

"ஐய்யோ...நா மாட்டேம்பா...இது என்ன அழுகுணி ஆட்டம்... 'அதோ ரோட்ல போறாரே அவரோட வாட்ச் கேட்டு வாங்கிட்டு வா'னு சொல்லீங்க...முடியற காரியமா இது! என்னால முடியாது சாமி...நா புறப்படறேன்..." என்று குழந்தைத்தனமாய்ச் சிணுங்கியபடியே கிளம்ப,

வாசலுக்குச் சென்றுவிட்டவளை கோபி தடுத்து நிறுத்தினான். கையிலிருந்த வெள்ளைத் தாளை நீட்டினான்.

எதுவும் புரியாமல், நாலாக மடிக்கப்பட்டிருந்த அந்தத் தாளைச் சித்ரா பிரித்தாள். படித்தாள்.

"I would like to have the pleasure of your company as long as I live—will you give it—Please?"

—நான் உயிரோடு இருக்கும் நாள் வரை உங்கள் அருகாமையை விரும்புகிறேன்...கொடுக்க முடியுமா... தயவு பண்ணி?—

சித்ரா—நான் உன்னைக் காதலிக்கிறேன்—மணக்க விரும்புகிறேன்—ஆயுசு பரியந்தம் உன் துணையாக வாழ ஆசைப்படுகிறேன்—என்பதைத்தான் அந்த இரு வரிகளில் கோபி வித்தியாசமாகக் குறிப்பிட்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள சித்ராவுக்கு முழுசாய் இரண்டு நிமிஷங்கள் ஆயின.

# 4

இரண்டு பெங்களூர் தக்காளிப் பழங்களை நாலாக வெட்டி மிக்ஸியின் கண்ணாடி ஜாடியில் போட்ட துர்கா, அரை லோட்டா தண்ணீரையும் ஊற்றி மூடி, மிக்ஸியை இயக்கினார். ஒரு நிமிஷம் சுற்றவிட்டு, எடுத்து வடிகட்டினார். சிட்டிகை உப்பு, கொஞ்சம் மிளகுத்தூள், ஒரு ஸ்பூன் சர்க்கரை சேர்த்து நன்றாகக் கலக்கி தம்ளர்களில் ஊற்றினார். தயாராக எடுத்து வைத்திருந்த ஐஸ்கட்டிகளில் இரண்டைப் போட்டு, தம்ளர்களை சாப்பாட்டு மேஜைக்குக் கொண்டு வந்து, ஒன்றை கோபிக்கு முன் வைத்து, இன்னொன்றுடன் அவனுக்கு எதிர் நாற்காலியில் அமர்ந்து, ''ம்...இப்ப சொல்லு...'' என்றார்.

கோபி தம்ளரை எடுத்துப் பழரசத்தை ஒரு வாய் பருகினான். ''ம்'' என்று சப்புக் கொட்டினான். ''நீங்க செய்யற ஜூஸுக்கு அலாதி ருசிதாங்க்கா...உங்களுக்குன்னு விசேஷமா எங்கதான் பழம் கிடைக்குதோ!'' என்றான்.

துர்கா சிரித்தார்.

''இதைச் சொல்லத்தான் காலையிலேந்து குட்டி போட்ட பூனையாட்டம் அலைஞ்சியா?''

உறங்கி எழுந்ததுமே தம்பியிடம் காணப்பட்ட பரபரப்பைத் துர்காவால் உணர முடிந்ததுதான்.

இவர் எழுந்திருக்கும் முன்னரே எழுந்துவிட்டவன், நகத்தைக் கடித்தபடி ஒவ்வொரு அறையாக வளைய வந்து இருப்பே கொள்ளாமல் தவித்தான். பின், அந்தத் தவிப்பு தாள மாட்டாமல் போனதும் அக்கா எதிரில் எதையும் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று தீர்மானித்த இறுதில், 'காலாற நடந்துட்டு வரேனக்கா



ஞாயித்துக்கிழமைதானே' என்று கூறிப் புறப்பட்டுப் போனான். முக்கால் மணி நேரம் கழித்து வந்தவனிடம் அதே படபடப்பு கொஞ்சமும் குறையாமல் காணப்பட, கையில் பேப்பருடன் வாசல் அறையில் உட்கார்ந்திருந்த துர்கா, ''என்ன விஷயம் கோபி... ஏன், இருப்புக் கொள்ளாம தவிக்கறே?'' என்று கேட்டதும், அந்த ஆரம்பத்துக்காகக் காத்திருந்த மாதிரி கோபி சிரித்தான். ''உங்ககிட்ட கொஞ்சம் பேசணுங்கா...'' என்றான் சின்னக் குரலில்.

''பேசேன்...''

வீட்டைக் கூட்டிக் கொண்டிருந்த ராணிமேல் பார்வையைப் படர விட்டுக் கோபி தயங்க, துர்கா பேப்பரை மடித்து வைத்தார். எழுந்தார்.

''நல்லதா தக்காளி இருக்கு... ஜூஸ் பண்ணப் போறேன்...என்கூட நீயும் சமையல் கட்டுக்கு வாயேன்' என்று அவனையும் தன் கூட அழைத்து வந்து விட்டார்.

''சொல்லு கோபி... என்னமோ பேசணும்னு சொல்லிட்டு எதுவுமே சொல்லாம, தன் பாட்டுக்குச் சிரிச்சுக்கிட்டு இருந்தா...''

பாதி ஜூஸைக் குடித்த கோபி, 'ஒரு நிமிஷம்' என்று கூறிவிட்டு எழுந்து தன் அறைக்குச் சென்றான். திரும்பி வந்தவன் கையில் இரண்டு காட்பரீஸ் சாக்லெட் கட்டிகள்.

எதுவும் கூறாமல் அவற்றை அக்கா முன் வைத்துவிட்டு உட்கார, துர்கா கண்களை விரித்தார்.

''என்னப்பா திடும்னு சாக்லெட்ட தர்றே? என்ன விஷயம்?'' கோபி வெட்கத்தோடு புன்னகைத்தான்.

''நீங்கதான் ஊகிச்சுப் பாருங்களேன்...''

''ம்ம்...பதவி உயர்வு கிடைச்சிருக்கு...''

''ம்ஹூம்''

''இந்த வேலையை விட்டுட்டு இன்னும் பெரிய வேலையை ஒத்துக்கப் போறே?''

''ம்ஹூம்?''

''அமெரிக்காவுக்கு மேல் படிப்புப் படிக்கப் போயப் போறே?''

''ம்ஹூம்''

தோன்றின ஊகங்களில் எதுவும் சரியானதாய் இல்லாமல் போக, துர்கா 'ப்ச்' என்றார்.

''என்ன விளையாட்டு கோபி! விஷயத்தைச் சட்டுனு சொல்லாம...''

பார்வையை உயர்த்தி அக்காவை ஏறிட்ட கோபி, சின்ன பையன் மாதிரி வெட்கப்பட்டான்.

''நான் கல்யாணம் பண்ணிக்கற முடிவுக்கு வந்திருக்கேன்க்கா...''

''எ...என்ன?''

துர்காவின் அதிர்ச்சி ரொம்பவும் வெளிப்படையாக இருக்க, கோபி வாய்விட்டுச் சிரித்துச் சமாளிக்க முயன்றான்.

''என்னக்கா? என்னமோ கொலை பண்ணப் போறேன்னு சொல்லிட்ட மாதிரி பதறிப் போறிங்க?''

எதுவும் பேசத் தெரியாமல் துர்கா அவனை வெறித்தார். அப்புறம் அவன் சொன்ன சேதியின் அர்த்தம்



அப்போதுதான் புரிந்த மாதிரி சந்தோஷத்தோடு புன்னகைத்தார்.

காட்பரிஸ் சாக்லெட்டைப் பிரித்து ஒரு துண்டத்தைத் தம்பியிடம் கொடுத்தவர், இன்னொன்றைத் தன் வாயில் போட்டுக் கொண்டு, 'கங்கராட்ஸ்... மனப்பூர்வமான வாழ்த்துக்கள்... ஆமா, கல்யாணம் பண்ணிக்க மட்டும் தான் தீர்மானம் பண்ணியிருக்கியா, இல்ல...பெண்கூட யாருனு...' பேசிக் கொண்டே போன துர்கா, யாரோ நிமிண்டிவிட்ட மாதிரி நிமிர்ந்து உட்கார்ந்தார்.

'நீ எதுவும் சொல்லாதே' என்கிற பாவனையில் ஒரு கையை முன்னால் நீட்டி, ''சித்ரா?'' என்று பரபரப்பாய் வினவ, கோபி 'ஆம்' என்று தலை அசைத்தான்.

''கடவுளே!''

''இப்ப எதுக்காக அவரைக் கூப்பிடறீங்க?''

''ஆறு ஏழு மாசமா என் கண் முன்னால ரெண்டு பேரும் பழகி இருக்கீங்க...ஆனாலும் எதையும் என்னால புரிஞ்சுக்க முடியலையே! சரியான மட...''

கோபி சிரித்துக் கொண்டே குறுக்கிட்டான்.

''அனாவசியமா உங்களையே நீங்க திட்டிக்க வேணாங்க்கா... இத்தனை மாசங்களா நாங்க நல்ல நண்பர்களா மட்டும்தான் இருந்தோம்... அதனால எதையும் விசேஷமா புரிஞ்சிக்கலையேனு நீங்க வருத்தப்படவே வேணாம்...''

''அப்படின்னா? கல்யாணம் பண்ணிக்கத் தீர்மானம் செஞ்சிட்டதாகச் சொன்னது விளையாட்டுக்கா?''

''இல்ல... இல்ல... அது உண்மைதான்... பத்து நாள் முன்னாலதான் முத தடவையா சித்ராவும் நானும் தாம்பத்தியத்துல ஈடுபட்டா நல்லா இருக்குமேன்னு

எண்ணம் எனக்குள்ள உண்டாச்சு...அப்படி ஒரு ஆசை இருக்கிறதைத் தெரிஞ்சிக்கிட்டதும் நாகூட திகைச்சுதான் போயிட்டேன்...அப்புறம் மேலே இந்த எண்ணத்தை வளர்த்துக்கறதுக்கு முன்னால அவகிட்ட இதுபத்திப் பேசிடணும்னு நினைச்சேன்..."

"பேசிட்டியா?"

"நாலு நாள் முன்னால..."

"என்ன சொன்னா?"

"யோசிச்சுச் சொல்றேன்னு சொன்னவ நேத்து சம்மதம்னு சொல்லிட்டா...மேற்கொண்டு எந்த முடிவுக்கும் வர்றத்துக்கு முன்னால வீட்டுப் பெரியவங்ககிட்ட சொல்லிடணும்னு தீர்மானிச்சோம்... அதான் முதல் வேலையா இப்ப உங்ககிட்ட பேசறேன்..."

தம்பி கூறுவதை நம்ப முடியாததுபோல் துர்கா முன்னால் சாய்ந்து கைகளில் முகவாயைத் தாங்கிக் கொண்டார்.

நாலு வருஷம் முன்னால் இறந்து போன அம்மா இன்று இருந்தால் எத்தனை சந்தோஷப்படுவாள் என்று தோன்றியது.

இருபத்தி மூன்றாவது வயசில் மும்முரமாக வரன் பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில், ஓயாத உதிரப் போக்கு உண்டாகி, வைத்தியரிடம் சென்று காட்டியதும், 'கர்ப்பப்பையில் கட்டி இருக்கிறது, உடனடியாக எடுத்து விடுவதுதான் நல்லது' என்று அவர் கூற, அந்த வயசில் கர்ப்பப்பையை இழந்தது ஒரு விசித்திர அனுபவமாக இருக்க, இனி எனக்குத் திருமணமே வேண்டாம் என்று வைராக்கியமாய் ஆசிரியப் பணிக்கு முழு மனத்தோடு தன்னைத் துர்கா அர்ப்பணித்துக் கொண்டதில் அம்மாவுக்குக் குறையான குறைதான்.



"கர்ப்பப்பை இல்லாட்டி என்ன? குழந்தை பிறக்காட்டி என்ன? தத்து எடுத்துக்கறது...குழந்தை பிறக்காம எத்தனையோ தம்பதி இல்லியா? அதுக்காக கல்யாணமே வேணாம்னு ஒரு பெண் சொல்லலாமா?" என்று வாதாடிப் பார்த்தும் துர்கா அசைந்து கொடுக்காமல் "எனக்குத் திருமணத்துல சின்ன வயசிலேந்தே நாட்டம் இல்லம்மா...என்னை விட்டுடுங்க" என்று பிடிவாதமாய் இருக்க, 'சரி, பேரக்குழந்தை ஆசையை பிள்ளை மூலமாக நிறைவேற்றிக்கொள்ள வேண்டியதுதான்' என்று நம்பியதும் நடக்காதபடி, கோபி விவேகானந்தா கேந்திராவில் சேர்ந்ததும் அம்மா உடைந்துதான் போனாள்.

"கல்யாணம் பண்ணிக்கிட்டு குடித்தனம் பண்றது தான் வாழ்க்கையா? ஊர் உலகத்துக் குழந்தைகள் எல்லாம் நம்பளதுனு நினைச்சு மனசை விசாலமா வளர்த்துக்கிட்டா போச்சு" என்று உறுதியாகக் கோபி கூறியதை மாற்ற முடியாமல் அந்த ஏக்கத்துடனேயே அம்மா இறந்தது இப்போது துர்காவின் நினைவில் எட்டிப் பார்த்தது.

திருமணத்தின்பால் இவளுக்கு எந்தக் கோபமோ, கசப்போ இல்லை. ஏனோ அப்படி ஒரு பந்தம் வேண்டும் என்று தோன்றவேயில்லை. அவ்வளவுதான். இருந்தாலும் தாயோடு சேர்ந்து கொண்டு, "கல்யாணத்துமேல உனக்கு ஏன் அத்தனை வெறுப்பு?" என்று தம்பியை நிறுத்தி வைத்து ஓரிருமுறைகள் கேட்கவே செய்திருக்கிறாள். அதற்கு பதிலாய், "வெறுப்பு எதுவும் இல்லக்கா...உங்களுக்கு தோணாத மாதிரி எனக்கும் வேணும்னு தோணலை...ப்ளீஸ் புரிஞ்சிக்கங்க..." என்று அவன் தெளிவாகக் கூறியதை ஏற்று, "விட்டுடும்மா..." என்று அம்மாவிடம் சொல்லி விட்டாள்.

அதன் பின் திருமணம் என்கிற பேச்சை அவரும்

எடுக்கவில்லை கோபிக்கும் அந்த நினைப்பு இருந்ததாகக் கூடத் தெரியவில்லை.

அந்த கோபிதான் இன்றைக்கு அவனாக வந்து "நான் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்" என்று கூறுகிறான்.

எதிரில் இருந்தவனை அழுந்தப் பார்த்தபோது அந்த முகத்தில் தெரிந்த சந்தோஷமும், வெட்கமும், பரபரப்பும் இத்தனை வருஷங்களாக உணர்ந்திராத ஒரு புது கோபியைக் காட்டிக் கொடுக்க, துர்கா நிறைவோடு புன்னகைத்தார்.

சாக்லெட்டிலிருந்து இன்னொரு துண்டை எடுத்து வாயில் போட்டுச் சுவைத்தவர் எட்டித் தம்பியின் கையைப் பற்றிக் கொண்டார்.

"ரொம்ப சந்தோஷமா இருக்கு கோபி...ஆனா நம்ம அம்மா இருக்கறப்பவே இந்த முடிவுக்கு வந்திருந்தா, அவங்களும் மகிழ்ந்து போயிருப்பாங்க...?

கோபி கண்களைச் சிமிட்டிச் சிரித்தான்.

"அப்ப, நாலு வருஷம் முன்னாலியே நீங்க எனக்குச் சித்ராவ அறிமுகம் செஞ்சி வெச்சிருக்கணும்...தப்பு உங்க பேர்லதான்..."

அவனோடு சேர்ந்து சிரித்த துர்கா, கொஞ்சம் சீரியஸாகக் கேட்டார்.

"சித்ராகிட்ட அப்படி என்ன விசேஷமா பார்க்கறே? அவ அழகையா?"

"சித்ரா பிரமாத அழகியாக்கா?"

"அழகு இல்லாட்டியும் அவகிட்ட கவர்ச்சி இருக்கு..."

"கவர்ச்சியோ, அழகோ... அதெல்லாத்தையும்விட—



அவ குணம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு...வேண்டாத தயக்கம் இல்லாத அந்த வெகுளி சுபாவம்... பட்டுன்னு எந்த உள் நோக்கமும் இல்லாம யதார்த்தமா பேசற அந்தக் குணம். "ஓரோர் சமயம் விவேகத்தோடு பெரிய மனுஷியாய் பேசற—மறு சமயம் ரெண்டாங் கெட்டான் குழந்தை மாதிரி சிரிச்சு சண்டை போடற—அந்த வேஷம் போடாத தன்மைதான் அவளோட சேர்ந்து வாழணும்கிற எண்ணத்தை எனக்குக் கொடுத்ததுன்னு நினைக்கிறேன்..."

"ம்ம்"

ஆள்காட்டி விரலால் மேஜைமேல் 'கோபி—சித்ரா' என்று இரண்டு தரம் துர்கா எழுதிப் பார்த்தார். வெறும எழுத்துச் சேர்க்கையே மனசுக்கு அலாதி குதூகலத்தைத் தந்தது. ஆனாலும் மகிழ்ச்சியை அமுக்கிக் கொண்டு, எல்லாம் நல்ல விதமாய் நடக்க வேண்டுமே என்கிற கவலையும் தலை தூக்கியது.

"இந்தக் கல்யாணத்துக்கு சித்ராவப் பெத்தவங்கள் சம்மதிக்க வைக்கிறது கஷ்டமா இருக்குமோ கோபி?"

"ஏன்? ஒத்துக்க மாட்டாங்கன்னு நீங்க பயப்படறீங்களா?"

'ம்? ரெண்டு குடும்பமும் வேற வேற ஜாதி...அதுவும் தவிர..." அவளை முடிக்க விடாது கோபி நடுவில் நுழைந்தான்.

"அக்கா...ப்ளீஸ்; இது இருபதாம் நூற்றாண்டு... காலம் மாறிட்டதை மறந்திட்டீங்க போல இருக்கு!"

"நா மறக்கல...உங்களுக்கு நம்பிக்கை இருந்தா எனக்குச் சந்தோஷம்தான்...தவிர உங்க ரெண்டு பேருக்கும் வயசுல பத்து வருஷ வித்தியாசம் இருக்கு..."

"அதனால? நீங்க கூடவா அத ஒரு குறையா நினைக்கறீங்க?"

"எனக்கு எதுவுமே குறையும் இல்லை...தப்பும் இல்லை... அவங்க கோணத்துலேந்து நா கேள்வி கேக்கறேன்...இத நீ புரிஞ்சுக்கணும்..."

கோபி எழுந்து ஜன்னலிடம் சென்று கம்பியில் முகத்தைப் பதித்துக் கொண்டு நின்றான்.

நாலைந்து சிட்டுக் குருவிகள் எந்த கவலையும் இல்லாமல் ஆனந்தமாய்க் கத்தியபடி ஒன்றை ஒன்று துரத்தி விளையாடிக் கொண்டிருந்தன. தெரு நாய் ஒன்று விளக்குக் கம்பத்தில் கட்டியிருந்த மாட்டின் அருகில் சென்று முகர்ந்து பார்த்துவிட்டு அது பின்னங்காலால் ஓர் உதை கொடுத்ததும் வாள் வாள் என்று கத்தியபடி ஓடியது.

"உன்கிட்ட இன்னொண்ணும் கேக்கணும் கோபி... உன் பேர்ல நம்பிக்கை இல்லாம இதநா கேக்கலை... ஆனா, சித்ராவோட எதிர்காலத்த மனசுல வெச்சிகிட்டுக் கேக்கறேன்...பத்து வருஷமா எந்த வேலையும் நீ ஸ்திரமா இருந்ததில்ல...மிஞ்சிப்போனா ஒரு வருஷம் வேலை பார்த்திட்டு, கொஞ்சம் பணத்தைச் சேர்த்துகிட்டு ஊர் ஊரா சுத்திப் பார்க்கப் போயிடுவே. இல்லே, மேலே படிக்கறேன்னு கிளம்பிடுவே...இனிமே அதெல்லாம் முடியாது...பொறுப்ப ஏத்துக்கறது அவசியம்... கல்யாணம், குடும்பம்ன்ற கமிட்மெண்ட் சாதாரணமானது இல்லை...இதெல்லாம் கேக்கறேன்னு நீ கோவிச்சுக்கக்கூடாது..."

கோபி...நாற்காலியை அவரருகில் இழுத்துப் போட்டுக்கொண்டான். சிரித்தான். 'கோபமா? உங்களிடமா? எனக்கா?' என்று அந்த சிரிப்பு கேட்டது.

"நீங்க எது சொன்னாலும் பேசினாலும் அது நியாயமானதா இருக்கும்னு நா நம்பறேன்க்கா...அதனால தயங்காம எது வேணா கேளுங்க...தவிர, இப்படி அதட்டிக்



கேக்கவும் எனக்கு உங்களைத் தவிர வேறு யார் இருக்காங்க? ம்? நீங்க கேட்ட கேள்விகளை எல்லாம் சித்ராகிட்ட சம்மதம் கேக்கறதுக்கு முன்னாலியே எனக்கு நானே கேட்டுக்கிட்டேன்... இருப்புக் கொள்ளாமை இருந்த வயசு இப்ப மாறிட்டதுனே நினைக்கறேன்... குடும்பப் பொறுப்பை அவளோட ஏத்க மனசு விரும்பறது புரியுது...பழையபடி ஊர் சுத்திக்கிட்டு இனியும் என்னால இருக்க முடியாதுனே தோணுது... சித்ராவ நான் மனசார விரும்பறேன், எங்களால இனிமையான தாம்பத்தியம் நடத்த முடியும்னே நம்பறேன்..."

அரை நிமிஷம் நிறுத்தின கோபி, குரலைத் தழைத்துக் கொண்டு, "சித்ராவ நா கல்யாணம் பண்ணிக்கறதுல உங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லியேக்கா?" என துர்கா ஆதரவாய்ப் புன்னகைத்தார்.

"நீ சொன்ன செய்தியைவிட எனக்கு தற்சமயம் சந்தோஷம் தரக்கூடியது வேற எதுவுமே இல்ல கோபி... நீங்க ரெண்டு பேரும் ரொம்ப வருஷங்களுக்கு நல்லா வாழணும்... அப்பா ஸ்தானத்துல இருந்து உங்களை நா வாழ்த்தறேன்."

சொல்ல வந்ததைக் கூறி முடிப்பதற்குள் உணர்ச்சி வசப்பட்டதில் தொண்டை கம்மிப் போயிற்று. கண் ஓரங்களில் நீர் பளபளத்தது.

கோபி, அக்காவின் கையைப் பற்றிக் கொண்டு உன் நிலை எனக்குப் புரிகிறது என்கிற தினுசில் பார்த்தான்.

"சித்ரா வீட்டுல இந்தச் சமாசாரத்தை நல்ல விதமாக வரவேற்கணும்... அதுதான் இப்ப எனக்குக் கவலையா இருக்கு..."

யோசனையுடன் துர்கா பேசியதற்கு ஏற்ப, விஷயத்

தைக் கேள்விப்பட்டதும் சித்ராவின் இல்லத்தில் அவளது பெற்றோரிடமிருந்து எதிர்ப்பு வெடித்துக் கொண்டு கிளம்பியது.

ஞாயிறு, விடுமுறை நாட்களில் காலை சாப்பாடு ரொம்ப நிதானமாகத்தான் ஆகும் என்பதால், எல்லாருக்கும் இரண்டாவது காபி கொடுத்துவிட்டு, உருளைக் கிழங்கு ரோஸ்ட், வெங்காய சாம்பாருக்கு அம்மா மாலை சமையல்கட்டில் ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்க, அப்பா சுந்தரம், ஓடாத கடிகாரம் ஒன்றைப் பிரித்து, என்ன கோளாறு என்று பார்த்துக்கொண்டிருக்க, தங்கைகள் சுஜா இந்துவும் கல்லூரி, பள்ளி புத்தகங்களோடு மன்றாடிக் கொண்டிருக்க, சித்ரா சமையல் அறை வாசலில் நின்று, ''அம்மா'' என்று குரல் மெதுவாகக் கொடுத்தாள்.

''என்ன'' என்று நிமிர்ந்தவளிடம், ''வாசலுக்கு வாங்கம்மா... அப்பாகிட்டயும் உங்ககிட்டேயும், முக்கியமா ஒரு சேதி சொல்லணும்...''

''எதுவானாலும் அப்பாகிட்ட சொல்லு... நான் கைக்காரியமா இருக்கேன்... ரசம் பொங்கி வரப் போகுது தாளிக்கணும்...''

''தாளிச்சிட்டு வாங்க... நா காத்துக்கிட்டு இருக்கேன்...''

சில நிமிஷங்கள் அங்கேயே நின்று பிடிவாதமாய் அடுப்பை அணைக்கச் செய்தபின், அம்மா பின்தொடர முன் அறைக்குச் சென்றாள்.

''இவ அடிக்கற கூத்தப் பாருங்க. ஏதோ சொல்லணுமாம். சரி சொல்லுனு சொன்னா, அப்பாவையும் வச்சிக்கிட்டுச் சொல்வேன்னு அடம் பண்ணுறா. சரி, வந்திட்டேன் இல்ல. சொல்லு...''

30208



தழைத்திருக்க மூக்குக் கண்ணாடி வழியாகச் சுந்தரம் அவளைப் பார்த்தார். வேலையாய் இருக்கும்போது தொணப்பது எதற்கு என்ற எரிச்சல் அதில் தெரிந்தது.

சித்ராவுக்கு ரொம்பப் பயமாக இருந்தது.

கட்டாயம் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்று திட்டவட்டமாகப் புரிந்துகொள்ள முடிய, அடிவயிற்றில் ஏகத்துக்கு வெட்டுக்கிளிகள் இப்படியும், அப்படியும் தாவின.

''சொல்லுடீ... ரொம்ப காரியமா வரச்சொல்லிட்டுத் தூண்கல் மாதிரி நின்னா?''

சித்ரா உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள்.

இனியும் தயங்குவதில் அர்த்தம் இல்லை என்று மெது மெதுவாக விஷயத்தைக் கூற,

அவள் முடிக்கும் முன்னரே, எதிர் பார்த்ததையும் விடக் கடுமையாகப் பூகம்பம் வெடித்தது.

கோபி பற்றின எந்த விவரத்தையும் முழுமையாகக் காதில் வாங்க மறுத்ததும் அல்லாமல், ''ஜாதி விட்டு ஜாதில எவனையோ விரும்பறியா? எடு செருப்ப... கழுத... படிச்சது போதும்... நாளைலேந்து வீட்டுலேயே உட்காரு... முத காரியமா தரகரண்ட சொல்லி நம்ம சமூகத்துலேயே ஒரு அசடோ, பைத்தியமோ கிடைச்சாலும் கட்டி வெச்சிட வேண்டியது தான். வீட்டை விட்டு இறங்கு... காலை முறிச்சு வெந்நீர் அடுப்புல வச்சிடறேன்...'' என்று மாமூலாக சினிமாவில் கேட்கும் கதைகளில் படிக்கும் வார்த்தைகளைச் சொல்லி அடித்தொண்டையில் மாறி மாறி அப்பாவும் அம்மாவும் கத்தி, அடுத்து வந்த நாட்களில் அவளை எங்குமே போக விடாமல் தடுத்ததில், கோபியைச் சந்தித்து விஷயம் இப்படி என்று சொல்வதற்குக் கூட சித்ராவுக்கு கிட்டத்தட்ட ஒரு வாரம் ஆயிற்று.

தெரு முனையிலேயே இறங்கிக் கொண்டு, ஆட்டோவுக்குப் பணத்தைக் கொடுத்து துர்கா அனுப்பினார். ஒவ்வொரு வீடாக எறிட்டுக்கொண்டே நிதானமாய் நடந்தார்.

முப்பத்தியாறு... முப்பத்தி ஏழு... அடுத்த வீடு...

நின்று முப்பத்தி எட்டாம் எண் வீட்டை அழுந்தப் பார்த்தார்.

பழைய வீடுதான்.

வாசலில் ஒரு மகிழ மரம்.

மாடியில் சித்ராவின் பெற்றோர் சுந்தரமும், மாலதியும் தம் மூன்று பெண்களோடு குடி இருக்கிறார்கள். கீழே இன்னொரு குடித்தனம்.

வீட்டுக்குச் சுந்தரம் சொந்தக்காரரா? இல்லை வாடகைக்குக் குடி இருக்கிறாரா?

தெரியாது.

ஒன்றும் தெரியாது.

விவரமெல்லாம் சித்ராவிடம் கேட்டுக்கொண்டு வந்திருக்க வேண்டுமோ?

சுந்தரம் தனியார் கம்பெனி ஒன்றில் உதவி மானேஜராக இருக்கிறார் என்றும், அலுவலகம் அண்ணா சாலையில் உள்ளது என்றும் தெரியும். சித்ராவுக்கு அடுத்தபடி இன்னும் இரண்டு பெண்கள் இருக்கிறார்கள் என்பது தெரியும். மற்றபடி அவர்கள் வசதியானவர்களா, சொந்த வீடு, கார் வைத்துக் கொண்டிருப்பவர்களா, போன்ற விவரங்கள் எதுவும் துர்காவுக்குத் தெரியாது. இத்தனைக்கும் இரண்டு வருஷங்களாய் சித்ரா அவர் மாணவிதான் என்றாலும் படிப்பிற்கு அவசியமான விவரங்களைத் தவிர மற்றதொன்றும் தெரியாது.



தெரிய வேண்டிய அவசியம் தான் என்ன?

தம்பி மணக்க விரும்பும் பெண் குணவதி, புத்திசாலி, இலட்சணமாய் இருக்கிறாள் என்பதோடு, நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பது தெரியும். இத்தனை தெரிந்தால் போதும் என்று நினைத்ததால் தான் கோபியையோ, சித்ராவையோ, என்ன, ஏது என்று அவர் தூண்டித் துருவவில்லை.

இரண்டு நாட்கள் முன்பு மாலை ஏழு மணி இருக்கும்.

டெஸ்ட் பேப்பர்களைத் திருத்திக்கொண்டு உட்கார்ந்திருந்தவர் எதிரில் கோபியும் சித்ராவும் வந்து நின்றார்கள்.

முகங்களில் கலக்கம். சித்ராவின் கண்களில் சிவப்பு...

அழுதாளா என்ன?

சித்ரா மௌனமாய் நின்று நாழிகையில் கோபி அவளுடைய பெற்றோர் தங்கள் திருமணத்திற்கு மறுத்து விட்டதைக் கூறினான்.

குறுக்கே ஒரு வார்த்தை பேசாமல் அவன் சொன்னதைக் கேட்ட துர்கா, கண்ணாடியைக் கழற்றி மேஜை மேல் வைத்தார். புருவங்களை உயர்த்தி "இப்போ என்ன செய்யறதா உத்தேசம்?" என்றார்.

கோபி சித்ராவை ஏறிட்டான். பின் சின்ன குரலில்

"எங்க முடிவுல மாற்றம் ஏதும் இல்லேக்கா" என்றான்.

ஓ!

"அப்படீன்னா அப்பா அம்மா சம்மதம் கிடைக்காட்டியும் கல்யாணம் பண்ணிக்கறதா தான் இருக்கீங்களா சொல்லுங்க... என்ன சித்ரா... உன் முடிவும் இதுதானா?"

சித்ரா ஒருதரம் துர்காவைப் பார்த்துவிட்டுப் பார்

யையைத் தனுரத்துக் கொண்டாள். ஆம் என்று தலை அசைத்தாள்.

''ம்ம்ம்...பெரியவங்க சம்மதம் இல்லாம கல்யாணம் பண்ணிகிட்டு, அதப்பத்தி எந்த உறுத்தலும் இல்லாம இருக்க முடியும்னு உங்களுக்குத் தோணுதா?'

கோபி விரல்களை முடியில் கொடுத்துக் கோதி விட்டுக் கொண்டான். வருத்தத்துடன் பேசினான்.

''நிச்சயமா நிம்மதியா இருக்க முடியாதுதான். இத்தனை வருஷமா வளர்த்து ஆளாக்கின பெரியவங்களப் பகைச்சிக்கிட்டுப் புது வாழ்க்கை ஆரம்பிக்கறதுக்குத் சுயநலமாகத்தான் இருக்கு. அவங்க சம்மதத்தோட நாங்க புதுவாழ்க்கை தொடங்கறது தான் நியாயம்...ஆனா, எதையும் காதுல வாங்கமாட்டேன்னு இல்ல பிடிவாதமா இருக்காங்க? அதுக்காக, வச்ச அன்பை 'வேணாம்போ'னு விரட்டிட முடியுமா? ஒன்னும் புரியல...இப்ப நாங்க என்ன பண்ணறது? நீங்களே சொல்லுங்க...'

துர்கா முழுசாய் ஒரு நிமிஷம் மௌனித்தார். யோசித்தார்.

''நாவேணா அவர்களைச் சந்திச்சுப் பேசிப்பாக்கட்டுமா?''

''பேசி?''

''நிலைமையை விளக்கிச் சம்மதம் வாங்க முயற்சி செய்கிறேன்''

சித்ரா சட்டென்று முன்னால் வந்து துர்காவின் கரங்களைப் பற்றிக் கொண்டாள் கண்களில் நீர் துளிர்க்  ''உங்களால அதைச் செய்யமுடியும்னா, மேடம், என்னை விட சந்தோஷப்படறவங்க யாரும் இருக்க முடியாது.'' என்றாள் நெகிழ்ப்பாக.



சொன்னதை நிறைவேற்றும் உத்தேசத்தோடு மறுநாளே துர்கா கல்லூரியிலிருந்து சுந்தரத்தின் அலுவலகத்துக்கு போன் செய்து அவரோடு பேசினார்.

''என் பேர் துர்கா...சித்ராவோட புரொபஸர் உங்களையும், உங்க மனைவியையும் சந்திக்க முடியுமா?''

''எதுக்கு?''

''நேர்ல பார்க்கறப்போ சொல்றேனே!''

''நீங்கதானா அந்த கோபியோட அக்கா?''

''ம்''

''அப்படின்னா உங்களைப் பார்க்கவோ, பேசவோ நாங்க விரும்பல...''

''மிஸ்டர் சுந்தரம், நான் கல்லூரிலேந்து பேசறேன்...எதையும் விளக்கமாக சொல்ல முடியாத நிலையில் இருக்கேன்...தயவு பண்ணி நாளைக்கு உங்க வீட்டுக்கு வர எனக்கு அனுமதி கொடுங்க.''

சுந்தரம் அவர் பேச்சைக் காதில் வாங்காமல் அந்தப் பக்கத்திலிருந்து உறுமினார்.

''பெண்கள படிக்கத்தான் காலேஜுக்கு அனுப்பறோம் காதல் பண்ண இல்ல... கண்டிச்சு நல்ல வழில நடத்த வேண்டிய ஆசிரியர்களே அசிங்கத்துக்கு உடந்தையா இருந்தீங்கன்னா, யார் கிட்ட போய் நியாயம் கேட்கறது•

''உங்க கோபம், வருத்தம் எல்லாம் எனக்கும் புரியுது மிஸ்டர் சுந்தரம்... ஆனா, திட்டமிட்டு எதுவும் நடக்கல? எதிர்பாராம நிகழ்ந்திட்ட ஒன்னு...என்னை நம்புங்க முதல்ல நாங்கூட இதை நம்பல... நேர்ல பாத்தா எல்லாத்தையும் விளக்க முடியும். நாளைக்கே உங்க வீட்டுக்கு வரட்டுமா? ப்ளீஸ்.''

''........''

மௌனம் சம்மதத்தின் அறிகுறி என்று எடுத்துக் கொண்ட துர்கா தொடர்ந்தார்.

"அரை நாள் லீவு போட முடியுமா? சாயங்காலம் வந்தா உங்க மத்த ரெண்டு பெண்களும் வீட்டுல இருப்பாங்க ...அவங்களுக்கு எதிர்லே பேச வேணாம்னு நினைக்கிறேன்... மதியம் மூணு மணி சுமாருக்கு வரட்டுமா?"

கேட்டவர், தானும் அரை நாள் விடுப்பு எடுத்துக் கொண்டு இதோ வந்திருக்கிறார்.

முப்பத்தி எட்டாம் எண் வீட்டின் முன் ஒரு கணம் தாமதித்து, கேட்டைத் திறந்தார்.

மரகேட், எளிதில் திறக்க வராமல் மண் தரையில் சிக்கியது.

இலேசாகத் தூக்கித் திறந்தார்.

உட்பக்கம் சென்ற பிறகு மறுபடி சாற்றி, கம்பியைப் போட்டார்.

மகிழம்பூக்கள் தரையெங்கும் பாய் விரித்த மாதிரி உதிர்ந்திருந்தன.

பக்கவாட்டிலிருந்த மாடிப்படி வழியாக துர்கா மாடிக்குச் சென்றார்.

மேல் உதட்டில் வியர்த்தது. மார்பு கூட்டுக்குள் இருதயம் சத்தத்தோடு குதித்தது. எல்லாம் நல்லவிதமாய் முடியவேண்டுமே என்று கவலையாய் இருந்தது

இவள் வருகையை எதிர்பார்த்த தினுசில் கதவு திறந்தே இருந்தது.

செருப்பை அவிழ்த்துவிட்டு, ஸார் என்ற குரல் கொடுக்கும் முன்னர் அவரே எட்டிப் பார்த்தார்.

"வணக்கம்"

பதிலுக்கு வணக்கம் தராமல் சிடுசிடுத்த முகத்துடன் நின்றவர் உள்ளே திரும்பச் செல்ல துர்கா பின் தொடர்ந்தார்.



உள் அறையில் சித்ராவின் அம்மா இருந்தாள்.

உட்காரச் சொல்லிச் சைகை காட்டினதும், துர்கா நாற்காலியில் அமர்ந்தார்.

அத்தனை வசதியானவர்கள் இல்லை என்பதைவீட்டை ஒரு பார்வை பார்த்ததுமே புரிந்து கொள்ள முடிந்தது.

"சொல்லுங்க ... இப்ப எதுக்காக எங்க வீட்ட தேடி வந்திருக்கீங்க?"

பீடிகை எதுவும் இல்லாமல் எரிச்சலுடன் சுந்தரம் வினவ, எப்படிப் பேச்சைத் துவங்கினால் நல்லது என்று யோசனை பண்ணிவைத்திருந்த ரீதியில் துர்கா பேசினார்.

"கோபி சித்ரா விஷயமாதான் பேச வந்திருக்கேன்"

"அதுல பேச என்ன இருக்கு? எங்களைப் பொறுத்த வரை அது முடிஞ்சு போன சமாசாரம்...நீங்க அவ புரொபஸர் போன் பண்ணி வரட்டுமானு கேட்டாங்களேனு சம்மதிச்சோம் நாளைக்கு இந்த கோபத்த சித்ராவோட பேப்பர்களைத் திருத்தறப்போ காட்டிடக் கூடாது பாருங்க..."

துர்கா மெலிதாய் புன்னகைத்தார்.

"தொழில் வேற.. தனிப்பட்ட விஷயங்கள் வேற... நான் இங்க சித்ராவோட புரொபஸரா வரல... கோபியோட அக்காவா, சித்ராவோட நலன்ல அக்கற கொண்ட ஸ்நேகிதியாதான் வந்திருக்கேன்..."

"அதுதான் முடிஞ்சுபோன விஷயம்னு ஏற்கனவே சொல்லிட்டேனே... வேற ஏதாவது பேசணும்னா பேசுங்க... இல்ல மன்னிக்கணும், நடைய கட்டுங்க..."

தீர்மானமாக அவர் பேசியதும், நகங்களை ஆராய்ந்தபடி துர்கா அரை நிமிஷம் அப்படியே அமர்ந்திருந்தார். மெதுவாகப் பேசினார்.

''உங்க கோவம் எனக்கு புரியுது. உங்க நிலைமைல நா இருந்தா எனக்கும் இப்படித்தான் ஆத்திரம் வந்திருக்கும்... ஆனா, மிஸ்டர் சுந்தரம், நாம விரும்பியோ, விரும்பாமலியோ அவங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் நேசிக்க ஆரம்பிச்சிட்டாங்க...நாம சம்மதம் கொடுத்தா நம்ம ஆசிர்வாதத்தோட கல்யாணம் பண்ணிக்கறதா சொல்றாங்க... கொடுக்காட்டி...''

ஆத்திரத்துடன் சுந்தரம் குறுக்கிட்டார்.

''கொடுக்காட்டி என்ன பண்ணுவாங்களாம். ஓடிப் போய் கல்யாணம் பண்ணிப்பாங்களா.''

''அப்படித்தான் நினைக்கிறேன்.''

''நினைப்பீங்க... நினைப்பீங்க... காலை ஒடிச்சு, வீட்டுல வச்சு என் மகளை பூட்டிட்டேன்னா, எப்படிப் பண்ணிப்பாங்க? அ?''

''மிஸ்டர் சுந்தரம்...சித்ரா மேஜரான பெண்...தான் விருப்பப்பட்டவரை கட்டிக்கத் தீர்மானிக்கறத யாரும் தடுக்க முடியாது.''

''ஏன் தடுக்க முடியாது? நா பெத்தவன்...நினைப்புல வச்சுக்கங்க... எங்களை மிரட்டறதுக்குனே உங்களை அவ அனுப்பி வச்சாளா?''

''சித்ரா அனுப்பவும் இல்ல... உங்களை மிரட்டவும் நா இங்க வரலை... இந்த ப்ரச்னைல எனக்குச் சம்பந்தம் உண்டுன்றதால என் கடமையச் செய்ய வந்திருக்கேன்... எனக்கே இவங்க காதல் விவகாரம் ஒரு வாரம் முன்னால தான் தெரியும் மிஸ்டர் சுந்தரம் நீங்க என்னை நம்பணும்.''

''தெரிஞ்ச உடனே இது மேற்கொண்டு வளராமல் தடுத்து நிறுத்த முயற்சி எடுத்தீங்களா?''

இல்லை என்று துர்கா தலை ஆட்டினார்.



''சித்ராவோ, கோபியோ குழந்தை இல்ல... தாங்க என்ன செய்யறோம்னு தெரிஞ்சு, புரிஞ்சு செய்யறவங்க வேணாம்... கூடாதுனு நா தடுக்கறதால, காதலிக்கறத நிறுத்திடுவாங்கனு நினைக்கிறீங்களா? அது இருக்கட்டும் வெளிப்படையாவே உங்களைக் கேக்கறேன்—சித்ரா, கோபிய கல்யாணம் பண்ணிக்கறது தப்புனு ஏன் நினைக்கிறீங்க?''

''என்ன, தப்பா?... சுய நினைவோடதான் கேக்கறீங்களா? நீங்க என்ன ஜாதி...நாங்க என்ன ஜாதி?... அதுவும் தவிர''

''இந்தக் காலத்துல ஜாதிக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுக்கறது அவசியமா மிஸ்டர் சுந்தரம்?''

''கொடுக்காம? நா சாதாரணப்பட்டவன். சித்ராவுக்கு அடுத்தபடியா இன்னும் ரெண்டு பொண்களை வச்சிட்டு இருக்கேன்... ஜாதி ஜனங்களை பார்க்காம இருந்தா எல்லாரையும் ஒழுங்கா கரை எத்த முடியுமா?''

''அப்படீன்னா, நாங்க வேற ஜாதிக்காரங்கறதுதான் உங்களுடைய முக்கியமான ஆட்சேபனை... இல்லியா?''

''அதுமட்டுமில்லை...அது எப்படி தானா ஒருத்தனைக் கட்டிக்க சித்ரா முடிவு எடுக்கலாம்...பெரியவங்க நாங்க இல்ல? இவா சம்பந்தப்பட்ட நல்லது கெட்டது கள முடிவு எடுக்க எங்களுக்கு உரிமை இல்லியா?''

''ஏன் இல்லாம? முழுக்க முழுக்க நீங்க செய்ய வேண்டியதுதான்...தானா துணிஞ்சு சித்ரா இப்படி நடந்துக் கிட்டது தப்புதான். ஆனா முடிவு எடுத்திட்டாளே... நடந்துட்ட ஒரு விஷயத்தைப் பத்தி அளவுக்கு மீறி அலட்டிக்கறதைவிட, இதுக்குத் தீர்வு என்னனு யோசிக்கறதுதானே! சரியான காரியம் மிஸ்டர் சுந்தரம்? இப்ப என்ன பண்ணறதா இருக்கீங்க? அதச் சொல்லுங்க''

''செருப்பு சுழட்டி நாலு கொடுத்தா தன்னால வழிக்கு வர்றா...''

''மிஸ்டர் சுந்தரம் தயவு பண்ணி நிலைமையை உணர்ந்து பேசுங்க... அவ மேஜரான பொண்...தன் விருப்பம் போலச் செய்யத் துணிஞ்சுட்டா யாரும் அவளை தடுக்க முடியாது. இத நினைப்புல வச்சுக்கங்க... தயவு பண்ணி...''

''துணிவா... துணிவா அப்பச் செய்யட்டும்...அவளை வெட்டிப் போட்டுட்டு நானும் ஜெயிலுக்குப் போயிடறேன்... அதான் சரி...''

இத்தனை நாழியாய் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் நின்றிருந்த மாலதி இப்போது புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு அழத் துவங்க, துர்கா வேதனையோடு கேட்டார்.

''அப்படி வெட்டிப் போட்டுட்டு நீங்க ஜெயிலுக்கு போயிட்டா மட்டும் குடும்ப மானம் கப்பல் ஏறாதா மிஸ்டர் சுந்தரம்? பாக்கி ரெண்டு பொண்களையும் கரை ஏத்தறது அப்ப மட்டும் சுலபமாயிடுமா...? தயவு பண்ணி ஆத்திரப்படாம, நிதானமா சிந்திங்க...ப்ளீஸ்...''

இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூறத் தெரியாமல் சுந்தரம் கைகளில் தலையைத் தாங்கியபடி உட்கார, துர்கா தொடர்ந்தார்.

''சித்ராவ வெட்டிப்போடறதாலேயோ — இல்ல அவளை இந்தக் குடும்பத்துலேந்து விலக்கி வைக்கறதாலேயோ இந்த பிரச்சனை தீர்ந்துடாது... இப்படியொரு இக்கட்டு வரக்கூடாதுதான்; ஆனா, வந்திடுச்சு... இதைத் துணிச்சலோட எதிர் நோக்கறது ஒண்ணுதான் சுத்தி இருக்குறவங்க வாயை அடைக்கறத்துக்கு ஒரே வழின்னு நா நினை...''



''அப்ப ஜாதி, குலம் கோத்திரம் பாக்காம, கண்டவனை மாப்பிள்ளையா ஏத்துக்கிடறதுதான் நியாயமான காரியம்னு சொல்றீங்களா?

கோபத்தில் கண்மூடித்தனமாய்ப் பேசுவதினால் ஆத்திரப் படாமல் துர்கா நிதானமாகவே பதில் கூறினார்.

''கோபி கண்டவன் இல்ல மிஸ்டர் சுந்தரம் எம்.ஏ. லிட்ரேசர், எம்.ஏ. எக்னாமிக்ஸ் எம்.பி.ஏ. படிச்சிருக்கான் கெட்டிக்காரன். கிட்டத்தட்ட மூவாயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்கறான். குடி, சிகரெட்... எந்தப் பழக்கமும் கிடையாது. என் தம்பிங்கறதுக்காக சொல்லல. அவனை மாதிரி ஒரு மாப்பிள்ளை கிடைக்க நீங்க கொடுத்துதான் வச்சிருக்கணும்...''

சுந்தரம் விருட்டென்று, எழுந்து நின்றார்... கைகளை சப்தத்துடன் அறைந்து கூப்பினார்.

''வேணாம்மா... அத்தனை உசத்தியாக மாப்பிள்ளை எங்களுக்கு வேணாம்மா உங்க தம்பி கிட்ட பேசற விதமா பேசி, எம்பொண்ணை மறக்கச் சொல்லிட்டு அவருக்கு ஏத்த உசந்த பெண்ணை நீங்களே முடிச்சு வையுங்க. எங்க பொண்ணை வி... விட்டுடுங்க...'' என்று காட்டமாக, ஆனால் கிண்டலாகப் பேச துர்கா எழுந்து நின்றார்.

''நா சொல்றது சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம்... நாம சம்மதம் கொடுக்காட்டியும் அவங்க கல்யாணம் பண்ணிக்கறதாதான் இருக்காங்க... பிடிக்கிறதோ, பிடிக்கலையோ நாமளும் சம்மதிக்கறதால இந்தத் திருமணத்திற்கு ஒரு மரியாதையை, நாலு பேர் நடுவுல ஒரு அந்தஸ்தைத் தர முடியும்னா அதைச் செய்யணும்னு நா நினைச்சேன், அதான் வலிய வந்தேன். ஒண்ணு சொல்லட்டுமா மிஸ்டர் சுந்தரம்? இந்த ஜாதி

வீட்டு ஜாதி கல்யாணத்தால உங்க அடுத்த ரெண்டு பெண்களும் ஓரளவு பாதிக்கப்படலாம்... ஆனா, காலம் மாறிட்ட நிலைய நீங்களே 'நல்ல பையன், செஞ்சு வச்சேன்... என்ன தப்பு?'னு சொல்லி முன்னால நின்னு நடத்தி வச்சிங்கன்னா அந்தப்பாதிப்பு கொஞ்சம் குறையலாம்னே நா நினைக்குறேன். சித்ராவ தள்ளி வக்கறதுனால நீங்க அருமையான மகளை இழக்கப் போறீங்க... ஆனா இந்தக் கல்யாணத்துக்குச் சம்மதிச்சீங்கன்னா மகளோடு உங்களுக்கு அற்புதமான ஒரு மருமகனும் கிடைப்பான். ஒரு காசு செலவில்லாம சித்ராவ நாங்க மருமகளா ஏத்துக்கத் தயாரா இருப்போம். காலம் இருக்கற இருப்புல இப்படி ஒரு மாப்பிள்ளை கிடைப்பான்றதையும் நீங்க நிதானமா யோசனை பண்ணிப் பாக்கணும். நா சொல்லறத சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம்...''

அழுத்தம் திருத்தமாகப் பேசிவிட்டு வந்த துர்காவின் எந்த வார்த்தைகள் அவர்களின் மனங்களைத் தொட்டனவோ, தெரியாது, ஆனால் மறுநாள் காலை கல்லூரிக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில் முகமெல்லாம் சிரிப்புப் பூத்திருக்க சித்ரா ஓடி வந்தாள்.

''அப்பா சம்மதிச்சிட்டார் மேடம்... நேத்து நா வீட்டுக்குப் போனதும் எங்கிட்ட ஒரு வார்த்தை யாரும் பேசல. நானும் எதுவும் கேக்கல... சாப்டுட்டுப் படுத்திட்டேன். முன் அறை விளக்கைப் போட்டுகிட்டு ராத்திரி பூராவும் அம்மாவும், அப்பாவும் ஏதோ பேசிட்டே இருந்தாங்க... காலைல சமையல்கட்டுல உட்கார்ந்திருக்கேன், அப்பா வாசப்படிலே நின்னு, எங்கயோ பார்த்துக்கிட்டு ''போய் அந்தம்மாவ வரச்சொல்லு, முகூர்த்த தேதிய குறிச்சிடலாம்... பெத்துத் தொலைச்சதுக்கு கடமைய பண்ணிட்டுத் தலை மூழ்கிடறோம்'னு சொன்னார்.



பெண்ணைப் பெத்தவர் வீம்பாக இருந்தாலும், அதைப் பாராட்டாமல், இந்த கல்யாணம் நல்ல விதமாய் முடிய வேண்டுமென்றால் விட்டுக் கொடுத்தலும் பொறுமையும் ரொம்ப அவசியம் என்று புரிந்த துர்கா, அன்று மாலையே கோபியையும் உடன் அழைத்துக் கொண்டு சித்ராவின் வீட்டுக்குச் சென்று வந்தார்.

வடபழனி கோவிலில் தாலி கட்டி, ரிஜிஸ்தரா அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டிய நாளைக் குறித்தார். தன் பங்குக்கு சித்ராவுக்கு இரண்டு புடவைகள், தாலிசரடு, திருமாங்கல்யம் வாங்கினார். ரொம்பவும் வேண்டியவர்களை மட்டும் முகூர்த்தத்துக்கு அழைத்தார். யார் வீட்டுத் திருமணம் மாதிரியோ கையைக் கட்டிக் கொண்டு சுந்தரம் நின்றிருந்ததையும், விரலை அசைக்காமல் பிள்ளை விட்டார் மாதிரி மாலதியும், சித்ராவின் இரண்டு தங்கைகளும் நாற்காலியை விட்டு எழுந்திருக்காமல் சட்டமாய் உட்கார்ந்திருந்ததையும் பாராட்டாமல் தானே முன் நின்று எளிமையாய் அந்தத் திருமணத்தை நடத்தி வைத்தார்.

# 6

''சித்ரா?''

''ம்?''

''தூங்கிட்டியா?''

''தூங்கறவள எழுப்பிட்டு, தூங்கிட்டியான்னு கேட்டா சொல்லுங்க என்ன விஷயம்?''

''நாளன்னிக்கு என்ன தேதி?''

''பதினெட்டாம் தேதி...''

''என்ன கிழமை?''

''அடக்கடவுளே! அர்த்த ராத்திரில எழுப்பி உக்கார வச்சுட்டு, இது என்ன நாள், கிழமை ஆராய்ச்சி? புதன் கிழமை... போதுமா... இல்ல மாசம், வருஷத்தையும் சொல்லிடட்டுமா?''

கோபி சிரித்தான்... தள்ளிப் படுத்துக் கண்களை உருட்டிப் பேசியவளை இழுத்துத் தோளில் சாய்த்துக் கொண்டான்.

''வேணாம்... வேணாம்... மாசம் வருஷமெல்லாம் வேணாம்... அன்னிக்கு என்ன விசேஷம். அது மட்டும் சொல்லு போதும்...''

''ம்? ஜனவரி பதினெட்டு... என்ன விசேஷம் அன்னிக்கு இருபத்தி ஆறானாலும் குடியரசு தினம்... தெரியலையே கோபி...''

''நிஜம்மா?''

''இதுல என்ன நிஜமும் பொய்யும்?''

''இல்ல, தெரிஞ்சும் சொல்ல வேணாம்னு நினைக்கிறி யோன்னு கேட்டேன்...''

சித்ரா உதட்டைப் பிதுக்கி 'ப்ச்' என்றாள்.

''இல்ல நிஜம்மா நினைப்பு இல்ல... சொல்லுங்க அன்னிக்கு என்ன விசேஷம்?... ஆ... நாம முத முதல்ல சந்திச்ச நாள்... அதானே?''

''ம்ஹூம்''

''நீங்க, சீட்டுல ஜெயிச்சப்புறம் 'உன் அருகாமை என்னிக்கும் வேணும்'னு கேட்ட நாள்!''

''ம்ஹூம்...''

திரும்பிப் படுத்தவள் லேசான சலிப்புடன் பேசினாள்.



''போங்க... சொல்லாட்டி வேணாம்... எனக்குத் தூக்கம் வருது...''

கோபி அவளைத் தன் பக்கம் புரட்டிப் படுக்க வைத்தான். ஆள்காட்டி விரலால் நெற்றியிலிருந்து மூக்கு, உதடு, முகவாய் என்று நேர்க்கோடு இழுத்தான்.

''உங்கப்பா அம்மாவோட கல்யாண நாள்... அவங் களுக்குத் திருமணமாகி இருபத்தி—அஞ்சு வருஷம் பூர்த்தி ஆகுது மறந்திட்டியா?''

மெதுவாக அவன் பேச, சித்ரா திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

அப்பா அம்மாவின் திருமண நாள்...அதுவும் வெள்ளி விழா—எப்படி மறந்து போனேன்?

கண்ணகல கணவனை ஏறிட்ட போது நெஞ்சில் படர்ந்த குற்ற உணர்வு அந்தக் கண்களில் கோடு இழுத்தது.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நீதான் சொன்னே!''

''எப்போ!''

''நம்ப கல்யாணத்துக்கு முந்தி, ஒருநாள் எல்லா— முக்கிய தினங்களைப்பத்திப்பேசிக்கிட்டு இருந்தப்போ...''

சித்ரா கண்களை இடுக்கிக் கொண்டு சந்தேகத்துடன் ஏறிட்டாள்.

''அப்ப சொன்னதையா இப்ப நினைவு வச்சுட்டுப் பேசறீங்க...''

''ஏன்? மறந்திடுமா? இது மட்டுமில்ல...உன் தங்கை

கணுக்கும் பிறந்த நாள் எப்போனு சொல்லட்டுமா? மார்ச் ஒம்பது..."

ஆரம்பித்தவனை மேற்கொண்டு பேசவிடாமல் சித்ரா இடைமறித்தாள்.

"அது இருக்கட்டும்... இப்ப அம்மா அப்பா கல்யாண நாளைப் பத்திப் பேச்செடுக்கக் காரணம்?"

உடனே பதில் கூறாமல் கோபி இரண்டு கைகளையும் தலைக்குப் பின்னால் கோர்த்துக் கொண்டு மென்மையாய்ப் புன்னகைத்தான்.

"சொல்லுங்க கோபி..."

"சொல்றேன்... நாளைக்கு சாயங்காலம் அஞ்சரை மணி சுமாருக்கு நீ என் ஆபீஸுக்கு வந்தா, அப்படியே கடைங்களுக்குப் போயிட்டு, வெளில சாப்டுட்டு வந்திடலாம்... சரியா?"

"கடைங்களுக்குப் போயி?"

"அது உன் இஷ்டம்... ஐநூறு ரூபாய் புடவையா, இல்லை ஆயிரம் ரூபாய் புடவையானு நிர்மானிக்க வேண்டியது நீதான்... நீ என்ன சொன்னாலும் அது தான் என் முடிவும்..."

"புடவையா யாருக்கு கோபி?"

"சரி மாடிவிட்டு ஞானவியம்மாவுக்கு...சேன்வியபாரு! உங்கம்மாவுக்குத்தான்...அப்பாக்கு நல்லதா ஒரு ஷர்ட்டும், ஜரிகை வேஷ்டியும் வாங்கிடலாம்... வேஷ்டி வேணாம்னா பாண்ட் துணி எடுத்திடலாம்..."

"அப்புறம்? இன்னும் வேற என்னென்ன திட்டம் வச்சிருக்கீங்க... முழுசையும் சொல்லிடுங்க..."

அவள் குரலில் காணப்பட்ட எரிச்சலைப் புரிந்து கொள்ளாமல், கோபி சந்தோஷத்துடன் பேசினான்.



"வேற ஒண்ணும் பெரிசா திட்டமில்ல...அன்னிக்கு லீவு போட்டுடறேன்... காலைல குளிச்சுத் தயாராகி உங்க வீட்டுக்குப் போயிடலாம். சாயங்காலமா எல்லாருமா ஒண்ணா சேர்ந்துகிட்டு ஏதாவது கோவிலுக்குப் போய் அர்ச்சனை பண்ணிகிட்டு வரலாம்... கல்யாணமாகி இருபத்தி அஞ்சு வருஷமாறது சாதாரண விஷயமில்ல பாரு..."

அவன் நீளமாய்ப் பேசிக் கொண்டிருக்கையிலேயே சித்ரா அந்தப் பேச்சைக் கேட்கப் பிடிக்காதது போல் திரும்பிப் படுத்தாள்.

"என்ன சித்ரா—எதுவுமே பேசாம படுத்திட்ட?"

அவள் தலையைத் திருப்பி அவனைக் கோபத்துடன் ஏறிட்டாள்.

"என் முடிவு எதுவானாலும் அதுதான் உங்களுதும்னு சொன்னீங்க இல்ல?"

"ஆமா..."

"அப்படின்னா விஷயத்த இதோட விட்டுட்டு... இல்ல இல்ல மறந்திட்டு பேசாம படுத்துத் தூங்குங்க...இதான் என் முடிவு..."

அவள் கோபத்திற்கான காரணம் புரிந்தும் புரியாமல் கோபி திகைக்க, சித்ரா எழுந்து உட்கார்ந்தாள்.

"அவங்க உங்களை மாப்பிள்ளையா ஏத்து, மரியாதை கொடுக்காம இருக்கறப்போ நீங்க ஏன் உறவு கொண்டாடிகிட்டுப் போய் ஒட்டிக்கிறீங்க? தெரியாமத்தான் கேக்கறேன் கோபி, உங்களுக்கு ரோஷமே கிடையாதா? என்னடா நம்பளை இப்படி நடத்தறாங்களேன்னு கோவமே வரலியா?"

கோபி திகைப்பு முழுவதும் நீங்காமலேயே சிரித்தபடி வினவினான்.

"எப்படி நடத்தறாங்கன்னு நீ இந்தக் குதி குதிக்கறே; நாம அங்க போறப்ப எல்லாம் கூட்டு காரு வச்சு மரியாதையா தானே நடத்தறாங்க?"

"அ...அ...நடத்துப்பாங்க...நாம அங்க மாசத்துக்கு ஒரு நாள் கூடப் போறதில்லை. போறப்ப எல்லாம் பெரிய வங்களுக்கு, தங்கைகளுக்குன்னு சொல்லி, கூடை நிறைய பழம் சாக்லெட்டுன்னு நீங்க வாங்கிக் கொண்டுதள்ளறதுக்கு கூட்டுக்காரா வச்சி ரெண்டு வார்த்தை கூடப் பேசாட்டி நல்லாவா இருக்கும்?"

ஆத்திரத்தோடு பேசியவளைச் சமாதானப்படுத்தும் உத்தேசத்துடன் அவள் கையைக் கோபி பற்றினான்.

"ஒண்ணுமேயில்லாதத நீ பெரிசு பண்றேன்னே நான் நினைக்கிறேன் சித்ரா...கல்யாணமான புதிசிலே அவங்க என் மேல கோபமா இருந்தது உண்மைதான்...ஆனா, இந்த நாலைஞ்சுமாசத்துல அவங்க மாறிட்டு வராங்கனே தோணுது..."

சித்ரா அவன் சமாதானம் தேவையில்லை என்கிற நினைவில் கையைத் தள்ளி விட்டாள்.

"நல்லா மாறினாங்க... தீபாவளி வந்துதே, அத கொஞ்சம் நெனவு படுத்திக்கங்க. நம்ப தலை தீபாவளி... வீட்டுக்கு அழைச்சு பொண்ணையும் மாப்பிள்ளையும் மரியாதை பண்ணணும்ற ஆசை வேணாம்; ஐயாசாமி, சீர் செனத்தினு ஒண்ணுமே கேக்காம கல்யாணம் கட்டிக் கிட்டாரேன்ற நினைப்புக் கூடவா தலை தூக்காம போயிடும்? ஆனா, கூப்டாங்களா? வருஷா வருஷம் எங்க மூணு பேருக்கும் துணி வாங்கறமாதிரி இந்த வருஷமும் எடுத்து, என்னண்ட மட்டும் கொடுத்தாங்க...உங்களுக்கு ஒரு புதுத்துணி எடுக்ககூடவா சொல்லித் தரணும்?"

"அது வந்து சித்ரா...நா சீர்செனத்த எதுவும் கூட துனு சொல்லிட்டதால, ஏதாவது எடுத்துக் கொடுத்தா



கோவிச்சிப்பேனோன்கிற தயக்கத்தால கூட அப்படிச் செஞ்சிருக்கலாம். இல்லியா?"

'போங்க வீணா சப்பைகட்டுக்கட்டாதீங்க...அன்னிக்கு எனக்கு மனசு எப்படிக் கொதிச்சு போச்சுத் தெரியுமா? நல்ல வேளையா மேடம் நம்பள முன் கூட்டியே அவங்க வீட்டுக்கு வரச்சொல்லி, புதுத்துணி எடுத்துக் கொடுத்து எந்தக் குறையும் தெரியாம கொண்டாடிட்டதுல சரி, அவங்க செய்யாட்டி என்ன, நமக்குப் பெரியவங்களா இவங்க இருக்காங்கன்னு என்னை நானே தேத்திக் கிட்டேன்..."

கோபி செல்லமாய் அவள் மூக்கைப் பிடித்துத் திருகினான்... "சரியான குழந்தைதான் நீ" என்றான் கொஞ்சலாக.

"அத விடுங்க...ரெண்டு நாள் முந்தி என்ன விசேஷம் நினைப்பு இருக்கா? பொங்கல் பண்டிகை...நமக்கெல்லாம் இது எத்தனை முக்கியமான பண்டிகை... அன்னிக்காவது உங்களைக் கூப்டு மரியாதை பண்ணாங்களா?"

"ஏன் பண்ணாம? அன்னிக்கு நாம் சாப்பிட்டதுங்க வீட்டுல தானே?... மறந்திட்டியா?"

"இல்ல சாமி நா மறக்கலேயில்லை...இப்பமட்டுமில்ல இனி என்னிக்கும் மறக்கமாட்டேன் நல்லநாளா இருக்கு... வா ரெண்டு வீட்டுப் பெரியவங்களையும் நமஸ்காரம் பண்ணி ஆசீர்வாதம் வாங்கிட்டு வரலாம்னு சொன்னீங்க ...எதிர்த்துப் பேச வேணாம்னு நான் கூட வந்தேன்... போன எடத்துல அவங்களுக்கே என்ன உறுத்திச்சோ, 'பண்டிகை நாளா இருக்கு, இருந்து சாப்பிட்டுப் போங்க'ன்னு அதிசயமா கேட்டுக் கிட்டாங்க. நீங்க சரினு சொன்னப்புறம் நா மாட்டேன்னு மறுத்தா நல்லா இருக்காதேனு வாய் பொத்திக்கிட்டு இருந்தேன். ஜாதிவிட்டு ஜாதில கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன உங்கள மாதிரி தங்கமான மாப்பிள்ளை அவங்களுக்கு

சல்லடை போட்டுத் தேடினாலும் கிடைப்பாரா? உங்கதல்ல குணத்தைப் புரிஞ்சிக்காம, அவங்கதான் முருங்க மரத்து வேதாளமா ஆகாசத்த பாத்துக்கிட்டுத் திமிரா இருக்காங்கன்னா, சீ...போன்னு ரோஷத்தோட விலகி நிக்காம நீங்களும் அவங்களுக்கு கல்யாண நாள் வருது...ஆயிரம் ரூபாய்க்குப் புடவை எடுத்துகிட்டுக் கோவிலுக்கும் போயி அர்ச்சனை பண்ணலா'ன்னு மேல மேல போய் ஒட்டிக்கிறீங்க...எனக்கு...எனக்கு"

தொடர்ந்து பேசத் தெரியாமல் சித்ரா விசும்பமுற்பட முன்னால் சாய்ந்து கோபி அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அழும் குழந்தையைத் தேற்றுவது போல "வேணாம்டா ராஜா... வேணாம்டி தங்கம்" என்று சின்ன குரலில் பேசி முதுகில் தட்டிக் கொடுத்தான்.

கலைந்திருந்த முடியை ஒதுக்கிவிட்டு உள்ளங்கையால் கன்னத்தில் வழிந்த நீரைத் துடைத்தான் ஈரமான விழிகளில் மென்மையாய் முத்தமிட்டான்.

இரண்டு நிமிஷங்களில் அவள் சமாதானம் அடைந்ததும் படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்து தோளில் அவளைச் சரித்துக் கொண்டான்.

"மனசுக்குள்ள இத்தனை வேதனைய வச்சுக்கிட்டு... அநுபத்தி என்கிட்ட எதுவும் பேசாம... என்னம்மா நீ? மனச நிம்மதியா வச்சுக்கறது அவசியம் சித்ரா... மனோதத்துவம் படிச்ச உனக்கு நா இதைச் சொல்றது அனாவசியம்...ஆனாலும்... எப்பவுமே தனக்குன்னு ஒரு பிரச்னை வர்றப்போ தெளிவா சிந்திக்கற தன்மை குறைஞ்சிடும்னு படிச்சவங்க சொல் வாங்க... அதனால சொல்றேன்... எதுக்காக உன்னை நீயே இப்படி சிரமப்படுத்திக்கறே? இது தேவைதானா? ம்? உன்னைப பெத்தவங்களுக்கு என் மேல கோவம் இருக்கறது



நியாயம்தானே சித்ரா? அவங்க கோணத்திலேத்து யோசனை பண்ணிப் பாரு... கோப தாபம் இல்லாம தெளிவா சிந்திச்சுப் பாரு... புரியும்! இந்த வருத்தம் நாளடைவுல தான் சரியாகும்... நீ சந்தோஷமா இருக்கறத பார்த்தப்புறம் நா உன்னை நல்லவிதமா வச்சுக்கறத புரிஞ்சிக்கிட்டப்புறம், உன் தங்கைகளுக்கு நல்ல மாப்பிள்ளைங்க அமைய நா உதவினப்புறம், மொத்தத்தில் ஒரு மாப்பிள்ளையா இல்லாம மகனா நா மனப் பூர்வமா இருக்கறதை உணர்ந்தப்புறம், அவங்க முழுமையா மாறிடுவாங்க... அப்படி ஒரு நாள் வரத்தான் போகுது... பட்ட காயம் ஆற அவகாசம் கொடுக்க வேணாமா சித்ரா? யோசனை பண்ணிப் பாரு... நா சொல்றதை நீயும் ஏத்துப்பே... என்னம்மா?"

குறுக்கே ஒரு வார்த்தை பேசாமல் புருஷனின் அந்த கம்பீரம், தெளிவு நிறைந்த பேச்சை அவள் கேட்க, அரை நிமிஷம் நிறுத்தின கோபி, அவள் வகிட்டில் குனிந்து முத்தமிட்டு, தொடர்ந்தான்

"உன் அப்பா அம்மா இனி எனக்கும் அம்மா அப்பா தானே சித்ரா? என்னைப் பெத்தவங்க என் கிட்ட வீம்பா நடந்துகிட்டாங்கன்னு வச்சிக்க, 'நீங்களும் வேணாம் உங்க உறவும் வேணாம்'னு தள்ளிப் போயிடுவேனா? பெத்தவங்க, உரிமையோட கோபப்படறாங்க... நாளடைவுல எல்லாம் சரியாயிடும்...'னு பொறுமையா இருக்க மாட்டேனா? அந்தப் பொறுமையோட உன்னைப் பெத்தவங்களையும் நா ஏத்துக்கறதுதானே நியாயம்? நிஜமா சொல்றேன் சித்ரா உங்க அப்பா அம்மா பேர்ல எனக்கு எந்தக் கோபமும் இல்ல... அவங்க என்னை மட்டமா நடத்தறாங்கன்னும் நா வாஸ்தவமா நினைக்கவேயில்லை... இதை நீ நம்பணும்... இதோட அவங்க நிலைபுரிஞ்சு, அவங்க மேல் இருக்கற கோபத்தைக் குறைச்சுக்கிட்டு உன் மனசை நீ விசாலப்படுத்திகிட்டா நா ரொம்ப சந்தோஷப்படுவேன்"

அன்றைக்கு கோபி பேசப்பேச, அவன் வார்த்தைகள் அவனுடைய அற்புதமான மனசின் அகல, நீள ஆழத்தைத் துல்லியமாய்ப் புரிந்து கொள்ள உதவ, இது என்ன மனசு, என்ன மனிதர் இவர், என்று சித்ரா உருகி, சிலிர்த்துப் போனாள்.

உடம்பு முழுவதும் மயிர் கூச்சம்போட, ஜானா, என்று மனசு பதற, கண்களில் இருந்து பெருகிய நீர் புருஷனின் கன்னத்தில் கோலம் போட அவன் முகம் மேல் முகம் வைத்து, ஒருவித வெறியுடன் அவன் நெற்றி, கண்கள், உதடு என்று முத்தமிட்டாள்.

பின், அந்த ஈரமான முகத்தைக் கையால் ஏந்தி "என்னை மன்னிச்சிடுங்க கோபி... ப்ளீஸ்... மன்னிச்சிடுங்க... ஐ'ம் ஸாரி..." என்று பலமுறை முணுமுணுத்தவளை, தன் பிசாசுத்தனமான கட்டளை விடாமலேயே அன்று உறங்கிப் போனான்.

மறுநாள், இந்தப் புருஷனுக்கு ஈடு பண்ணுகிற மாதிரி தானும் இருக்க வேண்டும் என்கிற வைராக்கியத்தோடு கோபிவிரும்பியதினுசில் மாலை அவன் அலுவலகத்துக்குச் சென்றாள். எழுநூறு ரூபாயில் ஜரிகை இல்லாமல் மயில் கழுத்து நிற உடலும், அரக்கு பார்டரும், நூல் இழையினால் ஆன கோபுரங்களும் கொண்ட பட்டுப் புடவையை கோபிக்கு நிரம்பப் பிடித்திருக்கிறது என்று புரிந்து கொண்டு அதையே தேர்ந்தெடுத்தாள்.

அவன் விரும்பியவாறே அப்பாவுக்கு டெரிகாட் சட்டையும், ஜரிகை வேஷ்டியும் எடுத்து, ஒரு டஜன் வாழைப்பழம், பந்து பூ, கவுளி வெற்றிலை, பாக்கு, மஞ்சளும் வாங்கினாள்.

பதினெட்டாம் தேதி காலையில் குளித்து, தயாராகி அத்தனையும் பை நிறைய கொண்டு போய்ப் பெற்றோர்கள் வீட்டில் வைத்து, அவர்களை வணங்கி எழுந்தபோது இந்த



அன்பை, மரியாதையை கொஞ்சமும் எதிர்பார்க்காமல் அப்பா அம்மா தடுமாறுவதையும் தாங்கள் கடமையைச் செய்யத் தவறிய போதும் அதைப் பெரிசு படுத்தாமல் சின்னஞ் சிறுசுகள் இத்தனைப் பரிசுப் பொருட்களோடு சிரித்த முகத்துடன் வந்து நிற்பது எழுப்பியிருந்த உணர்வு முகத்தில் அப்பட்டமாய் வெளிச்சம் போடுவதையும் காண, உள்ளம் குழைய, கோபி சொல்வது போல மனசை விசாலப்படுத்திக் கொண்டு அதை காத்தோட்டம், வெளிச்சமுமாய் வைத்துக் கொள்வதில் ஆதாயம் நமக்குத்தான் என்பதை நன்றாகவே புரிந்து கொள்ள முடிந்தது.

அதுவும், திருமணமான அத்தனை மாசங்களிலும் முதல்முறையாய் வணங்கி எழுந்தவர்களை "தீர்க்காயுசோட அமோகமா இருங்க," என்று வாய்விட்டு வாழ்த்திய கையோடு மனைவி பக்கம் திரும்பி "மாப்பிள்ளைக்கு காபி பலகாரம் கொண்டா மாலதி" என்று பணித்த சுந்தரம் "இருந்து சாப்பிட்டுப் போகணும்" என்று கோபியிடமே கூறினதும், சந்தோஷத்தின் மிகுதியில் கண்களில் நீர் துளிர்த்ததை யாரும் காணும் முன்னர் முகத்தைத் திருப்பித் துடைத்துக் கொள்வதற்குள் சித்ரா சிரமப்பட்டுத்தான் போனாள்.

மாப்பிள்ளை...

அப்பா, அம்மாவிடம் கோபியை மாப்பிள்ளை என்று குறிப்பிட்டு விட்டார்.

"நாளடைவில் நா மருமகன் மட்டுமில்ல, இவங்களுக்கு மகனும் கூட என்றதைப் புரிஞ்சிகிட்டா மாறிடுவாங்க சித்ரா" என்று கோபி கணக்குப்போட்டது, எதிர்பார்த்தது, பலிக்க ஆரம்பித்து விட்டதா?

அன்றும், அதற்கும் பிறகு வந்த நாட்களிலும் பெற்றோரிடம் காணப்பட்ட சின்னச்சின்ன மாற்றங்களில் சித்ரா பூரித்துத்தான் போனாள்...

அதுவும், டைரக்டராகப் போகும்சேதி வந்த பின்னர், 'பொருளாதார அந்தஸ்து உயரப் போகிறது; பணத்தைச் சேமித்துத் தங்கைகளுக்கு மாப்பிள்ளை பார்ப்பதில் மட்டுமில்லாமல், திருமணச் செலவுகளிலும் கோபி சொன்ன மாதிரி உதவி, பெற்றோர்கள் வாயாலேயே, இவர் எங்களுக்கு மருமகன் மட்டுமில்லை, பெறாத மகனுங்கூட' என்று சொல்ல வைக்க வேண்டும் என்று அந்த அரை நாளுக்குள் நூறு தரமாவது கற்பனை பண்ணியது நிஜம்தானே!

ஆனால்...

என்ன கற்பனை பண்ணி என்ன?

என்ன திட்டம் போட்டு என்ன?

அத்தனையும் கோபியின் அகால மரணத்தின் மூலம் அல்ப ஆயுசோடு குறைப் ப்ரசவங்களாக ஆனதுதானே கடைசியில் நடந்தது?

# 7

யார் யாரோ வந்தார்கள்...

யார் யாரோ...

வாய் விட்டுப் புலம்பியபடி சிலர்...

எதுவுமே பேசத் தெரியாமல் மௌனமாய் உட்கார்ந்திருந்து விட்டுச் சென்ற சிலர்

சமாதானம் செய்யும் நோக்கில் வேதாந்தமாய்ப் பேசிய சிலர்...

வராத ஜலத்தை அடிக்கடி துடைத்து, அழுவதாக பாவனை பண்ணி, கடமைக்காக வந்து போன சிலர்...



யார் யாரோ வந்தார்கள்...

யார் யாரோ...

சாவு வீட்டுக்கு வருகிறோம் என்பதை நினைவு படுத்தும் தினுசில் கலைந்த முடி, கசங்கின உடையில் பலர்...

விஷயம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் கண்ணியமாய்ப் போய் வருவது தான் சரி என்று எண்ணி, தலை சீவி, சுத்தமாய் உடுத்தி வந்து போன ஓரிருவர்...

யார் யாரோ வந்தார்கள்...

யார் யாரோ...

பக்கம் பக்கமாய் உட்கார்ந்து, என்னென்னமோ பேசினார்கள்...

விபத்து நடந்தது எப்படி என்று வாய் வலிக்காமல் விவரித்தார்கள்.

என்னமோ தாங்களே கூட நின்று அத்தனையும் கண்கூடாய்ப் பார்த்த மாதிரி விளக்கினார்கள்...

சேதி கேள்விப்பட்டு அடித்து பிடித்துக் கொண்டு வந்த வயதான உறவினர் கூட்டமாய் சித்ராவைச் சூழ்ந்து அமர்ந்து அவளைக் கட்டி அணைத்துப் புலம்பினார்கள்.

—ஐயோ... என் கண்ணே உனக்கா இப்படியொரு கதி வரணும்... என்றார்கள்

—துக்கிரிப் பொண்ணே: அத்தையும் விழுங்கிட்டு உட்காந்திருக்கியே—என்றார்கள்.

—கண் நிறைஞ்ச புருஷனை வாரிக் கொடுத்திட்ட உன்னை மாதிரி இன்னொரு அதிருஷ்ட கட்டை— இருப்பாளா—என்றார்கள்.

—போன ஜன்மத்துல என்னென்ன பாவம் பண்ணியோ இன்னிக்கு இப்படி அடிபட—என்றார்கள்.

இதனோடே, உறவினரின் புலம்பல் ஏகத்துக்கு உயர்ந்து விட, ஆத்திரம் தாளாமல் சுந்தரமும் மாலதியுங்கூடத் தாம் என்ன பேசுகிறோம் என்கிற கட்டுப்பாடு இல்லாமல் கதறினார்கள்.

''வேணாம்மா... இந்த கல்யாணம் வேணாம்... படிப்பு முடிஞ்சு... எனக்கேத்த மாப்பிள்ளைய தேடி நானே முடிச்சு வைக்கறேன்னு முட்டிக்கிட்டேன் அவ கேக்கலியே... இப்ப, ஏழே ஏழு மாசம் வாழ்ந்திட்டுப்பட்ட மரமா நிக்கறாளே... இந்தக் கொடுமைய தாங்க எனக்கு சக்தி இல்லியே'' என்று சுந்தரம் வந்தவர்களிடம் வாய்விட்டு அழுதார்.

''இவளை ஒத்த பொண்களெல்லாம் இன்னும் படிச்சுகிட்டுதான் இருக்குறாங்க... இவளுக்கு மட்டும் ஏனோ அவசரம்... எங்களையும் மீறி இந்த ஆளைத்தான் கட்டுவேன்னு பிடிவாதம் பண்ணி, நினைச்சத சாதிச்சுக்கிட்டது எதுக்கு? இப்ப, அத்தனையும் வாரி விட்டுட்டு மூலைல உட்கார்த்தானா? அப்படி என்னம்மா அவசரம்? ஏழு மாசம் வாழ்ந்தது போதும்னு அந்தப் பாழும் தெய்வம் தீர்மானம் பண்ணிடுச்சா? அடிப்பாவி... இப்படி மூளியாக நிக்கறதுக்குத்தான் அப்படிப் பறவா பறந்தியா?... இனி உட்டம் மனைவிய தவிக்கவிட்டுட்டுப் போக பாவி மனுஷா உனக்குத்தான் எப்படி மனசு வந்தது? ஐயோ... எனக்குத் தாங்கலியே... கல்லாத ஜனங்களும், கட்டைகளும் தடுக்கி விழுந்த எடத்துலெல்லாம் உயிரோட இருக்குங்களே... அதுல ஒண்ணை எடுத்துக்கிட்டு அந்த பாவி எமதர்மன் இவரை விட்டிருக்கக் கூடாதா? ஐயோ... எல்லாமா சேர்ந்துக்கெட்டு பெரிசா கல்லத்தூக்கி எங்க மண்டைல போட்டாங்களே... நாங்க என்ன செய்வோம்... இனி ஆயுசுக்கும் இவள வச்சுக்கிட்டு நாங்க என்ன



பண்ணப்போறோமோ... பாவி... மாபாவி... அவசரமாக அவசரப்பட்டு மோசம் போயிட்டாளே...

வேதனையோ அல்லது ஏமாற்றமோ, அல்லது இரண்டுமே தானோ சேர்ந்து கொண்டு தாக்கியதில் மாலதியின் வாயில் சித்ராவிலிருந்து கோபி, எமதர்மன் வரை அனைவருமே மாபாவிகளாகிப் போனார்கள்.

என்ன பேசுகிறோம், எது பேசுகிறோம், யாரிடம் பேசுகிறோம் என்கிற எந்த பிரக்ஞையும் இல்லாமல் அடக்குவோர் யாரும் இல்லாமல் போக அவள் தன்பாட்டுக்கு புலம்பித் தீர்க்கையில், ஆபீஸுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு அலுவலக நண்பர்களும் ஊழியர்களும் கூடியிருந்து, வாசல், மாடிப்படி, கூடம் என்று அத்தனை இடங்களிலும் வியாபித்திருந்த அவர்களிடையே விபத்து பற்றிய விபரங்கள் அலசப்பட்டன.

''என்ன அக்ரமம்பா... நம்ப முடியாம இருக்கேப்பா?

''எப்படிப்பா நம்பறது; தலைவலின்னு படுக்காத ஆள் போயிட்டான்னா; இது ரொம்ப அநியாயம்... அவங்க மிஸஸை நினைச்சா அடிவயிறு எனக்கே பத்திக்கிட்டுத் தான் எரியுது...''

''இரண்டு மாசம் முன்னால ஒரு நாள் ஆபீஸுக்கு வந்திருந்தாங்க... அப்பத்தான் அவங்கள சேர்ந்து பார்த்தேன்...' கடைக்குப் போகணும், அதான் ஆபீஸுக்கே வரச் சொல்லிட்டேன்'னு கோபி சொன்னார். ஜோடிப் பொருத்தம் ப்ரமாதமா இருந்தது... அஞ்சு நிமிஷத்துக்குள்ள இவரு ஏதோ சொல்ல அவங்க சிரிக்க, அவங்க ஏதோ சொல்ல இவரு சிரிக்க... பார்க்கவே ரொம்ப நல்லா இருந்துச்சு—ஹூம்...''

''விபத்து எப்படிப்பா நடந்துச்சாம்? யாராவது வேணும்னே தள்ளி விட்டிருப்பாங்களோ?''

கோபிய பிடிக்காதவங்க எனக்குத் தெரிஞ்சு யாரும் இல்லை—எப்பவும் சிரிச்ச முகம்... தானா வலிய உதவற குணம்... அவனை எதுக்காகத் தள்ளி விடணும்?''

''பஸ்ஸில தாவி ஏறினப்ப நிதானம் தவறிக் கீழே விழுந்திட்டார். சுதாகரிச்சுக்கிட்டு எழுந்திருக்கறதுக் குள்ள பின்னால் வந்த பஸ்ஸை ஓட்டின மகராஜுபாவம் மேல ஏத்திட்டான். பஸ் சக்கரம் வயத்துல ஏறினப்புறம் உயிரோட இருக்க முடியுமா என்ன?''

''அந்த பஸ் ட்ரைவர் இன்னும் கொஞ்சம் விழிப்போட இருந்திருந்தா இந்த விபத்த தவிர்த்திருக்கலாம் இல்ல?''

''இப்ப என்ன சொல்லி என்ன? எல்லாம் முடிஞ்சிடுச்சே...''

''பாடி'ய வீட்டுக்கு எப்ப கொண்டு வரப்போறாங்களாம்? காரியமெல்லாம் இன்னிக்கு இருக்குமா, இல்லை நாளைக்குத்தானா?''

''சேர்மனோட போன சித்ராவோட அப்பா திரும்பி வந்திட்டாரு, அங்க இன்னும் நாழியாகுமாம்... 'போஸ்ட் மார்ட்டம்' பண்ணி, அப்புறம் அதை மறுபடி தைச்சு, உருவமா ஆக்கித் தர நாழியாகும்ங்கறதால சேர்மன் தான் இருந்து வாங்கிட்டு வர்றதா சொல்லி இவர அனுப்பிட்டாராம்...''

''சாயங்காலத்துக்குள்ள எடுத்திட முடியுமா?''

''தெரியல... சேர்மன் வந்தாதான் தெரியும்''

பேசினதையே மீண்டும் மீண்டும் பேசி அலுத்ததும் சிலர் தெருமுனையிலிருந்த ஹோட்டலுக்கு காபி குடிக்கச் சென்றனர்.

சிலர் மரநிழலில் சிகரெட் பிடிக்க ஒதுங்கினர்...



இன்னும் சிலர் யார் யாரோ வந்து துக்கம் விசாரித்து விட்டுப் போனதை ஸ்வாரஸ்யத்துடன் வேடிக்கை பார்த்தனர்.

யார் யாரோ வந்தார்கள்... யார் யாரோ...''

சித்ரா உள் அறையில் படுத்திருந்தாள். அவளருகில் அவள் கையைப் பற்றியபடி இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நகராமல் துர்கா உட்கார்ந்திருந்தாள்.

மூணாவது வீட்டுப் பெரியவர் தட்டுத்தடுமாறிப் படிகளில் ஏறி மேலே வந்தார்.

சித்ரா இருந்த அறைக்குள் வந்து, பக்கத்தில் நின்றபடி நிதானமாய்ப் பேசினார்.

''நீ பாவாடை சட்டை போட்ட குழந்தையா இருக்கறதான்லேந்து உன்னை எனக்குத் தெரியும்—நீ பாவாடையோட பாண்டி, கண்ணாம்பூச்சி ஆடி நா பார்த்திருக்கேன்; பெரியவளானப்போ அன்னிக்கு உங்கம்மா அனுப்பின பாயசத்தையும் குடிச்சிருக்கேன்... உன் கல்யாணத்துக்கு வந்து விருந்து சாப்பிட்டிருக்கேன்... இன்னிக்கு உன்னை இப்படியும் பார்த்துட்டேன். எல்லாம் விதி... அதை எதிர்த்து யாராலும் ஒண்ணும் பண்ண முடியாது... இனிமேதான் நீ தைரியமா விவேகத்தோட இருக்கணும் சித்ரா... வாழ்க்கைங்கறது ஒரு ரயில் பயணம் மாதிரி... எல்லாரும், இந்தப் பயணத்துல போய்த்தான் ஆகணும்... மாட்டேன்னு சொல்ல முடியாது... கிட்டக்க இருக்கற ஊருக்கு டிக்கெட் வாங்கிண்டவா, தன் ஸ்டேஷன் வந்ததும் இறங்கிடணும்... ரொம்ப தூரம் தள்ளி இருக்கற ஊருக்கு டிக்கெட் எடுத்தவா மட்டும் போயிண்டே இருக்க வேண்டியதுதான்... 'நான் உன் கூட வருவேன்'னு அவனும் பிடிவாதம் பண்ண முடியாது... 'சரி உன் கூட நானும் எறங்கிடறேன்'னு நீயும் எறங்கிட முடியாது... யார் எறங்கணும், தொடர்ந்து யார் போகணுங்கறத தீர்

மாளிக்கறது நமக்கு மேல வேற யாரோ... எதுவும் நம்ப கையில இல்ல... இத புரிஞ்சுகிட்டா... வேதனை குறைஞ்சுடும்... கோபிக்கு நீண்ட பயணிக்க விதி இல்ல... உனக்கு இருக்கு... உனக்கு விதிக்கப்பட்டதை நீ செஞ்சுதான் ஆகணும்... வேற வழி இல்ல... நீ படிச்சவ... தைரியமா இரு... வேற நா என்ன சொல்ல இருக்கு...''

கைத்தடியை ஊன்றியபடியே அவர் போக, சித்ராவின் கல்லூரித் தோழிகள் கும்பலாய் வந்து சூழ்ந்து கொண்டு என்ன சொல்லித் தேற்றுவது என்று புரியாமல் அமர்ந்து விட்டுப் போனார்கள்.

கோபியின் நண்பன் ரஹ்மான் பாயின் வயசான தாயார் இரண்டு நிமிஷம் எதும் பேசாமல் இருந்துவிட்டு அப்புறம் மெல்லிய குரலில் கூறினார்.

''கொண்டு வந்த அரிசியும், தண்ணியும் ஆயிடுச்சின்னா, அனுப்ப வேண்டியதுதானே! சுமக்கச் சொல்லிட்டு அரிசி மூட்டையப்போட்டுக்கிட்டு வந்தவங்க, ஆச்சுன்னு சீக்கிரம் இருக்கறப்பவே புறப்பட்டுடறாங்க... மூட்டை மூட்டையாய் அரிசியும், பீப்பாய்ல தண்ணியும் சுமந்துகிட்டு வந்தவங்க. தொண்டு கிழங்களாகியுங்கூட, அரிசியும் தண்ணியும் இன்னும் இருக்கறதால பூமிக்கு பாரமா காத்துகிட்டுதான் இருக்கோம்... இதுல சரி எது? தப்பு எது?...''

பிற்பகலுக்கு மேல் சித்ராவைக் கட்டாயப்படுத்தி நர்ஸ் அரை டம்ளர் காபி குடிக்க வைத்தார்.

ஒரு வார்த்தைப் பேசாமல் சுவரைப் பார்க்கத் திரும்பிப் படுத்தவளை, அவளுடைய ஸ்நேகிதி தமயந்தியின் அக்கா அபிராமி பதறிக் கொண்டு வந்து அணைத்து விசும்பினாள்.



''போங்க... சொல்லாட்டி வேணாம்... எனக்குத் தூக்கம் வருது...''

கோபி அவளைத் தன் பக்கம் புரட்டிப் படுக்க வைத்தான். ஆள்காட்டி விரலால் நெற்றியிலிருந்து மூக்கு, உதடு, முகவாய் என்று நேர்க் கோடு இழுத்தான்.

''உங்கப்பா அம்மாவோட கல்யாண நாள்... அவங்களுக்குத் திருமணமாகி இருபத்தி—அஞ்சு வருஷம் பூர்த்தி ஆகுது மறந்திட்டியா?''

மெதுவாக அவன் பேச, சித்ரா திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

அப்பா அம்மாவின் திருமண நாள்...அதுவும் வெள்ளி விழா—எப்படி மறந்து போனேன்?

கண்ணகல கணவனை ஏறிட்ட போது நெஞ்சில் படர்ந்த குற்ற உணர்வு அந்தக் கண்களில் கோடு இழுத்தது.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''நீதான் சொன்னே!''

''எப்போ!''

''நம்ப கல்யாணத்துக்கு முந்தி, ஒருநாள் எல்லா—முக்கிய தினங்களைப்பத்திப்பேசிக்கிட்டு இருந்தப்போ...''

சித்ரா கண்களை இடுக்கிக் கொண்டு சந்தேகத்துடன் ஏறிட்டாள்.

''அப்ப சொன்னதையா இப்ப நினைவு வச்சுட்டுப் பேசறீங்க...''

''ஏன்? மறந்திடுமா? இது மட்டுமில்ல...உன் தங்கை

சாத்யம் இல்லையாம்—மூட்டை கட்டாத குறையாய் வேணும்னால் எடுத்து வரலாமாம்... என்ன செய்யலாம் என்று கேட்கவே அவர் வந்திருக்கிறாராம்...

துர்கா அடி உதட்டைக் கடித்துக் கொண்டு அப்படியே நின்று, தன்னை மிகுந்த சிரமத்துடன் ஆஸ்வாசப்படுத்திக்கொண்டார்.

உணர்ச்சி வசப்படாமல் இப்போது செய்ய வேண்டியது என்ன என்று யோசித்துப் பார்த்தார்.

இரண்டு நிமிஷங்களில் சுந்தரத்தையும், செல்வராஜையும் அழைத்துக் கொண்டு கூட்டம் அதிகம் இல்லாமல் இருந்த மொட்டை மாடிக்குச் சென்றார்.

''நீங்க சொல்றதைக் கேட்கறப்போ அந்த நினைவ வீட்டுக்கு கோபியை எடுத்திட்டு வந்து, சித்ராவ பார்க்க வைக்கிறது சரியான காரியமா எனக்குத் தோணலை... காலைல சித்ரா என்ன சொல்லிக் கத்தினா, நினைப்பு இருக்கா?' சின்னா பின்னமான கோபிய நான் பாக்க மாட்டேன்...எனக்குள்ள அவர் முழுசா இருக்கார்னு தானே? ...அதனால...''

அவரை முடிக்க விடாது சுந்தரம் படபடப்புடன் குறுக்கிட்டார்.

''சின்ன பொண் ஏதோ வேதனைல உளறினதைப் பெரிசா எடுத்துக்கிடலாமா?''

''சித்ரா உளர்றதா நா நினைக்கலங்க...அவ நிலைல நா இருந்தாகூட அப்படித்தான் நினைப்பேனோ என்னவோ...போறவன் போயிட்டான்...இனிமே வாழறவங்க நிம்மதியா இருக்க வழி என்னனு யோசிக்கறதுதான் விவேகம்...கோபிய தான் கடைசியா பார்த்த உருவத்தோடவே மனசுல நிறுத்திக்க சித்ரா விரும்பினா, அதை மாத்த நாம முனையக் கூடாது...என் மிஸ்டர் செல்வராஜ்...நீங்க கோபி 'பாடிய' பார்த்தீங்களா?''



ஆம் என்று தலை அசைத்த செல்வராஜ் உடம்பை ஒரு தரம் உதறிக் கொள்ள, அந்தச் சடலத்தின் சிதைவு அவரை எந்த அளவுக்குப் பாதித்திருக்கிறது என்பதை துர்காவால் புரிந்து கொள்ள முடிந்தது.

அரை நிமிஷம்தான்.

தீர்மானித்து விட்டார்.

செல்வராஜைத் தீர்க்கமாக ஏறிட்டார்.

பொங்கி வெடிப்பேன் என்று உள்ளுக்குள் ஆர்ப்பரித்த அழுகைக்கு இடம் கொடாமல் பேசினார்.

''உணர்ச்சி வசப்படாம, ப்ராக்டிகலா யோசனை பண்ணிப் பார்க்கறப்ப, கோ...கோபிய ஹாஸ்பிடல்லேந்து நேரே எலெக்ட்ரிக் கிரிமடோரியத்துக்குக் கொண்டுபோய் நடக்க வேண்டியதைக் க...கவனிக்கறதுதான் சரினு தோணுது...த...தயவு பண்ணி அவனை இங்கு கொண்டு வா...வராதீங்க...''

''அது எப்படிங்க? சாஸ்திரம்...சம்பிரதாயம் இருக்கறத எல்லாம் மறந்திட்டு, உங்க போக்குல நீங்களா முடிவு எடுத்தா?''

துடிப்போடு, ஆத்திரமாய் சுந்தரம் பேச, துர்கா அவரை நிமிர்ந்து பார்த்தார்.

இனியும் அடங்க மாட்டேன் என்ற கொக்கரிப்புடன் கண்களில் ததும்பிய நீருடன் நின்றவர் அழுகையினூடே பேசினார்...

''என்னை மன்னிச்சுடுங்க...ஆனா, சித்ராவோட நலனைக் கருதியாவது இத நா செஞ்சே ஆகணும்... சித்ராவுக்கு அடுத்தபடியா கோபிகிட்ட உரிமை உள்ளவன் என்ற ரீதில, அவனோட அக்கான்ற முறைல, சொல்றேன் ...த...த...தயவுபண்ணி''

அழுகை கட்டுப்படுத்த முடியாமல் போக, செல்வராஜ் பக்கமாய் திரும்பி இரண்டு கைகளையும் கூப்பி ''ப்ளீஸ்— ப்ளீஸ்,'' என்று கெஞ்சியவர் பொத்தியபடி வேகமாய்த் திரும்பி உள்ளே போனார்.

கூடத்திற்குச் சென்று தன் எதிர்ப்பை சுந்தரம் உரக்கவே முணுமுணுத்து வெளிப்படுத்தினாலும் உறுதியாய் நின்ற செல்வராஜ் மற்றவர்களை எதிர்க்க முடியாமல் 'எக்கேடு கெட்டுப் போங்க...எனக்கென்ன' என்று வெறுப்பில் அடங்கிப்போனார்.

அடுத்த அரை மணியில் முக்கியமான ஆண்கள் மட்டும் எழெட்டு வண்டிகளில் கிளம்பி ஆஸ்பத்திரிக்குப் போய், கோபியின் சடலத்தைப் பெற்றுக் கொண்டு மின்சார சுடுகாட்டுக்குப் போனார்கள்.

ஐயருக்கு முன் கூட்டியே சொல்லி விட்டிருந்ததில் அவர் தேவையானவைகளுடன் வந்து காத்திருக்க, செய்ய வேண்டியவைகளை ஒரு மாதிரி செய்து, இருட்டிக் கொண்டு வந்த அந்த மாலை நேரத்தில் கோபியின் உடலுக்கு எரியூட்டினார்கள்.

# 8

**பகலா, இரவா?**

**தெரியாது...**

**என்ன கிழமை?**

**தெரியாது...**

**உரத்த அழுகுரல் கேட்கிறதே, யாருடையது?**

**தெரியாது...**



எதற்காக அழுகிறார்கள்?

தெரியாது...இல்லை தெரியும்...

இல்லை தெரியாது... தெரிய வேண்டாம்...எனக்கு எந்த விவரமும் தெரிய வேண்டாம்.

பூமி சுழல்வது நின்று விட்டதா? நன்றாய் நிற்கட்டும். பிரளயம் வந்து உலகம் அழியப்போகிறதா? நன்றாய் அழியட்டும்...யார் வாழ்ந்தால் எனக்கென்ன யார் அழிந்தால் எனக்கென்ன?

அழிந்து...சிதைந்து... உருக்குலைந்து...

ஐயோ—என் கோபி அப்படி பயங்கரமாய் இறந்து போனதால்தானே இவர்கள் எல்லோரும் ஒன்று கூடி சாதிக்கிறார்கள்...

கோபி...என் கோபி... நீங்கள் இந்த உலகில் இல்லையா? செத்து விட்டீர்களா? பஸ் சக்கரங்களில் மாட்டிக்கொண்டு, கூழாகி...

இல்லை...இல்லவே இல்லை. நான் நம்ப மாட்டேன்? எல்லாருமாய்ச் சேர்ந்து கொண்டு பொய் சொல்கிறார்கள்...என்னை ஏமாற்றுகிறார்கள்...

எதற்கு?

என்னை ஏமாற்றுவதால் இவர்களுக்கு ஆகப் போவது என்ன?

அப்பா, அம்மா...சேர்மன் செல்வராஜ் முக்கியமாய் மேடம்...மேடம் எதற்காக என்னிடம் பொய் சொல்ல வேண்டும்...அதுவும் கோபி, அவரின் அருமைத் தம்பி இறந்ததாய்...

**அப்படியென்றால் நிஜம்தானா?**

இரத்தமும், சதையுமாய், கண்ணெல்லாம் சிரிப்பாய், காதலாய் என் கையைத் தன் கைக்குள் இருத்திக்கொண்டு புறத்தில் சாயவைத்து, அழகாய்ச் சிரிப்பாரே, அந்தச் சிரிப்பை இனிக் காண முடியாதா?

இல்லை...நான் நம்ப...மாட்டேன்...வெட்டிப் போட்டாலும் நம்ப மாட்டேன்...

என்னை இப்படித் தவிக்க விட்டுவிட்டுக் கோபி போக மாட்டார். அவரை விட்டால் எனக்கு வேறு யாரும் இல்லை என்பது அவருக்குத் தெரியும் என் உலகமே அவர்தான் என்பது தெரியும்...

தெரியும்தானே கோபி?

எங்கே இருக்கிறீர்கள்?

வந்து விடுங்களேன்... காலை அகல அகலமாய் வைத்து, இலேசாக ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நடப்பீர்களே, அப்படி நடந்து வந்துவிடுங்களேன்...

கோபி...கோபி

தொடர்ந்து அழுது, மனசுக்குள்ளேயே கதறி, பரிதவித்ததில் சித்ராவின் கண்கள் இரண்டும் சிவந்து, உப்பியிருந்தன.

இமைகள் ஒன்றோடு ஒன்று ஒட்ட மறுத்து வீங்கிப் போயிருந்தன.

கண்ணைத் திறந்தாலும், மூடினாலும் எரிச்சல்...

மூச்சுவிட முடியாதபடி மூக்குத் துவாரங்கள் அடைத்துக் கொண்டிருந்தன.

சற்றைக்கொருதரம் புரண்டும், இலேசாகத் தலையை உயர்த்தியும், மூக்கடைப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது.



துக்கத்தை விழுங்கி விழுங்கித் தொண்டை விக்கி வலி கண்டிருந்தது...

மார்புக் கூட்டில் என்னென்னவோ அவஸ்தைகள்... இடதுபக்கமாய் ஒரு குடைச்சல்...ஆயிரமாயிரம் பறவைகள் ஒருசேர இறக்கைகளை அடித்துக் கொண்டு பறக்கிற உணர்வு.

இருதயத்தின் துடிப்பு காதுகளுள் இரைச்சலுடன் ஒலித்தது.

அடி வயிற்றில் ஐஸ் கட்டிகளைத் திணித்தது யார்?

அந்த ஐஸ் கட்டிகளிலிருந்து உருகும் நீர், ரத்த நாளங்கள் மூலம் இண்டு இடுக்கு விடாமல் வியாபித்ததில் சில்லிட்டுப் போன உடம்பு அரை நிமிஷத்துக்கொரு தரம் உதறி உதறிப் போட்டது.

கைவிரல்களில் ஒரு நடுக்கம்...

வலி...வலி...வலி...

வார்த்தைகளில் விவரிக்க முடியாத வேதனை.

எதையும் பொருட்படுத்தாமல் சித்ரா தன் பாட்டுக்குப் படுத்துக் கிடந்தாள்...

மூடியிருந்த கண்களிலிருந்து சீராக நீர் பக்கவாட்டில் இறங்கி, தலைகாணியை நனைத்துக்கொண்டே இருந்தது.

அவ்வப்போது அருகில் அமர்ந்து, அவளை அணைக்க முற்பட்டு, 'சித்ரா' என்று புலம்பும் எவராலும் பாதிக்கப்படாமல் அவள் கட்டை மாதிரி படுத்திருந்தாள்.

"சித்ரா" என்று துர்கா அழைத்த போது மட்டும் பிரயத்தனத்துடன் கண்களைத் திறந்து அவர் நீட்டிய பாலையோ, காபியையோ ஒரு வாய் குடிக்கப் பார்த்தாள்...முடியாவிட்டால் எதுவும் பேசாமல் டம்ளரை

துர்காவிடமே கொடுத்து விட்டு மறுபடி படுத்து விட்டாள்.

கோபி போய்விட்ட செய்தி கேட்டு, அலறியபடி தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டவளிடம் பேசுகிற விதத்தில் பேசிக் கதவைத் திறக்க வைத்து, கையைப் பிடித்து, மெல்ல வண்டியில் ஏற்றி, பெற்றோர் வீட்டுக்கு துர்கா அழைத்து வந்ததும், தன் அறையில் சென்று படுத்தவள்—இன்னும் எழுந்து உட்காரவில்லை. ஒரு வார்த்தை வாயைத் திறந்து பேசவில்லை.

ஆனால், எந்த பிரக்ஞையும் இல்லாதவளாய்ப் படுத்துக் கிடந்தாள், மறுநாளே காலை கூடத்துக் கடிகாரம் ஒன்பது மணி ஆகிவிட்டதைத் தெரிவிக்க ஒன்பது தரம் ஒலி எழுப்பிய போது மட்டும் மண்டையில் ஓங்கி அறைந்த மாதிரி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

பரக்கப் பரக்க விழித்தாள்.

முழு உடம்பும் தடக் தடக்கென்று பதற "மணி என்ன? ஒன்பதா? ஐயோ ஒன்பதா? நேத்து இதே ஒன்பது அடிக்கறப்ப தானே என் கோபிய 'கிளம்புங்க. கிளம்புங்க'னு நிக்க விடாம வெரட்டி அடிச்சேன்? போக மனசில்லாம வம்பு பண்ணிகிட்டு இருந்தவர கைய பிடிச்சு இழுத்துத் தள்ளிவிட்டேன்! இல்ல...கோபிக்கு என் மேல உசுரு... அவரு நா தள்ளினா கூடப் போக மாட்டார்... இப்ப வந்திடுவார் பாருங்க...எல்லோரும் பார்த்துக்கிட்டே இருங்க...வாச மணி அடிக்கும்...கதவைத் திறந்தா கோபி சிரிச்சுக்கிட்டே நிற்பார்...நீங்க வேணா பாருங்க...என் கோபி...கோபி...கோ..."

உதடுகளும், முகமும் கோணிப் போக பரிதாபமாய் உரக்க அழ ஆரம்பித்தவளை துர்கா வாரி அணைத்துக் கொண்டார். ஒரு வார்த்தை பேசாமல் தோளில் சாய்த்து



சின்னக் குழந்தையைச் சமாதானப்படுத்துவது போலத் தட்டிக் கொடுத்தார். அவளின் வேதனை சுற்றி இருந்த அனைவரையும் ஒட்டு மொத்தமாய்த் தாக்கி வாய்விட்டுப் புலம்ப வைத்த இறுதியில் தன்னையும் பாதிக்காமல் உதட்டை மடித்து, நாவை இறுக்கி பற்களை அழுந்தக் கடித்து எப்படியோ சமாளித்தவர், மறுநாள் காலை மீண்டும் அந்த கடிகாரம் ஒன்பது மணி அடித்த போது, தூக்கத்திலிருந்து விடுபட்ட மாதிரி எழுந்த சித்ரா ஓட்டமாய்க் கூடத்துக்குள் ஓடி, யார், எவர் இருக்கிறார்கள் என்று இலட்சியம் பண்ணாமல் "மணி ஒன்பதா? ஐயோ ஒன்பது அடிச்சிருச்சா? அப்படீன்னா நேத்து இத்தனை நாழி என் கோபியோட பேசிட்டு இருந்தப்போ'னு இனிமே சொல்ல முடியாதா? முந்தா நாள்'னு சொல்லணுமா? அப்புறம்...போன வாரம் போன மாசம்...ஐயோ என்னால முடியாது...நா அப்படிச் சொல்ல மாட்டேன்...நான் மாற வேணாம். கடிகாரம் ஓடினா தானே அப்படிச் சொல்லணும்? நிறுத்திட்டா? ஐயோ...ப்ளீஸ் ப்ளீஸ்...யாராவது அந்த கடிகாரத்த நிறுத்துங்க...தயவு பண்ணி நிறுத்துங்க... நிறுத்துங்க..." என்று தன் நினைவு இன்றிப் பைத்தியம் பிடித்த மாதிரி, நடுங்கும் கரங்களால் கடிகாரத்தை எட்டிப்பிடித்து, நிறுத்த அல்லாடித் தவித்தபோது துர்காவும் தூள் தூளாய் உடைந்துதான் போனார்.

அடுத்து வந்த நாட்கள் எப்படி நகர்ந்தன? சாப்பிட்டார்களா? தூங்கினார்களா? பேசினார்களா? உருப்படியாய் எதையாவது செய்தார்களா? ம்ஹூம் தெரியாது... எதுவும் புரியாத நிலையில் நாட்கள் மெல்ல மறைய பன்னிரெண்டாம் நாள் சுந்தரத்தின் அண்ணனும், அவர் மனைவியும் தம்பி அருகில் வந்து அமர்ந்து கொண்டு மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தனர்.

"இடிஞ்சிபோய் உட்கார்ந்திட்டதால போனது எதுவும் திரும்பி வந்திடப் போறதில்லை... மனசைத்

தேத்திக்கிட்டு, முருகன் மேல பாரத்தைப் போட்டுட்டு மேற்கொண்டு ஆகறதை கவனிக்க வேண்டாமா தம்பி?''

அந்தாம் பன்னிரண்டு நாள் தாடியை பரக் பரக் கென்று சொறிந்தபடி 'ப்ச்' என்று சூள் கொட்டினார்.

''இன்னும் ஆகவேண்டியது என்ன இருக்கு அண்ணி? அதான் ஒரே போடா, தலை தூக்க முடியாம அந்தப் பாழுந்தெய்வம் போட்டிருச்சே...''

''போட்டுடுச்சுதான்... அதுக்காகப் புதைஞ்சுபோய் உட்கார்ந்திட முடியுமா? அடுத்தடுத்து பொண்களைப் பெத்து வச்சிருக்கீங்களே தம்பி, நம்மை ஒரு திருப்பு தேத்திக்கிட்டாத்தானே, கடமைய ஒழுங்கா செய்து முடிக்க முடியும்... எந்த நேரத்துல பொறந்தாளோ... ஹூம் இந்தச் சின்ன வயசுல இப்படி சித்ரா மாட்டிக்கிட்டா...எல்லாம் பூர்வ ஜென்மத்துல செஞ்ச பாவம் தான்...வேற என்ன சொல்றது? இது ஏன் இப்படி நடக்குது, அது ஏன் அப்படி நடக்கலைனு நம்பளால புலம்ப முடியுமே தவிரவும், எதையும் விளக்க முடியாது. மேல ஒருத்தன் இருந்து நாடகமாடறான்... அவன் இழுத்த இழுப்புக்கு நாம ஆடறோம்... ஹூம்... சரி...விடுங்க... நடந்தது நடந்தாச்சு...இனி, ஆவறதைப் பார்க்கலாம்... காரியங்கள பதினாறாம் நாள்தானே வச்சுக்கறதா இருக்கீங்க? வந்து நாளாச்சு...ஊர்ல வேலைங்கள் அப்படியே போட்டுட்டு வந்திட்டோம் 'இருந்து எல்லாத்தையும் முடிச்சிட்டுப் போயிடலாம்...தம்பிக்கும் நம்பளை விட்டா யாரு?'னு உங்கண்ணன் தீர்மானமா சொல்லிட்டாரு... அத்தை, பெரியம்மாவும்கூட காரியங்களை முடிச்சிட்டுப் புறப்படணும்னுதான் காத்திட்டு இருக்காங்க. ஹூம்... நாம் ஒடறத்துக்கென்ன? சனியோட சனி எட்டு... ஞாயிறு ஒன்பது...திங்கள், செவ்வாய் போக இன்னிக்கு பன்னிரண்டு...பதினாறு அன்னிக்கு காரியங்களை வச்சுக்கறதுதான் நம்ப பழக்கம்...அய்யர்கிட்ட விவரங்கள்



கேட்டீங்களா? என்ன? சொன்னாரு?...சின்னப்பொண்... அவ தலைல இப்படி எழுதி இருக்க வேணாம்? என்ன பண்றது...சம்பிரதாயம், குடும்பப் பழக்கம்னு பெரியவங்க வச்சிட்டாங்களே...அதை செய்யறபடி செஞ்சி தானே ஆகணும்?...அடுத்து இருக்கறவங்களாலயாவது நல்லா இருக்கணும் பாருங்க...ஹூம்...முருகா...ரொம்பத்தான் சோதிக்கறப்பா...''

குரல் கம்மிப் போகக் கூடத்தில் பெரியம்மா பேசினதும் அதைத் தொடர்ந்து ஓரிரு அழுகுரல்கள் ஐயோ ஐயோ என்கிற புலம்பலுடன் தொடர்ந்து உள் அறையில் ஒருக்களித்து, கால்களை மடித்துச் சுருண்டு படுத்திருந்த சித்ராவின் காதுகளிலும் விழவே செய்தன.

மயக்கமும் அல்லாமல், உறக்கமும் இல்லாமல், ஒரு வித இரண்டுங்கெட்டான் நிலையில் அமிழ்வதும், மிதப்பதுமாக இருந்த காரணத்தால் பெரியம்மா என்ன சொல்லுகிறாள் என்பதை முதலில் புரிந்துகொள்ள முடியாமல் போனவள், எதைப்பற்றியும் சிந்தனை செய்யாமல் மெள்ளப் புரண்டு சுவரைப் பார்த்தபடி படுத்தாள்.

''மூளியா அவள மூலைல உட்கார வச்சிட்டு நாம மட்டும் பூவும், பொட்டுமா வளைய வரணும்றதை நெ... நெனச்சுப் பார்க்கக்கூட...''

அழுகையூடே மாலதி பேச, மாமாவும், அத்தையும் அவளைச் சமாதானப்படுத்தினார்கள்.

''அதுக்கென்ன? பண்றது? யார் யாருக்கு என்னென்ன கொடுப்பினை இருக்கோ அதைத்தானே அனுபவிக்க முடியும்? கீழ்கடை பொண்களை நினைச்சுக்கிட்டு, நீ தைரியப்படுத்திக்க வேண்டியதுதான்...''

''நல்ல வேளையா பழைய காலக் கொடுமை எல்லாம் இப்ப இல்லையேன்னு நீ சந்தோஷப்படணும் மாலதி

''வெள்ளைய உடுத்து, சமயக்கட்டுல முடங்கு'ன்னு கரிச்சுக் கொட்டின காலம் மாறிட்டதால...ஒரு வருஷம் வீட்டோட வச்சுக்கிட்டு அப்புறமா, படிச்ச படிப்ப வீணாக்காம எதாச்சும் வேலைக்குக்கூட அவளை நீங்க அனுப்பலாம்...வீட்டோட கிடந்து மனசு கஷ்டப்படற விட, நாலு எடத்துக்குப் போய் வாறது அவளுக்குத் தெம்பா இருக்குமே.''

கூடத்தில் அவர்கள் மாறிமாறிப் பேசப்பேச, ''அவளை மூலைல உட்கார வச்சிட்டு, நாம மட்டும் பூவும் பொட்டுமா வளைய வரணுமே' என்கிற பொருமலும், 'வெள்ளைய உடுத்து, சமயக்கட்டோட கிட' என்கிற வரியும் அவர்கள் எதைக் குறித்துப் பேசுகிறார்கள் என்பதை விளக்க, அடிவயிற்றில் குடல் முடிச்சுப் போட்டுக்கொள்ள, பதட்டத்தோடு சித்ரா கண்களை விழித்தாள்.

பதினாறாம் நாள் காரியங்கள்...

கணவனை இழந்த பெண்ணுக்கு விதவைக் கோலத்தை சமுதாயத்தின் பேரைச் சொல்லி உற்றாரும், பெற்றாருமே கொடுக்கும் கொடுமை...

கூடவே—சில மாசங்களுக்கு முன் அவள் ஸ்நேகிதி தமயந்தியின் அக்கா அபிராமி புருஷனை இழந்ததும், காரியங்களைச் சம்பிரதாயப்படி செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு 'வேண்டாம்—மாட்டேன்' என்று அவள் கதறக் கதற, கெஞ்சக் கெஞ்ச, அவள் மாமனாரும், மாமியாரும் தங்கள் தீர்மானத்தில் பிடிவாதமாக நின்று அவளை பொட்டு, பூ, நகைகளை இழக்கச் செய்ததோடன்றி, 'நாம ஆசாரமான குடும்பத்தைச் சார்ந்தவங்க... அதனால வெள்ளைப் புடவைதான் கட்டணும்... இதுக்கெல்லாம் சம்மதிச்சா எங்ககூட இரு; இல்லாட்டி உன் பசங்களை இழுத்துக்கிட்டு எங்கயாச்சும் போய் உன் இஷ்டப்படி இரு' என்று துளி மனிதாபிமானம் இல்லாமல்



நிர்பந்தித்ததும், நாலு குழந்தைகளை அழைத்துக் கொண்டு பிறந்த வீட்டில் போய் நிற்க முடியாது என்பதோடு, தனித்து வாழ்ந்து அவர்களைக் காப்பாற்றும் அளவுக்குச் சம்பாதிக்கத் தனக்கு படிப்போ, சாமர்த்தியமோ கிடையாது என்பதும் புரிய, 'விதவைக் கோலத்தை' வாயைத் திறக்காமல் அவள் ஏற்றுக் கொண்டதும் சித்ராவினுள் தலை தூக்கி ஆட்டம் போட்டன.

அன்றைக்கு கோபிக்குதான் என்னமாய்க் கோபம் வந்தது!

''இழக்கக் கூடாதத இழந்திட்டு வலில துடிச்சிட்டிருக்கிற பெண்கிட்ட இன்னும் அன்பா, ஆதாரமா, அரவணைப்பா இருக்கறத விட்டுட்டு அவளைப் பெத்தவங்களே இந்தக் கொடுமைக்கு உடந்தையா வாய மூடிக்கிட்டு இருக்காங்களே... இந்த அக்ரமம் உலகத்துல வேற எந்த நாட்டுலயும் நடக்குமா? 'விதவைக்கோலம் இருக்கணும்'னு சொல்றவங்க... விதவன் கோலமும் வேணும்னு வற்புறுத்தறதுதானே? சமுதாயக் கட்டுப்பாட்டுக்காகப் பெண்ணை இப்படி அலங்கோலப்படுத்தறவங்க—அதையும் செய்ய வேண்டியதுதானே? மனைவி இழந்த கணவர் முன் வரிசைல உட்கார்ந்து பிள்ளை கல்யாணத்துல பங்கு எடுத்துக்கலாம். ஆனா, அவ கஷ்டப்பட்டு பத்து மாசம் சுமந்து பெத்த அம்மா புருஷனை இழந்திட்டா பெத்த பிள்ளை திருமணத்தகூட ஓரமா ஒதுங்கி ஒளிஞ்சிக்கிட்டுப் பார்க்கணும்; அதானே? எதுக்காக இப்படி ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி? எல்லா உணர்வுகளும் ரெண்டு பேருக்கும் பொதுவா இருக்கறப்போ, மனுஷத் தன்மையே இல்லாத இந்த காட்டுமிராண்டி வழக்கம் எதுக்கு? ம்! படிச்சவங்களாவது துணிஞ்சு இந்த அநியாயத்துக்கு ஒரு முடிவு கட்டினாங்கன்னா தேவலை...''

எதிரில் அமர்ந்திருந்த துர்கா வேதனையுடன் குறுக்கிட்டார்.

"எங்க? அபிராமியோட அப்பா வக்கீல்... மாமனார் பாங்குல ஆபீஸர்... இருந்தும் என்ன பிரயோஜனம்?... ரெண்டு பேருக்குமே 'இந்தக் கொடுமை வேணாம்'னு தடுத்து நிறுத்தற மனப்பக்குவம் இல்லையே. அட, தடுக்கக் கூட வேணாம் கோபி, காலம் மாறிட்ட நிலைல, 'வெள்ளைப் புடவைதான் உடுத்தணும், அதான் சம்பிரதாயம்' அது இதுனு நம்பிக்கையோட வாதாடறாங்களே அந்த அக்ரமத்தைச் சொல்லு..."

"அந்தப் பொண்ணோட வேதனை, இழப்பு புரியாம இப்படி கண்ணைக் கட்டிவிட்ட குதிரையா இருக்கறவங்கள வரிசையா நிக்க வச்சு சுடணும்... எனக்கு மட்டும் அதிகாரம் இருந்துச்சுன்னா அப்படியொரு சட்டத்தைக் கட்டாயம் நா கொண்டு வருவேன்..."

கோபியின் பேச்சில் தொனித்த வேகம் அவளருகில் அமர்ந்திருந்த சித்ராவுக்கு புதுசாக இருந்தது.

"அப்பா... ரொம்பத்தான் கோவமா இருக்கீங்க போல இருக்கு... வார்த்தைகள் காட்டமா வருது..."

"பின்னே என்ன சித்ரா... மனுஷங்களாகப் பிறந்தவங்க முதல்ல மனுஷத்தனத்தோட வாழக் கத்துக்கணும்... அடுத்தவங்க வலி, வேதனை, அவஸ்தையைப் புரிஞ்சிக்க முயற்சிக்கணும்... நாளைக்கு நமக்கு இப்படி ஒரு நிலை வந்தா எப்படித் துடிப்போம்ன்றதை நினைச்சுப் பார்க்கணும்... அத விட்டுட்டு..."

"உன் கோபம் ரொம்ப தார்மீகமானதுதான்னு எனக்கும் தோணுது கோபி... ஆனா, இந்த நாட்டுல இருக்குற அத்தனை பேருக்கும் இதே ரீதில கோபம் வந்தாத்தான் இந்த மாதிரிப் பிரச்னைகளுக்குத் தீர்வு



காண முடியும்... நீயும், நானும் குதிச்சு ஒண்ணும் ஆகப் போறதில்லை..."

"அதுக்காக? நாமளும் அந்த முதுகெலும்பில்லாத, கோழைத்தனம் நிரம்பிய, சுயநலம் பிடிச்ச, முக்கியமா மனுஷத்தனம் இல்லாத கூட்டம் மாதிரி வாய மூடிக்கிட்டு இருக்கலாமா? உங்களுக்கு நினைப்பு இருக்காக்கா? நம்ம அப்பா செத்துப் போனப்போ அம்மாவை எந்த விதத்துலேயும் அலங்கோலம் படுத்தக் கூடாதுன்னு அந்த வயசுலேயே நா உறுதியா மாமா, தாத்தாகிட்ட வாதாடினது?"

"ஏன் இல்லாம... சாந்து பொட்டு, நகை, கலர் புடவைன்ற எளிமையான அலங்காரத்தோட அம்மா கடைசி வரைக்கும் இருந்தது உன்னாலதானே?"

"ஒருத்தரோட தனிப்பட்ட வாழ்க்கைல விருப்பு, வெறுப்புல தலையிட யாருக்கும், அது பெத்தவங்களோ, கூடப் பிறந்தவங்களோ, குழந்தைகளோ, யாரானாலும் உரிமை கிடையாதுக்கா... எப்படி இருக்கணும்னு நிர்மானிக்க வேண்டியது பாதிக்கப்பட்ட அந்தப் பெண் மட்டும்தான். இத முதல்ல நம்ம சமுதாயம் புரிஞ்சிக்கணும்..."

துர்கா தீவிரமாய் தலை அசைத்து ஆமோதித்தார்.

"என் ஸ்நேகிதி ராதாவத் தெரியுமில்ல? அவ புருஷனை இழந்தப்புறம் பழையபடியே இருந்தா... வேண்டியவங்ககிட்ட மட்டும், 'நா இப்படித்தான் இருக்கணும்னு என் புருஷன் விரும்பினார். இருக்கேன்'னு சொன்னா... 'ஆனாலும் ரொம்ப துணிச்சல்தான்? இவமாதிரி நாலு பொம்பளைங்க போதும் சமுதாயத்த உருப்படாம அடிக்கறதுக்கு... ஆயிரம் சொல்லு, பூ பொட்டு வச்ச விதவை நடத்தை கெட்டவளாதான் இருப்பா...'னு வேண்டியவங்களே பின்னால வக்ர மனசோட பழிச்

சப்போ, ''அவ இஷ்டப்படி அவ இருக்கட்டுமே! நாம ஏன் இதுல மூக்க விடணும்...தவிர, கல்யாணத்துக்கு முன்னாலியே ஒரு பெண் வச்சிக்கிறது பொட்டும் பூவும்... இருக்கும், அவ புருஷன் செத்துப் போறதுக்கும் என்ன சம்பந்தம்? இந்த மாதிரி அடுத்தவங்க சொந்த விவகாரத்துல தலையிடறது சரியான காட்டுமிராண்டித்தனம் இல்லையா''ன்னு பளிச்சினு நா கேட்டுட்டேன்...''

கோபி எழுந்து இப்படியும், அப்படியும் நடந்தான்—தீவிரமாய் யோசனை பண்ணிக் கோபம் குறையாமலே பேசினான்

''விவேகானந்தா கேந்திராவில வேலை பார்க்கறப்போ ஒரு தம்பதிய சந்திச்சேன்...ரொம்ப அன்யோன்யமான தாம்பத்யம், மரியாதை, அன்பு இரண்டு கலந்த ஆரோக்ய மான உறவு அவங்களுது... எதிர்பாராத விதமா கான்சர்ல புருஷன் இறந்துட்டார் தொடர்ந்து அந்த மனைவி அதே அலங்காரங்களுடனேயே இருந்தாங்க... ஒரு சமயம் என்கிட்ட பேசறப்போ ''தாலியோட இருக்கறது அவர்கூட இருக்கற சந்தோஷத்தைத் தருது; தவிர, 'இவளுக்கு புருஷன் இருக்கான்'ற நினைப்பை அடுத்தவங்களுக்குக் கொடுத்து, எனக்கு வேலியா இருக்கு; எல்லாத்தையும் விட என் இழப்பை விதவைக் கோலம் மூலம் எல்லாருக்கும் வெளிப்படுத்திக் கண்டவங்களோட, முகம் தெரியாத அன்னியங்களோட பச்சாதாபமும், 'ஐயோ பாவம்'ன்ற இரக்கமும் எனக்கு வேணாம்னுதான் நா என் தோற்றத்துல எந்த மாறுதலும் செய்யாம இருக்கேன். இப்படி அலங்கரிச்சுக்கறதால என் லவ் கூடப் போறதும் இல்ல, விதவைக் கோலத்தால அது குறையவும் போறதில்ல...இது என் இழப்பு...என் இழப்பு மட்டுமே... இதைத் தாங்கிக்கறதும், இதோட வாழக் கத்துக்கறதும் என் சம்பந்தப்பட்டது மட்டுமே...அதனால எனக்கு எந்தச் செய்கை நிம்மதியைத் தருதோ அத நா தயங்காம



செய்யறேன்'னு'' சொன்னப்போ அன்னிக்கு அவங்கள நிக்க வச்சு நமஸ்காரம் பண்ணணும் போல எனக்குச் சிலிர்த்துப் போச்சுக்கா...அந்தம்மாவோட தைரியம், மனப்பக்குவம் நம்ப நாட்டுப் பெண்கள் எல்லாருக்கும் வந்திடுச்சுன்னா, அப்புறம் இந்தப் பிரச்னை குறைஞ்சிடும்; நிச்சயம்...''

உணர்ச்சி வசப்பட்டு, சத்தியமான எதிர்பார்ப்புடன் அன்று கோபி பேசின வார்த்தைகள் நினைவுப் பெட்டியிலிருந்து வெளியில் எடுத்து, தூசி தட்டி நெஞ்சில் நிறுத்திக் கொண்ட நிமிஷத்தில் உடம்பில் மயிர்கூச்சம் போடுவதை உணர முடிய, சப்தமில்லாமல் விசித்து விசித்து சித்ரா அழ ஆரம்பித்தாள்.

# 9

பிளாஸ்டிக் கூடை கைப்பையை சுவரோரமாய் வைத்து நிமிர்ந்த துர்கா, சித்ராவை ஏறிட்டார்.

வழக்கமாய் இந்தக் காலை நேரத்தில், அவர் வரும் போது கலைந்த முடி, கசங்கின உடை, அழுது சிவந்த முகம், என்று அலங்கோலமாய்ச் சுருண்டு படுத்திருப்பவள் இன்று குளித்து தலைவாரி, முழங்கால்களை அணைத்தபடி உட்கார்ந்திருப்பது அவளுள் உண்டாகி இருக்கும் சன்னமான தெளிவை வெளிப்படையாகக் காட்ட, அது தந்த நிறைவில் துர்கா ஸ்நேகத்தோடு புன்னகைத்தார்.

''என்னம்மா, கொஞ்சமாவது ராத்திரி தூங்கினியா?''

''ம்''

"குட்...அதான் முகம் தெளிஞ்சிருக்கு...உன்னை இப்படி பார்க்கறப்போ எனக்கு எத்தனை சந்தோஷமா இருக்கு தெரியுமா?"

சித்ரா பதில் கூறாமல் தலையை குனிந்து கொண்டாள். அருகில் இருந்த தலைகாணி உறையிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த நூல் பிசிறுகளைப் பிய்த்துப் போட்டாள். ஒரு தரம் துர்காவை நிமிர்ந்து பார்த்து ஏதோ சொல்ல விரும்புவது போல ஒரு கணம் தயங்கிப் பின் சரியான வார்த்தைகள் அகப்படாத நிலையில் மீண்டும் பார்வையைத் தாழ்த்தினாள்.

புடவைத் தலைப்பால் உதட்டிலும், நெற்றியிலும் துளிர்த்திருந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்ட துர்காவுக்கு அவளுடைய இருப்புக் கொள்ளாமை புரிகிற மாதிரி இருந்தது. அதே அறையில் இன்னொரு பக்கமாய் கண்ணாடி முன் நின்று தலை சீவிக்கொண்டிருந்த பெரியம்மாவின், ஏதோ புத்தகத்தில் ஆழ்ந்திருந்த இந்துவின் காதுகளில் தங்கள் உரையாடல் விழாமல் இருக்கக் குரலைத் தழைய விட்டார்.

"என்னம்மா, என்ன விஷயம்?"

"ம்? வந்து...

"சொல்லும்மா..."

இரண்டு வார்த்தை சேர்ந்த மாதிரி பேசக்கூடத் தெம்பு இல்லாத மாதிரி ஒரு நீளமாய்ப் பெருமூச்சு விட்டவள், நடுங்கும் விரல்களால் சரிந்துவிட்ட புடவைத் தலைப்பைச் சீர் செய்து, கிசுகிசுப்பாய் "வந்து...வந்து" என்று தடுமாற, துர்கா அவளை நெருங்கி அமர்ந்து நெற்றியில் கை வைத்துப் பார்த்தார்.

"உடம்புக்கு முடியலையா சித்ரா? காய்ச்சலா? தலை வலிக்குதா?"



சித்ரா இல்லை என்று தலை அசைத்தாள்.

"காலைல எழுந்து ஏதாவது சாப்பிட்டியா?"

"ம்"

"என்ன? வெறும் காபிதானே"

"ம்"

"அது மட்டும் எப்படி போதும்? மனசு சரியில்லேன்னு சொல்லி சாப்பிடாம இருந்தா உடம்பு பலவீனப்பட்டுப் போகாதா? ஏற்கனவே அரை உடம்பாயிட்டே... இனியாவது கொஞ்சம் தேத்திக்கிட்டுச் சாப்பிட ஆரம்பிக்க வேணாமாம்மா?"

பரிவுடன் அவர் பேசியபோது அந்த முகமும், குரலும், கோபியைக் கண்முன் கொண்டு வந்து நிறுத்த, அடிவயிற்றிலிருந்து எழுந்த கேவலுடன் சித்ரா விசும்ப முற்பட்டாள்.

துர்கா சட்டென்று அவள் தோளை அணைத்துத் தன் பக்கம் இழுத்துக் கொண்டார்.

"ஸ்...ஸ்...சித்ரா...ம்ஹூம்...அழக்கூடாது...ப்ளீஸ்...ரொம்ப நாளுக்கப்புறம் இன்னிக்குத்தான் கொஞ்சம் தெளிஞ்சிருக்கே...இந்தத் தெளிவு துளித் துளியா கூடணுமே தவிரவும் குறையக் கூடாது...ப்ளீஸ்ம்மா...எனக்காக...அடக்கிக்க...'இனியும் நிலை குலைஞ்சு போய் இருக்கமாட்டேன்னு' ஒரு வைராக்கியம் பண்ணிக்க...தயவு பண்ணி..."

சித்ரா அழுகையினூடே புலம்பினாள்.

"என்னால முடியலையே மேடம்...தாங்கிக்க முடியலையே...கோபி இல்லாம வாழ்நாள் பூரா இருக்கணும்ன்னு அதை நெனைச்சுப் பார்க்கக்கூட முடியலையே...அப்புறம் எப்படி வைராக்கியம் பண்ணிக்கிறது?... ஐயோ...என

இப்படி நடக்குது மேடம்? நாங்க பாட்டுக்கு யாரோட வம்பும் இல்லாம, சந்தோஷமா இருந்தோமே...யாருக்கும் ஒரு கெடுதலும் மனசாலகூட நெனைக்கலியே! அப்புறம் ஏன் மேடம்?'' எதுக்காக என்னால? முடியல...சத்தியமா முடியல...''

வேதனை விஸ்வரூபம் எடுத்ததில் விசும்பலும், புலம்பலும் பெரும் அழுகையாக மாறிப்போக, அவளின் உரத்த அழுகுரல் கேட்டுக்கூடத்திலிருந்து சுந்தரமும், மற்றவர்களும் என்ன விஷயம் என்பது போல எட்டிப் பார்த்தார்கள். பின்கட்டில் வேலையாய் இருந்த மாலதி கைக்காரியத்தைப் போட்டுவிட்டு ஓடி வந்து, ''என்ன சித்ரா, ஏம்மா இப்படி அழறே?'' என்று கூறி அவளை அணைத்துக் கொண்டாள்.

எந்தவித அலங்காரத்தையும் இன்றி இடது நாழிகை கண்ணாடி முன் நின்று தலைமுடியை சீவி சிங்காரிப்பதில் ஈடுபட்டிருந்த பெரியம்மா தன் பங்குக்கு ''ஐயோ... முருகா...எப்பா எங்களை இப்படி சோதிக்கறே? நாங்க என்ன பாவம் செஞ்சோம்? அருமை பெருமையா வளர்த்த பொண்ணுக்கு மாபாரமா வேதனை வந்திட்டதே,'' என்று புலம்பியவாறு சித்ராவின் அருகில் வந்து தலைப்பால் முகத்தை மூடிக்கொள்ள ஆனாலுக்கு உணர்ச்சிவசப்பட்டுப் போனதில் ஒரு நிமிடம் வரையில் அங்கு நிலவிய அமைதி கலைந்துபோன வருத்தத்துடன் துர்கா மெள்ள எழுந்து ஜன்னல் அருகில் சென்று நின்று கொண்டார்.

தெய்வத்தை வைது, விதியைச் சாடி, பதில் கிடைக்காத கேள்விகளை ஏன், எப்படி, எதற்காக என்று கேட்டுப் பொருமித் தீர்த்துச் சமாதானமடைந்த பின் மாலதி ''கொஞ்ச முன்னால காபி கொண்டுவந்து கொடுத்தப்ப சாதாரணமா இருந்தாளே, திடும்னு என்ன ஆச்சு?... யாராச்சும் ரொம்ப வேண்டியவங்க துக்கம் விசாரிக்க

30208
469129?



வந்தாங்களா என்ன?'' என்று வினவ, பெரியம்மா துர்காவை நோக்கிப் பார்வையை வீசி, உதட்டைச் சுழித்தார்.

''யாரும் புதுசா வரல...இவங்கதான் வந்தாங்க...கிட்டத்துல உட்கார்ந்துகிட்டு என்னமோ குசுகுசுனு பேசினதும் இவ அழ ஆரம்பிச்சுட்டா...இப்படி யாராச்சும் வந்து வேண்டாத பேச்ச பேசி அடங்கி இருக்கறவளை கிளப்பி விட்டுடப் போறாங்களேனுதான் நா கூடவே காவலா நிக்கறேன்...ஹூம்......என்ன நின்னு என்ன? பேசறவங்க வாய பொத்தவா முடியும்?''

தைரியமா பெரியம்மா குற்றம் சாட்டினதும் இப்படியொரு சந்தர்ப்பத்துக்காகவே காத்திருந்த போலும் மாலதி எரிச்சலோடு துர்கா பக்கம் திரும்பி, கண்களை இடுக்கிக்கொண்டு பேசினாள்.

''சொல்றேன்னு நீங்க கோவிக்கக் கூடாது...ஆனாலும் நீங்க இவள ரொம்பத்தான் கிளப்பி விடறீங்க... உங்களைக் கண்டாலே இவ அழ ஆரம்பிச்சிடறது பத்தாதுன்னு பெரியம்மா சொல்றமாதிரி ஏதேதோ பேசித் துக்கத்த அதிகமாக்கிடறீங்க ...போனவர் போயிட்டார்... அதையே பேசிட்டு இருக்கறதுல புண்ணியம் என்ன? இவ மனச தேத்தறத்துக்கும், வீட்டுல மேற்கொண்டு நடக்க வேண்டியத கவனிக்கவும் உங்களால உதவ முடியும்னா செய்யுங்க; இல்லாட்டி எப்படியோ சமாளிச்சுக்கட்டும்ன்ற நல்லெண்ணத்தோட விலகி சும்மாவாச்சும் இருங்க...எப்படிடா இதுலேந்து மீண்டு வருவோம்னு நாங்களே...''

அவளை முடிக்கவிடாது அழுகுரலில் சித்ரா கெஞ்சினாள்.

''மேடம் எதுவும் சொல்லி நா அழலம்மா... அவங்கள அனாவசியமா எதுவும் சொல்லாதீங்க...என் வலி எனக்கு...''

மாலதி அலுப்புடன் எழுந்து நின்றாள்.

"சரி...சரி...உன் மேடத்த நாங்க ஒண்ணும் சொல்லலை... நீ அழுது புலம்பாம நிம்மதியா இருக்கப்பாரு...நீ அழுதா பெத்த வயிறு பத்திக்கிட்டு எரியுது...அதான் கைக் காரியத்த போட்டுட்டு ஓடிவந்தேன்..."

பேசியவாறு வெளியில் போனவளை மற்றவர்கள் துர்கா மேல் ஒரு வெறுப்பான பார்வையை வீசிவிட்டுத் தொடர்ந்தார்கள்.

கூடத்தில் நின்று சின்ன குரலில் எதையோ காரசாரமாக அவர்கள் விவாதிப்பது காதில் விழ, அந்தப் பேச்சு தன்னைப் பற்றியதாக இருக்கக்கூடும் என்பதை ஊகிக்க முடிந்த துர்கா ஒருவித கையாலாகாத்தனத்துடன் ஜன்னல் கம்பிகளில் முகத்தைப் பதித்து, கண்களை மூடிக்கொண்டார்.

கோபி இறந்து மூன்று நாட்கள் வரையில் சித்ராவை விட்டு இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நகராமல் இருந்த சமயத்தில் இப்படி அடைகாப்பது போலத் தான் கூடவே இருப்பது சித்ராவைச் சார்ந்தவர்களுக்கு எரிச்சலைத் தருவதைப் புரிந்துகொள்ள முடிய, நான்காம் நாளிலிருந்து இரவு ஏழு மணி சுமாருக்கு தன் வீட்டுக்குப் போய்விட்டு, காலையில் குளித்துத் தயாராகி எட்டுமணி போல இங்கு வந்து, நாள் முழுவதும் சித்ராவோடு தங்க முற்பட்டார்.

ஓரிரு நாட்களில் அப்படி வந்து போவதும், சித்ராவின் உறவினருக்குப் பிடிக்காமல் போய், சதா முகங்களைச் சட்டியாக வைத்துக்கொள்வதும், அவரை மதித்து இரண்டு வார்த்தைகள்கூடப் பேசாததுமாய் சூழ்நிலை மாறிப்போக இனி என்ன செய்வது என்று துர்கா தவித்துத்தான் போனார்.



அவர்களின் இந்த நடத்தைக்குக் காரணம் புரியாமல் இல்லை.

துர்காமேல் அவர்கள் அனைவருக்கும் கோபம். கோபியின் உடலை வீட்டுக்கு எடுத்து வரச்செய்து சம்பிரதாயப்படி பண்ண வேண்டிய காரியங்களைப் பண்ண விடாமல் தடுத்து விட்டார் என்று ஆத்திரம்.

இதனால் அவரை மதிக்காமல் இருந்ததோடு அருகில் இருக்கிறாரா, இல்லையா என்றுகூட நிதானிக்காமல் சமயம் கிடைத்தபோதெல்லாம் அது குறித்து வெளிப்படையாகப் பேசி, ஏச முற்படவே செய்தார்கள்.

"கலி முத்திப்போச்சுடிம்மா...இல்லாட்டி ஆம்பிளைங்களை அதட்டி உக்கார வச்சிட்டு ஒரு பொம்பள இந்த ஆட்டம் போடுவாளா?" என்றார்கள்.

"இவ படிச்சு பெரிய உத்தியோகம் பாக்கட்டும், கல்யாணம் கார்த்திறு எதுவும் செஞ்சிக்காம இருக்கட்டும்... நமக்கொண்ணும் இல்ல...ஆனா பெரியவங்க விஷயம் தெரிஞ்சவங்கன்ற மட்டு மரியாதை இல்லாம எல்லாம் தெரிஞ்ச மாதிரி நம்மள எதிர்த்துப் பேசி அடக்குறது எதுக்கு?" என்றார்கள்.

"என்னமோ சொல்வாங்களே, கடைத்தேங்காய எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைச்சானாம்னு அந்த மாதிரி நம்ம வீட்டுக்குள்ள சட்டமா உட்கார்ந்துகிட்டு நம்மள அதிகாரம் பண்ண இவ யாரு?" என்றார்கள். இன்னும் அரசல், புரசலாய் என்னென்னமோ தூஷித்தார்கள்...

எந்தப் பேச்சுக்கும் துர்கா ஒற்றை வார்த்தைகூட பதில் கூறவில்லை... 'என் சித்ராவுக்கு, என் கோபியின் மனைவி சித்ராவுக்கு, நான் இதமாக இருப்பது ஒன்று தான் முக்கியம்' என்று கண்ணைக் கட்டிவிட்ட குதிரையாய் இருந்ததால், எந்த அனாவசிய பேச்சும் தன்னை

சஞ்சலத்துக்கு உள்ளாக்க அவர் இதுநாள்வரை இடம் கொடுக்கவில்லைதான்.

ஆனால், இனியும் அப்படி இருக்க முடியுமா என்கிற கேள்வி இப்போது பிராண்ட, துர்கா எச்சிலைக் கூட்டி விழுங்கித் தன்னை ஆஸ்வாசப்படுத்திக்கொள்ள முனைந் தார்.

''நீ எதற்காக இங்கே வருகிறாய்—வந்து என் மகனின் நிம்மதியைக் கெடுத்து அவனை மேலும் கிளப்பிவிடு கிறாய்?''—என்று அத்தனை பேர்களை வைத்துக் கொண்டு பெற்றவளே பேசினபின், இனியும் சுரணை கெட்டவளாய் இருப்பது சாத்தியமோ?

கேள்வி பிறந்த மறுகணம், துர்கா சினத்தோடு தன்னை உலுக்கிக் கொண்டார்.

இது என்ன அசட்டுக் கேள்வி? சாத்தியமா, இல்லையா என்று?

இல்லை—அசட்டுக் கேள்வி என்பதைவிட... சுயநல மான கேள்வி என்று சொல்வது பொருந்தும்...

பின்னே? சித்ராவின் வேதனைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் மாலதியோ, மற்றவர்களோ பேசுவதை யும், அதனால் உண்டாகும் மான, அவமான விளைவு பற்றியும், சிந்தித்து, பாதிக்கப்பட்டு...ச்சே...

என்ன பைத்தியக்காரத்தனம் இது!

''மேடம்...''

சின்னக் குரலில் சித்ரா அழைக்க, துர்கா திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தார்.

அறையில் அவ்விருவரைத் தவிர வேறு யாரும் இல்லை.



கண்களை, வேதனையும், பயமும் ஆக்ரமிக்க முயல் குட்டி மாதிரி சித்ரா உட்கார்ந்திருந்ததைப் பார்த்தவ ருக்குத் தன் மேலேயே சின்னதாய்க் கோபம் உண்டாக, வேகமாய் அவளை நெருங்கினார்.

''என்னம்மா?''

''ஸா—ஸாரி...மேடம்...எங்கம்மா...''

துர்கா மண்டியிட்டு அமர்ந்து அவள் கையைப் பற்றித் தன் கைக்குள் இருத்திக் கொண்டார்.

அவளை சகஜப்படுத்தும் நோக்கில் பேச்சை மாற்றினார்.

''ஆரஞ்சு ஜூஸ் புதுசா பிழிஞ்சு எடுத்துட்டு வந் திருக்கேன்...உனக்குப் பிடிக்குமே...கொஞ்சம் குடிக் கறியா சித்ரா?''

''மேடம்...எங்கம்மா...''

''ஷ்...நா கேட்டதுக்கு நீ முதல்ல பதில் சொல்லு.. ஜூஸ் சாப்பிடறியா? ஒரு மணி நேரம் கழிச்சு சூடா தக்காளி சூப் சாப்பிடலாம்...சாப்பாடு பிடிக்காட்டி பரவாயில்ல; இப்படி க்ளுகோஸ் போட்டு ஜூஸ், சூப்னு சாப்பிட்டா தெம்பா இருக்கும் என்னம்மா?''

பதில் கூறாமல் சித்ரா அந்த அன்பினால் நெகிழ்ந்து, அவள் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு சன்ன மாக மீண்டும் விசும்ப ஆரம்பித்ததும் துர்கா அதட்ட லாகப் பேசினார்.

''நோ...சித்ரா...திரும்ப நீ அழ ஆரம்பிச்சா, நா கிளம்பி வீட்டுக்குப் போயிடப் போறேன்...நீ அழறதை, தேறமாட்டேன்னு பிடிவாதமா இடிஞ்சு போறதைப் பார்த்துகிட்டு இருக்கிறது எனக்குத் தண்டனையா இருக்கு...நா போயிடறேன்...உனக்கு எப்படி இருக்க விருப்பமோ இரு...நா தடுக்கலே...''

''மேடம் நா...''

''சரி...வலிக்குதுதான்...தாள முடியாம இருக்குதான்...ஆனாலும் என்ன பண்றது? பல்லைக் கடிச்சு, எச்சலை விழுங்கி வைராக்கியமா இருக்கறதைத் தவிர வேற வழி இல்லயேம்மா...அந்த பேச்ச விடு...ஒரு கிளாஸ் ஜூஸ் ஊத்தித் தரேன்...குடிச்சா நிச்சயமா தெம்பா இருக்கும்...தயவு பண்ணி என் பேச்ச கேளு...''

அவளிடமிருந்து விலகி, சமையல் கட்டிலிருந்து ஒரு டம்ளரை எடுத்து வந்து பிளாஸ்டிக் கூடையிலிருந்த இரண்டு பிளாஸ்குகளில் ஒன்றை எடுத்து, குளிர்ந்த சாத்துக்குடி ரசத்தை டம்ளரில் ஊற்றிக் கொடுக்க, அதை மறுக்க இயலாமல் சித்ரா வாங்கி மெதுவாக உறிஞ்சிக் குடித்தாள்.

இரண்டுவாய் உள்ளே போனதுமே வயிற்றுப் பிரட்டல் அடங்கி 'அப்பாடா' என்று இருந்தது.

முழு டம்ளர் ரசத்தையும் குடித்தவளைப் பார்த்துத் துர்கா மெலிதாய்ப் புன்னகைத்தார்.

''குட்...பேசாம கொஞ்ச நாழி படுக்கறியா?''

''ம்ஹூம்...''

''அப்ப சரி நா வந்ததும் என்கிட்ட ஏதோ சொல்ல வந்தியே...அதபத்திப் பேசுவோமா?''

சித்ரா நாவால் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள்.

''நேத்து ராத்திரி இங்க இவங்கெல்லாம் ப... பதினாறாம் நாள் காரியத்தப்பத்தி பே...பேசிட்டு...இருந்தாங்க''

''ம்''



''எ...எனக்கு... வந்து... அன்னிக்கு... அபிராமிக்கு இப்படி ஆனப்ப கோபி நம்மகிட்ட இது சம்பந்தமா பேசினது உங்களுக்கு ஞாபகம் இருக்கா மேடம்?''

''ம்''

இரண்டு நிமிஷங்கள் மௌனித்து சித்ரா தொடர்ந்து பேசட்டும் என்று காத்திருந்த துர்கா அப்படிச் சொல்லாததும், தானே கேட்டார்.

''சொல்லுமா...சொல்ல வந்தத முழுசா சொன்னாத்தானே என்னால புரிஞ்சிக்க முடியும்?''

சித்ரா இடக்கையால் நெற்றியிலிருந்து ஒருதரம் அழுந்த முகத்தை வழித்து விட்டுக் கொண்டாள்.

திமிறிய கண்ணீரை பிரயத்தனப்பட்டு அடக்கியபடி பேசினாள்.

''கோபிக்கு அந்தக் காரியங்கள்ல நம்பிக்கை இல்ல...''

''கோபிய விடு...உன் அபிப்ராயத்தைச் சொல்லு...''

''எனக்கும்...''

''உனக்கும்?''

'இதெல்லாம் அனாவசியமான தலையீடுகள்னே தோணுது...நா...நா எந்த மாற்றமும் இல்லாம இப்படியே இருக்க விரும்பறேன் மேடம்...''

''குட்... சரியான தீர்மானம்தான்... இப்ப என்ன பண்ண நினைக்கறே?''

''அப்பா, அம்மாகூட இத பேசிடறது நல்லது இல்லியா?''

''ம்ம்ம்...அவங்க இது குறிச்சு உன்னை மாதிரியே நினைக்கலைனு நிச்சயமா தெரியுமா சித்ரா?''

சித்ரா தலையை குனிந்து கொண்டாள். மீண்டும் அவள் பேசிய போது குரல் தழுதழுத்து வெளிப்பட்டது.

''என்னை மூலையில உக்கார வச்சிட்டு, தான் மட்டும் பொட்டு, பூவோட வளைய வர வேண்டிய நிர்பந்தத்தைப் பத்தி அ...அம்மாவே...''

''கடவுளே!''...நீளமாய்ப் பெருமூச்சு விட்ட துர்கா மேலே பேசாதே என்கிற தினுசில் சித்ராவை அணைத்துத் தோளில் சாய்த்துக் கொண்டார்.

''எ...எனக்கு ஒரு உதவி பண்ணுவீங்களா மேடம்?''

''சொல்லு.''

''என்னோட, கோபியோட கருத்தை அம்மா, அப்பா கிட்ட உங்களால எடுத்துச் சொல்ல முடியுமா மேடம்? ப்ளீஸ்?''

யார் என்ன திட்டினாலும் சித்ரா திரும்பதியோட இருக்க வேண்டும் என்றால் தன் தலையீடு அவசியம் என்பது தெளிவாக அன்று மதியமே உறவினர் குழுமியிருந்த கூடத்துக்கு துர்கா வந்தார்.

நாற்காலிகளில் சுந்தரம், அவர் அண்ணன், எதிரில் பெரியம்மா, அத்தை, மாலதி இன்னும் ஓரிருவர்...

துர்கா சுந்தரத்தைப் பார்த்துப் பேசினார்.

''உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்...''

''பேசுங்க...''

''தனியா இருந்தா தேவல...''

அவர் பதில் கூறுமுன் துர்காவைத் தொடர்ந்து வந்து அறை கதவுமேல் தாங்கலாகச் சாய்ந்து நின்றிருந்த சித்ரா நடுங்கும் குரலில் கூறினாள்.



''பரவாயில்லை மேடம்... எல்லாரும் தெரிஞ்சிக்க வேண்டிய விஷயம்தானே...சொல்லிடுங்க...''

இந்த பதிமூன்று நாட்களில் எதற்காகவும், யாரிடமும் வலிய போய் ஒரு வார்த்தை கூட பேசாத மகள் எழுந்து வந்து நிற்பதும், துர்கா 'உங்களோடு தனியாக பேச வேண்டும்' என்பதும் பெரிய புதிராக இருக்க சுந்தரம் குரலை உயர்த்தி அதட்டினார். 'எதைச் சொல்ல ரெண்டு பேரும் இத்தனை பீடிகை போடறீங்க?''

துர்கா கூடி இருந்தவர்களை ஒருதரம் அழுத்தமாகப் பார்த்து விட்டு நிதானத்தை இழக்காமல் பேசினார்.

''பதினாறாம் நாள் காரியம் எதுவும் செய்யத் தேவை இல்லைன்றது சித்ராவோட அபிப்ராயம்... என்னுதும் அதுதான்...''

''என்னது...என்னது?''

சொன்னதையே மறுபடியும் துர்கா கூறினதும் இப்படியொரு உறுதியான பேச்சை சத்தியமாய் அங்கு யாரும் எதிர்பார்க்காததால் ஒரு சில நிமிஷங்களுக்கு, சுந்தரம் உள்பட எல்லாருமே ஸ்தம்பித்துதான் போனார்கள்.

# 10

''என்ன? என்ன?''

''பதினாறாம் நாள் காரியங்கள் வேணாமா?''

''இவங்க யாரு இத நம்மகிட்ட சொல்றதுக்கு?''

''போனாப் போவுதுனு வாய மூடிக்கிட்டு இருந்தா, ரொம்பத்தான் ஆட்டம் போடறாங்களே!''

மாலதி, பெரியம்மா இதர பெண்களிடமிருந்து மொண மொணவென்று எழுந்த அதிர்ச்சி கலந்த கேள்விகள் வலு அடைந்த நிமிஷத்தில், சுந்தரத்தின் அண்ணன் சாம்பசிவம் தன்னை சுதாரித்துக் கொண்டு, பெண்கள் பக்கம் திரும்பி ஷ்...ஷ்...என்று அவர்களை அடக்கினார்.

முகம் சிவந்து போய் கோபத்துடன் கத்த வாயைத் திறந்த தம்பியின் முன் கையை நீட்டி "இரு...இரு...அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டிடாதே. அப்புறம் அள்ள முடியாது...நான் ஒருத்தன் பெரியவனா நிக்கறேன் இல்லை? நான் பேசிக்கிறேன். நீயும், மத்தவங்களும் கம்முனு இருங்க" என்று அடிக்குரலில் அதட்டினார்.

"அப்ப காரியங்கள் எதுவும் செய்ய வேணாம்னு நீங்க அபிப்ராயப்படறீங்க?"

"நான் மட்டுமில்ல...சித்ராவும்..."

"இவளை விடுங்க குழந்தை...பெரியவங்க நாம் பேசிக் கறச்சே குறுக்க அவ எதுக்கு? நல்லது கெட்டது நாம ஒண்ணு கூடி தீர்மானம் பண்ணி, சொல்ற விதத்துல சொன்னா சரினு ஒத்துக்கப் போறா...என்னம்மா?"

சித்ரா பக்கம் பார்வையை வீசி "என்னம்மா?" என்று அவளிடமே வினவ, பெரியப்பாவிடமிருந்து இப்படியொரு சாந்தமான பேச்சையும், தன்னை மதித்து வினவும் கேள்வியையும் எதிர்பார்க்காத சித்ரா என்ன பதில் கூறுவது என்று புரியாமல் தலையைக் குனிந்து கொண்டாள்.

அண்ணனின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு வாயை மூடிக் கொண்டிருந்த சுந்தரம் இப்போது வெடித்தார்.

"பெரியவங்க, பெருந்தலைனு எந்த மட்டு மரியாதையும் இல்லாம இவளும் இந்த அம்மாவும் பேசறாங்க... எங்களுக்கு புத்தி சொல்ல நீங்க யாரு? எல்லாம் எங்க



களுக்குத் 'தெரியும்'னு கண்டிக்காம, நீங்களும் அவங்களுக்குச் சரியா..."

அவரை முடிக்கவிடாமல் சாம்பசிவம் குறுக்கிட்டார்.

"எதை எப்ப எப்படி பேசணும்னு எனக்குத் தெரியும சுந்தரம்; நீ சித்த கம்மா இருக்கியா?" பேசியவர் சித்ராவை ஏறிட்டுத் தொடர்ந்தார்.

"சரிம்மா...சொல்லிட்ட இல்லை...நாங்க பேசி ஒரு முடிவுக்கு வர்றோம்...நீ மனச அலட்ட விடாம உள்ளே போய்ப் படு... ஏதாச்சும் சாப்பிட்டியா? அழுதழுது கண்ணெல்லாம் வீங்கிக் கிடக்கு பாரு... டாக்டர் பாலாஜி படபடப்பு குறைக்க ஒரு மாத்திரை கொடுத்துப் போட்டுக்கச் சொன்னாரே போட்டுகிட்டியா இல்லியா? மாலதி, சூடா ஒரு லோட்டா காபி கலந்து எடுத்துகிட்டு வா...காபிய குடிச்சிட்டு மாத்திரைய போட்டுகிட்டு சித்ரா அறையில தூங்கட்டும்...தூங்கி எழுந்தா மனசு கொஞ்சமாவது அமைதிப்பட்டுப்போகும்."

பெரியவராய் இலட்சணமாய் நாலு வார்த்தை பேசி, எல்லோரையும் வைக்கிற இடத்தில் வைப்பார் என்று எதிர் பார்த்ததைச் செய்யாமல் 'காபி குடி மாத்திரை போட்டுக் கொள்' என்று சித்ராவுக்கு உபசாரம் பண்ணுவது புதிராக இருந்தாலும் பெரியவர் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு மாலதி உள்ளே எழுந்து போனாள்.

தன் சார்பாக மேடம் கூறப் போவதைக் கேட்டதும் எரிமலை வெடிக்கும் பூகம்பம் புறப்படும் என்று பயந்தது நடக்காததோடு பெரியப்பா கரிசனம் நிறைந்து பேசவும் சேர்ந்துகொள்ள, நடந்தவற்றை நம்ப முடியாமல் சில கணங்களுக்கு சித்ரா மலங்க மலங்க விழித்தாள். பின், தன் நிலையைப் புரிந்து கொள்வதற்கு நன்றி என்ற தொனியில் தாங்க்ஸ் என்று பொதுவாக முணுமுணுத்து விட்டு திரும்பி மெதுவாக நடந்து தன் அறைக்குச்

சென்று படிக்கவும் இப்போது தான் என்ன செய்ய வேண்டும் என்கிற யோசனையுடன் துர்கா நிதானித்தார்.

சொன்ன விஷயம் பெரிசாக இருந்தாலும் அதைச் சாதாரணமாக சாம்பசிவம் எடுத்துக் கொண்டதில் ஏதோ போலித்தனம் இருக்கிற மாதிரியே அவர் மனசுக்குப் பட்டது. அதுவும் அவரை இலட்சியம் பண்ணாமல் ஒதுக்கிவிட்டு சித்ராவிடம் அதீத பரிவுடன் சாம்பசிவம் பேசியவிதம் எதையோ கணக்குப் போட்டு சாதிக்கத் திட்டமிட்டிருப்பதைத் துல்லியமாகப் புரியவைக்க ஒரு நிமிஷம் அப்படியே நின்றுவிட்டு சித்ராவின் பின்னே உள் அறைக்குச் சென்று அவள் அருகில் அமர்ந்தார்

கண்ணிலிருந்து கோடு கிழித்துக் கொண்டு நீர் இறங்கப் படுத்திருந்தவளிடம் எதுவும் கேட்க மனசில்லாமல் மௌனமாய் உட்கார்ந்திருக்க மாலதி காபியுடன் உள்ளே வந்தாள். சித்ராவிடம் அதையும், மாத்திரையையும் தந்து அவள் குடித்து முடிக்கும் வரை காத்திருந்து, காலி டம்ளருடன் வெளியில் போனாள்.

துர்கா கூடையிலிருந்த புஸ்தகத்தை எடுத்துப் பிரித்து வைத்துக் கொண்டார்.

வெளியே கிசுகிசுப்பாய் குரல்கள்.

ஆத்திரம், வேகம் நிறைந்த குரல்கள்...

அரைமணி சென்றிருக்கும்.

மாலதி அறைக்குள் வந்தாள்.

உறங்கும் மகளிடம் குனிந்து ''சித்ரா...சித்ரா'' என்று மெதுவாய்க் குரல் கொடுத்துப் பார்த்து, அவள் நன்றாய்த் தூங்குகிறாள் என்பதை உறுதி செய்து கொண்டபின் ''உங்களைப் பெரியவர் கூப்பிடறார்'' என்றாள் துர்காவிடம்...



பெரியவர் கூடத்தில் இல்லை.

''மொட்டை மாடில இருக்காங்க... அங்க போங்க''

சித்ராவின் உறக்கத்தை எந்தச் சத்தமும் கலைத்து விடாமல் இருக்கவேண்டி கதவைச் சாத்திவிட்டு பின்னோடு வந்த மாலதி கூற, சென்றார்.

மாடியைவிட உயரமாய் வளர்ந்து குடையாய்க் கவிழ்ந்திருந்த மாமரத்து நிழலடியில் வெயிலுக்குப் பாதுகாப்பாய் சுந்தரமும் சாம்பசிவமும் நின்றிருந்தனர்.

சற்று முன் காணப்பட்ட பரிவு சாம்பசிவத்தின் முகத்திலிருந்து சுத்தமாய் அகன்று ஒருவித வெறித்தனமான கோபம் அவர் கண்களில் வெளிச்சம் போடுவதைத் துர்காவால் புரிந்து கொள்ள முடிந்தது.

''இது உங்களுக்கே நல்லாயிருக்கா!''

''எது?''

''ஒண்ணுமே தெரியாத சின்னப் பொண்ண எதுக்காக இப்படி கிளப்பி விடறீங்க? ம்?''

''.........''

சாம்பசிவம் நேரடியாய் விஷயத்துக்கு வந்தார்.

''கல்யாணமாறத்துக்கு முன்னால இருந்தே நீங்க செஞ்சிட்டு வந்த ஒவ்வொண்ணையும் நாங்க கவனிச்சிட்டுத்தான் வர்றோம். படிக்க வந்த குழந்தைய, தம்பியோட பழகவிட்டு, 'அவனைத்தான் கட்டிப்பேன்'னு சொல்ல வச்சீங்க...இல்லாட்டி பத்து வயசு வித்தியாசத்துல ரெண்டாம் தாரம் மாதிரி ஒருத்தனைக் கட்டிக்க எந்தப் பொண் சம்மதிப்பா? நல்லா இருந்தவனை பாடம் சொல்லித் தரேன்னு சொல்லி, பாடத்தை தவிர பாக்கி

வேண்டாததை எல்லாம் கத்துக் கொடுத்தீங்க... இன்னிக்கு பெரியவங்க, பெத்தவங்கனு எதையும் பாக்காம தலைக்குத்தான் பேசத் தெரியும்னு அவ பேசறா?... அவளா பேசறா? தப்பு தப்பு...நீங்க அவள அப்படி பேச வைக்கறீங்க...எல்லாம் எங்க போறாத காலம் யாரை நொந்துகிட்டு ...சரி...போனது போகட்டும் இனியாச்சும் நிம்மதியா இருக்கலாம்னு பார்த்தா கூடவே இருந்துகிட்டு குழிய பறிக்கிறீங்க...பிடிச்சதோ, பிடிக்கலையோ மாப்பிள்ளை ஆயிட்டவருக்கு—நீங்க அக்கா அதனால மரியாதை குறைச்சலா எதுவும் சொல்லிட வேணாம்னு நாங்க கட்டுப்பாடா இருக்கப் பார்க்கறோம்...ஆனா, நீங்க ரொம்பத்தான் எங்க பொறுமைய சோதிக்கறீங்க தம்பி போயிட்டாரா...சரி இனி இது இவங்க குடும்ப விவகாரம், நாமளா ஒதுங்கிப்பம்னு நின்னா அது மரியாதை அத விட்டுட்டு எல்லாத்துலேயும் தலையிட்டுட்டு குடும்பத்துக்குள்ள விரிசலை உண்டாக்கிட்டு...த்... மானமுள்ளவங்க பண்ற காரியமா இது படிச்சவங்க செய்யற காரியமா இது!''

அடிக் குரலில் ஆரம்பித்து, போகப் போக உணர்ச்சி வசப்பட்டு விட்டதில் ஆவேசமாய்க் கத்த முற்பட்ட சாம்பசிவம் சடக்கென்று நினைப்பு வந்தவராய், ஒரு தரம் சாத்தி இருந்த உள் அறைக் கதவைப் பார்த்து விட்டுக் குரலைத் தணித்தார்.

''நாங்க பதினாறாம் நாள் காரியம் பண்ணறோம், பண்ணாம விடறோம்...இதப்பத்திப் பேச நீங்க யாரு? ம்? தெரியாமத்தான் கேக்கறேன்...எங்க குடும்ப பழக்க வழக்கத்தைப் பத்தி உங்களுக்கு என்ன தெரியும், முந்திரிக் கொட்டையாட்டம் வந்திட்டீங்க?...ம்? அப்படி அத்தனை பேர் நடுவுல நீங்க பேசினப்பவே பண்பாடு இல்லாம என்ன பேச்சு இது'னு கேட்டிருப்பேன். ஆனா, ஒத்தர உங்க பேர்ல வச்சிருக்கிற மதிப்பை நினைச்சும், கூட வெளி மனுஷங்க இருந்தத கொண்டும் அடக்கிக்கிட்டேன்...இல்லேன்னா கதை வேற மாதிரி ஆயிருக்கும் ஆமா.''



நடுத்தெருவில் நின்று பற்கள் கோரமாய் வெளிப்பட முகத்தைக் கோணி உறுமி உருண்டு, புரண்டு கதறும் சண்டைக்கார நாய் போல, வெறித்தனமான கோபத்துடன் மூச்சுவிடவோ அல்லது துர்கா பதில் கூறவோ அவகாசம் தராமல் கண்கள் சிவக்க, கன்னத்துத் தசைகள் துடிக்க, கழுத்து நரம்பு புடைக்க சாம்பசிவம் நீளமாய் பேசினதும் துர்கா அரண்டுதான் போனார். என்ன மூர்க்கத்தனமான பாய்ச்சல் இது! என்ன பேசுகிறோம் என்று நிதானிக்காமல் என்ன குதறல் இது!

இப்படிகூட மனுஷ ஸ்வபாவம் இருக்கக்கூடுமா என்ற மிரட்சியில் துர்காவின் நாக்கு உலர்ந்து போயிற்று; உள்ளங்கையில் வியர்வை அரும்பியது; நிற்க முடியாமல் கால்கள் வெல வெலத்துப்போயின...

''நா...நா...வந்து...'' என்று தடுமாறியவரின் நாக்கு குழகுழுத்துச் சிக்கியது. திடுமென நெஞ்சில் உண்டான வலி தாளாமல் கண்களில் நீர்த் துளிகள் ஜனித்தன...

சாம்பசிவம் ஆத்திரத்தோடு 'ஹும்' என்றார்.

செய்யறதை செஞ்சிட்டு இப்ப நீங்க ஏன் அழறீங்க? உண்மையைச் சொன்னா வலிக்கத்தான் செய்யும்... இப்படி ஏடாகூடமா எதுவும் சொல்ல வேணாம், தானாகவே புரிஞ்சு விலகிடுவீங்கனு எதிர்பார்த்தோம்... எங்க?...நல்ல மாட்டுக்கு ஒரு சூடுனு சொல்வாங்க...அது புரிஞ்சு செயல்பட்டா சரி...''

இனியும் சும்மா இருப்பது கூடாது என்பது புரிய, துர்கா எச்சிலைக் கூட்டி விழுங்கித் தன்னை ஆஸ்வாசப் படுத்திக் கொண்டார். யோசித்தார்

இவர்கள் ஸ்தானத்தில் இல்லை; ஏற்கனவே தங்க ளுக்குள் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டு எதையும் காதில் வாங்க மறுப்பவர்களிடம் நிலைமையை இன் னொரு கோணத்திலிருந்து விளக்கலாம்தான். அப்படி இல்லை என்று மறுப்பதும் விழலுக்கு இறைத்த நீராகத் தான் ஆகும்...அதனால்...

முழுசாய் ஒரு நிமிஷம் செல்வதற்குள் அதிர்ந்து திகைத்துத் தெளிந்துவிட்ட சூர்கா எதிரில் நின்ற இரு வரையும் கண் சிமிட்டாமல் பார்த்தார். சின்ன குரலில் வினவினார்.

''இப்ப நான் என்ன செய்யணும்?''

சாம்பசிவத்தின் இறுக்கம் சட்டென்று குறைந்தது. 'அடிக்கிற இடத்தில் வலிக்க அடித்தால் தானாகப் பணிந்து விடுவான் என்று நான் சொன்னது பலித்து விட்டது பார்த்தாயா?' என்கிற கொக்கரிப்புடன் தம்பி யைப் பார்த்துவிட்டுத் தொடர்ந்து பேசிய போது குரல் தன் கடுமையை இழந்து மென்மையாக ஒலித்தது.

''எனக்குத் தெரியும்...நீங்க படிச்சவங்க, எடுத்துச் சொன்னா தப்பை உணருவீங்கனு... சொல்றதுக்காக மன்னிக்கணும்...ஆனா, வேற வழி இல்ல...கொஞ்ச நாளைக்கு நீங்க இந்த வீட்டுப்பக்கம் வராம இருந்தீங் கன்னா, அதுவே எங்களுக்குப் பெரிய உதவியா இருக்கும்... சித்ரா சின்னக் குழந்தை... ரெண்டுங்கெட்டான் தனமா இன்னிக்குப்பேசி நடந்துக்கிட்டாலும், நாங்க சொல்றது செய்யறது எல்லாம் அவ நன்மைக்குதான்னு நாளைக்கு கண்டிப்பா புரிஞ்சுக்குவா...தண்ணி அடிச்சி தண்ணி விலகிடாது...எங்கபேர்ல அவளுக்குக் கோபம் வந்தாலும், பக்குவமா பேசி நாங்க அவள சமாதானம் செஞ்சிடு வோம்...நீங்க கூடக்கூட நின்னாதான் அவ எங்கள மதிக்க மாட்டேன்றா...இவ ஒருத்தி மட்டும்தான் எங்



களுக்குப் பொண் இல்ல; எனக்கு ஒருத்தி இருக்கறா, சுந்தரத்துக்கே அடுத்து இரண்டு பேர் இருக்காங்க... எல்லாரையும் நல்லபடியா புகுந்த வீடுகளுக்கு அனுப்பணும்னு, சம்பிரதாயத்த நாங்க கடைப்பிடிச்சே ஆகணும்...பிடிக்குதா, பிடிக்கலையா, தேவையா, இல்லை யாங்கற கேள்விகளுக்கு இங்க இடமே இல்லை...நீங்க படிச்சவங்க...ஒரு தரம் சொன்னா புரிஞ்சுப்பீங்க...''

சூர்கா புரிந்து கொண்டார். இத்தனை காட்டமாக, உறுதியாக சாம்பசிவம் பேசிய பிறகு தான் தொடர்ந்து அந்த வீட்டில் ஒரு நிமிஷம் நின்றாலும் அது முறையான செயல் அல்ல என்பது விளங்க, அறைக்குள் சென்று சித்ராவிடம் சொல்லிவிட்டுப் பைகளுடன் புறப்படும் எண்ணத்தில் இரண்டடி எடுத்து வைத்தவரை, சாம்ப சிவம் ''நில்லுங்க'' என்று தடுத்தார். யோசித்துப் பேசினார்.

''நாங்க சொல்லி நீங்க போறதா சித்ராகிட்ட சொல்றதவிட, வேலை இருக்கிறதா சொல்லிவிட்டுக் கிளம்பறதுதான் எல்லா விதத்துலயும் பொருத்தமா இருக்கும். அதனால...ம்ஹூம்...வேணாம்...அது கூட வேணாம் தூங்கிட்டு இருக்கிறவளை நீங்க ஏன் தொந்தரவு பண்ணணும்? இருங்க...மாலதி உங்க பைகளைக் கொண்டு வரச் சொல்றேன்...நீங்க இப்படியே புறப் பட்டுப் போங்க...சித்ராகிட்ட சொல்ற விதத்துல நாங்க சொல்லிக்கறோம்.

எங்க குடும்பம் நல்லா இருக்கணும்ன்ற ஆதங்கத்துல தான் நா இப்படி எல்லாம் பேசறேன், செய்யறேன்னு நீங்க புரிஞ்சிப்பீங்க... படிச்சவங்க இல்லையா? ஒரு மாசம் கழிச்சி சித்ராவ பார்த்தாகூட அவகூட ஏத சொல்லணும், ஏத சொல்ல வேணாம்னு உங்களுக்குத் தெரியாதா? நீங்க படிச்சவங்க, பண்பு தெரிஞ்சவங்க...எங்கள மாதிரி நாட்டுப்புறமா என்ன?''

வெகு சாமர்த்தியமாக 'குறைந்த பட்சம் ஒரு மாசமாவது சித்ராவைச் சந்திக்காதே சந்தித்தாலும் நடந்தவற்றைக் கூறாதே என்று மிரட்டுவதற்குப் பதில் கூறாமல் துர்கா சுவரில் சாய்ந்து ஆகாயத்தை வெறித்தபடி நின்றார்.

நீங்கள் சொல்வது எதிலும் எனக்கு நம்பிக்கையும் இல்லை. உடன்பாடும் இல்லை. சித்ராவின் மனப் அறிந்துதான் நான் செயல்படுகிறேன் 'நீங்கள் என் விஷயத்தில் தலையிட வேண்டாம் மேடம்' என்று சித்ராவே கேட்டாலொழிய விலகி நிற்கும் உத்தேசம் எனக்கு இல்லை. உங்களால் ஆனதைச் செய்து கொள்ளுங்கள் என்று வாயில் தாண்டவமாடிய வார்த்தைகளைச் சொல்லிவிடலாமா என்று யோசித்தார்.

கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டார்

ம் ஹூம் கூடாது.

இப்படி நான் பேசி, இவர்கள் எரிந்து குதித்து அதனால் உண்டாகப்போகும் கசப்பால் சித்ராதான் அதிகம் பாதிக்கப்படுவாள். நிச்சயம் கோபியை இழந்த வலியோடு இப்போது சொந்த மனிதர்களையே பகைத்துக் கொள்ளும் வேதனை வேறு வேண்டாம். ஒரு வாரம் போல விலகி நின்று, இவர்கள் சம்பிரதாயத்தை விடாமல் ஏதாவது செய்ய அனுமதித்து, பின் சித்ராவை உடனே என்னோடு அழைத்துச் சென்று அவள் இஷ்டப்படி வாழ உதவ முடியாதா என்ன? ஏன் முடியாது...? முடியும்...கண்டிப்பாய் முடியும்...அப்படி செயல்படுவது ஒன்றுதான் இவர்கள் கோபத்தைக் குறைத்து சித்ரா விரும்புகிற வகையில் வாழ வழி பண்ணுமோ?

மேலே யோசித்துக்கொண்டு நிற்க விடாமல் அவரது உடைகளை மாலதி கொண்டு வந்து நீட்ட, துர்கா மெதுவாகக் கை கூப்பி வணங்கிவிட்டு உறங்கிக் கொண்டிருந்த



காரணத்தால் சித்ராவிடம் விடை கூடப் பெறாமல் கிளம்பிப் போனார்.

மாத்திரை தந்த ஆழ்ந்த உறக்கத்திலிருந்து அன்றிரவு சித்ரா விடுபட்டபோது இரவு மணி எட்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

அவள் விழித்துக் கொள்வதற்காகவே காத்திருந்த நிலையில் மாலதியும், பெரியம்மாவும் உடனே அருகில் வந்து ''எப்படிம்மா இருக்கே? சாப்பிடறியா? முகம் கழுவிட்டுவா...சூடா ரசம் சாதமா சாப்பிடலாம்'' என்று இதமாக உபசரிக்க, சித்ரா எழுந்து போய் முகம் கழுவிக் கொண்டாள். சமயல் கட்டுக்குள் சென்று அமர்ந்தாள்.

''மேடம் எங்கே? வீட்டுக்குப் போயிட்டாரா?''

சாதத் தட்டுடன் திரும்பின மாலதி தயக்கம் இல்லாமல் பதில் கூறினாள்.

''அவங்களா? நீ தூங்கின கையோட 'காலேஜ் வேலை இருக்கு...நா போறேன் ரெண்டு மூணு நாள் வரமாட்டேன்...சித்ராகிட்ட சொல்லிட்டுக் கிளம்பறேன்'னு புறப்பட்டாங்க...நா இருக்க...சித்ரா அசந்து இப்பத்தான் தூங்கறா...விழிச்சிட்டப்புறம் நீங்களே சொல்லிட்டுப் போங்க'னு சொன்னேன் 'இல்ல நாழியாயிட்டது...நீங்களே சொல்லிடுங்க'னு சொல்லி அவசரமா புறப்பட்டுப் போயிட்டாங்கம்மா...''

தட்டு முன் குனிந்தபடி அமர்ந்திருந்த சித்ரா தலையை நிமிர்த்தினாள்.

மேடம் இரண்டு, மூன்றுநாள் வரமாட்டாரா? அதை நின்று சொல்லி விட்டுப் போக அவகாசம் இல்லாமல் போயிட்டாரா? அம்மா, நான் மாத்திரை போட்டுக்

கொண்டே உறங்குவதைச் சொல்லியுமா? அத்தனை அவசரம் என்றால் நான் உறங்கத் துவங்கும் முன்னரே கூறி இருக்கலாமே!

சட்டென்று சித்ராவினுள் ஒரு ஏமாற்றம் பரவியது. கொஞ்சம் அடங்கி இருந்த வேதனை மீண்டும் பிராண்டு விறாண்டி இருதயத்தில் வலித்தது.

“எனக்குப் பசிக்கலை” என்று கூறினவள் எழுந்து தன் இடத்திற்குச் சென்று படுத்தாள். “என்னம்மா இது! சாப்பிட உட்கார்ந்தவ எழுந்திட்டே...சூடா பாலாவது குடி” என்று அம்மா நீட்டின பாலைக் குடித்தாள். அடங்க மாட்டேன். என்று பொருமிக்கொண்டு வந்த கண்ணீரைத் துடைக்காமல் சுவரைப் பார்க்கத் திரும்பிப் படுத்தாள்.

மறுநாள் காலை அவள் குளித்துத் தயாராகித் தன் அறையில் முழங்கால்களைக் கட்டியவாறு உட்கார்ந்திருந்த நிமிஷத்தில் சுந்தரம், சாம்பசிவம், பெரியம்மா அத்தை என்று எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து அவள் அருகில் வந்து அமர்ந்தனர்.

போனவனைப் பற்றியும், இவள் தலை எழுத்தைப் பற்றியும் சில நிமிஷங்களுக்கு பெரியம்மா புலம்பி, மூக்கைச் சிந்திய பின், “விடு...விடு...நடந்ததைப்பத்திப் பேசி மாஞ்சு போகாம நடக்கறதைப் பத்திப் பேசு... அதான் விவேகம்” என்ற சாம்பசிவம் தம்பியை ஏறிட்டு “நாளன்னிக்கு பதினாலாம் நாள்...ஏற்பாடுகளைப் பண்ணிடலாமா சுந்தரம்?” என, சித்ரா விருட்டென்று விழிகளை உயர்த்தினாள்.

“என்ன ஏற்பாடுங்க பெரியப்பா?”

சாம்பசிவம் அவளை ஆதரவாய் பார்த்தார்.

“இன்னின்னதைச் செய்யணும்னு பெரியவங்க வச்சிட்டுப் போயிருக்குறதை ஒழுங்கா செஞ்சா தானே



வாழையடி வாழையா குடும்பம் நல்லா இருக்கும் சித்ரா உன் மனசு நோக எதுவும் பண்ணமாட்டோம்...எங்களை நம்பு...இருந்தாலும் சம்பிரதாயம்னு ஒண்ணு இருக்கு இல்ல நாளைக்கு சுஜா இந்துவுக்கு நல்ல இடத்துல மாப்பிள்ளை வாய்க்க வேணாமா? யோசனை பண்ணிப் பாரு சித்ரா...நீ படிச்ச பொண்...நல்லது கெட்டது புரிஞ்சுப்ப”

கால் மணி போல கூடத்தில் அமர்ந்து ஒருவர் பின் ஒருவராக உபதேசம் பண்ணி, கடைசியில் போனால் போகிறது என்று நல்ல வார்த்தையாய்க் கூறுகிறோம்—கேட்கா விட்டால் கட்டாயப்படுத்துவதைத் தவிர வேறு வழி இல்லை என்கிற அர்த்தம் தொனிக்கப் பேசிவிட்டு எழுந்துபோக, ரொம்ப நேரத்திற்கு சித்ரா ஆத்திரத்தோடு, அமர்ந்திருந்தாள்.

வேண்டாம் என்று சொல்லும் இவர்கள் காரியங்களை நடத்துவதில் குறியாக இருக்கிறார்கள்.

கூட நின்று எதிர்ப்புகளைப் சமாளிப்பார் என்று எதிர்பார்த்த மேடம் 'வேலை இருக்கிறது' என்று விலகி விட்டார்...

அப்புறம்?

யாருமே புரிந்துகொள்ள, உதவ மறுக்கும் இந்த நிலையில் இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

மூன்று மணி சுமாருக்கு, மற்றவர்களின் புருவ உயர்த்தலைப் பொருட்படுத்தாமல் சித்ரா ஏர்பேகில் தன் துணிகளை எடுத்து வைத்துக் கொண்டாள். கூடத்தில் அமர்ந்திருந்த அப்பா, பெரியப்பா முன் சென்று நின்றாள். பார்வையைப் பூமியில் படர விட்டவாறு “நான் என் வீட்டுக்குப் போறேன்” என்றாள் உறுதியாய்-

# 11

"அந்த வீட்டுக்கு இப்ப எதுக்காகப் போகணும்னு சொல்ற சித்ரா?"

"......"

"துணிமணி எடுத்திட்டு வரவா?"

"......"

"ஏதாவது முக்கியமான சாமான் தேவைப்படுதா?"

"......"

இப்போது மாலதி பொறுமை இழந்தாள்.

"அப்பா கேக்கறது காதுல விழலியா, சித்ரா?"

சித்ரா விழிகளை மட்டும் உயர்த்தி அம்மாவைப் பார்த்தாள்.

"எனக்கு அங்க போகணும்."

"அதான் எதுக்குனு கேக்கறோம் இல்ல? ஏதாவது வேணும்னா என்கிட்ட சொன்னா நா போய் எடுத்திட்டு வரமாட்டேனா?"

"......"

"சொல்லு...என்ன எடுத்திட்டு வரணும்?"

"ஒண்ணும் எடுத்திட்டு வர வேணாம்..."

"அப்புறம்?"

குரலை உயர்த்தி ஆயாசத்துடன் சுந்தரம் வினவ, சித்ரா முதலில் கூறினதையே மீண்டும் சொன்னாள்.

"எனக்கு அங்க போகணும்..."



"அட, கிளிப்பிள்ளையாட்டம் சொன்னதையே சொல்லிக்கிட்டிருந்தா எப்படி சித்ரா? காரணத்தை விளக்கமாக சொன்னாதானே புரியும்..."

"எந்தக் காரணமும் இல்ல... இருந்தாதானே குறிப்பிட்டுச் சொல்ல முடியும்? எனக்கு என் வீட்டுக்குப் போகணும்..."

"என் வீட்டுக்கா? அப்படீன்னா இது உன் வீடு இல்லியா?"

எரிச்சலுடன் சுந்தரம் அதட்ட, இது நாழிகை சாய்வு நாற்காலியில் கண்களை மூடி, 'இது உங்கள் பாடு' என்பது போலப் படுத்துக்கிடந்த சாம்பசிவம் விழித்துக் கொண்டு அவசரமாய் "இரு...இரு..." என்று குறுக்கிட்டார்.

"இப்ப என்னத்துக்காக இந்த அதட்டல் அதட்டறே நீ? வெளில சொல்ல முடியாத ஏதோ காரணத்துக்காக சித்ரா அந்த வீட்டுக்குப் போயிட்டு வரணும்னு சொல்றா ...அல்லோ தானே? போயிட்டு வந்தா போகுது எப்படியிருந்தாலும் நாளைக்குள்ளார ஒருதரம் வேண்டப்பட்டவங்க வீடுகளுக்கு கூட்டிட்டுப் போய் வரது நம்ப சம்பிரதாயம்தானே. ஒரு நடை இப்பப் போயிட்டு வந்திட்டா பத்து நாள் கழிச்சு அந்த வீட்ட ஒழிச்சச் சாமான்களை மூட்டைகட்டி இங்க எடுத்திட்டு வர சித்ரா போக தோதா இருக்கும் இல்லே? என்ன நா சொல்றது?"

அவர் அருகில் அமர்ந்திருந்த அத்தை பலமாகத் தலை ஆட்டினார்.

"அதுவும் சரிதான்... மூளியாக்கிட்டப்புறம் ஒரு வருஷத்துக்கு புது எடம் எங்கயும் போகக்கூடாதுன்றதால உள்ளூர்ல இருக்கிற முக்கியமான உறவுக்காரங்க வீடுகளுக்கு பதினாறு நாளுக்குள்ள அழைச்சிட்டுப் போய் வர்றது பழக்கம்தான். உள்ளூர்ல நமக்கு நெருங்கின

சொந்தபந்தம்னு யாரும் இல்ல... நாங்களெல்லாம் வெளியூர்ல இருக்கோம். இந்த ஒரு வருஷத்துக்குள்ள எங்க வீடுகளுக்கு கட்டாயம் வர வேண்டிய முறை இல்ல... அப்படியே ஏதாச்சும் கல்யாணம், கார்த்தின்னு வந்தாலும் நீயும், மாலதியும்தான் வரப் போறீங்க...அதனால எங்க வீடுகளுக்கு பிற்பாடு நிதானமா ஒரு வருஷம் கழிச்சு வந்துக்கட்டும்...என்ன அண்ணி, நா சொல்றது சரிதானே?''

''ஆமாமா...மனசு இருக்குற நிலைல இப்ப சித்ராவை வெளியூருக்கு இழுத்தடிக்கவும் வேணாம், அதுக்கு அவகாசமும் இல்ல... அவ வீட்டுக்கும், அந்த ஜர்கா வீட்டுக்கும் அவசியம்னா போயிட்டு வரட்டும்; தப்பில்ல...நீங்க சொன்ன மாதிரி பதினாறு நாளுக்குள்ளார போயிட்டு வந்திடணும்னு சம்பிரதாயமே இருக்குதே...''

அத்தை 'ப்ச்' என்று குள் கொட்டினாள். சுவரின் சாய்ந்தபடி நின்றிருந்த சித்ராவை அழுத்தமாக ஒருதரம் பார்த்துவிட்டு அண்ணி பக்கம் திரும்பி பேசினான்.

''ஏதோ பேச்சுக்குச் சொன்னேனே ஒழிய சம்பிரதாயம், பழக்கவழக்கம்னு அடிச்சுப் பேச நமக்கெல்லாம் வாய் ஏது அண்ணி? வம்சாவளி நல்லா இருக்கணும்ன்ற நினைப்புல பெரியவங்க பலான பழக்க வழக்கங்கள செஞ்சிட்டு வந்ததை நாகரிகங்கற பேர்ல பட்டணத்துக்கு வந்திட்டவங்க காத்துலவிடத் தொடங்கிப்புறம் சம்பிரதாயமாவது ஒண்ணாவது...ஆனா, சும்மா சொல்லக் கூடாது. நம்ம ஊர் பக்கங்கள்ல இன்னிக்கும் எதையும் விடாமத்தான் நாம செஞ்சிட்டு வரோம்...ஏன் போன மாசம் கமலாம்மா வினா போனப்பகூட, பங்காளி நானேனு விலகி நிக்காம, பதினாறு நாளுக்குள்ளார வீடு, வீடா நமக்கு வேண்டப்பட்டவங்க அத்தனை வீடுங்களுக்கும் அழைச்சிட்டுப் போயி, விருந்து வச்சோமே... அப்புறம் சௌபாக்கியம் போய்விட்டதென்ற வயித்



தெரிச்சல் இருக்கற 'கரிகாலியோட' கொதிப்பு அடுத்தவங்கள தாக்கிடக் கூடாதுன்ற சம்பிரதாயப்படி நெல் கதிரைக் கொளுத்திப் போட்டு அதுமேல நடக்கச் சொல்லி, உலக்கையைத் தாண்ட வச்சு...''

அத்தை நீளமாய்ப் பேசப் பேச, சித்ராவின் உடம்பு திடுதிடுவென்று உதறிப் போட ஆரம்பித்தது.

சம்பிரதாயம்...

பழக்கவழக்கங்கள்...

இழக்கக் கூடாத உறவை இழந்து பரிதவிக்கும் பெண்ணின் வேதனை புரியாமல் அவளுக்குக் கரிகாலி, வயிற்றெரிச்சல்காரி என்று பட்டம் கட்டி, வலியை அதிகமாக்கும் இந்த சம்பிரதாயங்களை ஏற்படுத்தியது யார்?

இதமான வார்த்தைகளுக்காகவும் அரவணைப்புக்காகவும் ஏங்குபவளுக்கு அவற்றைக் கொடுக்காமல், பதினாறாம் நாளுக்குள் வீடுவீடாய் அழைத்துப் போவார்களாம், விருந்து வைப்பார்களாம்...இதுதான் பெரியவர்கள் அடுத்த வம்சம் நன்றாக இருக்க வேண்டும் என்று உண்டாக்கின பழக்க வழக்கங்களாம்!

ஐயோ...என்ன கொடுமை இது!

யாருக்கு வேண்டும் இந்த மனுஷத்தனம் இல்லாத சம்பிரதாயங்களும், பழக்க—வழக்கங்களும்...

இவர்களுக்கு வேண்டுமென்றால் அத்தனையும் விட்டு விடாமல் வைத்துக் கொள்ளட்டும்...ஆனால்... எனக்கு வேண்டாம்...

கோபி அன்று சொன்னது போல மனுஷியை மனுஷியாக மதித்து அவள் வேதனையை உணர மறுக்கிறவர்கள் பேச்சை நான் மட்டும் ஏன் கேட்க வேண்டும்?

கண்முன் அடிபட்ட ஒருத்தி நிற்கும் நினைப்பு துளி இல்லாமல் தங்களை கோணம் ஒன்றுதான் முக்கியம் என்று பேசும் இவர்களுக்குச் சரியாக தான் பதில் கூறிக்கொண்டு நிற்பது கூட அநாவசியம்தானோ?

பரிதவிப்பும் ஆத்திரமும் உள்ளுக்குள் பரவிக் கண்களிலிருந்து நீரை சரசரவென்று வழியச் செய்ய சித்ரா சட்டென்று இரு கைகளாலும் காதுகளைப் பொத்திக் கொண்டு ''இந்தப் பேச்சை நிறுத்தப் போறீங்களா இல்லியா?'' என்று பெரிசாய் அலறினதும், அத்தையும், அண்ணியும் வாயை மூடிக் கொண்டு 'என்ன ஆச்சு உனக்கு?' என்ற ரீதியில் விழித்துப் பார்த்தனர்.

வாய்விட்டு அரை நிமிஷம் அழுத சித்ரா புடவைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துத் தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொள்ள முனைந்தாள்.

நீர் நிறைந்த கண்களுடன் எல்லோரையும் நிச்சயமாக ஏறிட்டாள் கீழ் உதடு கோண நடுங்கும் குரலில் பேசினாள்.

''எல்லாரும் நல்லா கேட்டுக்கங்க... சம்பிரதாயத்துக்காக நா என் வீட்டுக்குப் போகப் போறதில்ல...நா அங்கதான், என் கோபியும், நானுமா இருந்த அந்த வீட்டுலதான் இனிமே இருக்கப் போறேன் இன்னொண்ணும் சொல்லிடறேன்... நா இப்படியேதான் என் கோபி விரும்பின இனுசில எந்த மாற்றமும் இல்லாம தொடர்ந்து இருக்கப் போறேன்... புரியுதா? அதான் என் விருப்பமும் கூட... மனசுல வாங்கிக்கிட்டீங்களா? நா சொல்லச் சொல்ல எதையும் காதுல வாங்காம நீங்க பாட்டுக்குப் பேசிட்டே போறதை இனியாவது நிறுத்துங்க...மறுபடி சம்பிரதாயம், அது, இதுனு பேசினீங்கன்னா ...நா... நா...''



ஆக்ரோஷமாக ஆரம்பித்த பேச்சை முடிப்பதற்குள் தாக் செய்யப் போக, சித்ரா மறுபடியும் முகத்தைப் பொத்திக் கொண்டு உரக்க அழ ஆரம்பித்தாள்.

இப்படியொரு வெடிப்புடனான கத்தலை யாரும் எதிர்பார்க்காததால், அந்த அறையில் இருந்த அனைவருமே திகைத்துத்தான் போனார்கள்.

என்ன ஆயிற்று இந்தப் பெண்ணுக்கு?

பைத்தியம், கித்தியம் பிடித்து விட்டதா?

அதிர்ச்சியில் மூளை குழம்பி விட்டதா?

சாதாரணமாய் பெரியவர்கள் முன்னால் நின்று சேர்ந்தாற்போல் இரண்டு வார்த்தை பேசத் தயங்குபவள் இன்று என்னமாய் வாயாடுகிறாள்! என்னமாய் எதிர்த்துப் பேசுகிறாள்!

சம்பிரதாயங்களை மதிக்க மாட்டாளாம்! தன் இஷ்டப்படி இருப்பாளாம்; யாரும், எதுவும் ஏன் என்று கேட்கக் கூடாதாம்!

என்ன ஆயிற்று இந்தப் பெண்ணுக்கு?

இதே ரீதியில் அங்கிருந்த அத்தனை பேர்களின் எண்ணங்களும் ஓடுகையில், உதட்டைச் சுழித்துக் கண்கள் வெறுப்பில் பளிச்சிட ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டதும், வீட்டுப் பெரியவர்களைத் தன் முன்னாலேயே அவமானப்படுத்தி விட்ட கோபத்துடன் சத்தம் அடிக் குரலில் அதட்டினார்.

''என்ன ஆச்சுடி உனக்கு? எதுக்காகக் கூடத்துல வந்து நின்னுகிட்டு இப்படிக் கண்டபடி உளர்றே? பெரியவங்களை எதிர்த்துப் பேச யார் உனக்குக் கத்துத் தந்தது? உன்னோட மேடம்? அந்தத் திமிர் பிடிச்ச பொம்பளைதானே? அ?''

சித்ரா அழுகையூடே பதிலுக்குக் கத்தினாள்.

''எதுவானாலும் என்னோட நிறுத்திக்குங்க... அவசியமே இல்லாமே மேடத்தை ஏன் இப்ப நம்ப பேச்சுல இழுக்கறீங்க? அவங்க சொல்லிக் கொடுத்து நா ஏன் பேசணும்? எனக்கு யோசிக்க மூளை இல்லியா, பேச வாயில்லையா? இல்லை, என் விருப்பம் இதுனு சொல்ல உரிமை இல்லையா? எதுக்காக மேடம் என்னைக் கிளப்பி விடணும்? அவர்களுக்கு இதுல ஆதாயம் என்ன?''

''வேற என்ன? நீ குட்டிச்சுவரா போகணும்ங்ற ஆத்திரம்தான்...தான் ஒத்தை மரமா நிக்கற மாதிரி உன்னையும் எங்ககிட்ட ஒட்டாம செஞ்சிடணும்னு தானே அவங்க கருவிகிட்டு இருக்காங்க...''

ஆங்காரத்துடன் பெரியம்மா துர்கா மேல் குற்றம் சாட்ட, ''இல்ல, நா நம்பமாட்டேன்...மேடம் அப்படிப் பட்டவங்க இல்ல'' என்று சித்ரா அரற்ற, எதையாவது சொல்லி அவளைத் தங்கள் பக்கம் இழுக்க வேண்டும் என்றால் அதற்கு இதைவிட நல்ல தருணம் கிடைக்காது என்ற தீர்மானத்துடன் சாம்பசிவம் அவசரமாய் குறுக்கிட்டார்.

''உன்னைப் பெத்தவங்களும், நாங்களும் உன்னண்ட இல்லாததையும் பொல்லாததையும் ஏம்மா சொல்லணும்? அத கொஞ்சம் நிதானமா யோசனை பண்ணிப்பாரு! உங்க பெரியம்மா சொன்னது உண்மைதான் சித்ரா...பத்து பதினஞ்சு நாளா எங்ககிட்ட 'இந்த துக்கிரிபொண்ணோட அதிருஷ்டம் என் தம்பியை விழுங்கிடுச்சே...தம்பியான தம்பியா அவன்...ஜாதகப்பொருத்தம் எதுவுமே பாக்காம அவன் சந்தோஷம்தான் முக்கியம்னு கருதி சரினு சொல்லி இப்ப இவளால அவனையே வாரிக் கொடுத்திட்டேன்!''னு புலம்பிட்டு உன்னோடு இருக்குறப்ப மட்டும்



ரொம்பச் சாதுவாட்டம், நல்லவங்களாட்டம் வேஷம் போடறதை வெளியே சொன்னா நமக்குத்தான் வெக்கக்கேடுனு நாங்க வாய் மூடிகிட்டு இருக்கோம்...தவிர, உண்மையச் சொல்லி உன் நிம்மதிய கெடுக்க வேணாம்னு நாங்க இருக்கிறத புரிஞ்சிக்காம, நீ என்னடான்னா...''

அவரை முடிக்கவிடாமல் சித்ரா 'நிறுத்துங்க'...என்று அலறினாள்.

''வேணாம்...யாரைப் பத்தின எந்த உண்மையும் நா தெரிஞ்சிக்க வேணாம்...நாக்குல நரம்பு இல்லாம நீங்க பேசுறத நா நம்ப மாட்டேன்...வேணாம் விட்டுடுங்க... என்னைத் தனியா விட்டுடுங்க...நானே மனசு நொந்து இருக்கேன், என்னை விட்டுடுங்க...அ...ஆ...''

பெரியவர் கூறுவதைக் காதில் வாங்காமல் அழுது படுப்பவளிடம் மாலதி தாவி அருகில் வந்து அவள் தோளைப் பிடித்து உலுக்கினாள்.

''போனாப் போவுதுன்னு பார்த்தா மேல மேல பேசிட்டே போறியே சித்ரா...'மனசு சரியில்லேன்னா உள்ள போயிப் பேசாம படு...என்னமோ உனக்குத்தான் வாய் இருக்குனு மத்தவங்க அவஸ்தை புரியாம பேசாதே ...போ...உள்ள...போ''

அவளை உள் அறை பக்கமாய் மாலதி தள்ள, சித்ரா பிடிவாதமாக முரண்டினாள்.

''நா உள்ள போக மாட்டேன்...எனக்கு என் வீட்டுக்குப் போகணும்...''

''எதுக்கு? அங்க போய் என்ன பண்ணப் போறே?'' அந்த நாசகாரபாவியோட வாழ்ந்த வீட்டுக்குப் போய் இருக்குற கொஞ்ச நஞ்ச நிம்மதியையும் இழக்கணுமா?''

சித்ரா விருட்டென்று தலையை நிமிர்த்தினாள்.

"கோபி நாசகாரப் பாவி இல்லே...மனுஷத்தன்மை நிறைஞ்ச அவனைப் பத்தி இன்னொரு தரம் அப்படிச் சொல்லாதீங்க..."

"ஆமா... அவன்தான் மனுஷன்... நாங்கள்ளாம் மிருகங்க...அதானேடீ உன் எண்ணம்?"

"பின்னே? பெத்த பெண்ணோட வேதனை புரியாத நீங்கள்ளாம் மனுஷங்கதானா? புரிஞ்சிருந்தா பெரியப்பாவும், மத்தவங்களும் பிடிவாதமா என் மனசை மிதிச்சு விட்டு, பதினாறாம்நாள் காரியம் செய்யணும்னு தீர்மானிக்க விட்டிருப்பீங்களா? இல்லே...உங்களுக்கு என் இழப்புப் புரியல...என் வலி புரியலே...இந்த வீட்டுல யாருக்குமே என்னைப் புரிஞ்சிக்க முடியல...நா போறேன் ...என் வீட்டுக்குப் போறேன் என்னை விட்டுடுங்க...தயவு பண்ணி...த...யவு...ப...ண்..."

முழுசாய் முடிக்க முடியாமல் அங்கேயே சரிந்து இரண்டாக மடிந்து சித்ரா கேவிக் கேவி அழுகையைத் தொடர்ந்தும், மாலதியும் சுந்தரமும், மற்றவர்களும் பயந்துதான் போனார்கள்...

இவள் ஒரு நிலையில், இல்லை, பிரமை பிடித்துப் போயிருக்கிறாள். இதற்கு மேல் அதட்டினால் இவள் அதிகம் முரண்டலாம் என்பது புரிய, உடனே தழைந்தார்கள்.

மனசுக்குள் கோபம் சீறிக்கொண்டு எழுந்தாலும் அதை வெளிப்படுத்த இது தருணம் அல்ல. 'ஆடுகிற மாட்டை ஆடிக் கற' என்கிற பழமொழிக்கேற்ப விட்டுக் கொடுப்பது ஒன்றுதான் இந்த நிமிஷம் உதவும் என்கிற கணிப்புடன் சாம்பசிவம் சரக்கென்று எழுந்தார்.

காரசாரமாகப் பேச்சுக்களைக் கொட்டத் துணிந்த மனைவியை 'ஷ்...சும்மா இரு' என்று அதட்டினார்...



தம்பி பக்கம் திரும்பிக் கண்களை இடுக்கியவாறு பேசினார்.

"அவளுக்குச் சரியா நீயும் பேசினா எப்படி சுந்தரம்! அவதான் குழம்பிப் போய் பேசினா நீயும், பொறுப்பு இல்லாம நடந்துகிறியே...இப்ப சித்ராவுக்கு அவ வீட்டுக்குப் போகணும்...அதானே? சரி, போய் ஒரு டாக்ஸிய கொண்டுட்டு வந்து அவளை கூட்டிகிட்டுப் போ...அம்மா சித்ரா இங்க பாரு...அட, பாரும்மா...கண்ணைத் தொட, உன் வீட்டுக்குப் போகணும்; உடனே 'திரும்பி வராம அங்கேயே இருக்கணும்...அதானே? செஞ்சிடுவோம்... அதை நிதானமா சொல்லறத விட்டுட்டு என்னத்துக்காக இத்தனை கத்தல், ஆர்ப்பாட்டம்! எழுந்திரு சுந்தரம்... டாக்ஸி கொண்டா...என்னப்பா, நா சொல்ல அசையாம உட்கார்ந்துகிட்டே இருக்கியே! நீ போறியா?...இல்லே, நா போகட்டுமா...கிளம்பு...ம்...ம் இனி இங்க யாராவது ஒரு வார்த்தை ஏதாவது பேசினா கூட நா பொல்லாதவனா விடுவேன்...ஆமா..."

அன்றைக்கு மாலை சுமார் ஆறரை மணி அளவில் பதினொன்று நாட்களுக்குப் பிறகு கோபியுடன் அற்புதமாய் ஏழு மாசங்களை ஒன்றாய்க் கழித்திருந்த வீட்டில், மூலையும், முடுக்கும் கூட அவர்களிடையே நடந்த ஆயிரமாயிரம் சீண்டல்களை, சிரிப்புகளை நினைவுபடுத்தக் காத்திருந்த அந்த வீட்டில், மீண்டும் காலடி எடுத்து வைத்தாள்.

## 12

கண்கள் எரிந்தன.

கண்ணாடியைக் கழட்டி வைத்து விட்டுத் துர்கா ஆள்காட்டி, கட்டை விரல்களால் இமைகளை மூடி,

அரை நிமிஷம்போல அழுந்தப் பிடித்துக் கொண்டார்.

இன்னும் எரிச்சல் குறையவில்லை.

திருத்திக் கொண்டிருந்த பேப்பரை மடித்து ஓரமாய் மேஜைமேல் வைத்தார். நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு எழுந்தார்.

குளியல் அறைக்குச் சென்று வாஷ் பேஸின் முன் குனிந்து குளிர்ந்த நீரைக் கண்கள் மேல் பளிச் பளிச் சென்று அடித்துக் கொண்டார்.

முகத்தைத் துடைக்காமல் ஈரம் சொட்டச் சொட்ட அறைக்குள் வந்து, மீண்டும் நாற்காலியில் அமர்ந்தார்.

விடைத்தாள்களைத் திருத்தப் பிடிக்காமல் போக, அருகே முக்காலி மேல் வைத்திருந்த புத்தகத்தை எடுத்துப் பிரித்தார்.

சித்ரா வீட்டிலிருந்து வந்து நாலு நாட்களாய் இதே புத்தகத்தைப் படித்தும் இன்னும் முழுசாய் பத்துப் பக்கங்களைக் கூடத் தாண்டவில்லை.

படிப்பது ஏதாவது புத்தியில் பதிந்தால்தானே?

இப்போதும் படித்த வரிகளையே மீண்டும் மீண்டும் மனதில் வாங்காமல் படிப்பது புரிய, ஆயாசத்துடன் துர்கா புத்தகத்தை மூடி வைத்தார்.

கண் டேபிள் மேல் இருந்த காலண்டரிடம் ஓடியது... திங்கள்கிழமை...

கோபி போய் இன்றைக்குப் பதினேழாம் நாள்...

நேற்று சித்ரா வீட்டுப் பெரியவர்கள் அவர்கள் விருப்பப்படி பதினாறாம் நாள் காரியங்களை நடத்தி இருப்பார்கள்...

காரியங்கள் என்றால் என்னென்ன செய்திருப்பார்கள்.



வண்ணாத்திப்பூச்சி மாதிரி இருக்கும் சித்ராவை எந்த அளவுக்கு அலங்கோலப்படுத்தி இருப்பார்கள்?

கற்பனை பண்ணக்கூடப் பிடிக்காமல் மனசு ஒரு நடை போட, துர்கா இருப்புக் கொள்ளாமல் எழுந்து இப்படியும் அப்படியும் நடந்தார்.

'விலகிப் போங்கள்' என்று அன்று சாம்பசிவம் சொன்னதை ஏற்று, சித்ராவை அங்கு தனித்து விட்டு வந்தது சரியா, தவறா?

"நீங்கள் என்ன ஏசினாலும் எனக்குக் கவலை இல்லை? எதுவானாலும் சித்ரா வாயிலிருந்து வரட்டும். அதுவரை நான் இங்குதான் இருப்பேன்" என்று அடித்துப் பேசிச் சித்ராவுக்குத் துணையாய் இருந்திருக்க வேண்டுமோ?

சம்பிரதாயப்படி எதுவாவது செய்கிறேன் என்று அந்தச் சின்னப்பெண் மனசை நோக அடிக்க முற்படுவதைக் கூட இருந்து தடுக்காமல் அவர்கள் சொன்னார்கள் என்று ஏன் வந்து விட்டேன்?

பயமா?

கோழைத்தனமா?

இவளுக்காக நான் ஏன் வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டும் என்கிற அலட்சியமா?

தம்பியே போய் விட்டான். இனி இவளுக்கும் எனக்கும் என்ன என்ற விட்டேத்தியான குணமா?

எ...ன்...ன?

வந்த நாட்களாக விடாமல் கேள்விகள் மனதைக் குடைய விடையைத் தேடி துர்கா தன்னைத்தானே சுய விமர்சனம் செய்து கொண்ட போது மேலே சொன்னவை எதுவுமே காரணங்கள் இல்லை. வாஸ்தவமாகவே தன்

டைய எந்தச் செய்கையும், சித்ராவையும், அவளைச் சார்ந்தவர்களையும் பிரிப்பதற்கு உதவிவிடக் கூடாது என்கிற அக்கறையும், அந்த வீட்டுப் பெரியவர்கள்பால் கொண்டிருந்த மரியாதையுமே உண்மைக் காரணங்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடிய, கொஞ்சம் சமாதானமானார்.

ஆனால் பதினாறாம் நாளைக் கடந்து பதினேழாம் நாள் பிறந்து விட்ட அந்தக் காலை நேரத்தில் இனியும் தன்னால் பட்டுக் கொள்ளாமல் இருக்க முடியாது என்பது விளங்க அன்று மாலை எப்படியும் கல்லூரியிலிருந்து திரும்பும் போது சித்ராவைப் பார்த்து விட்டே வருவது என்று தீர்மானத்தோடு குளிக்கப் போனார்.

முடிவு செய்து கொண்டபடி சித்ராவின் வீட்டை அவர் அடையும் போது மாலை மணி ஐந்தே முக்கால்...

மாடிப்படி ஏறியவரை, பூட்டியிருந்த கதவு வரவேற்க, எங்கே போயிருப்பார்கள் கூட்டு மொத்தமாய் என்று புருவத்தை உயர்த்தி, அங்கேயே நின்று போயிருந்தார்...

மனசுக்கு நிம்மதி வரட்டும் என்று சித்ராவையும் அழைத்துக் கொண்டு எல்லோருமாய்ச் சேர்ந்து கடற்கரை கோவில் என்று எங்காவது போயிருக்கிறார்களா?

அல்லது, ஒரு மாறுதலாக இருக்கட்டும் என்று வெளியூருக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்களா?

எதுவானாலும் சந்தோஷம்தான்... சித்ராவைத் தேற்றும் எந்தக் காரியத்தில் அவளைப் பெற்றவர்கள் இறங்கி இருந்தாலும் நல்லதுதான்...

தேவையில்லாமல் நான்தான் பதட்டப்பட்டு விட்டேன்... அன்று சாம்பசிவம் சொன்னமாதிரி தண்ணீர் அடித்துத் தண்ணீர் விலகாதுதான்...சம்பிரதாயம், அது, இது என்று பேசினாலும், பெண் மனசு நோக எதையும்



செய்யத் துணியாதுதான்... என்ன இருந்தாலும் பெத்தவர்கள் இல்லையா? ஒருவிதத்தில் சாம்பசிவம் சொன்னது போல நான் விலகி நின்றதும் நல்லதுக்குத்தான்...

தனக்குத்தானே கேள்விகளைக் கேட்டு, தக்க பதில்களையும் கூறிக்கொண்ட துரை அன்று வீடு திரும்பிய போது நாலு நாட்களாய் இருந்த பதட்டம் குறைந்து கொஞ்சம் நிதானப்பட்டிருந்தது நிஜம்.

மறுநாள் மாலையும் அங்கு வந்து, மீண்டும் பூட்டப் பட்டிருந்த கதவைக் காண நேர்ந்ததும் கீழ் வீட்டில் விசாரிக்கலாமா என்று எண்ணியவர், 'வேண்டாம்—கண்டிப்பாய் வெளியூர்தான் போயிருக்கிறார்கள்... வந்ததும் அவர்களே தகவல் சொல்லி அனுப்புவார்கள்' என்று நினைப்பை மாற்றிக் கொண்டு திரும்பிப் போனார்.

அடுத்து வந்த இரண்டு நாட்களில் நடந்து முடிந்த தேர்வு விடைத்தாள்களைத் திருத்தும் மும்முரத்தில் ஈடுபட்டு விட்டு வெள்ளிக்கிழமை ஆகியும் விவரம் எதும் தெரியாத காரணத்தால் தானே அவர்கள் வீட்டுக்குச் சென்று அங்கு சுந்தரத்தைச் சந்தித்து, அவரிடமிருந்து "சித்ராவா? அந்த அதிகப்பிரசங்கி இங்க இல்லை... இனிமே அவளை பாக்கணும்னா இங்க வராதீங்க...அவ வீட்டுக்கே போங்க...ஏற்கெனவே தலைவிரி கோலமா ஆட்டம் போட்டுகிட்டு இருக்கா... போங்க... நீங்களும் போய் உங்க பங்குக்கு கவுத்து விடுங்க" என்கிற காட்டமான பேச்சைக் கேட்டு விட்டு ஓ! நாம் எண்ணியது தவறு. இங்கு ஏதோ கோணமாமானா என்று நடந்திருக்கிறது என்கிற தவிப்புடன் அவசரமாய் சித்ராவின் இல்லத்துக்கு ஆட்டோ மூலம் போன போது, அந்த எட்டு நாட்கள் இடைவெளிக்குள் 'என் வேதனையை மேடம் உள்பட யாருமே புரிந்து கொள்ளவில்லை' என்கிற சுய பச்சா

தாபம் அசூயையாய் அகன்றுவிட்டதில் சித்ரா அவரை விட்டு ரொம்ப தூரம் விலகிப் போயிருந்தாள்...

ஜன்னல் அருகே நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு தோட்டத்தை சித்ரா வெறித்துக் கொண்டிருந்தாள்.

ஜன்னலை ஒட்டிக் குட்டையாய், குண்டாய் ஒரு அருநெல்லி மரம்... அதிலிருந்து சாரியாய் இறங்கும் கொழுக் கொழுக்கென்றிருந்த கறுப்பு கட்டை எறும்புகள்...

மரத்தின் அடித்தண்டில் அசிங்கமான ஓணான் ஒன்று உட்கார்ந்து, வரும் எறும்புகளை நிதானமாய் ஒவ்வொன்றாய் ஓசைப்படாமல் விழுங்கிக் கொண்டிருந்தது.

பூதாகரமாய் கண்ணெதிரில் ஓணான் இருப்பதோ, அது கிடைத்த எறும்புகளை விழுங்கத் தயாராகக் காத்திருப்பதோ புரியாமல் மற்ற எறும்புகள் அம்பாட்டுக்கு வந்து கொண்டே இருந்தன. பாவம் செய்திருந்தவை மாட்டிக் கொண்டன... புண்ணியம் செய்திருந்தவை மயிரிழையில் தப்பினதைக் கூட உணராமல் தம் போக்கில் சென்றன...

பாவம்...புண்ணியம்...

பாவம் செய்தவர்கள்தான் அகாலமாக மரணமடைவார்களா?

அப்படியென்றால் கோபி கூட அந்தப் பிரிவில் சேர்க்கப்பட வேண்டியவர்தானா?

கோபியா? எறும்புக்குக்கூட மனசாலும் தீங்கு நினைக்காத கோபியா?

அவருக்கே இந்த துர்மரணம் என்றால் எறும்புகளை வரிசையாய் விழுங்கி ஏப்பமிடும் இந்த ஓணானுக்குக்



கிடைக்கப் போகும் தண்டனை என்ன?

நாளைக்கு இந்த தோட்டத்திலிருந்து எதிர் வீட்டுக்கு போகும் போது கார் சக்கரங்களில் மாட்டிக் கொண்டு கூழாகி விடுமா!

அல்லது, கழுகு ஒன்று இதைக் கொத்திக் கொண்டு போய் உயிரோடு கை கால்களைப் பிய்த்து, கொத்திக் கொத்தி...

சித்ராவுக்குக் குமட்டியது.

கோபியோடு ஓணானை ஒப்பிடுவதும்; அதன் சாவைக் கோரமாகக் கற்பனை பண்ணுவதும் தன் மேலேயே வெறுப்பை உண்டாக்க, 'சே' என்று முனகினாள். விரல்களை மடித்துக்கொண்டு ஓங்கி ஜன்னல் கம்பி மேல் குத்தினாள்.

குத்துப்பட்ட இடம் பளிச்சென்று வலித்தது.

விரலிலிருந்து வலி மெதுவாய் ஹ்ருதயத்துக்குத் தாவ, நொடிப்பொழுதில் கண்களில் நீர் கரைகட்டி, ததும்பி வழிந்தது.

கன்னத்தில் வழிந்த நீரோடு சித்ரா முன்னால் சாய்ந்து ஜன்னல் கம்பிகள் மேல் முகத்தை அழுத்திக் கொண்டாள்.

மசமசத்த பார்வையில் சடையாய்க் காய்த்திருந்த அருநெல்லிக் காய்கள் விழுந்தன.

கோபிக்கு இந்த நெல்லிக்காய்களை உபயோகித்து இவள் செய்யும் ரசம் என்றால் ரொம்ப விருப்பம்.

முதல் தரம் இவளாகவே இப்படியொரு ரசத்தைச் செய்தால் எப்படி இருக்கும் என்று யோசனை பண்ணித் தயாரித்த போது குண்டு குண்டாய், பத்துப் பைசா காசாய் தட்டில் விழுந்த நெல்லிக் காய்களைப் பார்த்து கோபி, வியந்துதான் போனான்.

"ஏய்...என்ன இது...நெல்லிக்கா போட்டா? ரசமா? தைரியமா சாப்பிடலாமா? இல்ல, சாப்பிட்ட கையோட பாத்ரூமுக்கு ஓடணுமா?..."

"சாப்ட்டு பார்த்தா தெரிஞ்சிடறது...பாத்ரூமுக்கு ஓட வைக்குமா, இல்ல இன்னொருதரம் கேக்கச் சொல்லுமா...னு!"

சுவைத்தவன் சப்புக் கொட்டினான்.

"பிரமாதம்...இது வரைக்கும் இப்படியொரு ரசத்த நா சாப்பிட்டதே இல்ல...உங்க வீட்டுல பண்ணுவீங்களா?"

"ம்ஹூம்...நேத்து பொழுது போகாம பத்து நெல்லிக் காய்களை, உப்பு மிளகாய்த் தூளோட சாப்பிட்டுகிட்டு இருந்தப்ப எலுமிச்சம்பழம் மாதிரியே உபயோகிச்சு இதையும் ரசம் வைச்சா எப்படி இருக்கும்னு தோணிச்சு...இருபது காய்களை அலம்பி உப்பு, ரசப்பொடியோட ஜலத்துல கொதிக்க விட்டேன். காய் வெந்ததும் பருப்பு ஜலம் விளாவி, கடுகு, மிளகா, இஞ்சி தாளிச்சு இறக்கி வைச்சு கொத்தமல்லி கிள்ளிப் போட்டேன்...எப்படி..."

"நான்...மனோதத்துவம் படிச்சதுக்குப் பதிலா ஹோம் ஸைன்ஸ் படிச்சிட்டு, புதுசா பதார்த்தங்கள் பண்ணறது எப்படினு புஸ்தகம் எழுதியிருந்தேன்னா லட்சாதிபதி ஆயிருக்கலாம்...ஒரு கப்புல ஊத்திக் கொடு, குடிக்க..."

கப்பை நீட்டியவளின் கையை இடக்கையால் பற்றி வாய்க்கு எடுத்துச் சென்று கோபி முத்தமிட்டான்.

"கைக்கு மட்டும்தானா?" என்று தான் மயக்கமாய்க் கேட்டதும், சாப்பிடுவதை மறந்து, அவளை இழுத்து அவன் மடியில் கிடத்திக் கொண்டதும் நினைவுக்கு வர, சித்ராவின் உதடுகளில் வெட்கத்தோடு ஒரு முறுவல் மலர்ந்தது.



எத்தனை அற்புதமான நாட்கள்...

நினைவுகளே இத்தனை சந்தோஷத்தைத் தர முடியுமா என்ன?

தருகின்றனவே...

நினைவு தந்த புளகாங்கிதத்தோடு சில நொடிகளுக்கு அமர்ந்திருந்தவளை 'இனி இந்த சந்தோஷமெல்லாம் கற்பனையில் மட்டும்தான்...' என்கிற நினைப்பு எட்டி உதைக்கத் தூக்கிவாரிப் போட நிமிர்ந்தாள்.

சென்ற வினாடிவரை கிளுகிளுப்பைத் தந்த நினைவுகள் இப்போது வலிக்க வலிக்கக் குடைய, அந்த வலியைத் தாங்க மாட்டாமல் 'கோபி...கோபி...' என்று வாய்விட்டு அரற்றினாள்.

அழுகை அதிகமாக, அங்கே உட்காரப் பிடிக்காமல் எழுந்து கட்டிலில் குப்புறப் படுத்தாள். அடுத்த அறையில் இருக்கும் அம்மாவுக்குத் தன் கேவல் கேளாதிருக்க வேண்டி தலையணையில் வாயைப் புதைத்துக் கொண்டாள்.

அம்மா, அப்பா, உறவினர் எல்லோருக்குமே அவள் மேல் கோபம்...

'காரியங்களை நடத்தத் தேவையில்லை நான் இப்படியே தான் இருக்கப் போகிறேன்' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி இங்கு வந்த பிறகு அவர்கள் எதிர் பார்த்த விதத்தில் தழைந்து கொடுக்காததும் அன்றி, திரும்ப அந்த வீட்டுக்கு வரமாட்டேன் என்று கூறிவிட்டதில் எல்லாருக்கும் கோபமான கோபம்...

"என்ன? வரமாட்டாளாமா? அங்கேயேதான் இஷ்டப் படி இருக்கப் போறாளாமா? சரி அத்தனை தீர்மானமா அவ பேசினப்புறம் இங்க உட்கார்ந்திட்டிருந்தா அது எங்களுக்குத்தான் அவமானம்...ராத்திரி வண்டிக்கே நாங்க கிளம்பிடறோம்...இனி உன்பாடு...உன் மகபாடு"

என்று பெரியப்பா கத்திவிட்டு மனைவி, கங்கையுடன் புறப்பட்டுப் போய்விட்டாராம்...

பதினாறாம் நாள் காரியங்கள் நின்றதும் அல்லாமல் அண்ணன், இதர பெரியவர்களும் இப்படிக் கோபித்துக் கொண்டு கிளம்பிச் சென்றதில் சுந்தரத்தின் நிலைதான் தர்ம சங்கடமாகிப் போனது.

நல்ல வார்த்தை சொல்லி எப்படியாவது மகளை மீட்டெடுத்து விடலாம் என்று கணக்குப் போட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு மகள் விருப்பப்படி அவள் இல்லத்துக்கே வந்து இரண்டு நாட்கள் தங்கி, சொல்லுகிற, கெஞ்சுகிற, மிரட்டுகிற விதத்தில் முயன்றும பிடித்த முயலுக்கு மூன்று கால் என்கிற பிடிவாதத்துடன் சித்ரா இருக்க, தாள மாட்டாமல் கத்தினார்.

''உன் மனசுல நீ என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கே? ம்? போனாப் போவுதுனு விட்டுக்கொடுத்தா ஓட ஓட விரட்டுறியே...நாங்கள்ளாம் இளிச்சவாயங்களுனு நினைச்சியா? ஆசைப்பட்டவனைக் கட்டி வைச்ச மாதிரி நாம எது சொன்னாலும் இவங்க தலையாட்டி பொம்மை மாதிரி ஆடிப் பணிஞ்சிடுவாங்கனு நெனைப்பா இருக்காது...எனக்குக் கோவம் வந்திடுச்சின்னா பெத்த மகளு பாக்க மாட்டேன்— உண்டு இல்லேனு ஆக்கிட்டுத்தான் மறுவேல பாப்பேன்...என் குணம் உனக்கே தெரியும்... தாண்டினது போதும்... பேசாம வீட ஒழிச்சிட்டு எங்களோடு வந்து இருக்குற வழியப் பாரு...ஏதோ ரெண்டு நாள் இங்க இருக்க ஆசைப்பட்டா இருந்திட்டுப் போகட்டும்னு நினைச்சு விட்டுக் கொடுத்தது தப்பா விட்டது. இங்கே வரவே நா சம்மதிச்சிருக்கக்கூடாது... அழுது ஆர்ப்பாட்டம் பண்ணாலும் பரவாயில்லேனு நாங்க நினைச்சத வலுக்கட்டாயமா நிறைவேத்தி இருக்கணும்...தப்புப் பண்ணிட்டேன்...இனியும் உன் பாகை விள்வர நா தயாரா இல்ல...மாய்மாலம் பண்ணிட்டு



உட்கார்ந்திருந்தது போதும்...எழுந்து சாமான்களை எப்படிக் கட்டணும்னு சொல்லு...முடியாட்டி பேசாம நம்ம வீட்டுக்குப் போயிடு, நானும் அம்மாவும் இருந்து எல்லாத்தையும் ஒழிச்சுக்கிட்டு வரோம்...என்ன காதுல வாங்கிக்கிட்டியா?''

ஆச்சிரைக்கப் பேசி நிறுத்தியது காதில் விழாத மாதிரி தோட்டத்தை வெறித்தபடி சித்ரா அமர்ந்திருக்க, சுந்தரத்தின் கோபம் இன்னும் அதிகமானது.

''ஏய்—மனுஷன் கரடியா கத்தறது காதுல விழல?''... பதில் சொல்லாம அமுக்கா இருந்தா என்ன அர்த்தம்...''

சித்ரா பார்வையைத் திருப்பாமலேயே சின்ன குரலில் பதில் கூறினாள்.

''உங்க முடில நா ஏத்துக்கலேனு அர்த்தம்...''

சுந்தரம் மனைவி பக்கம் திரும்பிக் கத்தினார்.

''பாத்தியா இவ திமிர மாலதி மேல மேல நமக்குக் கஷ்டத்தையும், அவமானத்தையும் தந்தே தீரணும்ன மாதிரி நடந்துக்கற இவள என்ன பண்ணா தேவலாம்?''

மாலதி எரிச்சலுடன் நெற்றியில் ஒருகரம் ஓங்கி அறைந்து கொண்டாள்.

''என்னாச்சு உனக்கு சித்ரா? அப்பா மனசு நொந்து போயிட்டத புரிஞ்சிக்காம ஏன் இப்படி ஏடாகூடமா பேசறே? எல்லாம் நா செஞ்ச பாவம்...''

''என் மனசு சுக்கலா உடைஞ்சிருச்சேம்மா... அந்த வலிய ஏன் நீங்க யாருமே புரிஞ்சிக்க மாட்டேங்கறீங்க?''

''புரிஞ்சிக்காமலா இப்படி அல்லாடறோம்... அடி வயிறு எரிய நாங்க பகறது உனக்கு ஏன் விளங்கல?''

"என் வலிய புரிஞ்சிகிட்டிருந்திங்கன்னா என் முழு மனசையும் எத்துக்கிட்டிருப்பீங்கம்மா, இப்படி எதையுமே காதுல வாங்காம சொன்னதையே சொல்லிட்டு இருக்க மாட்டீங்க..." அவள் முடிக்கு முன் மாலதி அவளை நெருங்கித் தோளைப்பற்றி உலுக்கினாள். அடிக்குரலில் வேகமாய் வினவினாள்.

"இப்ப நாங்க எந்த முடிவ எத்துக்கணும்னு இந்தப் பிடிவாதம் பிடிக்கறே?"

"என்னை என் வீட்டுலேயே இருக்க விடுங்க...இந்த வீட்ட ஒழிச்சிட்டு உங்களோடு வாறு கட்டாயப்படுத்தாதீங்க...ப்ளீஸ்..."

"இது நடக்கற காரியமா! நாலு பேர் என்ன சொல்லுவாங்க, எப்படி எங்களை ஏக்காங்கன்னு நினைப்பு இல்லாம என்ன பேச்சுடீ இது! உன்னைத் தனியா விட முடியுமா, இல்ல நாங்கதான் வீட்டை விட்டு விட்டு உன்கூட இருக்க முடியுமா? சொல்லேன்டி..."

இருக்க வேண்டும் என்று நான் கட்டாயப்படுத்தவில்லையே—என்று சொல்ல வந்ததைச் சித்ரா சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள். தன் அறைக்குச் சென்று கதவைச்சாத்திக் கொண்டு படுத்துவிட்டாள்.

பின்னே? என் காயத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்ளாதவர்களோடு நான் எப்படி ஒன்றாய் வசிக்க முடியும்? கோபியை அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே மதிக்காதவர்கள் இப்போது அவர் சம்பந்தப்பட்ட எதையும் இலட்சியம் பண்ணாமல்தான் இருக்கப் போகிறார்கள்...எனக்கு என் தன்மானம் முக்கியம்... கோபியும் நானுமாய்ச் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கை முக்கியம்...அதைக் கட்டிக் காப்பாற்றும் முயற்சியில் இவர்கள் காயப்பட்டுப் போனால் அதை என்னால் தவிர்க்க முடியாது...என் காயத்தை இவர்கள் நினைவில்



வைத்துக்கொள்ளாதபோது நான் மட்டும் ஏன் இவர்கள் வேதனையைப் பாராட்ட வேண்டும். இவர்களோடு சேர்ந்து வாழப்போனால் நாளைக்கு மீண்டும் சம்பிரதாயம், அண்ணா சொன்னார் என்று எதையாவது ஆரம்பிப்பார்கள்...தாலியைக் கழட்டு என்பார்கள்... எதிரில் வராதே அபசகுனம் என்று கடிந்துகொள்வார்கள்... மறுமணம் வேண்டாம்...ஆயுள் பரியந்தம் துணையாய் இருப்பார் என்று நம்பிய கோபி இல்லாமல் வாழ வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் வந்துவிட்ட பிறகு இவர்கள் இல்லாமலும் எனக்கு வாழத் தெரியாதா? தெரியும்...தெரிய வேண்டும்...வேண்டாம் எனக்கு யாரும் வேண்டாம்...

சித்ராவின் நினைவு சட்டென்று [illegible]காவிடம் தாவியது.

மேடம்...அவர்கூட என் இழப்பைப் புரிந்துகொள்ளாமலதான், தன் வேலை முக்கியம் என்று விலகிவிட்டார், அல்லவா? விடட்டும் எனக்கொன்றும் இல்லை... என் கோபியே இல்லாமல் இருக்கும்போது மேடம் இல்லாமல் சமாளிக்க முடியாதா என்ன? முடியும்... கட்டாயம் முடியும்...எனக்கு யாரும் வேண்டாம்...யாருடைய போலி அன்பும், பரிதாபமும் வேண்டாம்...

நான் தனியாக...இந்த வீட்டில் என் கோபி பற்றின நினைவுகளோடு இருப்பேன்...இருந்து காட்டுவேன்.

எந்த வழிக்கும் வராமல் சித்ராவின் பிடிவாதம் தொடர, அவளின் கண்ணோட்டத்தைப் புரிந்துகொள்ள முடியாததால் அடிபட்டுப்போன சுந்தரம் 'இனி நீயாக அப்பா என்று வரும்வரை நான் உன்னிடம் வந்து பேச மாட்டேன்' என்கிற வைராக்கியத்துடன் தன் வீட்டுக்குப் போய்விட, வயசுப் பெண்ணைத் தனியாக விட்டால் ஊர் நாளைக்கு ஏசுமே என்கிற பயத்தில் தினமும் மாலதி

இந்த வீட்டுக்கும் அந்த வீட்டுக்குமாய் புலம்பிக் கொண்டே அல்லாடி விருப்பம் இல்லாவிட்டாலும் இரவுகளை மகளோடு கழிக்க...

இந்தச் சூழ்நிலையைக் கொஞ்சமும் உணராத சுர்கா அன்று மாலை சித்ராவைப் பார்த்து எட்டு நாட்களாகிவிட்டனவே என்ற பதைப்புடன் அவள் வீட்டில் நுழைந்தபோது சித்ராவுக்கும், மாலதிக்கும் நடுவே மற்றுமொரு வாக்குவாதம் மிகப்பெரிய அளவில் ஜனித்திருந்தது.

# 13

"இந்த டவலை உபயோகப்படுத்தினது யாரு?"

சோபாவில் காலை நீட்டிப் படுத்திருந்த மாலதி மகளின் பதட்டமான குரல் கேட்டுத் தலையை லேசாகத் தூக்கிப் பார்த்தாள்.

"ஏன், நான்தான்..."

"யாரைக் கேட்டுக்கிட்டு எடுத்தீங்க?"

மாலதி எழுந்து உட்கார்ந்தாள்.

"யாரைக் கேக்கணும், கசகசனு இருந்திச்சேனு முகத்தைக் கழுவிகிட்டேன்... அலமாரில துண்டு இருந்துது, எடுத்துத் துடைச்சிக்கிட்டேன்... என்னவோ பட்டுப் புடவைய எடுத்து உபயோகப்படுத்திட்ட மாதிரி இந்த அதட்டல் அதட்டறியே?"

"அலமாரில எத்தனையோ துண்டுங்க இருக்கு... எல்லாத்தையும் விட்டுட்டு இத ஏன் எடுத்தீங்க?"



"மேலாக இருந்துச்சு... எடுத்தேன்... என்னத்துக்காக ஒண்ணுமில்லாததுக்கு இந்தக் குதி குதிக்கிறே சித்ரா?"

"ஒண்ணுமில்லாததா? இது யார் துண்டு தெரியுமா? கோபியோடது... அவர் மட்டும் உபயோகிச்சது... அதப்போயி... நீங்க..."

மாலதி 'பச்' என்று அலட்சியமாய் உச் கொட்டினாள்.

"அவரோடதா இருந்தா என்ன? ஆளே போனப்புறம் துண்டு என்ன பெரிய துண்டு...? அத்தனையும் கெட்ட கனவா நினைச்சு மறந்து தொலைக்காம வெறி பிடிச்சு அலையறே போ..."

"ஆமா வெறிதான் எனக்கு, கோபி வெறி... புரிஞ்சா சரி..."

மாலதி முகத்தைச் சுளித்து வெறுப்புடன் பேசினாள்.

"என்ன ஆச்சு உனக்கு சித்ரா? சாதுவா இருந்த பொண்ணு இன்னிக்கு ஏன் இப்படி குணம் கெட்டுப் போயிட்டே... பெரியவங்கள மதிக்காம நீ நடந்துகிட்டாலும் நாம பெத்த குழந்தைய நாமளே ஒதுக்கிடக் கூடாதுனு விடாம நானும் அனுசரிச்சுப்போறதை ஏன் புரிஞ்சிக்கவே மாட்டேன்கிறே? உனக்காக அப்பா திட்டறதையும் பாராட்டாம, வீட்டை, உன் தங்கச்சிங்க, அப்பாவை விட்டுட்டு நா அங்கேயும் இங்கேயுமா நாய் படற பாடு படறேன். இதையெல்லாம் உணராம எடுத்தமா, கவிழ்த்தமானு எதா என்ன பேச்சுப் பேசறே? இங்க வந்த நாளா 'கோபி படுக்கைல யாரும் படுக்கக் கூடாது'னு சொன்னே... சரி எக்கேடு கெட்டுப்போனு பாய விரிச்சுட்டு நா கூடத்துல படுக்கறேன்... நேத்து 'அந்த நாற்காலில உக்காராதே. அது கோபியோடது'னு

சொன்னே... இன்னிக்கு 'கோபி துண்டை ஏன் எடுத்தே?'னு சத்தம் போடறே...கோபி...கோபி...கோபி... போனவரு தாய்யா போயிட்டாரு...இங்க நா உன்னைப் பெத்த தோஷத்துக்கு வாங்கிக் கட்டிக்கறேன்...தெரியாமத்தான் கேக்கறேன் நா என்ன உனக்கு வேலைக்காரியா இப்படி எடுத்தெறிஞ்சு பேசறதுக்கு? அ? இனி ஒரு தரம் வெடுக்குனு வார்த்தைகளைக் கொட்டறதுக்கு முன்னால உனக்காக நா படற கஷ்டங்களை நினைச்சுப் பார்த்திட்டுப் பேசு...ஆமா...''

குரலை உயர்த்தி அதட்டினவளை முடிக்க விடாமல் சித்ரா குறுக்கிட்டாள்.

''அத்தனை கஷ்டப்பட்டுகிட்டாவது இங்க வந்து உங்களை நா இருக்கச் சொல்லலியே? நானா வாங்க, என் கூட இருங்கனு சொன்னேன்? ஊர் என்ன சொல்லுமோ என்ற பயத்துல நீங்களா தானே வந்திட்டு அப்புறம் எதுக்காக எப்பப் பாரு குறைபட்டுக்கறீங்க?''

மாலதி அதிர்ந்து போய் விழிகள் அகல மகளை வெறித்தாள்.

''அப்பா, 'நீ உன் வீட்டுக்குப் போ, எனக்குத் தனியா இருந்துக்கத் தெரியும்'னு சொல்றே? அதானே? வேணும்டீ, எனக்கு நல்லா வேண்டும்...? அவ புத்தி குழம்பிப் போயிட்டா...யார் எது சொன்னாலும் அவ மண்டைல ஏறாது... விடு... தனியா படட்டாதான் மனுஷங்க அருமை புரியும்...சம்பிரதாயங்களை மதிக்காத மகளை தலை முழுகிட்ட ரோஷத்தோட விலகி இருந்து உங்கப்பா அடிச்சிக்கிட்டார்...நான்தான்...''

சித்ரா நீளமாய் பெருமூச்சு ஒன்றை வெளியிட்டாள்... தொண்டை வரண்டு போய்விட்ட மாதிரி இருந்தது...யார் வீட்டிலிருந்தோ எழுந்த ''பாயும் ஒளி நீ எனக்கு பார்வை [illegible] நான் உனக்கு'' பாடல் அம்மாவின் கத்தலையும் மீறிக்



கொண்டு சன்னமாய்க் காதில் விழ, கண்களை மூடி அந்தப் பாட்டை இரசிக்க வேண்டும் போல இருந்தது. கோபிக்கு இந்தப் பாடல் என்றால் பிரியம். 'வையமது நல் அழகே கண்ணம்மா!' என்கிற வரியில் ஒவ்வொரு தரம் உருகித்தான் போவார்...இல்லை?

மாலதி தொடர்ந்து எதையோ பேசிக் கொண்டே போக, வேண்டும்போது பேச்சுகளைக் காதில் வாங்கவும் வேண்டாதபோது தவிர்க்கவும் ஒரு ஸ்விட்ச் இருந்தால் எத்தனை உபயோகமாய் இருக்கும் என்ற ஏக்கத்துடன் தன் அறையைப் பார்க்க சித்ரா நகர்ந்த நிமிஷத்தில் வாசலில் ஆட்டோ வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

துர்காதான்...

உள்ளே வந்து துர்கா முதலில் சித்ராவை தலையோடு காலாய் ஏறிட்டார்.

மெலிந்த உடம்பு, கருவளையம் சூழ்ந்து சிவந்த கண்கள், அலங்கோலமான தோற்றம்...

ம்ஹூம்... சரியாக இல்லை... எதுவுமே சரியாக இல்லை... யோசனையுடன் திரும்பி, சோபாவில் அமர்ந்திருந்த மாலதியைப் பார்த்தவர், மறுபடியும் திடுக்கிட்டார்.

அழுகை, புலம்பல், உப்பின முகம்...

என்னாயிற்று.

எதற்காக மாலதியும் இப்படி காட்சி அளிக்கிறார்?

மெல்ல நடந்து சித்ராவின் அருகில் சென்று கலைந்திருந்த முடியைக் கோதிவிட்டு, பரிவுடன் கேட்டார்;

''எப்படி இருக்கே சித்ரா?''

அந்த முகபாவனை, செய்கை, ஒற்றைவரிக் கேள்வி மனசை பரபரவென்று என்னமோ செய்ய, அவரை

அப்படியே தாவி அணைத்து, 'எங்கே போய்விட்டீர்கள் மேடம்... ஒரு வாரமாய் என்னைத் தனியாய்த் தவிக்க விட்டு விட்டு' என்று அரற்றத் தோன்றியதை சித்ரா பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

இப்படி ஒரு நிமிஷம் நின்று அன்பில் தோய்த்த வார்த்தைகளைக் கூறிவிட்டு, எனக்கு வேலை இருக்கிறது என்று போவது இவருக்குச் சுலபம்... அப்புறம் அந்த அன்புக்காகவும், அரவணைப்புக்காகவும் நான் ஏங்கித் தவிக்க வேண்டும்... வேண்டாம்... மேடத்தின் இந்த தற்காலிகப் பரிவு எனக்கு வேண்டாம்... கோபியே இல்லாமல வாழ வேண்டிய நிர்ப்பந்தம் வந்த பிறகு இவர்கள் யார் இருந்தால் என்ன, போனால் என்ன

''என்ன சித்ரா அப்படி பார்க்கறே?''

''ம்? ஒன்றுமில்லை ஒரு வாரமா நீங்க வரவே யில்லையே மேடம்...''

துர்கா அவள் கையை அன்புடன் பற்றிக்கொண்டார் திரும்பி மாலதியை ஒருதரம் பார்த்துவிட்டுச் சின்ன குரலில் பதில் கூறினார்.

''வர முடியலைம்மா. வேலை அதிகமாக இருந்தது...''

சித்ரா அவர் கையை விலக்கி விட்டாள் அம்மாவுக்கு எதிரில் இருந்த நாற்காலியில் தலையைக் கைகளால் தாங்கிக்கொண்டு கவிழ்ந்த மாதிரி உட்கார்ந்தாள்.

அவள் தன்னோடு பேசும் மனநிலையில் இல்லை என்பதைப் புரிந்துகொள்ள முடிய, துர்கா அழும் மாலதியை நெருங்கி சமாதானப்படுத்தும் நோக்கில் பேசினார்.

''வீணா மனசைப் போட்டு உழப்பிக்காதீங்க... பெரியவங்க, நீங்க தைரியமா இருந்தாதானே சித்ராவும் தேற முடியும்?...''



மாலதி ஆங்காரத்துடன் கத்தினாள்.

''மனசைக் கெடுக்கறது? நாங்களா? எங்க இவ விட்டாதானே? தேள் மாதிரி மத்தவங்க வேதனை புரியாம கொட்டிகிட்டே இருக்கா, எப்படி சமாதானம் ஆகறது?''

''எதுக்காக மாலதி இப்படிச் சலிச்சுக்கறீங்க?''

''பின்னே? கோபியோட துண்டை தெரியாம எடுத்து துடைச்சிட்டேன். அதுக்காக அரைமணியா என்ன பேச்சுப் பேசிட்டா இவ தெரியுமா? 'அவர் நின்ன இடத்துல நிக்காத, தொட்ட சாமான்கள் தொடாதே'ன்னு விரட்டிகிட்டே இருந்தா 'சீ போ'ன்னு சலிச்சுப்போகாம வேற என்ன பண்ணும், சொல்லுங்க... 'எப்படியோ தொலை'ன்னு விலகி நிப்பாளு... பாத்தா...''

சித்ரா சரக்கென்று தலையை நிமிர்த்தினாள்.

''விலகி நிக்குறீங்களே... யார் கையை பிடிச்சிகிட்டுத் தடுக்கறாங்க... மேடம் வர்றத்துக்கு முன்னால அதத்தானே உங்ககிட்ட நா சொல்லிட்டு இருந்தேன்? நா தனியா இருந்துப்பேன்... நீங்க தாராளமா உங்க வீட்டுக்குப் போங்க...''

''பார்த்தீங்களா, பார்த்தீங்களா... என்னமா தூக்கி எறிஞ்சு பேசறா பார்த்தீங்களா?''

நாடகத்தில் வரும் காட்சி, பேச்சுக்கள் போல அம்மா மகள் இடையே அடுத்தடுத்து எழுந்த பேச்சு வார்த்தைகளைக் கேட்டுத் திகைத்துப் போன துர்கா அவசரமாய்— ''சித்ரா... ப்ளீஸ்... ப்ளீஸ்'' என சித்ரா கண்களை இடுக்கிக்கொண்டு அவரைப் பார்த்தாள்.

''தயவு பண்ணி என்னை என் போக்குல விட்டுடுங்க மேடம்... கெஞ்சிக் கேட்டுக்கறேன்...''

''இல்லம்மா... வந்து... இத...''

ப்ளீஸ் மேடம்—நீங்க வேலை இருக்குனு எட்டுநாளா வெளில இருந்ததை நா புரிஞ்சுகிட்ட மாதிரி, நா ஏன் இப்படி நடந்துக்கறேன்ங்கறதை நீங்க புரிஞ்சுக்கிட்டுக்கவே தேவையில்லை... மிருகத்தனமா பேசி, நடந்துக்கறவங்களுக்கு அவங்க பாஷையிலேயே பதில் சொன்னாதான் புரியும்... ப்ளீஸ் விட்டுடுங்க...''

துர்கா கண்களை மூடி, நாற்காலியின் விளிம்பை விரல்களால் இறுக்கமாய்ப் பற்றித் தன்னை நிதானப்படுத்திக்கொள்ளப் பார்த்தார்.

இந்த சித்ரா அவளுக்குப் புதுசு. இப்படிக் கண்கள் இடுங்கிப் போக, அடிக்குரலில் பேசும் சித்ராவை அவர் இதற்கு முன் பார்த்ததில்லை... என்ன ஆயிற்று இந்த எட்டு நாட்களில்; சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதற்கு ஏற்ப, இந்த சாது சித்ராவை இப்படி முரடாக்கிய சம்பவங்கள் என்ன?

தானாக உன்னை விட்டு விலகவில்லை—விலக்கப்பட்டேன் இதைக் கூடவா உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை—என்கிற, கேள்வியைக் கேட்க முடியாத கையாலாகாத்தனத்துடன் துர்கா உட்கார்ந்திருக்க, மாலதி பரபரவென்று எழுந்து உள்ளே போனாள்.

தன் உடைகளை ஒரு பையில் வைத்து எடுத்துக்கொண்டாள்—மகள் முன் வந்து நின்றாள்.

''நா போறேன்... தனியா அவதிப்பட்டாதான் உனக்குப் புத்தி வரும்... உங்கப்பா சொல்ற மாதிரி பத்து நாளுக்குள்ள நீங்க இல்லாம இருக்க முடியலை'னு வந்து கால்ல விழுலே பாரு; அப்ப பேசிக்கறேன்... நா வரேன்...'' கத்திவிட்டு இரண்டடி நகர்ந்தவள் நின்றாள் துர்காவை ஏறிட்டு ''இப்ப திருப்தியா? நினைச்சது சாதிச்சிட்டீங்க இல்ல?'' என்று கேட்டுவிட்டு முந்தானையால் வாயைப் பொத்தியபடி இறங்கி வெளியில் போனாள்.



மாலதி கண்களை விட்டு மறைந்து ஐந்து நிமிஷங்கள் ஆகியும் அந்த அறையில் மௌனம் பூரணமாய் வியாபித்தது.

ஒருவித வெறித்தனத்தோடு கருங்கல் மாதிரி இறுகி உட்கார்ந்திருக்கும் சித்ராவைப் பார்க்கப் பார்க்க, துர்காவுக்கு அடிவயிறு முடிச்சுப் போட்டுக் கொண்டது.

என்னவாயிற்று?

எதனால் இந்தக் காட்டமான பேச்சு, விட்டேத்தியான போக்கு?

எதுவும் புரியாத வேதனையில் கண்களில் நீர் துளிர்த்தது. விழிகளைத் துடைத்துக்கொண்டு ''சித்ரா'' என்று அழைத்தார்.

''......''

''சித்ரா...''

''ம்?''

''என்னாச்சும்மா?''

''......''

''எதுக்காக அம்மா கிட்ட அப்படி பேசினே சித்ரா?''

''ப்ளீஸ் மேடம்... அதையே திருப்பத் திருப்ப நீங்க கேக்கறதுன்னா, நா உள்ளப் போயிடறேன்...''

''ஓகே... கேக்கலை... சூடா காபி, டீ, ஏதாவது சாப்பிடறியா? பால் இருக்கா?

''தெரியாது''

துர்கா எழுந்து போய் சமையல்கட்டில் பார்த்தார்; இருந்தது.

30208

வெந்நீரைக் கொதிக்கவிட்டு, டீத்தூளைப் போட்டு டீ தயாரித்து இரண்டு டம்ளர்களில் எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்தார்.

ஒன்றைச் சித்ராவிடம் தந்தார்.

''சரியா இருக்கா?''

''ம்''

டீயை ஒரு வாய் குடித்த துர்கா யோசனையுடன் கேட்டார்.

''இங்க எப்ப வந்தே சித்ரா?''

சொன்னாள்.

''கூட அம்மாவும் வந்தாங்களா?''

''ம்''

''இப்பப் போயிட்டாங்களே... என்ன பண்ணப் போறே?''

''......''

''நா வேணா தங்கிடட்டுமா?''

''வேணாம்.''

''அப்புறம்?''

சித்ரா நிமிர்ந்து துர்காவை ஒரு தரம் பார்த்துவிட்டுப் பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள்.

''தனியா இருக்கறதுல ஏதாவது தப்பா மேடம்?''

''தப்பு ஒன்றும் இல்லை... ஆனா உன்னால முடியுமா' இது தெரியான்றதுதான் கேள்வி...''

''முடியுமா, முடியாதான்றது முயற்சி பண்ணாத் தானே தெரியும்?''

துர்கா டம்ளரைக் கீழே வைத்தார். எழுந்து சித்ராவின் பின் பக்கமாய் வந்து குனிந்து அவளைத் தழுவிக் கொண்டார்.



''உன்னை இங்க தனியா விட்டுட்டு உன் அப்பா, அம்மாவாலயோ, இல்ல என்னாலயோ நிம்மதியா இருக்க முடியும்னு நினைக்கறியா சித்ரா?''

கடந்த பத்து, பன்னிரண்டு நாட்களாய் தன் விருப்பு வெறுப்புகளைப் புரிந்து கொள்ளாமல் சொல்வதைக் காதில் வாங்காமல் 'பெரியவர்கள் சம்பிரதாயம் வச்சத்துக்கு நல்ல தல்ல' என்கிற ரீதியில் பெற்றவர்கள் பேசி, நடந்ததையும், என் வேலை எனக்கு முக்கியம் என்று சொல்லாமல் கொள்ளாமல் துர்கா விலகிப் போனதையும் வேண்டுமென்றே மீண்டும் ஒரு தரம் நினைவுபடுத்திக் கொண்டு 'வேண்டாம் இந்தப் பரிவு வார்த்தைகள் எனக்கு வேண்டாம். இன்று இப்படிக் கூறுவார்கள், நாளைக்கு தொப்பென்று போட்டுவிட்டுத் தள்ளிப் போய்விடுவார்கள்— நான் தனியாகவே இருக்கப் பழகிக் கொள்கிறேன்... கோபியின் நினைவுகள் மட்டும் துணை இருக்க வாழ்ந்து காட்டுகிறேன் என்று ஏற்கனவே தீர்மானித்தபடி துர்காவின் பேச்சினால் பாதிக்கப்படாமல் இருக்கப் பார்த்தாள்.

புடவைத் தலைப்பின் நுனியைத் திருகினாள். கசங்கி இருந்த இடத்தை நீவி விட்டாள். மெதுவாக துர்காவின் கரங்களை விலக்கிவிட்டு ஜன்னல் அருகில் சென்று நின்று சாலையை வெறித்தாள்.

சித்ராவின் கோபத்தை, அவள் அடிபட்டுப் போயிருப்பதைத் துர்காவால் நன்றாகவே உணர முடிந்தது.

இருந்த இடத்திலிருந்தே சித்ராவைப் பார்த்துப் புன்னகைத்தார்.

''தனியா இருக்க நீ விரும்பினா, அது உனக்கு நிம்மதியைத் தரும்னு நம்பினா, அந்த முடிவுக்கு நா குறுக்க நிக்க மாட்டேன்... ஆனா, ஏதாவது உதவி உனக்குத்

பிசகைப்பட்டா என்கிட்ட வரத் தயங்கக்கூடாது— சரியா?''

''.....''

''துக்கமோ, வலியோ, எந்தச் சூழ்நிலையேயும், இது நடைமுறைக்கு சாத்தியமா? ப்ராடிக்கலா இருக்குமா—ன்றதையும் யோசனை பண்ணணும் அப்பத்தான் அடுத்தவங்களுக்கு பாரம் ஆகாம, சுயமரியாதையை இழக்காம வாழ முடியும்... தனியா இருக்க விரும்பறே... சரி... ஆனா, செலவுக்கு என்ன பண்ணப் போறே? வாடகை, சாப்பாடு, பாக்கி செலவுகள் எல்லாம் இருக்கே... இதப் பத்தி யோசனை பண்ணிட்டியா? என் கூடத்தான் வந்து இருக்க மாட்டேன்னு சொல்றே, போகட்டும், ஆனா, என்—கிட்டயிருந்து பணமாவது வாங்கிக்கலாம் இல்லியா?''

சித்ரா நகங்களில் உள்ள அழுக்குகளை, தாலியில் கோர்த்திருந்த பின்னைக் கழட்டி மெல்ல நீக்கியபடி பேசினாள்.

''இரண்டு நாளா இது பத்தி எல்லாம் நானே யோசனை பண்ணிட்டுதான் இருக்கேன். இந்த வீட்டுக்கு ஆறுமாசம் அட்வான்ஸ் கொடுத்திருக்கோம். வர்ற ஒண்ணாம் தேதியிலேந்து ஜானகிம்மாகிட்ட கழிச்சுக்கச் சொன்னா அடுத்த ஆறு மாசத்துக்கு வாடகை பற்றிக் கவலை... இல்லை... சேவிங்ஸ் அக்கௌண்ட்ல ஏழாயிரத்துச் சில்லரை... இருக்கு... அதனால இப் போதைக்கு யார் கிட்டயும் கை ஏந்தவேண்டி வராதுன்ற தைரியம் இருக்கு...

''யார் கிட்டயும்'—என்பதைச் சற்று அழுத்தமாகவே அவள் சொல்லியது எழுப்பிய வேதனையை வெளியே காட்டிக் கொள்ளாமல் துர்கா மனசுக்குள் கணக்குப் போட்டார்.



வாடகை, சாப்பாடு, இதர உடனடி தேவைக்குக் கவலை இல்லை... போய் வேலையில் இருக்கையில் எதிர் பாராமல் அகால மரணம் அடைந்ததால், கம்பெனியி லிருந்து கணிசமான நஷ்டஈடு தொகை கிடைக்கும் என்று சேர்மன் செல்வராஜ் சொல்லி இருக்கிறார்.

இது தவிர, இன்ஷ்யூரன்ஸ் பணமும் மொத்தமாய் கைக்கு வந்து விடும். ஆகப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை சித்ரா நிச்சயம் சிரமப்படமாட்டாள்.. ம்ம்... அது சரி ஆனாலும் என்னமோ நெருடுகிறதே...

இருப்புக் கொள்ளாமை அதிகமாக துர்கா எழுந்து நின்றார்.

—

''வரேன் சித்ரா... தீர்வு இல்லாத பிரச்சனைகளோட வாழக் கத்துக்கறதுதான் விவேகம். ஆனா அப்படிச் செய்யறப்போ கூடுமானவரையில் நாம காயப்பட்டுப் போகாமலும், மனிதாபிமானத்தை இழக்காமலும் இருக்க முயற்சிக்கணும்... நீ புத்தி சாலி... உன் மேல எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கு... வேற என்ன சொல்ல?''

ரொம்பக் கிசுகிசுப்பாகப் பேசியவர், சித்ராவைப் அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டார். பின், தன் கண்களில் பெருகிவிட்ட நீரை அவள் காணும் முன் திரும்பி, வேகமாய் வெளியே நடந்தார்.

## 14

பசித்தது. ஆனால் சாப்பிடப் பிடிக்கவில்லை.

கண்களில் பூச்சி பறந்தது. ஆனால் உறக்கம் வரவில்லை.

உடம்பு துணி மாதிரி வெலவெலத்தது. ஆனால் பொருத்திப் பிரிக்க இயலவில்லை...

வேண்டியவர் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறி அழுதால் தேவலை போல இருந்தது. ஆனால் யாரையும் பார்க்கக்கூடப் பிடிக்கவில்லை...

என்ன அவஸ்தை இது!

மாடி வீட்டிலிருந்த டெலிவிஷனில் ஆங்கிலச் செய்தி தொடங்கும் முன்னர் ஒலிக்கும் சங்கீதம் எழ, மணி ஒன்பதரை என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

படுத்திருந்த சித்ரா எழுந்து விளக்கை ஏற்றினாள்.

அது நாழிகை இருட்டிலேயே இருந்து பழகிவிட்ட கண்கள் வெளிச்சம் பட்டதும் கூசின.

மெல்ல நடந்து சமையல் அறைக்குச் சென்றாள்.

காலையில் சமைத்த சாதம் ஆறிப் போய் விறைத்திருந்தது. அடுக்கில் ரசம்.

எதையும் சாப்பிடத் தோன்றாமல், இரண்டு கரண்டி தயிரைத் தண்ணீர் விட்டுச் சிலுப்பி, மோராக்கிக் குடித்தாள்.

இறைந்து கிடந்த பாத்திரங்களை மூடினாள். அடுப்பைத் துடைத்து, சத்தம் பண்ணக்கூடப் பிடிக்காமல் முன் அறைக்கு வந்தாள்.

சோபாவில் அமர்ந்து, அன்றைய தினசரியைக் கையில் எடுத்தும் படிக்க முடியாமல் முக்காலி மேல் வைத்தாள்.

கைவிரல்களை ஒவ்வொன்றாகச் சொடுக்கிக் கொண்டாள். இரண்டு கைகளையும் தலைக்குமேல் உயர்த்திச் சோம்பல் முறித்தாள்.



உடம்பு பூராவும் வலித்தது. ஜுரம் இருக்கும் நினைவில் கதகதவென்றது.

மேலே சுடுகிறது...ஆனால் மனசும், வயிறும் சதா சில்லிட்டு உறைந்துபோகிறது...

என்ன அவஸ்தை இது!

குளித்தால் கொஞ்சம் நிதானப்படுமோ?

எழுந்து அலமாரியிலிருந்த துண்டை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

ஷவரிலிருந்து வெளிப்பட்ட நீர்த்துளிகள் முதலில் ஊசியாய் முகத்தைத் தாக்கின...அப்புறம் இதமாய் வருடிக் கொடுத்தன...

கோபிக்கு இப்படி ஷவரில் முகத்தைக் காட்டிக் கொண்டு நிற்பதென்றால் ஏக ப்ரியம்...

''சாப்பாடு எடுத்து வை சித்ரா...இதோ வந்திடறேன்'' என்றுசொல்லி குளிக்கப்போவார்; சூடு பண்ணிய குழம்பும், பொரியலும் ஆறி அவலாய்ப் போன பிறகு ஸாரிம்மா... என்கிற சிரிப்புடன் வந்து நிற்பார்...

அந்தச்சிரிப்பு... வலது உதடு சற்றே தூக்குவதில் தலையை நீட்டும் அந்த சிங்கப்பல்... அதுக்கூடக்கோபிக்கு அழகாய்தானே இருக்கும்?

ஷவரை நிறுத்திவிட்டு சோப்பை எடுக்க சித்ரா கையை நீட்டினாள்.

அவளுடைய பியர்ஸ் சோப் பக்கத்தில் கோபி உபயோகித்த ஹமாம்...உயர்ந்ததாக வெளிநாட்டு சோப் இருந்தாலும்கூட ஏனோ கோபி எதையும் விரும்பியதில்லை. ''இதுதான் எனக்குப் பிடிச்சிருக்கு'' என்று கூறி, கண்ணைச் சிமிட்டிச் சிரிப்பார்...

தன் சோப்பைத் தவிர்த்து, சித்ரா கோபியின் சோப்பை எடுத்தாள்.

அந்த சனிக்கிழமை காலை கடைசியாய் கோபியின் உடலைப் பூரணமாய் ஸ்பர்சித்த பொருள் இது என்கிற நினைப்பு எழுந்ததும் கைவிரல்கள் மெதுவாய் நடுங்கின...

கோபியின் மார்பில், முகத்தில், புஜங்களில் உரசிய சோப் இது...

கோபியின் உடம்புக்கென ஒரு தனி மணம் உண்டே அது இந்த சோப்பிலும் வீசுமோ?

சித்ரா சோப்பை முகர்ந்து பார்த்தாள்.

ம்ஹூம்... இல்லை...

சோப்பின் வழக்கமான மணத்தைத் தவிர அதில் வேறு எந்த வாசனையையும் புரிந்துகொள்ள முடியவில்லை...

இப்படியும், அப்படியும், சோப்புக் கட்டியைத் திருப்பினபோது ஒரு பக்கமாய் அதில் ஒட்டிக் கொண்டிருந்த முடி ஒன்று சித்ராவின் பார்வையில் பட்டது.

முடி!

கோபியின் தலைமுடி!

ஆள்காட்டிவிரல் நகத்தால் லேசாகச் சுரண்டி அந்த ஒற்றை முடியைத் தனித்து எடுத்தபோது, அதைச் சரியாகப் பார்க்கமுடியாமல் கண்களில் நீர் கரைகட்டியது...

கோபியை இனி காணமுடியாமல், அவர் வாசத்தை உணர முடியாமல், அவர் சம்பந்தப்பட்ட எதையும் ஸ்பரிசிக்க முடியாமல் அவரை எரித்து, பிடி சாம்பலாக்கி, அந்த சாம்பலையும் கடலில் கரைத்துவிட்டார்கள்... இனி எல்லாமே கற்பனையில்தான் என்று பேயாட்டம் போட்ட



எண்ணத்தைப் பொய்த்துப் போக வைத்த அந்த ஒற்றை முடியை உள்ளங்கையில் வைத்த நொடியில் உடம்பு பூராவும் திடுதிடுவென்று உதறிப்போட முற்பட்டது.

என் கோபியின் தலை முடி!

மூன்று அங்குல நீளமுள்ள அந்த ஒற்றை முடி பறந்துவிடாமல் இருக்க, சித்ரா விரல்களை மூடிக்கொண்டாள். கோபியின் தலைமுடிக்குள் விரலைவிட்டுத் துளாவும் இன்பத்துடன் அப்படியே நின்று விரல்களைத் திறந்து வலது கை ஆள்காட்டி, கட்டை விரல்களால் அதை மிகுந்த கவனத்துடன் பிடித்து, குனிந்து மென்மையாய் முத்தமிட்டாள்.

ஐ லவ் யூ கோபி...

ஐ மிஸ் யூ வெரி மச்...

நீங்கள் இல்லாமல் நான் தவிப்பது புரிகிறதா கோபி?

எங்கே இருக்கிறீர்கள்?

இங்கே என் பக்கத்தில், அரூபமாய்?

அந்த முடியை பொக்கிஷம்போல ஆயுசு பர்யந்தம் காப்பாற்ற வேண்டும் என்கிற வேகம் எழ, பாதி குளியலில் இருந்ததை இலட்சியம் பண்ணாமல் சித்ரா ஒற்றைக் கையால் புடவையை அப்படியே சுற்றிக்கொண்டாள் வலது கையில் பிடித்திருந்த முடி பத்திரமாய் இருக்கிறதா என்று பார்த்துவிட்டு, வெளியில் வந்தாள்.

பணம், நகை வைக்கும் இரும்பு அலமாரியைத் திறந்தாள்.

தலையிலிருந்தும், உடம்பின் இதர பகுதிகளிலிருந்தும் நீர் சொட்ட நின்றவள் கோபியின் தலைமுடியை எங்குப் பத்திரமாய் வைக்கலாம் என்று ஆராய்ந்தாள்.

கல்யாணமான கையோடு தன் பரிசாக கோபி வாங்கித் தந்த முத்துத் தோடுகளைக் கொண்ட சின்ன டப்பாவை எடுத்தாள்.

நீல நிற வெல்வெட் டப்பா... உள்ளுக்குள் வெள்ளை ஸாடின் லைனிங்...

அவசரமாய் தோடுகளை எடுத்து வெளியே போட்டு விட்டு, கையிலிருந்த முடியைக் கவனமாய் அந்த டப்பாவினுள் குறுக்காய் வைத்தாள்.

வெள்ளை ஸாடினின் மேல் ஒரு கறுப்பு வானவில் தோற்றமளித்த முடியை அரை நிமிஷம் உற்றுப் பார்த்துவிட்டு, மூடினாள்.

டப்பாவை நெஞ்சில் வைத்து அழுத்திக்கொண்டாள்.

கோபியை முழுசாக ஆலிங்கனம் பண்ணுகிற உணர்வைக் கற்பனைப் பண்ணிப் பார்த்து அந்தத் தழுவலின் வழக்கமாய் உண்டாகும் நிறைவு இருகிறுப்பு இப்போது தோன்றாமல் போக, அலமாரியின் கதவுமேல் சாய்ந்து கொண்டு சித்ரா சின்ன குரலில் விசும்பினாள்.

தொட்டும் தொடாமலும்
உணர்ந்தும் உணராமலும்...
கிட்டியும் கிட்டாமலும்...
என்ன அவஸ்தை இது...

கொஞ்சம் அழுகை அடங்கின பின் டப்பாவை பத்திரமாக வைத்துப் பூட்டினாள்.

கதவைச் சாத்தும் முன் ஒரு பக்கமாய் ஹாங்கரில் தொங்கிக் கொண்டிருந்த கோபியின் உடைகள் கவனத்தை ஈர்க்கக் கையை உயர்த்தி அந்த ஷர்ட்டுகளை, ஸஃபாரி சூட்களைத் தடவிக் கொடுத்தாள்.

இந்த க்ரீம் ஸஃபாரியில்தான் கோபி எத்தனை கம்பீரமாய் இருப்பார்?



பழுப்பு நிறத்தில் கோடு போட்ட ஷர்ட்டைத் தொட்ட போது அதை வாங்கின நாள் நினைவில் கூத்தாடியது...

கோபியின் பிறந்த நாளுக்காக அவனிடம் சொல்லாமல், தானாகவே போய் வாங்கி வந்து, அவன் கண்ணில் படாமல் ஒளித்து வைத்து இரவு பன்னிரண்டு மணி வரை உறங்காமல் கண் விழித்திருந்து, பன்னிரண்டு அடித்ததும் அருகில் சென்று அமர்ந்து, நெற்றியில் முத்தமிட்டு, கண் விழித்தவனின் காதுக்கருகில் வாய் வைத்து 'ஹாப்பி பர்த்டே டு யூ' என்று பாடி, ஆச்சர்யம் கலந்த சந்தோஷத்தோடு சிரித்தவனை அப்போதே அந்தப் பெட்டியைப் பிரித்து ஷர்ட்டை அணியச் சொல்லி...

“உனக்குத்தான் புது தினுசா கொண்டாடத் தெரியுமா? எனக்கும் முடியும்டீ ராஜாத்தி... அஞ்சு நிமிஷம் டைம் தரேன் புடவை மாத்திகிட்டு வர்றதுக்கு...” என்று கூறி, அவளைத் தயாராகச் சொல்ல, இருவருமாய் ஸ்கூட்டரில் அந்த நட்ட நடு இரவில் புறப்பட்டுப்போய் ஒன்று அல்ல, அடுத்தடுத்து இரண்டு இடங்களில் ஐஸ்க்ரீம் வாங்கித் தின்று...

கடவுளே

இனியொருதரம் இந்த அனுபவம் கிட்டாதா?

ஷர்ட்டில் முகத்தைப் பதித்து கோபி கோபி என்று அரற்றிய போது கோபியின் வாசனையை உணர முடிய, சித்ரா அதிர்ந்தாள்...

கோபியின் உடம்பிலிருந்து எழும் மணம்... இது தான்... இதேதான்...

அப்படியெனில் அவர் அணிந்த உடை எல்லாவற்றிலும் அவரது வாசனை இருக்குமா?

பறந்து போன மனசுடன் சித்ரா ஒவ்வொரு உடையாக எடுத்து மூக்கில் அழுத்தி முகர்ந்து பார்த்தாள்.

இதில் இல்லை...

இதில் இல்லை...

இதில் இருக்கிறது...

சிலவற்றில் இருந்தது... பலவற்றில் இல்லை...

சமீப காலத்தில் அணிந்ததில் மட்டுமே நுகர முடிய, அந்த உடைகளை மார்போடு அணைத்தபடி சித்ரா தரையில் மடிந்து உட்கார்ந்தாள்.

நாளாக ஆக, இந்த மணம் கொஞ்சம் கொஞ்சமாய் மறைந்து விடுமா?

அப்புறம் என் கோபியின் வாசனை எப்படி என்ன என்பது என் நினைவில் இருக்குமா இருக்காதா?

எப்படியாவது இதையெல்லாம் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமே...

எப்படி... ஐயோ... எப்படி?

எதுவும் புரியாத கையாலாகத்தனம் ஆளை விரட்ட வாய்விட்டு சித்ரா அழ ஆரம்பித்தாள்.

கோபியின் உடைகளை முகத்தில் பதித்து, மாரோடு அணைத்து, உடைந்துபோய் ரொம்ப நேரத்துக்குப் பரிதவித்தபோது "கோபி எங்கயும் போகலை—மனுஷ ரூபத்துல இல்லியே தவிரவும் அவனோட ஆத்மா உன்னையேதான் சுத்திக்கிட்டு இருக்கும்... கோபி உன்னை விட்டுப் போக மாட்டான். உன் கூடத்தான் இருக்கான்... அதை நினைப்புல வச்சிகிட்டு தைரியமா இருக்கப்பாரு" என்று துக்கம் விசாரிக்க வந்த பெரியவர்கள் கூறியது ஞாபகத்துக்கு வர, சித்ரா சரக்கென்று நிமிர்ந்தாள்.



அவர்கள் சொன்ன மாதிரி கோபியும் எங்கேயும் போய்விடவில்லை. உருவம் இல்லாதவராய் எப்போதும் என் கூடவே இருக்கிறார். இருப்பார்—அப்படி இருக்கையில் எதற்காக நான் 'எங்கே போய்விட்டீர்கள் கோபி?' என்று துடித்துப் போக வேண்டும்...

கண்களைத் துடைத்துக்கொண்டு எழுந்தவள் கோபியுடைய ஒரு நைட்டிடிரெஸ்ஸை எடுத்து, அவன் வழக்கமாய்ப் படுக்கும் படுக்கையில், நீளமாய்க் கிடத்தினாள்.

மேலே ஷர்ட்... தலைகாணியில் தலை வைத்துப் படுக்கிற மாதிரி... கீழே பைஜாமா...

ஷர்ட் ஆள் படுத்திருக்கும் ரீதியில் பார்த்தபின், விளக்கை அணைத்து, விடிவிளக்கை ஏற்றிவிட்டு, பக்கத்தில் படுத்தாள்.

எப்போதும் அவன் இப்படி மல்லாந்து படுத்து, தோளைப் பற்றி இழுத்து மார்பு மேல் போட்டுக் கொள்ளும் பழக்கத்தை நினைவுபடுத்திக் கொண்டு, தானாகப் புரண்டு விரித்திருந்த ஷர்ட்டின் மேல் தலை வைத்தாள்.

கண்களை மூடி, கோபியின் மார்பில் தான் படுத்திருக்கிறமாதிரியும் வலதுகையைத் தோளுக்கு அடியில் கொடுத்துத் தன்னை அவர் இறுக அணைத்திருப்பது போலவும் கற்பனை பண்ணிக் கொண்டாள்.

அப்படிப் படுத்தவாறுதான் மணிக்கணக்கில் அவர்கள் அன்றைய நடப்புகளைப் பற்றி பேசுவார்கள்.

ஆபீஸில் நடந்தவற்றை அவன் கூறுவான்... தான் நாள் பூராவும் என்ன செய்தேன் என்று அவள் விவரிப்பாள்...

ஒழுங்காக அவளைப் பேசவிடாமல் கோபி சீண்டிக் கொண்டே இருப்பான்... ஆள்-காட்டி விரலைக் காதுக்குள் விட்டுக் கிச்சு மூட்டுவான்... நெற்றியில் வளைய

ஒரு முடிக் கற்றையைத் தள்ளி விடுவான், எப்பி, வெட்டில், கண்களில் வரிசையாய், மென்மையாய் முத்தமிடுவான்.

''நா பேசறத காதுல வாங்கறீங்களா, இல்லியா?'' என்று அவள் சிணுங்கினால், 'நீ பேச, நா கேட்டுகிட்டே தான் இருக்கேன்' என்பான் கண்களைச் சிமிட்டிக் கொண்டு—

கோபிக்குக் கைகளில் ரோமம் அடர்த்தியாய் இருக்கும் வேண்டுமென்றே அடிக்கடி கையை அவள் கன்னத்தில் தேய்த்து உசுப்பி விடுவார், இல்லை...?

அப்புறம்...

உடம்பின் பரபரப்பு அதிகமாக சித்ரா அவன் மார்பை அணைக்கும் பாவனையில் கையை நீட்டினாள்.

நீட்டிய கை பசக்கென்று பக்கத்தில் விழுந்தது...

பட்டையாய்ப் படுக்கையில் விரித்திருந்த ஷர்ட், கன்னத்தில் உறுத்தியது...

கோபி இங்கு இல்லை... இந்த ஷர்ட்டும், பைஜாமாவும் கோபிக்கு ஈடு ஆகாது... கோபியை இனி காணமுடியாது, ஸ்பரிசிக்க முடியாது, அணைக்க முடியாது... அந்தச் சிரிப்பை, அந்தப் பேச்சை அந்த சுகத்தை அனுபவிக்க முடியாது...முடியாது...முடியாது இதுதான் நிஜம்... பாக்கி எல்லாம் பொய்...

கோபியோடு வாழ்ந்தது? அதுகூடப் பொய்யா?

கோபி உன் கூடவே இருப்பார், தைரியமாய் இரு, என்றார்களே அதெல்லாம் 'அழும் குழந்தையிடம் அழாம இருந்தா நிலாவ பிடிச்சுத் தரேன்' என்று பொய்யாக சமாதானம் செய்வது போன்ற வெற்றுப் பேச்சு...



கோபி கூட இருக்கிறாரா? எங்கே? 'இது ஏன் கோபி இப்படி இருக்கிறது?' என்றால் முன்பு டக்கென்று பதில் வருமே, அந்த மாதிரி இப்போது ஏன் வருவதில்லை? அந்த அணைப்பு, பேச்சு, பார்வை எதுவுமே இல்லாத போது கூட இருக்கிறார் என்று சொல்வது எதற்கு?

ஏன் இவர்கள் எல்லாம் இப்படி ஏமாற்றுகிறார்கள்.

என்னை ஏமாற்றுவதில் யாருக்கு என்ன லாபம்?

கோபி போய்விட்டார்—வாழ்க்கையைத் தனித்து வாழப் பழகு என்று விவேகத்துடன் சொல்லிக் கொடுக்காமல், எதற்காக இல்லாததையும், பொல்லாததையும் கூறி சப்பைக் கட்டுக் கட்டுகிறார்கள்!

கோபி நிஜமாகவே இல்லைதானா.

அப்படியானால் சற்றுமுன் கண்டெடுத்த அந்த முடி' உணர்ந்த உடம்பு வாசனை இதெல்லாம்?

அதெல்லாம்? நிஜம் தானே?

அப்புறம்?

கோபி இருக்கிறார், என் கூடவே இருக்கிறார் என்று நம்ப வேண்டுமா, இல்லை மறந்து விட்டார் இனி நான் தனி என்பதுதான் நிஜமா?

எது நிஜம், எது பொய்?

எது சரி, எது தவறு?

இருந்தும் இல்லாமலும்...

உணர்ந்தும் உணராமலும்...

என்ன அவஸ்தை இது...

என்னால் தாங்க முடியவில்லையே...

குழப்பமும், கோபி வேண்டும் என்கிற ஏக்கமும் எச்சரிக்கைக்கு அதிகமாக, எதுவும் யோசிக்க செய்யத் தெரியாத நிலையில் குப்புறப்படுத்து ரொம்ப நேரத்துக்கு சித்ரா அழுது தீர்த்தாள்.

உறங்கினது எப்போது என்று தெரியாமல், அழுது சோர்ந்து தானாகத் தூங்கிப் போனவள், வாசல் அழைப்பு மணி விடாமல் ஒலிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தாள்

மணி என்ன?

எட்டரை!

விடிகாலையில் ஆயா வந்து விடுவாளே?

இந்த கோபியாவது எழுப்பக்...

பாதி வரியில் சிந்தனை தடைபட்டது.

கோபி இல்லை...

இப்போது நான் தனி...

''மிஸஸ் கோபி...'' அழைப்பு மணியைத் தொடர்ந்து கதவைத் தட்டி, ஓர் ஆண் குரல் கொடுக்க, கூடவே ஆயாவும் 'அம்மா... அம்மா...' என்று கூப்பிடுவது கேட்டது.

கலைந்திருந்த தலைமுடியை ஒதுக்கி மேலாக்கைச் சீர் செய்து கொண்டு வாசக் கதவைத் திறந்தாள்.

சேர்மன் செல்வராஜ்...

ஆயா...

இருவர் முகங்களிலும் இவளைக் கண்டதும், அப்பாடி என்கிற நிம்மதி.

''காலைல பொழுதோடவே நா வந்துட்டேம்மா... தூக்கறப்ப எழுப்ப வேணாம்னு ஓரமா குந்திட்டு இருந்தேன்... ஆனா, இந்த ஐயா வந்துதட்டத்தட்ட நீ எழுந்து



வராம இருந்ததும் ஏடா கூடமா ஏதாச்சும் செய்துகிட்டியோனு பதீர்னுடுச்சு... இதுக்குத்தான் தனியா இருக்காத ...அம்மாவூட்டோட போயிடுனு சொன்னது... யம்மாடி... பத்து நிமிஷங்கள்ல உசுரு போய் வந்துச்சு...''

சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டு ஆயா உள் பக்கம் போக, அப்போதுதான் சேர்மன் நிற்பதை உணர்ந்த சித்ரா, இவர் எதற்காக இந்த காலை வேளை வந்திருக்கிறார் என்கிற கேள்வி கண்களில் தொக்கி நிற்க, ''உள்ள வாங்க'' என்றாள் சின்ன குரலில்...

## 15

''எப்படி இருக்கீங்க மிஸஸ் கோபி?''

இது என்ன கேள்வி என்கிற தொனியில் அவரை ஒரு தரம் பார்த்துவிட்டு சித்ரா விழிகளைத் தாழ்த்தாள்

''உங்க வீட்டுக்குப் போயிருந்தேன்; அப்பா சொன்னார் நீங்க இங்க இருக்கறதா... சொல்றேன்னு தப்பா எடுக்கக் கூடாது. மிஸஸ் கோபி... இந்த நிலைல நீங்க தனியா இருக்கறது அத்தனை சரியான முடிவா எனக்குத் தோணல... வேண்டப்பட்டவங்க கூட இருந்தா துக்கம் சீக்கிரமா ஆறும்னு சொல்வாங்க''

கண்களை இடுக்கிக் கொண்டு சித்ரா பேசியவரைப் பார்த்தாள் ''இதைக் கூறத்தான் இந்த காலை வேளையில் இங்கே வந்திருக்கிறீர்களா?'' என்று அந்த ஏறிடல்யில் கேட்டது

எதற்கும் பதில் கூறாமல், முகம் இறுகிப்போய் அவள் உட்கார்ந்திருக்க, தொடர்ந்து என்ன பேசுவது என்று புரியாமல் செல்வராஜ் தயங்கினார்.

மின்விசிறிக்கு மேல் கூடு கட்டிவிட்டு, சுழலும் விசிறியைப் பற்றித் துளி கவலைப்படாமல் காச் காச் என்று கத்திக்கொண்டு இங்கும் அங்கும் பறந்த சிட்டுக்குருவிகளை ஒரு நிமிஷம் வேடிக்கை பார்த்தார். கண்ணாடியை கழட்டி, துடைத்து மறுபடி மாட்டிக் கொண்டார். சித்ராவே ஏதாவது கேட்பாளோ என்று காத்திருந்து விட்டு, அவர் வரவு குறித்து அவள் எதுவும் வினவாதிருக்க, தானாக வந்த காரணத்தை விளக்கினார்.

"கோபியோட பண விவகாரம் பத்திப் பேச ரொம்பவர் அர்காவுக்கு போன் பண்ணினேன். அவங்க, ஏதுவானாலும் நீங்க சித்ராகிட்டயே பேசிடுங்க, அவ சொல்ல வேண்டிய விவரங்கள் என்கிட்ட சொல்லுவா... ன்னாங்க... அதான் வந்தேன்... கம்பெனி டைரக்டர்ஸ் கூட்டத்துல இரண்டு நாள் முன்னால கோபி சம்பந்தமா சில முடிவுகள் எடுத்தோம். உங்களைப் பொறுத்தவரை அவருடைய இழப்புக்கு நாங்க செய்யற எந்தக் காரியமும் ஈடாகாததுதான்... ஆனாலும் எங்களால முடிஞ்சதைச் செய்யலாம்னே விரும்பறோம்... கம்பனி கோபி பேர்ல வச்சிருந்த நம்பிக்கைக்கு அடையாளமா ஒரு குறிப்பிட்ட தொகையை உங்களுக்குத் தரணும்னு நினைக்கறோம்..."

சற்று நிறுத்திவிட்டு கம்பனி தர உத்தேசித்திருக்கும் பணத்தின் அளவை சேர்மன் வெளியிட்டதும், அது எதிர்பார்த்ததைவிட மிக அதிகமாக இருந்தும் அதனால் எந்த விதப் பாதிப்பும் உண்டாகாமல் சித்ரா அமர்ந்திருந்தாள்.

"உங்களுக்கு இந்த விஷயத்துல திருப்திதானே மிஸஸ் கோபி?"

சட்டென்று சித்ராவுக்குச் சிரிக்கத் தோன்றியது

கோபியை நிரந்தரமாய் இழந்ததன்மூலம் கிடைக்கும்



இந்தப்பணம் சந்தோஷத்தைத் தரும் என்று இவர் நிஜமாகவா நினைக்கிறார்.

கோபியே போய்விட்டார். அப்புறம் ஒரு லட்சமோ இரண்டு லட்சமோ வந்தால் என்ன? குறைந்தால் என்ன?

அவள் மன ஓட்டம் புரிந்தமாதிரி செல்வராஜ் பேசினார்.

'காயம் ஆறாத இந்த நிலைல உங்ககிட்ட பண விவகாரம் பேசறத்துக்கு மன்னிக்கணும் ஆனா, பிடிக்கலைன்றதுக்காகவோ, வலிக்குதுன்றதுக்காகவோ நம்மைச்சுத்தி நடக்கறது எதுவும் மறைஞ்சிப் போயிடறதில்ல மிஸஸ் கோபி... பணத்த பத்திப் பேச இவருக்கு இப்பதான் சமயம் கிடைச்சிதானு நீங்க வருத்தப்படலாம்... ஆனா, கட்டாயம் பேசியே தீர வேண்டிய நிலைல நா இருக்கேன்... வேகமா செயல்பட்டா கூட பணம் உங்க கைககு வந்து சேர எப்படியும் இன்னும் ஒரு மாசம் ஆகும்... அப்படி இருக்கிறப்போ உங்களுக்குக் கஷ்டமாயிருக்குமேனு நா பேசாம இருந்தா, பணம் கைக்கு வர மாசக் கணக்காயிடும்... பிடிக்குதோ, பிடிக்கலையோ, கௌரவமா ஒருத்தர் வாழ, அதுவும் உங்க நிலைல இருக்குற பெண் யார் தயவும் இன்றி சுய கௌரவத்தோடு வாழ, பணம் ரொம்ப அவசியம்... கம்பனி கொடுக்கப்போறதோட, இன்ஷூரன்ஸ் தொகையையும் சேர்த்து கணிசமான அளவா இருக்கும்னே நான் நினைக்கறேன்... அந்தப் பணத்தை நிரந்தரமா எப்படி முதலீடு செய்யறதுனு யோசிக்க அவகாசம் தேவை... அதுவரை ஏதாவது ஷெட்யூல்ட் பாங்கல குறைந்தகால டெபாஸிட்டா போட்டு வச்சிக்கன்னா, பணமும் பத்திரமா இருக்கும், வர்ற வட்டி செலவுக்கும் உதவும்...'

நிதானமாக, ஒரு குழந்தையிடம் எடுத்துச் சொல்வது போலப் பக்குவமாய் அவர் பேசப்பேச, சித்ராவினுள் இத

நாழிகை விரலிருந்த விரைப்பு கொஞ்சம் தளர்ந்து கொடுத்தது.

தன் நலனுக்காக. தான் ஓரளவாவது சிரமம் குறைந்து அடுத்தவர் மேல் சாயாமல் இருக்க நிஜமான கரிசனத்துடன் செயல்படுகிறார் என்பது புரிந்தது.

'தாங்க்ஸ்' என்று அவள் முணுமுணுத்ததும் செல்வராஜ் வேதனையுடன் அந்த நன்றியை ஏற்றுக் கொள்ள முடியாமல் தலை அசைத்தார்.

எதுக்காக தாங்க் பண்றீங்க மிஸஸ் கோபி? வந்து சேர்ந்து ரெண்டு வருஷத்துக்குள்ளயே, கோபி கம்பனிக்கு எத்தனை நல்ல காரியங்களைச் செஞ்சிருக்கிறார் தெரியுமா? உண்மையான உழைப்பாளிய இழந்திட்டது எங்களுக்கும், பெரிய நஷ்டம்தான்... இது சும்மா உங்களை திருப்தி பண்ண வேண்டி நா சொல்ல... வந்து... கோபிய டைரக்டரா ஆக்கறதுக்கு போர்ட் மீட்டிங்ல தீர்மானமான சமாசாரம் உங்களுக்குத் தெரியும் இல்லே?''

சித்ரா மனசுக்குள் அந்த வெள்ளிக்கிழமையைக் கொண்டு வந்து நிறுத்தினாள்.

எத்தனை சந்தோஷம்... என்னென்ன எதிர்காலத் திட்டங்கள்...

ஹாரிங்டன் சாலையில் பெரிய வீடு, கார், ஆட்கள் என்று ஒவ்வொன்றாய் நினைத்து அந்த இரவு பூராவும் எப்படியெல்லாம் குதூகலித்தார்கள்.

அத்தனையும் சீட்டுக்கட்டை வைத்து எழுப்பிய மாளிகை மாதிரி தடதடவென்று சில மணிநேரங்கள் போவதற்குள் இடிந்து சரிந்து...

எதிர்பார்ப்பு... ஏமாற்றம்...

நறுக்கென்று யாரோ கிள்ளி விட்ட வலியில் கண்களில் நீர் முத்துப்போலத் திரண்டது. விளிம்பு வரை ததும்பியதும் உருண்டு கன்னத்தில் வழிந்தது.



''ப்ளீஸ்... மிஸஸ் கோபி—உங்களுக்கு இதமா நாலு வார்த்தை சொல்லிட்டுப் போகணும்னு நா இங்கே வந்தேனே ஒழிய, அடங்கி இருக்கிற வேதனையை கிளறி விட இல்லே... ப்ளீஸ்... தேத்திக்கங்க...''

சித்ரா புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள். உள்ளங்கையை உதடுகள் மேல் அழுத்தி அழுகை பெரிசாகி விடாமல் அழுத்திச் சமாளிக்கப் பார்த்தாள்.

''இன்னொரு முக்கியமான விஷயத்தையும் உங்ககிட்ட சொல்லணும் மிஸஸ் கோபி...''

சித்ரா நிமிர்ந்தாள்.

''கோபிக்குச் சேர வேண்டிய பணம் பத்தி மட்டும் போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் முடிவு எடுக்கல, நீங்க விருப்பப்பட்டா, எங்க கம்பனில உங்களுக்கு வேலை தரணும்னு கூடத் தீர்மானிச்சிருக்கோம். நா ஏற்கனவே சொன்ன மாதிரி கோபி தன்னோட புத்தி, குணத்தால எங்க அத்தனை பேருக்குமே ரொம்ப நெருக்கமாய், இருந்தார். அப்படிப்பட்டவரோட மனைவிக்கு எங்களால ஆன சின்ன உதவியா இதைச் செய்ய விரும்பறோம்... ஏத்துக்கறதும் ஏத்துக்காததும் உங்க இஷ்டம்...''

அழுவதை நிறுத்திவிட்டு, சேர்மன் கூறியதைக் கவனமாய்க் காதில் வாங்கியவளுக்கு, கோபிக்குச் சேர வேண்டிய பணத்தைப் பற்றிச் சொன்ன போது உண்டான திகைப்பு, இப்போது இலேசாக எழுந்தது.

அது எதிர்பார்த்தது...

இது எதிர்பார்க்காதது...

சித்ரா எழுந்து குறுக்கும் நெடுக்கும் நடந்தாள்... நின்றாள், யோசித்துக் கேட்டாள்.

"நா மனோஇயல் படிச்சிருக்கேன்... இந்தத் தகுதியோட உங்க ஆபீஸ்ல வேலை பார்க்க முடியும்னு நினைக்கறீங்களா?"

"அடிப்படை புத்திசாலித்தனம்தான் முக்கியம். அது இருக்கறப்போ முயற்சி செய்தா எதையும் கத்துக்கிட முடியாதா?"

"என்ன வேலை தருவீங்க?"

"மானேஜ்மெண்ட் ட்ரெய்னியா எடுக்கலாம்னு டைரக்டர்ஸ் அபிப்ராயப்படறாங்க... கத்துக்குடுக்கற வேலைய திறமையா பிடிச்சுக்கிட்டீங்கன்னா ஒரு வருஷத்துல வேலைய உறுதி பண்ணிடுவோம். மானேஜ்மெண்ட் டிபார்ட்மெண்ட்ல மளமளன்னு முன்னுக்கு வர வாய்ப்பு உண்டு..."

"எதிர்பார்த்த ரீதில என்னால வேலை கத்துக்க முடியலைன்னா?"

"அக்கௌண்ட்ஸ் பிரிவுல வேலை பார்க்கலாம்... ஆனா, இதுல மேல வர்றதுக்கு அத்தனை ஸ்கோப் இல்ல... இத நீங்க புரிஞ்சிக்கணும்..."

சித்ரா சுவரில் சாய்ந்து நின்று, நகத்தைக் கடித்தாள் மீண்டும் நாற்காலியில் உட்கார்ந்தாள்.

"வேலைல சேர விருப்பமா இல்லியா இப்பவே உங்ககிட்ட சொல்லணுமா?"

"அவசியம் தேவையில்ல... உங்களுக்கு வேண்டிய அவகாசத்தை எடுத்துக்கிட்டு நிதானமா யோசிச்சு ஒரு முடிவுக்கு வாங்க... எந்த முடிவுக்கு வந்தாலும் அது உங்களுக்கு திருப்தியத் தர்றதா இருக்கணும்... இதான் முக்கியம்..."



செல்வராஜ் எழுந்து நின்றார்.

"திரும்பச் சொல்றேன், கோபிய... ஒரு சாதாரண ஊழியரா, நானோ மத்த டைரக்டர்களோ நினைக்கலேயில்ல... எங்கள்ல ஒருத்தராதான் அவர் இருந்தார். அதனால எந்த உதவி தேவைப்பட்டாலும் தயங்காம நீங்க எங்ககிட்ட கேக்கலாம்... என் வீட்டு டெலிபோன் நம்பர் உங்ககிட்ட இருக்கா? இந்தாங்க என் விஸிடிங் கார்ட்... இதுல ஆபீஸ் பர்ஸனல் நம்பர், வீட்டு நம்பர் எல்லாம் இருக்கு... நா வரட்டுமா...'

இரண்டு கைகளையும் கூப்பி விடைபெற்று அவர் நகர்ந்ததும் அப்படியே சோபாவில் காலை நீட்டி சித்ரா படுத்தாள்.

கோபியின் ஆபீஸில் வேலை...

கோபி வளைய வந்த இடத்தில், அவர் பழகி, சிரித்து, பேசின நண்பர்களோடு சேர்ந்து வேலை பார்க்க ஒரு சந்தர்ப்பம்.

நிர்வாகப் பிரிவில் பயிற்சி...

மனோதத்துவம் படித்த என்னால் நிர்வாகப் பயிற்சியைத் திறமையாய்க் கற்க முடியுமோ?

சேர்மன் 'அடிப்படை புத்திசாலித்தனம் இருந்தால் போதும். எதையும் கற்பது சுலபம்' என்றாரே—அதை நம்பி செயலில் இறங்கலாமா?

உண்மையிலேயே எனக்கு புத்திசாலித்தனம் இருக்கிறது என்று எண்ணி—இந்த வேலையைத் தர முன் வந்திருக்கிறார்களா, இல்லை கோபி மேல் உள்ள மதிப்பால், அல்லது 'ஐயோ பாவம்—இவள் புருஷன் போய் விட்டானே' இனி என்ன பண்ணுவாள்! என்கிற பரிதாபத்தில் போனால் போகிறது என்று சம்பளம் போட்டு ஏதோ வேலையைக் கொடுக்கத் துணிந்திருக்கிறார்களா?

அப்படியென்றால்... இதுவும் ஒருவிதத்தில் பிச்சை தானே—யாசகம் தானே?

"யாரிடமும் எந்தக் காலத்திலும் ஒரு ரூபாய் கடன் பட்டதில்லை என்றோ, இந்தக் காரியத்தை உனக்கு நான் செய்து கொடுத்தேனே என்றோ பேச்சே வராமல் வாழ முற்படுவதுதான் தன்னம்பிக்கைக்கு அடையாளம் என்று முன் ஒருநாள் எப்பவோ கோபியிடம் தான் கூறினது நினைவுக்கு வர, இப்போது என்ன செய்ய வேண்டும், முடிவு எந்த ரீதியில் இருக்க வேண்டும் என்பது குறித்து சித்ராவுக்குள் படபடப்பு எழுந்தது.

மேற்கொண்டு யோசிக்க முடியாமல், சுயபச்சாதாபம் மெல்லத் தலை தூக்கி 'ஏன் இந்த கோபி இப்படி அகாலமாய் போக வேண்டும்? எதற்காக என் வாழ்க்கையில் இப்படியெல்லாம் சங்கடங்கள் தோன்ற வேண்டும்?' என்கிற பதில்கள் இல்லாத கேள்விகளை எழுப்ப, கண்களில் நீர் உற்பத்தி ஆகி, குறுக்காக நெற்றிப்பொட்டில் இறங்கி, காதோர தலை முடியை நனைத்தது.

"வந்தவரு போயிட்டாரா?" —ஈரக் கையைப் புடவைத் தலைப்பில் துடைத்தபடி கூடத்துக்கு வந்த ஆயா, அழுது கொண்டு படுத்திருப்பவளைக் கண்டு விட்டுக் குரலை உயர்த்தினாள்.

"மறுபடி அழ ஆரம்பிச்சிட்டியா? இப்படி ரா இல்ல, பகல் இல்லேன்னு அழுதுகிட்டே இருந்தா உடம்பு என்னத்துக்கு ஆவும்? ம்? மகராசன் போயிருக்க வேணாம் போயிட்டாரு; என்னா பண்றது?... எல்லாம் தலை எழுத்து... அழுதுகிட்டே இருந்தா போனவரு வந்திடப் போறாரா?... எழுந்திரு, குளிச்சிட்டு வந்து ரெண்டு வாய் சாப்பிடு... அம்மாவூட்டுக்கும் போக மாட்டேன்றே... வயசுப் பொண்ணு... தன்னந்தனியா... யம்மாடி... ஆனாலும் ரொம்பத்தான் உனக்குப் பிடிவாதம்...சரி...எழுந்திரு



ராத்திரி வச்ச சாப்பாடு அப்படியே இருக்குது. அப்பால உடம்பு பலவீனப்பட்டுப் போகாதா? எழுந்திரு... வெங்காயம் போட்டு காரக் கொளம்பு வச்சி, கோஸ் பொரியல் பண்ணிட்டு இருக்கேன், நீ குளிச்சிட்டு வர்றதுக்குள்ள தயாராயிடும்... எந்திரி தாயி... சொன்ன பேச்ச கேளு... புண்ணியமா போகும்..."

பெற்ற தாயை விட ஆயா அன்புடன் பேசுகிற மாதிரி மனசில்பட, சித்ரா எழுந்தாள். துணிகளை எடுத்துக் கொண்டு குளிக்கப் போனாள்.

குளித்து உடுத்தி, சாப்பிட்ட நாழிகையில் சேர்மன் சொல்லிவிட்டுப் போன விவரங்கள் மீண்டும் நினைவில் சுழன்றன.

பணம்...

கோபியின் நிரந்தப் பிரிவால் கிடைக்கப் போகும் தொகை...

அதை விரல் நுனியால் தொடவேண்டும், எடுத்து ஆள வேண்டும்... அனுபவிக்க வேண்டும் என்கிற எண்ணமே, இருதயத்தை அதிர வைத்தது.

கோபியை இழந்ததன் மூலம் கிடைக்கும் பணத்தை நினைத்து சந்தோஷிக்க முடியுமோ...?

முடியுமோ, முடியாதோ சேர்மன் சொன்ன மாதிரி, 'என்னால் தனித்து வாழ முடியும்' என்று நிரூபிப்பதற்காகவாவது அதற்கான தன்நம்பிக்கை, தையரியத்தைத் தருவதற்காகவாவது பணம் தேவைதானே?

குற்ற உணர்வு இல்லாமல் அந்தப் பணத்தைக் கையாள முடியுமா?

யோசிக்க யோசிக்கக் குழப்பம் அதிகமாக, சித்ரா வலுக்கட்டாயமாக சிந்தனையை செல்வராஜ் கூறிய இரண்டாவது சமாசாரத்திடம் செலுத்தினாள்.

ஆபீஸ் வேலை...

ஏர்ப்ஜி, சுந்தர், ரகுநாதன், அப்புறம் அந்த இல் சொரூவர்யார் கறுப்பாய், எப்பப்பாரு வாயை மூடாமல் சிரித்துக் கொண்டே இருப்பாரே...அ... குமரேசன் எல்லா ருடனும் ஒன்றாய் வேலை பார்க்கும் அனுபவம் எப்படி இருக்கும்?

கோபியின் அலுவலகம் ரொம்ப நன்றாக இருக்கும்... ஏர்கண்டிஷண்ட் அறைகள்—ஆங்காங்கே குரோட்டன்ஸ் தொட்டி, திரைச்சீலைகள் என்று தடபுடலாய்தான் இருக்கும்...

சித்ராவின் நினைப்பு ஆபீஸிலிருந்து அந்த அலங் காரத்துக்கும், தொடர்ந்து பர்ஸனல் ஆபீஸர் ஸ்ரீனிவாஸ் மேலும் படர்ந்து...

ஸ்ரீனிவாஸின் பிள்ளைக்கு முதல் பிறந்தநாள் போது, அங்கு கோபியின் பால்யஸ்நேகிதர் ஒருத்தரை யதேச்சை யாய்ச் சந்தித்தோம் இல்லை?

அந்த ஸ்நேகிதர் அமெரிக்காவில் இருப்பதாகவும், லீவுக்கு வந்திருப்பதாகவும் சொன்னாரே? அவர் பேர் என்ன?

சின்ன வயசில் இவர் செய்த விஷமத்துக்காக கோபி வாத்தியாரிடம் அடிவாங்கியதைக் கூடச் சொல்லி இருவருமாய்ச் சிரித்தார்களே!

அவ பேர் என்ன?

ஒரு மாலைப் பொழுது பூராவும் சேர்ந்து இருந்திருக் கிறோம் இப்போது அவர் பேர் நினைவுக்கு வரமாட் டேன் என்கிறதே?



''அவர் பேர் என்ன கோபி?' என்று தன்னை மறந்து, என்னமோ அருகில் கோபி இருக்கும் நினைவில் கேட்க வாயைத் திறந்தவளுக்கு, சட்டென்று, கோபி இல்லை என்பது நினைவுக்கு வந்தது.

இனி, கோபியைக் கேட்டு மறந்துபோனது எதையும் நினைவுபடுத்திக் கொள்ள முடியாது...

இன்றைக்கு நண்பர் பேர் மறந்த நிலையில் நாளைக்கு வேறு ஏதாவது மறந்தால், அது அப்படியே மறந்து போக வேண்டியது தானா?

நாட்கள் நகர, நகர, கோபியோடு பேசினதுபழகினது எல்லாமே கொஞ்சம் கொஞ்சமாய் நினைவு போய் மறந்து போக ஆரம்பித்தால், அவற்றை மறுபடி எவ்வாறு ஞாபகப்படுத்திக் கொள்வது?

யாரிடம் போய் 'கோபிக்கும் எனக்குமிடையில் நடந்த சம்பவங்களை, பேச்சுக்களை நினைவுபடுத்துங் கள்' என்று கேட்க முடியும்?

சடக்கென்று ஒருவித பயம் சிறிக்கொண்டு எழுந்ததில் சித்ரா வெலவெலத்துப் போனாள்.

ஒவ்வொன்றாக வேண்டியவைகள் கூட மறந்துபோக ஆரம்பித்தால் என்ன செய்வது? அப்புறம் கோபியோடு வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தம்தான் என்ன என்கிற கேள்வி மின்னலாய் இறங்க, அவள் கை விரல்கள் நடுங்க முற்பட்டன. நெற்றியிலும் உதட்டு மேலும் குன்றுசி குன்றுசியாய் வேர்வைத் துளிகள் துளிர்த்தன.

பரிதவிப்பு அதிகரித்ததும் பாதி சாப்பாட்டில் எழுந்த வள், படுக்கை அறைக்குச் சென்று, கோபியின் புகைப் படத்தை மார்போடு அணைத்து அழுது தீர்த்தாள்.

அன்று மதியம் சித்ராவைக் காண 'சாந்தி சதனம்' என்கிற முதியோர் இல்லத்தைச் சேர்ந்த பார்வதி வந்திருந்தார்.

இந்த முதியோர் இல்லத்துக்கு எப்பொழுது முடிந்த போதும் போய் பாட்டிகளுக்குத் தன்னாலான உபகாரங்களை சித்ரா செய்துவிட்டு வருவது வழக்கம்...

பார்வதி இல்லத்தின் வார்டன்...

''எப்படி இருக்க சித்ரா? வரணும்னுட்டு ஒரு வாரமா முயற்சி பண்றேன்—முடிய மாட்டேங்குது... படுத்த படுக்கையா இருந்தாங்களே அந்த சாவித்திரி பாட்டி இறந்திட்டாங்க...பாவம் இருக்கிறவரைக்கும் கஷ்டமான கஷ்டப்பட்டாங்க... சாவுலேயும் வேதனைதான்... ஆனா அத்தனை சிரமத்துலேயும், மறக்காம 'என் கண்களை தானம். கொடுத்திடுங்க'னு சொல்லிட்டுப் போனாங்க தெரியுமா?...தாமும்மா உன்னைப் பாக்கணும்னு துடியா துடிக்கறாங்க... 'சின்னப்பொண்ணுக்கு இப்படியொரு நிலையா? நாங்கள்ளாம் வாடி வதங்கி, யாருக்கும் உபயோகம் இல்லாம இருக்கமே, நாங்க அந்த எமதர்மன் கண்ணுல படக்கூடாதா? கோபிக்குப் பதிலா என்னை எடுத்துக் கிட்டுப் போகக்கூடாதா?'னு புலம்பிக்கிட்டே இருக்காங்க...''

தாமு பாட்டிக்கு வயசு எழுபதுக்கு மேலேயே இருக்கும்...இடுப்புக்குக் கீழ் பாரிச வாயு வந்த பிறகு பெற்ற பிள்ளையாலேயே 'எனக்கு நீ வேண்டாம்' என்று ஒதுக்கப்பட்டவர்...

''ஆமா, நீ எப்படி இருக்கே...அழுதியா? முகம் வீங்கிக் கிடக்கே?''

அன்போடு பார்வதி வினவ, அடங்கி இருந்த கண்ணீர் மீண்டும் வெளிவருவேன் என்று முரண்டியது.



பார்வதி அவள் முகவாயைக் கைகளில் ஏந்திக் கொண்டார். கண்களைத் துடைத்து விட்டார்.

''நடந்தது நடந்தாச்சு... அதை நினைச்சு இடிஞ்சு போகாம, நடக்கப்போறது என்னனு யோசிக்கறதுதானே விவேகம் சித்ரா?''

அந்தக் கைகளில் சித்ரா முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

''என்னால தாங்கிக்க முடியல...என் கோபிய பிரிஞ்சு இருக்க முடியல...இந்த சின்ன வயசுல தெய்வம் ஏன் அவரை அழைச்சுக்கிட்டது பார்வதியம்மா?''

''சின்ன வயசுதான்...ஆனா சித்ரா இந்தக் கடவுள் ஏன் சிலசமயம் சில காரியங்களை செய்யறார்னு யாராலயும் விளக்க முடியாதும்மா... தோட்டத்துலேந்து ஒண்ணைப் பறிச்சுக்க'னு சொன்னா, நாம என்ன பண்ணுவோம்; வாடின பூவைப் பறிப்போமா? இருக்கறதுக்குள்ளியே வாசனையா, கலரா, புதுசா பார்த்துதானே பறிப்போம்? கடவுளும் மனுஷத் தோட்டத்துலேந்து ரொம்ப உசர்வான மனுஷரைத் தன் கிட்ட வச்சிக்கணும்னு தீர்மானிச்சிட்டா, அத யாரால மாத்த முடியும்? ம்?...''

சித்ரா அழுகையோடு அவர் கூற்றை மறுத்தாள்.

''எனக்கு இந்த சப்பக்கட்டெல்லாம் வேணாம்...நா என்ன பாவம் பண்ணினேன் இந்தத் தண்டனை பெற? கடவுள்னு ஒருத்தர் இல்லவே இல்ல...இருந்தா இப்படி பாரபட்சமா நடந்துக்கவே மாட்டார்''

பார்வதி வேதனையுடன் புன்னகைத்தார்

''இங்கதான் நீ தப்புப் பண்றே சித்ரா. கடவுள் மேல் உனக்குக் கோபம், அவர் கோபிய எடுத்துக்கிட்டார்னு. இல்ல? சரி நா ஒண்ணு கேட்கட்டுமா? ஒன்னைக்

கொடுத்தாதானே, திரும்ப அதை எடுத்துக்கிட முடியும்? கோடானு கோடி ஜனங்கள்ல உன்னைத் தேர்ந்தெடுத்து அந்த அற்புதமான கோபிய ஒப்படைச்சாரே அப்ப நீ அவருக்கு நன்றி சொன்னியா? பத்து வருடம் தாலி கட்டிகிட்டு வாழ்ந்தும் புருஷன் கிட்ட உதை, அடி, இட்டு தவிர சத்தியமா வேறு எதுவும் நா அனுபவிச்சதில்ல... கடுகு கத்தைத் தாராம என் புருஷன் போயிட்டார்... ஆனா நீயும் கோபியும் ஏழு மாசம் வாழ்ந்தாலும் எத்தனை உயர்வா தாம்பத்தியம் நடத்தினீங்க? அந்த இன்பத்தைத் தந்த ஆண்டவனுக்கு முதல்ல நன்றி சொல்லி முடிச்சிட்டு இப்ப ஏன் எடுத்துக்கிட்டேங்கறு உன்னைட போட முன்னுக்கும்? நன்றி சொல்லு மனப்பக்குவத்தை வளர்த்துக்கிட்டா அப்புறம் சலிப்போ, வெறுப்போ வராது சித்ரா... என்னை தப்பு... இல்லாதுக நினைச்சு எங்கிருந்துவிட... இருக்கறதை வச்சு சந்தோஷிக்கறதுதானே புத்திசாலித்தனம்... என்னம்மா!''

மாலை, இரவிலும பார்வதி பேசின பேச்சுக்கள் விடாமல் காதிலும் ஒலித்து புத்தியில் ஏறி கட்டாரத்தில் மறுநாள் தர்மாலைச் சந்தித்து, வேலை விஷயமாய்ப் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்கிற தெளிவு கல்ல மாயச் சித்ராவுக்குள் உண்டாகவே செய்தது.

## 16

நீலக் கரையிட்ட வெள்ளை கோட்டா புடவையைப் பிரித்து உள் முனையை பெட்டிகோட்டில் சொருகுகையில் அருகில் கோபி நின்று ''ஹலோ தேவதை'' என்று கண்களைச் சிமிட்டுச் சாக்கிற உணர்வு எழுந்தது.

தலைக்குக் குளித்து, சாம்பிராணி வாசத்துடன் புலர்ந்த முடியைத் தளரப் பின்னி, செண்டாய் மல்லிகை



வைத்து, மணக்க' இந்த 'ஸ்லைவா கோட்டாவில் ஒரு நாள் நின்றவளைக் கையில் குழந்தை யாதிரி வாரி எடுத்த போது அவன் அவளுக்கு வைத்த பெயர் ''தேவதை.''

கொசுவத்தைச் செருகி அது விழுந்துவிடாதிருக்க வேண்டி 'பின்'னைக் குத்துகையில் விரல்கள் நடுங்கிட வேகத்தில் ஊசியின் நுனி நுனியைக் தாண்டிக்கொண்டு ஆள்காட்டி விரலில் ஏறியது.

சித்ரா கையை உதறினாள். விரல்மேல் பொட்டாக துளிர்த்த ரத்தத்தை வாயில் வைத்துச் சப்பினாள்.

கண்ணீர் 'நானும் வெளிப்படட்டுமா?' என்று கேட்டது.

நோ... கூடாது... இப்போது பலவீனத்துக்குத் துளி இடம் கொடுத்தாலும் அது க்ஷணத்தில் பெரிசாகி வேறு எந்த வேலையையும் கவனிக்க விடாமல் ஆளை அமுக்கி விடும். பிழியப் பிழிய அழ வைக்கும்—தலைவலியை உண்டாக்கும். கண்களை எரியச் செய்யும்... அப்புறம் எதுவும் பிடிக்காமல் சேர்ந்து படுக்க வைத்துவிடும்...

இல்லை... இன்னைக்கு அப்படி படுக்க நேரம் இல்லை.

மேடத்தை அவர் கல்லூரிக்குப் புறப்படும்முன் சந்திக்கத்தான் உண்டு. இல்லை என்றால் மாலை வரை காத்திருக்க வேண்டும். சேர்மன் வேலையில் சேரும்படி அழைப்பு விடுத்திருப்பதைக் கூறி, அவர் கருத்தைக் கேட்டுப் புறப்படுவதற்குள் இருட்டி விடும்... 'இந்த நேரத்தில் தனியாகப் போக வேண்டுமா? இங்கே என்னோடு தங்கிவிடேன்' என்று அவர் ஆரம்பித்தால் மீறிக்கொண்டு வருவது கஷ்டம்...

தலையை வாரிப் பின்னிய சித்ராவின் சிந்தனை சட்டென்று எங்கோ திசை மாறியது.

மேடத்திடம் ஒரு மரியாதைக்காக இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டி வருகிறதே தவிரவும், அவர் யோசனையை ஏற்றுக்கொண்டே தீர வேண்டும் என்கிற நிர்ப்பந்தம் எதுவும் இல்லை அப்படி வேண்டும் என்கிற கட்டாயத்தில் நான் இல்லை... நான் தனி... கோபி இருந்த வரையில் அவருக்கு மட்டுமே கட்டுப்பட்டவள்... இனி யாருக்கும் எந்த விளக்கமும் கொடுக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை... சேர்மன் விடுத்திருக்கும் அழைப்பை ஏற்பதும் ஏற்காததும் என் விருப்பம்... என்னைப் பெற்றவர்கள் ஆகட்டும் இல்லை மேடம்தான் ஆகட்டும் அவரவர் செய்யப்போகும் காரியங்களை என்னிடம் கூறுகிறார்களா? அனுமதி கேட்கிறார்களா? இல்லையே... கோபி போய்விட்ட காரணத்தால் என் சிந்தனைகள், நடவடிக்கைகள் மட்டும் எதற்காக 'திறந்த புத்தகமாக' வேண்டும்? தேவையே இல்லை... நான் தனி...

அப்படியானால் எதற்காக இந்தக் காலை வேளையில் விழுந்தடித்துக் கொண்டு மேடத்தைப் பார்க்க ஓட வேண்டும்? அவசியம் இல்லை என்றால் தானே முடிவை எடுத்துவிட்டுப் பின்னர் மேடத்தைப் பார்க்கும்போது சொல்லிக் கொள்ளக் கூடாதா?

என்னென்னவோ விளக்கங்களும் தொடர்ந்து வேண்டாத கேள்விகளும் எழ, குழம்பிப் போன சித்ரா கட்டில் மேல் உட்கார்ந்தாள்.

கோபி இருந்தால் இந்த மாதிரி குழப்பத்துக்கு இடமே இருக்காது எதையும் தெளிவாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டால் அப்புறம் அது சரியா தவறா என்று அவன் தடுமாறி சித்ரா பார்த்ததில்லை.

கோபி இருந்தால்—''என்ன செய்யலாம் கோபி? சேர்மன் வேலை தருவதாகச் சொல்கிறாரே ஏற்றுக் கொள்ளலாமா, அல்லது வேறு ஏதோ...''



எண்ணம் தடைப்பட, சித்ரா மலங்க மலங்க விழித்தாள்!

கோபி இருந்தானா? என்ன பைத்தியக்கார நினைப்பு இது!

கோபி இருந்தால் இந்தக் கேள்விக்கே இடம் ஏது?

சித்ரா கைகளில் முகத்தைப் பதித்துத் தன்னை ஆஸ்வாசப் படுத்திக் கொள்ள முயன்றாள்

எப்போதோ படித்த 'குட்டிக்கதை' ஒன்று நினைவில் எட்டிப் பார்த்தது.

தத்தாரிப் பிள்ளையைப் பெற்றுவிட்ட ஏக்கத்துடனேயே அவனைப் பெற்றவள் இறந்து போனாளாம்... அம்மாவின் சாவினால் மனம் மாறிய பிள்ளை காரியங்களை ஊராரும், உறவாரும் மெச்சும் வகையில் செய்து முடித்த பின்னர் பெரிதாய் அழ முற்பட்டானாம். 'ஏண்டா அழுகிறாய்?' என்ற போது 'இத்தனை பொறுப்பாகக் காரியங்களை நான் செய்வதை அம்மா பார்த்தால் எத்தனை நன்றாக இருக்கும்?' என்று புலம்பினானாம்... காரியங்கள் நடப்பதே அம்மாவுக்காக என்கையில், அந்த அம்மா பார்த்து மெச்ச முடியவில்லை என்று வருந்தின கதையாய் தன் நிலையும் இருப்பது புரிய, பெருமூச்சுடன் சித்ரா எழுந்து நின்றாள்.

கண்ணாடி முன் குனிந்து, முகத்தில் லேசாக லோஷனைத் தடவினாள், சிகப்புப் பொட்டு ஒன்றை அட்டையிலிருந்து எடுத்து நெற்றியில், புருவ மத்தியில், தாழ ஒட்டிக் கொண்டாள்

அலமாரியைத் திறந்து பர்ஸில் பணம் இருக்கிறதா என்று பார்த்தவள், அதை வெளியில் வைத்துவிட்டு அலமாரியைப் பூட்டின நிமிஷத்தில் ''பால் கார்டு வாங்கணும்... இன்னிக்கு விட்டா நாளைக்கு ஆபீஸுக்குப்

போயிடுவான்..." பேசிக்கொண்டே அறை வாசலில் எட்டிப் பார்த்த ஆயா, அவள் வெளியே போகத் தயாராக இருப்பது புரிய பேசுவதை நிறுத்தினாள்.

கொஞ்சம் மௌனித்துச் சின்ன குரலில் வினவினாள்.

"வெளில போறியா?"

"ம்"

"நானும் உங்கூட வரட்டுமா?"

"எதுக்கு?"

"இல்ல... வந்து... மனசு இன்னும் தேறாத நிலையில இருக்குற ஒன்ன தனியா விட வேணாம்னுதான்னு"

சித்ரா புன்னகைக்க முயன்றாள்.

"கவலைப் படாத ஆயா... எனக்கு ஒண்ணும் ஆகாது... துர்காம்மா வீட்டுக்குப் போயிட்டு ஒரு மணி நேரத்தில வந்துடுவேன்... நீ இங்கயே இருக்கியா? இல்ல வீட்டுக்குப் போயிடறியா?"

"நீ பால் கூப்பனுக்குப் பணம் குடு... நா பூத்துல கட்டிட்டு, சாயங்காலமா வந்திடறேன்... ஆமா... வெறும் வயித்தோடயா போப்போறே? சமையல்... ஆயிடுச்சி... ஒரு வாய் சாப்பிட்டுப் போ தாயி... மாடிவூட்டம்மா கூட உனக்காக இன்னைக்குல ஏதோ பதார்த்தம் கொணாந்து குடுத்துட்டுப் போயிருக்காங்க..."

ஒரு வாரமாய் தினமும், சாப்பிடாம இருந்தா உடம்பு கெட்டுப் போயிடும்மா... பல்லைக் கடிச்சுக்கிட்டு இரண்டு உருண்டை உருட்டிப் போட்டுக்கோ" என்று அலாதி பரிவுடன் ஞானம்மா மாடிக்கும், கீழ் வீட்டுக்கு மாய் அல்லாடுவதோடு தப்பாமல் பொரியல், குழம்பு, கலந்த சாதம் என்று எதையாவது தூக்கி வந்து இவளைச் சாப்பிட நிர்ப்பந்திப்பதை எண்ணுகையில், கூடவே 'நீ



எக்கேடு கெட்டால் எனக்கென்ன?" என்கிற வைராக்கியத்துடன் திரும்பிப் பார்க்காமல் பெற்றவர்கள் இருப்பதும் ஞாபகத்துக்கு வந்தது.

இருக்கட்டும்... தள்ளியே நிற்கட்டும்... இவர்களுக்கு நான் வேண்டாமென்றால், அவர்களும் எனக்கு வேண்டாம்...

ஆயுசுபர்யந்தம் சாய்மானமாக, துணையாக இருக்கப் போகிறார் என்று நம்பியவர் இல்லாமலேயே என்னால் வாழ முடியும் என்றால் இவர்கள் நெருக்கம், அரவணைப்பு இன்றி இருக்க முடியாதா?

ஏன் முடியாது...முடியும்...முடிய வேண்டும்.

"தட்டு வைக்கட்டுமா?"

உதட்டைக் கடித்துப் படபடப்பை அடக்கியவாறு சித்ரா ஆயாவை ஏறிட்டாள்.

"வேணாம்...போயிட்டு வந்து சாப்பிடறேன்... இப்ப பசி இல்லை..."

'ப்ச்' என்று உள் கொட்டியவாறு திரும்பிய ஆயாவை சித்ரா மீண்டும் அழைத்தாள்.

"மாடி வீட்டம்மா நேத்து, அதுக்கு மொத நாளும் பதார்த்தம் வச்சுக் கொடுத்த கிண்ணங்கள் அவங்ககிட்ட திருப்பிக் கொடுத்திட்டியா?"

"இல்ல, கழுவி வச்சிருக்கேன்...சாயங்காலமா இன்னி பாத்திரத்தையும் சேர்த்துக் கொடுத்திடறேன்..."

"ம்ம்?"... சித்ரா புருவங்கள் லேசாக முடிச்சுப் போட நின்றாள். மாடிக்கு தானே போய் 'தாங்க்ஸ் ஞானம்மா'—என்று கூறிவிட்டுப் போனால் என்ன? ஒரு நிமிஷம் கூட ஆகாதே!

"அந்தக் கிண்ணங்கள் எடுத்துட்டு வா... நானே கொண்டு கொடுத்திடறேன்..."

சித்ரா பேசி முடிப்பதற்குள் என்னமோ சொல்லக் கூடாததை அவள் கூறிவிட்ட தினுசில் ஆயா பதறினாள்.

"மாடி வீட்டுக்கா? நீயா? வேணாம்...வேணாம்... நானே கொண்டு தந்துக்கறேன். நீ ஞானம்மா வீட்டுக்குக் கிளம்பு..."

ஆயாவின் பதட்டம் சித்ராவுக்கு எரிச்சலைத் தந்தது.

"ஏன், நா கொண்டு கொடுத்தா என்ன?"

"அட, வேணாம்னா கேளு..."

"அதான் ஏன் வேணாம்னு கேக்கறேன் இல்ல?"

என்ன சொல்வது என்று சில கணங்களுக்கு ஆயா பரிதவித்தாள். புடவைத் தலைப்பால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு எதுவும் கூறாமல் உள்ளே போகத் திரும்பியவளை சித்ரா அதட்டி நிறுத்தினாள்.

"நா கேக்கறது காதுல விழல?"

"அய்யோ... சொல்றத கேக்க மாட்டேன்னு பிடிவாதம் பண்றியே தாயி... உன் மனசு நோகும்னு தானே நா பேசாம போறேன்"

சித்ரா கண்களை இடுக்கிக் கொண்டாள்.

"பரவாயில்ல எதுவானாலும் சொல்லு..."

"வந்து...அவங்க வீட்டுக்கு ஒரு வருஷ காலம் நீ போகாம இருக்கறதுதான் எல்லாத்துக்கும் நல்லதும்மா..."

"என்னது?"



"ஆமா தாயி... ஞானெம்மாக்கும் அவங்க புருஷனுக்கும் அந்த சம்பிரதாயத்துல எல்லாம் நம்பிக்கை உண்டு போல... 'தெரியாத்தனமா வந்துடப்போறா, நீ பக்குவமா சொல்லி வை'னு என்னாண்ட நீ இந்த வீட்டுக்கு வந்த கையோட சொல்லிட்டாங்க... அதான் குப்புறவிழாத கொறையா அப்பப் புடிச்சுத் தடுக்கறேன்..."

சித்ரா அதிர்ந்தாள்.

"ஏன்... ஏன் வரக் கூடாதாம் ஆயா?" என்றபோது அதிர்ச்சியில் குரல் தழுதழுத்து வெளிப்பட்டது.

"எல்லாம் பெரியவங்க வச்சிருக்கிற சம்பிரதாயங்கள் தான், மூளியா போனவங்க 'கரிக்கல்லு' பட்டா எதுவும் துளிர்க்காதுன்ற நம்பிக்கைல..."

சித்ரா காதுகளை மூடிக்கொண்டாள்.

பழக்க வழக்கங்கள்...

சம்பிரதாயங்கள்...

கணவனை இழந்தவள் சௌபாக்கியம் இல்லாதவள். அவள் கால்பட்டால் கண்பட்டால் அமங்கலம் நிகழ்ந்து விடும் என்கிற மனிதாபிமானமற்ற நம்பிக்கைகள்...

ஐயோ கடவுளே...

என்ன காட்டுமிராண்டித்தனம் இது!

யார் ஏற்படுத்தினார்கள் இந்தக் கேவலமான பழக்க வழக்கங்களை?

ஞானெம்மாவுக்குக் கூடவா இந்த அநாகரீக நம்பிக்கை இருக்கிறது?

தாயைவிட மேலாக என்னிடம் பரிவுடன் பேசி, பழகி, 'உன் முகத்துல விழிச்சாலே எனக்கு எல்லாம் நல்லபடியா நடக்குது சித்ரா... நீங்க இங்க வந்த நாளா எங்க

வீட்டுக்காரர் வியாதிகூட கட்டுப்பட்ட மாதிரிதான் தோணுது' என்று வாயாரப் புகழ்ந்த ஜானகிம்மாவுமா?

சடக்கென்று ஒருவித ஏமாற்றமும், ஆத்திரமும் அவளை ஆக்ரமிக்க, சித்ரா தான் வெளியில் செல்லத் திட்டமிட்டிருந்ததை மறந்து கட்டிலில் விழுந்தாள்.

''என்னம்மா ...அய்யோ ... எதுக்காவ இப்ப நீ இப்படி அழுவுறே... அவங்க வீட்டுக்குப் போகாட்டி என்ன? குடியா முழுகிடும்...? 'அடப்போ'ன்னு ஒதுக்கித் தள்ளாம என்னை தாயி...அம்மாடி...'' என்று விசும்பலோடு தேற்றிய ஆயாவை இலட்சியம் பண்ணாமல் தலைகாணியில் தலையைப் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினாள்.

அன்று மாலை துர்காவே இரண்டு நாட்களாகிவிட்டபடியால் கல்லூரியிலிருந்து வீடு திரும்பும் வழியில அவளைப் பார்க்க வந்தார்.

பை நிறைய பழங்கள், இரண்டு முழம் பூவுடன் ஆயா படி ஏறினபோது சித்ரா காலையில் படுக்கையில் படுத்த இடத்திலேயே சுருண்டு படுத்திருந்தாள்.

கதவைத் திறந்துவிட்ட ஆயாவிடம் பையை நீட்டி ''எப்படி இருக்காங்க?'' என்று தாழ்ந்த குரலில் வினவியதும் ஆயா காலையில் நடந்தவற்றை மறைக்காமல் அவரிடம் கூறினாள்.

ஒரு நிமிஷம் அப்படியே நின்று சித்ராவை என்ன சொல்லிச் சமாதானப்படுத்த வேண்டும் என்று யோசித்த பிறகு துர்கா அவளைத் தேடிக்கொண்டு உள் அறைக்குச் சென்றார்.

''இருட்டுல என்ன பண்றே சித்ரா?''

இதமாக [illegible] விளக்கை ஏற்ற, கண்கள் கூசிய காரணத்தாலும், அவரோடு பேசும் மன நிலையில் இல்லாததாலும் சித்ரா புரண்டு படுத்தாள்.



துர்கா அவள் அருகில் வந்து படுக்கையில் அமர்ந்தார்.

முடியை ஒதுக்கிவிட்டு, தோளைத் தட்டினார்.

''காலையிலேந்து சாப்பிடவேயில்லைனு ஆயா வருத்தப் படறா... பட்டினி கிடந்தா மனசு எப்படிம்மா தேறும்?''

''......''

''வீட்டுலேயே இருந்தா மனசு வேதனை அதிகமாகத் தான் ஆகும் சித்ரா... எழுந்திரு... காலாற நடந்திட்டு வரலாம்... காலையில என் வீட்டுல வர்றதுக்காகப் புறப்பட்டியாமே... வந்திருக்கறது தானேம்மா?''

சித்ரா சரக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

''உங்க வீட்டுக்கு நா வரலாமா? நிஜமா சொல்றீங்களா மேடம்? நா வந்து போறதால எதாவது அபசகுனம் நடந்தா, பரவாயில்லையா? தாங்கிப்பீங்களா?''

துர்கா சிரித்து, சூழ்நிலையின் இறுக்கத்தைக் குறைக்க முயன்றார்.

''ச்சே .. என்ன சித்ரா! அசடு மாதிரி பேசாதே!''

''நா அசடுதான்... ஆனா வேண்டாத மூட பழக்கங்களை நம்பிட்டு இருக்கிறவங்க ரொம்ப சமத்து. அதானே?''

''யாரும் உன்னைக் காயப்படுத்தணும்னு எந்த முடிவையும் எடுக்கல சித்ரா... முக்கால்வாசி பேர் பரம்பரை பரம்பரையா செஞ்சிட்டு வர்ற காரியங்களை பழக்க தோஷமா செய்யறாங்களே தவிரவும்...''

அவரை முடிக்கவிடாமல் சித்ரா குறுக்கே புகுந்து கத்தினாள்

''வேணாம் மேடம்... ஏதாவது சாக்குபோக்குச் சொல்லி மனுஷங்க சுயருபத்த நா புரிஞ்சுக்கத் துவங்கி

இருக்கிறத வெறுத்திடாதீங்க... தப்பு பண்ணிப் பேசாம இருங்க...

அம்மாவைவிட உயர்வா நினைச்ச ஜானகிம்மாவே நேர்ல என்னைப் பாத்தா, நா அவங்க வீட்டுக்கு வந்தா அபசகுனம்னு நினைச்சிட்டாங்கன்னது கேள்விப் பட்டப்போ, என் மனசு எப்படி உடைஞ்சி போச்சுத் தெரியுமா?... கோபி என்னை விட்டுப் போயிட்டதால என் மனசு கெட்டுப் போயிடுமா? இத்தனை நாள் இல்லாத பொறாமையும், ஆங்காரமும் இப்ப என் மனசுக்குள்ள வந்திடுமா? ஒருத்தியோட மனசு நல்லதா இருக்கறதுக்கும், இல்லாததுக்கும் அவ புருஷன்தான் காரணமா? என்ன மனுசங்க இவங்க... எனக்கு... ஒண்ணுமே புரியல மேடம்...''

முகத்தில் கைகளைப் பதித்துக்கொண்டு பரிதவித்தவளின் கையைப் பற்றி துர்கா சமாதானப்படுத்த முயல சித்ரா முழுமையாய் உடைந்து போனாள்.

''என் ஸ்நேகிதி ஒருத்திக்கு 'சுமங்கலி'னு பேர்... அவ புருஷனை இழந்திட்டா, அவள என்னனு கூப்பிடுவாங்க? அவ பேர கூட மாத்திடுவாங்களா? நல்ல மனுஷியா என்னென்னிக்கும் வாழணும்ங்கற ஆசைய சின்ன வயசுலேந்தே ஒரு லட்சியமா வச்சிக்கிட்டு இருக்கிறதே தப்பு தானா? என்னை, என்மனசை யாரும் புரிஞ்சிக்கவே மாட்டாங்களா! எனக்கு ஒண்ணும் புரியல... எதுவுமே பிடிக்கல... யாரை நம்பறதுனு தெரியல... நானும் செத்துப் போயிடறேன் மேடம்... என் கோபி போன இடத்துக்கே போயிடறேன்... என்னால இந்த சித்ரவதைய தாங்க முடியல... அம்... மா... ஆ... ஆ...''

சின்ன குழந்தையாய் வாய்க்கு வந்ததை உளறி, கதறி அழுபவளை மார்போடு துர்கா இறுக அணைத்துக் கொண்டார். ஒரு வார்த்தை பேசாமல் அவளைத் தன் போக்கிலேயே போக அனுமதித்தார்.



சுமார் அரை மணியில் மெள்ள மெள்ள சித்ரா அடங்கினதும் ஆயாவை விட்டு சூடாகக் காபி கலந்து வரச் சொல்லி அவளைக் குடிக்க வைத்தார்.

களைத்து ஓய்ந்துவிட்டாள்; இனி முரண்டு பிடிக்க மாட்டாள் என்பது விளங்கக் கட்டாயப்படுத்தி எழுப்பி முகம் கழுவச் செய்து, தலையைத் தானே வாரி, பின்னி பொட்டு இட்டு, வாங்கி வந்திருந்த பூவில் துளி கிள்ளி அவள் தலையில் வைத்தார்.

அவள் முகத்தைக் கையில் ஏந்தி, ''உன்கிட்ட எந்தக் குறையும் இல்ல... சத்தியமா சொல்றேன்; உன் மனசு எந்த விதத்துலேயும் கெட்டுப் போகல, சௌபாக்கியத்துலயும், யாருக்கும் நீ துளியும் குறைஞ்சிடல... உன் நல்ல மனசு எனக்குத் தெரியும்... இனியொருதரம் யாரோ எதுவோ சொன்னான்னு நீ உடைஞ்சு போனா, அதைத் தான் என்னால தாங்கிக்க முடியாது. விவேகத்தோட நீ எந்தக் காரியத்தையும் அணுகறதப் பத்தி கோபி அடிக்கடி என்கிட்ட பெருமைப்பட்டுப்பான் தெரியுமா? அந்த நம்பிக்கைய தொடர்ந்து நீ காப்பாத்தணும்... அதுதான் முக்கியம்... உன்னைத் தெரியாத பத்துப் பேர் சொல்ற அபிப்ராயம் பெரிசா, இல்ல. உன்மேல சால நம்பிக்கை வச்சிருக்கிற என் அபிப்ராயம் உனக்கு முக்கியமா? ம்? தெளிவா யோசனை பண்ணா உன் அசட்டுத்தனம் உனக்கே புரியும்...வீணா குழம்பாத சித்ரா... போனதை விட்டுட்டு வரப்போறதைப்பத்தி சிந்தனைசெய். அப்பதான் பழையபடி புன்னகைக்கவும், உலகத்தைத் தைரியமா எதிர்நோக்கவும் உன்னால முடியும்... 'ரியாலிடி'ங்கறது நிழல் மாதிரி... அது நம்பகூடத்தான் வரும்... அதுக்குப் பயந்துகிட்டு ஓட ஓட அதுவும் பின்னாலேயேதான் வரும். நின்னு, திரும்பி, 'அட, நீதானா நீ'னு ஒருதரம் கேட்டுட்டா, அப்புறம் எந்த கஷ்டத்தை எதிர்நோக்கறதும் அத்தனை சிரமமா இருக்காது... நா சொல்றேன்னு புரியிறதாம்மா?', அந்த நிமிஷத்தில் துர்காவின்

பேச்சு சித்ராவின் அடிபட்ட மனசுக்கு அற்புதமான மருந்தாக இருந்தது.

சொல்ப நாட்களுக்குப் பிறகு துர்காவின் தெளிவான பேச்சைக் காதில் வாங்கி, மனசில் படர விட்டதில் சீக்கிரமே சித்ரா நிதானத்துக்கு வந்தாள்.

இரு நாழிகை மூச்சுவிட முடியாமல் அழுக்கில பாரம் இறங்கிவிட்ட மாதிரி தோன்ற துர்கா கூறியபடி உடையை மாற்றிக் கொண்டு காலாற அவரோடு நடந்து விட்டு வந்தாள்.

நடந்த நாழிகையில் சேர்மன் வந்துவிட்டுப் போன விவரங்களைக் கூறி ''கோபிக்கு 'நா மனோதத்துவ ஆராய்ச்சி பண்ணி டாக்டர் பட்டம் வாங்கணும்னு ஆசை— தொடர்ந்து படிக்கணுமா இல்ல இந்த வேலைய ஒத்துக்கணுமா?'னு குழப்பமா இருக்கு'' என, நடந்து கொண்டிருந்த துர்கா நின்றாள். அவளை ஏறிட்டு அழுத்தமாகப் பேசினார்.

''பல சந்தர்ப்பங்கள்ல நாம எல்லாம் குழம்பிப் போறதுக்குக் காரணம் நமக்கெல்லாம் ப்ரயாரிடீஸ் (Priorities) நம்முடைய உடனடித் தேவைகள்—புரியாம இருக்கறதுதான். கோபி விருப்பத்தைச் செய்யறது முக்கியமா, இல்ல, நீ இஷ்டப்பட்டதை நிறைவேத்தறது அவசியமான்னு வேறுபாட்டை நீ புரிஞ்சுக்கிட்டா, உன் குழப்பம் குறைஞ்சிடும். சித்ரா... உன் உடனடித் தேவைகள் என்ன? அதை வரிசைப்படுத்திக்கோ... உன் வாழ்க்கையை உனக்கு நிறைவு தர்றமாதிரி அமைச்சிக்கறது உன் கையலதான் இருக்கு... இது சம்பந்தமா நீ எது செய்யத் தீர்மானம் பண்ணாலும் அதுக்கு என் முழு ஒத்துழைப்பு கட்டாயம் உண்டு. வேலையோ படிப்போ— அவசரப்பட்டு ஒரு முடிவுக்கு வராதே... நாலைஞ்சு நாள் யோசி... தப்பில்ல...''



பத்தடிகள் எதுவும் பேசாமல் மௌனமாய் நடந்த துர்கா தொடர்ந்து கூறினார்.

''சாயங்காலம் வந்த உடனேயே சொல்லணும்னு நினைச்சேன்... ஆனா வேற ஏதோ பேச்சுல விட்டுப் போச்சு... வர்ற புதன்கிழமை நா பம்பாய்க்குப் போறேன்... அங்கே லெக்சர்ஸ் ஏற்பாடாகி இருக்கு.. சும்மா வீட்டுல இருக்கறத்துக்குப்பதிலா நீயும் என்னோட வந்தா என்ன சித்ரா? ஒரு வாரத்துல திரும்பிடலாம்— அங்க ஹோட்டல்லதான் தங்க ஏற்பாடாகி இருக்கு... யாரோட குறுக்கீடும் எந்தத் தொந்தரவும் இல்லாம நீ உன் விருப்பப்படி இருக்கலாம்... என்ன சொல்றே?''

துர்கா புறப்பட்டுப் போன பிறகு இது குறித்துச் சிந்திக்கும்போது ஒரு வாரம் பம்பாய்க்குப் போய் வருவது மனசு இருக்கும் நிலையில் ஒரு மாறுதலாகவே இருக்கும் என்பது புரிய 'எனக்கு யாரும் வேண்டாம்—தனித்து வாழப் பழகுவேன்' என்று பூண்டிருந்த வைராக்கியத்தைத் தளர்த்திக்கொண்டு அந்த புதன்கிழமை ஊருக்குப் புறப்பட சித்ரா தயாரானாள்.

# 17

''சித்ரா''

கண்ணாடி ஜன்னலில் தலையை முட்டுக் கொடுத்துத் தூரத்தில் தெரிந்த கடலையும், அதில் மிதந்த பாய்மரக் கப்பல்களையும் வெறித்துக் கொண்டிருந்த சித்ரா திரும்பாமல் 'ம்' என்றாள்.

''இங்க வாயேன்''

அந்த வார்த்தைகள் காதில் விழாத மாதிரி அப்படியே அரை நிமிஷம் நின்றுவிட்டு, மெள்ளத் திரும்பினவள் 'என்ன?' என்கிற பார்வையாய் துர்காவை ஏறிட்டாள்.

''பம்பாய்க்கு வந்து மூணு நாளாச்சு... ஒரு நாள் கூட வெளியே எங்கயும் போகாம ரூம்லயே அடைஞ்சுகிடந்தா எப்படிம்மா? இதுக்கு மெட்ராஸ்லேயே இருந்திருக்கலாமே!''

சித்ரா அலுப்புடன் 'ப்ச்' என்றாள்

''போகணும் போலத் தோணலியே மேடம்...!''

''தோணாட்டியும் வலுக்கட்டாயமா இங்க அங்க போக முயற்சி செய்யணும் சித்ரா... அப்பத்தான் கவனத்த வேற எதுலயாவது செலுத்த முடியும்...''

''எதுக்காக வேற திசைல கவனத்த திருப்பணும்? இப்பப்பா வர்ற கோபி பத்தின, அவரோட வாழ்ந்த வாழ்க்கை பத்தின நினைப்புகளை வலுக்கட்டாயமா ஏன் மாத்த முயலணும்?''

துர்கா அவள் கையைப் பற்றித் தன் அருகில் அமர்த்திக் கொண்டார்.

''என்னா, அந்த நினைவுகள் உனக்கு சந்தோஷத்த தர்றதோட மட்டும் நிக்கறதில்ல... தொடர்ந்து வலியையும் ஏற்படுத்தி விடறது... அதனால்தான்...''

அவரை முடிக்க விடாமல் சித்ரா குறுக்கிட்டாள்.

''வரட்டுமே இன்பம் மட்டும்தான் வேணும் வலி வேணாம்னு ஸ்விட்ச் போட்ட மாதிரி உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியுமா?''

''முடியாதுதான்... அதனாலதான் சந்தோஷமும் வேணாம், வேதனையும் வேணாம்னு சொல்ல வர்றேன்... ரெண்டும் ஆறாத நிலைல அதைக் கிளறிவிடாம இருக்கறது.



மூக்கிலேயும் இல்லியே! நம்மோட சிந்திக்கும் திறன் மேல கவனமாப் பார்த்து செயல்படுத்த வைக்கிற எந்த அதிக உணர்ச்சியும் நமக்குத் தேவையில்லைனு நீ படிச்சிருக்க மாட்டே?''

அவருடைய கேள்விக்குப் பதில் கூறாமல் அடுத்தடுத்த தும்மல்கள் எழ, சித்ரா இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டாள்.

''ஆலோசனை சித்ரா!''

''ம்ஹூம். ராத்திரி சரியா தூங்காட்டி காலைல எனக்கு எப்பவுமே இப்படித்தான் தும்மல் வரும்...''

''கவனிச்சேன்... நேத்து மட்டுமில்ல, தொடர்ந்தாப்ல தூங்காம புரண்டுகிட்டேதான் இருக்கே... படபடப்ப குறைக்க ஒரு காம்போஸ் போட்டுகிட்டுத் தூங்கினாலு கேட்டாதுக்கு—மாட்டேங்கறே...''

சித்ரா கைகளை விலக்கிக்கொண்டு அவரை ஏறிட்ட போது கண்ணோரங்களில் நீர் திரண்டிருந்தது.

''என் தூக்கம், என் சாப்பாடு, என் நிம்மதி, இதெல்லாம்தான் முக்கியமானது நா செயல்படறதுக்குன்னு நீங்க கூடவா நினைக்கறீங்க மேடம்?... ஆமா, கோபிய பிரிஞ்சதிலேந்து நா சரியா தூங்கறதில்லதான்... அவர பத்தின நினைப்பு சதா மனசுல படமாட்டம் ஓடிகிட்டே இருக்கறதுல நெஞ்சுக்குள்ள பறவைகள் பறக்கறது, விரல்கள் நடுங்கறது..., அடிவயிறு சில்லிட்டுப்போறது... வாஸ்தவம்...ஒத்துக்கறேன்... அதுக்காக? அதுக்காக? இந்த உடம்பு அவஸ்தைகளைக் கண்டு பயந்து, நா நிம்மதியா இருந்த போ தூங்கற வயறதோட, தூக்க மாத்திரைய போட்டுகிட்டு, நினைவுகள் செயற்கையா ஒதுக்கிட்டுத் தூங்கறதும் வாழறதும் நியாயமான செயலா மேடம்? என் கோபிக்காக, அவரோட வாழ்ந்த அற்புதமான

வாழ்க்கைக்காகவாவது நா கொஞ்சநாள் சிரமப்படக் கூடாதா? எல்லாரையும் மாதிரி நீங்களும் பேசினா எப்படி மேடம்?''

குரல் குழகுழக்கப் பேசியவள் சன்னமாய் விசும்பத் தொடங்க, துர்கா அவசரமாய் அவள் தோளைத் தட்டிச் சமாதானப்படுத்தினார்.

''நோ... அழக்கூடாது சித்ரா... அப்புறம் தலைவலிக்க ஆரம்பிக்கும்... எதுவுமே பிடிக்காம சுருண்டு படுத்திடுவே... வேணாம்... கட்டுப்படுத்திக்க... ப்ளீஸ்...''

எழுந்துபோய் குளிர்ந்த நீரை ஒரு டம்ளரில் விட்டு அவளிடம் தந்து குடிக்க வைத்தார்.

''சொல்ல வந்த முக்கியமான விஷயத்தை விட்டுட்டு எதையோ பேசிட்டிருக்கேன் பாரு... யு.எஸ். லேந்து ஒரு செமினாருக்காக இங்க வந்திருக்கற டாக்டர் பார்பரா வில்ஸன்—மனோதத்துவ நிபுணர நேத்துச் சந்திச்சேன். இவர் 'கௌன்ஸிலிங் ஃபார் த க்ரீவ்ட்' வகுப்புக்களை லண்டன் நகரத்துல ரொம்ப வெற்றிகரமா நடத்திட்டு வரார்... அதாவது துக்கப்பட்டவங்க அதிலிருந்து மீள வழிகாட்டுற வகுப்புகள்... மெட்றாஸ்ல கூட பிரச்சனை ஏற்பட்டு மீள 'சௌஜன்யா', ஸ்னேஹா —போன்ற ஸ்தாபனங்கள் உதவறதையும் தற்கொலை செய்து கொள்ள விரும்பும் மனச்சோர்வு கொண்டவர்களுக்குத் தன்னம்பிக்கை கொடுக்க அரசாங்கம் நடத்தற 'க்ரைஸிஸ் இண்டர்வென்ஷன் சென்டர்' பத்தியும் நீ கேள்விப்பட்டிருப்பே... ஆனா, ஒரு நபரை இழந்ததனால துக்கிச்சவங்களுக்காக வெளிநாடுகள்ள இருக்கறமாதிரி நம்ப நாட்டுல தனி வகுப்புகள் இயங்கறதா தெரியல... அந்த மாதிரி வகுப்புகள நடத்தப் பயிற்சி கொடுக்கற உத்தேசம் டாக்டர் பார்பரா வில்ஸனுக்கு இருக்காம். இன்னிக்கு அவர் அது பத்தின விசேஷ லெக்சர்



டெமான்ஸ்ட்ரேஷன் கொடுக்கப் போறாராம்... நீ அதுக்குப் போக நா ஏற்பாடு பண்ணி இருக்கேன்... பதினொரு மணிக்குப் போனா ஒரு மணிக்கு வந்திடலாம்...''

சித்ரா எழுந்து ஜன்னலிடம் நின்று சமுத்திரத்தின் மேல் விழிகளை மேய விட்டாள்.

மீன்பிடிக்கப் புறப்பட்ட படகுகளெல்லாம் தூரத்தில் கரும்புள்ளிகளாய்த் தெரிந்தன.

''எதுக்காக நா இந்த லெக்சருக்குப் போகணும்னு நினைக்கறீங்க மேடம்?''

மாற்றுப் புடவை, ரவிக்கையைப் பெட்டியிலிருந்து வெளியில் எடுத்தபடியே துர்கா பதில் கூறினார்.

''பண்பாடு, கலாசாரம், அது இதுனு சொல்லி அதிகமா உணர்ச்சிவசப்பட்டு நாம குழம்பிப் போயிடற சில விஷயங்கள மேல்நாட்டுக்காரங்க பிராக்டிகலா எதிர்நோக்கப் பழகியிருக்காங்க—அம்பது வருஷம் முன்னால இருந்த சூழ்நிலையும், பெண்கள் நிலையும் வேற, இன்னிக்கு இருக்கறதே வேற... இந்த மாற்றங்களுக்குச் சரியா நம்முடைய சிந்தனைகள் இன்னும் மாறல... அதனால, மேல் நாட்டுக்காரங்க இழப்பு மூலமா வர்ற துக்கத்த எப்படி எதிர்நோக்கறாங்க, சமாளிச்சுக்கிட்டுத் தொடர்ந்து ப்ராக்டிகலா வாழ்க்கையை நடத்தறாங்கனு நீ தெரிஞ்சுக்கிட்டா, அது உபயோகமா இருக்கும்னு நினைக்கறேன்...''

''நீங்களும் என்கூட வரப்போறீங்களா?''

துர்கா இல்லை என்று தலை அசைத்ததும் சித்ரா கண்களை இடுக்கிக்கொண்டு சற்றே ஏளனமாய் உதடு கோணச் சிரித்தாள்.

'ஒருத்தரை இழந்ததுனால வர்ற துக்கம்னா, இழப்பு எனக்கு மட்டும்தானா மேடம்? நீங்க கூடத்தானே நர்சிய இழந்திருக்கீங்க?''

கையில் எடுத்த துணிகளை அவசரப்படாமல் படுக்கைமேல் வைத்துவிட்டு துர்கா நிமிர்ந்தார்.

'எனக்கும் மாபாரமான இழப்புத்தான்—இருந்தும் அதை ஏற்றுக்கொண்டு மீண்டுவர நான் முயற்சி செய்கையில் நீ மேலும் மேலும் கீழே அழுந்திப் போகத்தானே விரும்புகிறாய். இதைத் தடுக்கத்தானே இத்தனை பிரயாசைகளும்?' என்று நினைத்தபடி மனதிடையில் கட்டி உட்கார வைத்துவிட்டு அவள் அருகில் சென்று தோளை ஆயாசத்துடன் பற்றிக் கொண்டார்...

''எஸ்...நீ கேக்கறது நியாயமான கேள்விதான். ஆனா, இந்த லெக்சர் பத்தித் தெரியாம ஏற்கனவே நா ஒரு முக்கியமான அப்பாய்ண்ட்மெண்ட்டுக்கு ஒத்துக்கிட்டேன்...போயே தீரணும்...உன்னை இறக்கி விட்டுட்டு, ஒரு மணிக்கு வந்து கூட்டிக்கறேன்...என்னம்மா?''

இஷ்டம் இல்லாவிட்டாலும், அவர் வார்த்தைகளை மீற விருப்பம் இல்லாமல் சித்ரா தயாரானாள்.

இருவருமாய் டாக்ஸி பிடித்துக்கொண்டு சர்ச்கேட்டில் லெக்சர் ஏற்பாடாகியிருந்த இடத்துக்குப் போனார்கள்.

உள்ளே வந்து டாக்டர் பார்பாரா வில்ஸனுக்கும், இன்னும் ஓரிரு நண்பர்களுக்கும் சித்ராவை அறிமுகம் செய்த பின்னர் ''ஒரு மணிக்கு வந்திடறேன்...'' என்று சொல்லிவிட்டு துர்கா புறப்பட்டுப் போனார்.

ஏர்கண்டிஷண்ட் செய்யப்பட்ட அந்த மினி கான்ப்ரன்ஸ் கூடத்தில் மன இயல், சமூக சேவை போன்ற பிரிவுகளைச் சார்ந்த சுமார் இருபது பேர்கள் கூடினதும், சரி



யாய் பதினொரு மணிக்கு டாக்டர் வில்ஸன் தன் உரையைத் துவக்கினார்.

''துக்கம் என்பது இழப்பினால் உண்டாகும் இயல்பான உணர்வாகும். இழப்பின் தன்மைக்கேற்பத் துக்கத்தின் பரிமாணமும் மாறுபடும். இழப்பை, பொருளாக-பொருள் இழப்பு; சுயமரியாதை; தன்னம்பிக்கை இழப்பு; உறவு இழப்பு என்று நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

'இழப்பு எந்த ரூபத்தில் இருந்தாலும் அது மனிதனைத் தாக்கும்போது துக்கம் என்கிற உணர்ச்சியினால் குறிப்பிட்ட நபர் பீடிக்கப்படுகிறார். இது அவரவர் மனப்பக்குவத்தைப் பொறுத்துத் தற்காலிகமானதாக இருக்கலாம்... அல்லது நிரந்தரமாகவும் இருக்கலாம். எப்படி ஆயினும், ஒருவர் இழப்பின் பாதிப்பிலிருந்து மீண்டு வந்து தன்னைப் பழையபடி நிலைப்படுத்திக்கொள்ள, துக்கம் ஒரு பயிற்சியாக உதவி, செயல்படுகிறது என்றே சொல்லவேண்டும்.

தனிமை, கோபம், பொறாமை, அழுகை, சூன்யம் வெறுப்பு, குற்ற உணர்வு-என்று அவரவர் தன்மைக்கேற்ப துக்கம் தன்னை வெளிப்படுத்திக் கொள்வது சகஜமே என்றாலும் இந்நிலை தொடர்ந்து நீடிக்காமல் ஒருவிதத் தெளிவுடன் பாதிக்கப்பட்டவர் மீண்டு வர முயற்சி செய்யாவிடில் நாளடைவில் சுற்றி இருக்கும் உறவுகள், நட்பு கசந்துபோக வாய்ப்பு இருக்கிறது...

'துக்கம் முதலில் வலியைத் தந்தாலும் மெது மெதுவாய்த் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும், இழந்த பொருளின், நபரின் இடத்தை ஈடு கட்டும் ஆர்வத்தில் புது உறவுகள், அனுபவங்கள் உண்டாகவும் வாய்ப்புகளை உருவாக்குகிறது என்பதை நாம் மறக்கக் கூடாது.'

மென்மைக்குரலில் நிதானமாக டாக்டர் வில்ஸன் பேசப் பேச, துவக்கத்தில் ஏனோ தானோ என்று அசிரத்தையாய் அமர்ந்திருந்த சித்ரா அவர் 'Grief is the Process by Which healthy re-adjustment can be made' என்றதும் நிமிர்ந்தாள்.

இழப்பின் பாதிப்பிலிருந்து மீண்டு வர துக்கம் ஒரு பயிற்சியாகிறதா?

'Grief can be a positive experiment' என்கிறாரே நிஜமாகவா?

அடுத்து வந்த நிமிஷங்களில் இழப்பு, துக்கத்தின் பரிமாணங்களை வெவ்வேறு கோணங்களிலிருந்து ஆராய்ந்த பின், டாக்டர் வில்ஸன் "பாஸ்டனில் நாங்கள் நடத்தும் வகுப்புத் தொடர் ஒன்றைப் படமாக இப்போது உங்களுக்குக் காட்டப் போகிறேன். சிகிச்சை என்று எதுவும் இல்லாமல் மனம் விட்டுப் பேசிக்கொள்ளும் 'க்ரூப் தெரபி' என்னும் முறை மூலம் யதார்த்தத்தை உணர்த்துவதுதான் எங்கள் வகுப்புக்களின் முக்கியமான குறிக்கோள்" என்று கூறி, விளக்கை அணைத்து, ஏற்கனவே தயாராக வைத்திருந்த புரொஜெக்டரை ஓட்ட, வெள்ளை திரையில் ஆறு பேர்கள் அறிமுகமானார்கள்.

பிடரிவரை முடி, கட்டுமஸ்தான உடலுடன் இருப்பது பதினேழு வயதான ஹாரி... பதினைந்து நாட்களுக்கு முன் கடலில் குளிக்கப் போனபோது அப்பாவை இழந்தவன்...

இலேசான வழுக்கை, கண்ணாடியுடன் தோன்றுவது முப்பத்தியேழு வயசு ஜான்... அவனுடைய ப்ரிய மனைவி லீஸா கான்சருக்குப் பலியாகி ஒரு மாசமே ஆகிறது...

மினிதா மகளை இழந்தவள்...

கரோல் ஐந்து வருஷங்களாகக் கணவன் மனைவியாக வாழ்ந்த பீட்டரைப் பிரிந்தவள்.



மார்கரெட் நாற்பது வருஷ தாம்பத்தியத்துக்குப் பின் கணவர் மைக்கேலை இழந்து தவிப்பவள்—

ஸமாந்தா அருமையாய் வளர்த்த நாய் இறந்து போன துக்கத்தால் பாதிக்கப்பட்டவள்...

ஒவ்வொருவரும் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டு தயக்கத்துடன் தங்கள் இழப்பை விவரிக்கிறார்கள்...

கண்முன் அப்பா மூழ்கியபோது அது குறித்து எதுவும் செய்ய இயலாமல் தவித்த ஹாரி...

அம்மா எங்கே என்று கேட்டு அழும் மூன்று வயசு பிள்ளையைச் சமாளிக்கத் தெரியாத ஜான்...

"பெரிய விளையாட்டு வீராங்கனையாகும் என்று எதிர் பார்த்தேன்—ஏமாற்றிவிட்டுப் போய்விட்டாளே" என்றும் கதறும் மினிதா...

30205 469297

"ஐந்து வருஷங்கள் மனதளவிலும் உடலாலும் நெருங்கி வாழ்ந்துவிட்டு ஒரு விளக்கமும் சொல்லாமல் என்னைப் பிரிந்தது என்னை வதைக்கிறது. என்னை உண்மையாக அவன் மதித்திருந்தால் இப்படி எதுவும் கூறாமல் போவானா? ஏதோ காரணத்தால் என்னைப் பிடிக்காமல் போய் விட்டதா? சரி—அதை வெளிப்படுத்துவதை விட்டுவிட்டு உன்னதமான நட்பு என்று நான் நம்பியதை அவன் இப்படி அவமதிக்கலாமா?"—என்று புலம்பிய கரோல்...

"நாற்பது வருஷங்களாகத் தொட்டதும் பார்த்ததும் பேசியதும், சிரித்ததும் நினைவில் சதா நின்று என்னைச் செயலிழக்க வைக்கிறதே... நான் எப்படி தனித்து வாழ்வேன்" என்று நடுங்கும் குரலில் கேட்ட அறுபத்தாறு வயசு மார்கரெட்...

"கல்யாணம் வேண்டாம்; பிள்ளை, குட்டி உறவு யாரும் வேண்டாம். என் டெவில் இருக்கிறான்—அது

போதும்—என்று நிம்மதியாய் இருந்தேன். அன்னைப் பொழிந்த டெவிலை, இழந்ததில் பைத்தியம் பிடித்துவிடும் போல இருக்கிறது...'' என்று பரிதவித்த ஸமாந்தா...

ஒவ்வொருவரின் குமுறலும் தன் சொந்த இழப்பின் வேதனையைச் சீண்டிவிட, கண்களில் நீர் பெருக அமர்ந்திருந்த சித்ரா, நாயை இழந்தவளின் பேச்சைக் கேட்டதும் தூக்கி வாரிப்போட நிமிர்ந்தாள்.

நாயை இழந்தவர்களுமா இந்த வகுப்பில்! அருமையான மனிதர்களைப் பிரிந்து பரிதவிக்கும் நபர்களோடு கேவலம் ஒரு பிராணியை இழந்தவளையும் சரிக்குச் சரி உட்காரவைத்து... ச்சே—இது நியாயமற்ற செயலாக இருக்கிறதே!

இது நாழிகை அந்த வகுப்புப் பற்றி கொண்டாயிருந்த ஆர்வம் சட்டென்று மட்டுப்பட 'நாயையும், மனிதர்களையும் ஒன்றாகப் பார்க்கும் கண்ணோட்டமுடைய இந்த வகுப்பாவது மனசு தேற வழிகாட்டப்போவதாவது?' என்கிற எரிச்சலுடன் சித்ரா இருக்கையில் சாய்ந்தாள்.

திரையில் டாக்டர் பார்பரா வில்ஸன் துக்கத்தை ஒரு பயிற்சியாகவே இழப்பின் பாதிப்பிலிருந்து மீளவேண்டிய அவசியத்தை விளக்க ஆரம்பித்தார்.

''ஒரு சில நாட்களில் பழகிவிட்டவரையே பிரிந்திருப்பது கஷ்டம் என்கிறபோது, வருஷக் கணக்கில் ஒன்றாக வாழ்ந்த, உறவின், நட்பின் அருகாமையின்றி வாழ்வது மிக மிக, கடினம். ஆனாலும், சிரமமாக இருக்கிறது என்பதற்காக நிஜத்தை எதிர் நோக்குவதைத் தவிர்க்க முடியுமா? ம்ஹூம்... கண்டிப்பாக முடியாது... நிஜத்தோடு எத்தனை சீக்கிரம் வாழ பழகுகிறோமோ அத்தனை நல்லது நமக்குப் பிரியமானவர் ஆயுசு பர்யந்தம் கூட இருந்தால் நன்றாகத்தான் இருக்கும், ஆனால் இல்லை-



பிரிந்து அல்லது இறந்து விட்டார். நிஜம், நிஜத்தோடு எத்தனை போராடினாலும் இந்த பொய்யாகி விடாது? இதுதான் நிஜம். இதுதான் ஆச். அதை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழி இல்லை... உங்கள் தந்தை, மனைவி மகன், கணவன், காதலி, நாய் இப்போது இல்லை. இதுதான் பிரத்யட்சமான நிலை. அவர்கள் இருக்கிறார்கள் இதோ ஒருநாள் வருவார்கள் என்று உங்களையே ஏமாற்றிக் கொள்வது கூடாது. அது பொய். இல்லை என்பதுதான் நிஜம். அதனால் அவர்களைப் பற்றிய நினைவுகளிலேயே பொய்யாக வாழ முயற்சி செய்வது உங்களுக்கு எந்த விதத்திலும் உதவாது. போனவர்கள் போய் விட்டார்கள் போகட்டும். அதை நினைத்து உங்கள் வாழ்க்கையை அர்த்தம் இல்லாமல் செய்து கொள்வது விவேகமற்ற செயல். மறைந்தவரின் நினைப்பு உங்களை ஊக்குவிப்பதாக இருந்தால் வைத்துக் கொள்ளுங்கள். அப்படி இல்லாமல் உங்களை ஊனமாக்கி, செயலிழக்க வைப்பதாக இருப்பின் தூக்கி எறியுங்கள் ஆமாம், உங்களைப் பயனற்றுப் போகச் செய்யும் யாருடைய நினைப்பும் உங்களுக்குத் தேவையில்லை. உங்கள் மனதிலிருந்து, நினைவிலிருந்து, வாழ்க்கையிலிருந்து அவர்களை வெளியேற்றுங்கள்... அப்போதுதான் நீங்கள் புது வாழ்வு தொடங்க முடியும்...''

''Get them out of your system'' என்று அழுத்தம் திருத்தமாக டாக்டர் வில்ஸன் கூறியதும், சித்ரா அதிர்ந்தாள்.

நான் வலியிலிருந்து மீண்டும் வாழ வேண்டுமானால் என் கோபியை அடியோடு மறக்க வேண்டுமா? அவர் தொடர்பான அத்தனையையும் சுரண்டி எறிய வேண்டுமா?

ஐயோ... இது சாத்தியமா? இல்லை தேவைதானா? சித்ராவைச் சிந்திக்க விடாமல் படம் தொடர்ந்தது.

சில சந்திப்புகள். படிப்படி முன்னேற்றத்துக்குப் பிறகு வகுப்பு மீண்டும் கூறுவது—

"அப்பா நிறைந்த வாழ்க்கை வாழ்ந்துவிட்டார். மற்றவர்கள் போல வியாதியில் கஷ்டப்படாமல் நிம்மதியாய் இறந்தார் என்கிற சமாதானத்துடன் கல்லூரிக்குப் போக ஆரம்பித்திருக்கிறேன்" என்கிறான் ஹாரி...

"என் மனைவியின் சமாதியில் உட்கார்ந்து 'என்னை வாழ விடு எலிஸன், என் நெஞ்சிலிருந்து நீ விலகுவதுதான் நான் நிம்மதியாக வாழ வழி செய்யும் என்கிறார்கள். அதை முயற்சி செய்யப் போகிறேன்—என்னைப் புரிந்து கொள்;' என்ற வைராக்கியம் பூண்ட பிறகு முதல் முறையாக நேற்று இன்னொரு பெண்ணோடு வெளியே சென்றேன்." என்கிறான் ஜான்...

"என் கணவரின் உடைமைகள் அத்தனையும் ரெட் க்ராஸுக்குக் கொடுத்து விட்டேன். அவர் பொருட்கள் எதுவும் கண்களில் பட்டு நினைவுகளைக் கிளறாது கொஞ்சம் நிம்மதியாய் இருக்கிறது. ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் போகத் திட்டமிட்டிருக்கிறேன்..." இது மார்க்கரெட்...

புதிய நாய்க்குட்டி ஒன்றினை வாங்கி வந்துவிட்ட ஸமாந்தா...

ஆறு பேர்களும் முகம் தெளிந்து ஒருவித புது எதிர்பார்ப்புகளுடன் பேசுவதைப் புரிந்து கொள்ள முடிய, சித்ராவின் உடம்பு உதறிப்போட ஆரம்பித்தது.

மிஞ்சிப் போனால் எட்டு வகுப்புகள், நடந்திருக்கும்—அதாவது ஒரு மாசம்...

அதற்குள் தேறுவதோ, மனசை மாற்றிக் கொள்வதோ இவர்கள் அனைவருக்கும் எப்படி சாத்தியமாயிற்று!

இத்தனை சீக்கிரம் ஒருவரை மறக்க வேண்டிய அவசியம் தான் என்ன?



காலையில் மேடத்திடம் சொன்ன மாதிரி 'நான் நானாக இருந்தால் போதும்' என்று நினைக்கிற சுயநலம் தானே இது!

மறந்துவிடு தூக்கி எறிந்துவிடு—என்று இவர்கள் சொல்வதை நம் பெரியவர்கள் கூறுவதில்லையே. ஏன்

எங்கும் போகவில்லை. மறைந்தவர் உன் கூடவே அரூபமாய் இருந்தால், அந்த நினைவுகளுடனேயே காலத்தைக் கழி என்றல்லவோ சொல்லித் தருகிறார்கள்

இதில் எது நிஜம்?

எது பொய்?

நினைவுகளைத் தவிர்க்க வேண்டுமா—அல்லது பொக்கிஷமாய் வைத்துக் காப்பாற்ற வேண்டுமா?

எது சரி?

எது தவறு?

புது நாய்க்குட்டியை வாங்கி வந்து பழசை மறக்கிற மாதிரி, புது உறவை உண்டாக்கிக் கொண்டு பழையதை மறக்கச் சொல்வது நியாயமானதா?

இல்லை—கஷ்டமோ, நஷ்டமோ ஒருவனுக்கு ஒருத்தி என்கிற நினைவுடனேயே வாழ்ந்து வருவதுதான் சரியானதா?

எது நியாயம்?

எது அநியாயம்?

ஆனால், மனித உறவு என்பது பவித்ரமானது என்று பெண்களை நினைவுகளோடு வாழச் சொல்லும் இந்த சமுதாயம் ஏன் ஆண்களையும் அப்படி வாழும்படிக் கட்டாயப்படுத்துவதில்லை?

ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்று இந்த சமுதாயம் இயங்குகிற மாதிரி இல்லாமல் மேல் நாடுகளில் இருக்கும் விதிகளைப் பொதுவாக வைத்திருப்பது தான் சரியோ?

எது பவித்ரம்?

எது அசிங்கம்?

மனமலைவென்று கண்மூடி திறக்கும் நாழிகையில் நூறு கேள்விகள் எழுந்து ஹ்ருதயத்தைக் குடைந்ததில் சித்ராவுக்கு அழுகை பீறிட்டுக்கொண்டு எழுந்தது.

நாற்காலியை ஓசையுடன் பின்னுக்குத் தள்ளி, மற்றவர்கள் வியந்து நோக்குவதை இலட்சியம் பண்ணாமல் வெளியே ஓடி வந்து, டாக்ஸி பிடித்து, ஹோட்டலுக்கு வந்தவளுக்கு துர்கா தன்னை இந்த மாதிரி பேச்சுக்களைக் கேட்க வைப்பதன் மூலம் தேவையில்லாமல் மேலும் தவிக்க வைக்கிறார் என்கிற கசப்பு எழ, 'உன்னைக் காணோமேன்னு பதறிட்டேன்' என்று பரிதவிப்புடன் வந்து நின்றவளிடம் எந்த விளக்கமும் சொல்லாமல் 'உடம்பு சரியில்ல... சாயங்கால ஃப்ளைட்ல நா ஊருக்குப் போறேன்' என்றாள் விறைப்பாக...

## 18

காத்திருத்தல் சங்கடமானது. அதுவும், 'வரலாமா?' என்று முன் கூட்டியே தெரிவித்து நேரம் பெற்றுக் கொள்ளாமல் வந்து விட்டால் 'சந்தித்திருப்பார்களோ, மாட்டார்களோ?' என்கிற தவிப்புடன் காத்திருப்பது மகா அவஸ்தையானது...

சித்ரா காத்திருந்தாள்.



போன் பண்ணிவிட்டு வந்திருக்கலாம்... ஆனால், போன் செய்ய வேண்டும் என்றால் மாடிக்குப் போக வேண்டும், இல்லை என்றால் அடுத்த தெரு கடைகள் எதற்காவது செல்லவேண்டும். 'என் வீட்டுக்கு அவளை ஒரு வருஷ காலத்துக்கு வரச் சொல்லாதே!' என்று ஆயாவிடம் ஜானகிம்மா சொன்னபிறகு, மாடிக்குப் போவது என்பது நடக்காத விஷயம்... கடைக்குப் போய் நாலு பேர்கள் வேடிக்கை பார்க்க, போனில் பேச வேண்டும் என்கிற நினைப்பே கசப்பாய் இருக்க, சேர்மன் என்ன வேணுமானாலும் நினைத்துக் கொள்ளட்டும், நேரிலேயே போய்விடலாம் என்று வந்து விட்டாள்...

அவள் அலுவலகத்தில் நுழைந்தபோது மணி பத்தரை... இப்போது பதினொன்றேகால்...

சேர்மன் பாங்க் அதிகாரிகளுடன் மீட்டிங்கில் இருக்கிறாராம்...

அவரின் செக்ரட்டரி மிஸ்... ட்ரேஸி இலகைக் கனிவுடன் ஏறிட்டு "உட்காருங்கள்... மீட்டிங் முடிந்ததும் உங்களை சேர்மன் சந்திப்பார்" என்றதும் ஒரு பக்கமாய் இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

முக்காலியில் அன்றைய ஆங்கில தினசரிகள், சில பத்திரிகைகள் இருந்ததை எடுத்து கவனம் பதியாமல் புரட்டிவிட்டு வைத்தாள்.

மிஸ் ட்ரேஸியின் பார்வையில் கலந்திருப்பது பரிவா, பரிதாபமா?

எப்படி இருக்கிறாய்?—என்று சின்ன குரலில் கேட்டபோது அதில் விரவி இருந்தது அக்கறையா, ஐயோ பாவம் என்கிற பச்சாதாபமா?

ப்யூன் மாரிமுத்து சூடாக டீயைக் கொணர்ந்து வைத்தபோது அவள் முகத்தில் தேவைக்கு அதிகமாய்

இரக்கம் தாண்டவமாடுகிற மாதிரி தோன்ற சித்ரா விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்.

இவள் வந்திருக்கும் சேதி கேட்டு ராம்ஜி, சுந்தர் வரவேற்பு அறைக்கு வந்து ''ஹல்லோ'' சொல்லி எப்படி இருக்கீங்க?'' என்று கேட்டு, மேலே என்ன பேசுவது என்று புரியாமல் அப்படியே இரண்டு நிமிஷங்கள் நின்று விட்டு ''அப்புறமா பார்க்கலாம்'' என்று சொல்லிப் போனார்கள்.

வாயை மூடாமல் எப்போதும் சிரிக்கும் குமரேசன் ''என்ன இப்படி இளைச்சிட்டீங்க?'' என்று கேட்டுச் சிரிக்க, இந்த மனுஷனுக்கு எதைக் கேட்பது, எப்போது சிரிப்பது என்கிற விவஸ்தை கூடவா இல்லாமல் போய் விட்டது என்கிற எரிச்சலில் சித்ராவின் தாடை இறுகியது.

சோறு தண்ணீர் இல்லாமல், உறங்காமல் இழப்பின் வலியோடு போராடும் பெண் குண்டு கட்டையாய் இவரைப்போலச் சிரித்தபடி வந்து நிற்க வேண்டும் என்றா எதிர் பார்க்கிறார்?

சித்ரா யாருக்கும் எந்தப் பதிலும் கூறவில்லை.

மரியாதைக்கு ஒரு வாய் டீ குடித்தாள். நகத்தைக் கடித்தபடி யோசனையில் ஆழ்ந்தாள்.

அன்றைக்குப் படி ஏறி வீட்டுக்கு வந்து ''உங்களுக்கு வேலை தர நாங்கள் தயாராக இருக்கிறோம்'' என்று சேர்மன் கூறிச் சென்ற பிறகு இன்றுதான் அவரை மீண்டும் சந்திக்கப் போகிறாள்...

நடுவில் இவள் பம்பாயிலிருந்து திரும்பிப் பத்து நாட்கள் போல ஆன சமயத்தில், அக்கௌண்டண்ட் ஜீவராஜ் வந்து இவளுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுத்து விட்டுப் போனார், செக்கோடு காணப்பட்ட சேர்மனின் கடிதத்தில் கோபியின் மறைவுக்காக அவர்கள் வருந்துவது



பற்றியும், கம்பனி அளிக்கும் பணத்தின் விவரமும் இருந்ததே ஒழிய வேலையைப் பற்றி எந்த அறிவிப்பும் இல்லை.

திடுமெனச் சொல்லாமல் கொள்ளாமல் வந்து நிற்கிறேனே, சேர்மனுக்கு வேலை பற்றின வாக்குறுதி நினைவில் இருக்குமோ?

'எதற்காக வந்திருக்கிறீர்கள்' என்று கேட்டு 'நீங்கள் சொன்ன வேலை விஷயமாய்' என்பதற்குள் 'வேலையா? எந்த வேலை? யாருக்கு வேலை?' என்று புருவங்களை முடிச்சுப் போட எதிர்க் கேள்வி கேட்டுவிட்டால், என்ன செய்வது?

சேர்மனுக்கு ஆயிரம் வேலை, நூறாயிரம் கவலைகள் ...இதில் என் சம்பந்தப்பட்ட விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று என்ன நிர்ப்பந்தம்?

கடிதம் மூலம் நினைவுபடுத்திவிட்டு, அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கிக் கொண்டு வந்திருக்கவேண்டுமோ? என்ன இப்படி அசட்டுத்தனமாய் நடந்து கொள்கிறேன்?

குழப்பத்தோடு போய் விடலாமா?' 'லெட்டர் போட்டுவிட்டு பிறகு சந்திக்கிறேன்' என்று கூறிவிட்டுச் சென்று விடலாமா என்று அவள் சிந்திக்கையிலேயே... சேர்மனின் அறைக் கதவு திறந்தது. வெளியே வந்த பாங்க் அதிகாரிகளை விடை கொடுத்து அனுப்பின சேர்மன், நாலே எட்டில் சித்ராவின் முன் வந்து நின்றார்.

''குட்மார்னிங்!...திஸ் ஈஸ் எ ப்ளெஸண்ட் ஸர்ப்ரைஸ்... ரொம்ப நாழியா காத்திட்டு இருக்கீங்களா? ஸாரிம்மா... வாங்க... உள்ள வாங்க... ட்ரேஸி... ரெண்டு காபி அனுப்புங்க...''

சித்ரா அவரைத் தொடர்ந்தாள்.

"உட்காருங்க...எப்படி இருக்கீங்க...மிஸஸ் கோபி?"

சித்ரா நாவால் உதட்டை சரப்படுத்திக் கொண்டாள். எச்சிலைக் கூட்டி விழுங்கித் தொண்டையை ஆக்ரமித்த துக்கத்தை உள்ளுக்குத் தள்ளினாள்.

"நீங்க அனுப்பின செக் வந்தது... தாங்க்ஸ் ஸார்..."

"தாங்க்ஸ் பண்ண வேண்டிய அவசியமே இல்லை மிஸஸ் கோபி...இது எங்க கடமை. கேக்கறதுக்காக தப்பா எடுத்துக்காதீங்க... பெரியவங்களை கலந்துகிட்டுப் பணத்தை நல்லவிதமா இன்வெஸ்ட் பண்ணீங்க தானே?"

பெரியவர்களா? அப்படி யார் இருக்கிறார்கள் அவளைப் புரிந்து கொண்டு ஆலோசனை வழங்க? அப்பா அம்மாவைப் பார்த்தே இரண்டு மாசங்களாகப் போகின்றன...யாரும் இல்லை என்று சொல்ல முடியாமல் அவ்வப்போது வந்து போய்க்கொண்டிருந்த மேடமும் பம்பாய் பயணத்துக்குப் பிறகு ஒரு நாள் "ஆஸ்திரேலிய அரசாங்கத்துகிட்டயிருந்து மறுபடியும் லெக்சர் டூருக்கு அழைப்பு வந்திருக்கு சித்ரா. போன வருஷமே வந்திருக்க வேண்டியவங்க, வரலை, கண்டிப்பா இந்த முறையாவது வந்திடுங்கனு தேதி குறிப்பிட்டுத் தந்தி அனுப்பியிருக்காங்க. இரண்டு வாரத்துல கிளம்பணும்...உனக்குத் தனியா இருக்கறது சிரமம்னா நா போகலை... உன்னைவிட இந்த டூர் எனக்குப் பெரிசில்லை... என்ன சொல்றே' என்று சுற்றி வளைக்காமல் கேட்க, 'என் கோபியே இல்லாமல் நான் வாழும்போது இவர் இல்லாமல் இருக்க முடியாதா? தவிரவும், அருகில் இருந்து இதை, அதைக் கூறி என் போக்கில் விடாமல் இவர் குழப்புவதை விடத் தனியாக இருப்பதே மேல்'—என்கிற முடிவுடன் "நீங்க போயிட்டு வாங்க மேடம்... தயவு பண்ணி எனக்காகப் பயணத்தை ரத்து பண்ணாதீங்க... நா இருந்துப்பேன்..." என்று



சொல்லி, அவரும் புறப்பட்டுப் போய்விட்டதில் பெரியவர்கள் என்று சொல்லிக்கொள்ள யார் இருக்கிறார்கள்?

அவள் யோசனை புரிந்த தினுசில் தோளை உயர்த்தி செல்வராஜ் கைகளை விரித்தார்.

"அஃப்கோர்ஸ், புரொபஸர் இல்லாதது உங்களுக்கு கஷ்டமாத்தான் இருக்கும்... இந்த சமயத்துல உங்களை தனியா விட்டுட்டுப் போக வேணாம்னு அவங்களும் ரொம்பத் தயங்கினாங்க... ஆனா, நீங்க போயிட்டு வாங்கனு சொன்னதாலும், இது அரசாங்க அழைப்பு, தட்டறது மரியாதைக் குறைச்சல்ங்கறதாலயும் கடைசில புறப்பட்டுப் போனாங்க... இது விஷயமா ரெண்டு தரம் என்னை கூட வந்து சந்திச்சாங்க... 'போயிட்டுவாங்க... மிஸஸ் கோபிய நாங்கள்ளாம் பாத்துக்கறோம்'னு சொன்னேன்... உங்கப்பா, அம்மா நல்லா இருக்காங்களா? புரொபஸர்கிட்டேயிருந்து போய்ச் சேர்ந்த தகவல் வந்ததா?"

பெற்றவர்களோடு உறவு சுமுகமாக இல்லை என்பதை வெளிப்படுத்த விரும்பாமல், இரண்டு கேள்விகளுக்கும் சித்ரா பொதுவாக 'ம்' என்று முனகினாள்.

மேற்கொண்டு சில விவரங்கள் குறித்துப் பேசிய பின், நீ எதற்காக 'வந்திருக்கிறாய்? என்கிற பாவனையுடன் சேர்மன் பின்னால் சாய்ந்து உட்கார, சித்ரா தயக்கத்துடன் பேசினாள்.

"வந்து... அன்னிக்கு எங்கு வீட்டுக்கு வந்தப்ப... நீங்க ...வந்து..."

"எதுவானாலும் தயங்காம சொல்லுங்க மிஸஸ் கோபி...ப்ளீஸ்"

"வந்து...இந்த கம்பனில எனக்கு வேலை..."

சொல்ல வந்ததை முடிக்காமல் சித்ரா நிறுத்த, செல்வராஜ் சந்தோஷத்தோடு தலை அசைத்தார்.

"ஆமா... நா ரெடினு சொன்னேன். அதுக்காகத் தான் வந்திருக்கீங்களா, மிஸஸ் கோபி?

"எஸ் ஸார்"

"வெரிகுட்... இந்த கம்பனில நீங்க வேலைக்குச் சேரத் தீர்மானிச்சிட்டத நா மனப்பூர்வமா வரவேற்கிறேன். புரொபஸர் கூட ஊருக்குப் புறப்படறத்துக்கு முன்னால 'அனேகமா சித்ரா உங்க கம்பனில வேலை பார்க்க இருப்பானு நினைக்கிறேன்'னு சொல்லிட்டுத்தான் போனாங்க... கோபி ஆத்மா சாந்தி அடைய எங்களால முடிஞ்ச உதவி..."

சித்ரா தலையைக் குனிந்து கொண்டாள். நெஞ்சிலிருந்து வேகமாய்க் கிளம்பிய நீர் ஊற்று வெளியே எட்டிப் பார்க்குமுன் இரண்டு தரம் இமைகளைச் சிமிட்டி அதைக் கஷ்டப்பட்டு அடக்கினாள்.

'எப்பலேந்து வேலைல நீங்கசேர தயாரா இருக்கீங்க?'

சித்ரா கண்களால அவரை ஏறிட்டாள்.

"வர்ற இருபதாம் தேதிலேந்து நா வேலைக்கு வரலாமா? அன்னிக்கு... நா... வந்து... இல்ல, ஒன்றாம் தேதி தான் சேரணும்னா, பரவாயில்ல..."

சித்ராவின் குரல் கிசுகிசுப்பாய் வெளிப்பட்டது. கோபியை முதல் முதலாய்ச் சந்தித்த தேதியை புது மாதிரியாகக் கொண்டாடும் வெறியோடு தான் இருப்பதை அவர் புரிந்து கொண்டுவிடுவாரோ என்கிற சங்கடத்தோடு மீண்டும் தலையைக் குனிந்து கொள்ள — சேர்மன் இண்டர்காமில் பர்ஸனல் மேனேஜரை அழைத்தார்.



வந்து நின்றவரிடம் 'வர்ற இருபதாம் தேதிலேந்து மிஸஸ் கோபி நம்ப கம்பனில சேர்ந்து நிர்வாகப் பிரிவுல பயிற்சி எடுக்கப் போறாங்க...' ஒரு வருஷ பயிற்சி காலத்துல மாசம் தொள்ளாயிரம் ரூபா சம்பளமா கொடுக்கப்படும். திறமையா பயிற்சிய முடிச்சிட்டாங்கன்னா வேலை உறுதி செய்யப்பட்டு, ஆபீஸரின் வழக்கமான சம்பளம், கார் சலுகைகளுடன் வழங்கப்படும். இடையில ஏதோ காரணத்துனாலே இந்த வேலையை நீடிக்க விருப்பம் இல்லேன்னா, இரண்டு பக்கத்துலேயும் ஒரு மாச நோட்டீஸ் போதுமானது. அப்படினு விவரமா லெட்டர் டைப் பண்ணி எடுத்திட்டு வாங்க... கையெழுத்துப் போட்டு அவங்க கிட்டயே இப்பவே... கொடுத்திடலாம்" என அவர் போனார்.

கால் மணி அவகாசத்தில் லெட்டர் வந்தது.

கையெழுத்திட்ட சேர்மன் 'உங்கள் வாழ்க்கை நிம்மதியாய் இருக்க பிரார்த்திக்கிறேன்' என்று மௌனமாய் வாழ்த்த, இரண்டாக மடிந்து உட்கார்ந்து அழவேண்டும் போலப் பரபரத்த மனதை, அடி உதட்டை அழுந்தக்கடித்து சித்ரா ஆஸ்வாசப்படுத்திக் கொண்டாள். பின், அவருக்கு நன்றி தெரிவித்துவிட்டு வெளியில் வந்தாள்.

பன்னிரெண்டு மணி வெயில் கண்களில் பூச்சி பறக்க வைத்தது.

கட்டடத்துக்கு வெளியில் கம்பனி பெயர் கொண்ட பித்தளை போர்டை பாலீஷ் போட்டுக் கொண்டிருந்த மாரிமுத்து, கைக்காரியத்தை நிறுத்திவிட்டு இவளை வணங்கினான்.

இந்த மாரிமுத்துவுக்குப் பேச வராது. பிறவிக் கோளாறு. விவேகானந்தா கேந்திராவில் வேலை பார்த்த போது இவன் பெற்றோர் கோபிக்கு அறிமுகமாயினர்.

நாலு குழந்தைகளுக்கு நடுவில் எந்தவித தனிக் கவனிப்பும் இன்றி வளர்ந்து வந்த மாரியின் சுறுசுறுப்பு கோபிக்குப் பிடித்துப் போக, தன் சொந்த செலவில் அவனுக்கு விசேஷ பயிற்சி தந்து பள்ளிப் படிப்பை முடிக்க வைத்தான். பின்னர், இந்த அலுவலகத்தில் வேலையில் சேர்த்து ஒரே மாசங்களில் மாரிக்கு பியூன் வேலையும் வாங்கித் தந்து விட்டான்.

மாரி என்றால் கோபிக்கு அலாதியாய் முகம் மலரும்.

“பேசத் தெரியாட்டி என்ன சித்ரா, அவன் புத்தி சாலித்தனமும், வேலை சுப்புரவா செய்யற திறமையும் யாருக்கும் வராது” என்பான், இவனைப் பற்றிய பேச்சு எழும்போதெல்லாம்...

கோபி மறைந்த பிறகு நாலு நாட்களுக்கு இவன் எழுந்திருக்கவேயில்லையாம்... “அய்யாவுக்குப் பதில் நான் போயிருக்கக்கூடாதா? நான் இருந்தாயாருக்கு என்ன பிரயோஜனம்” என்று சிலேட்டில் எழுதிக் காட்டி மாலை மாலையாய்க் கண்ணீர் விட்டானாம்... அவன் தாய் இவளைப் பார்க்க வந்தபோது கூறினாள்.

அருகில் வந்து 'ஆட்டோ கூட்டி வரட்டுமா?' சைகையால் பேசியவனிடம் 'சரி' என்று கூற ஆட்டோ வந்தது.

இந்த கோபிதான் எத்தனை உயர்ந்த குணமுள்ளவராக இருந்திருக்கிறார்!

மரணமாகும் வரையில் சப்பனத்தை முழுசாக விட்டுக் கொண்டு வந்திருப்பாரா என்பது சந்தேகம் தானே?

'என் படிப்பு, அய்யா போட்ட பிச்சைங்க' 'நா இன்னிக்கு மனுஷனா நடமாடறேன்னா, அது கோபி ஸார் செஞ்ச உதவியாலதான்...' 'என் தங்கச்சி கல்யாணம் நடந்தது ஸாராலதாங்க', 'நடக்க முடியாம சப்பைய



இழுத்துக்கிட்டு பிச்சைக்காரனா வாழ்ந்திட்டு இருந்தவனை ஆளாக்கினது அய்யா தாங்க...'

கோபி... இதைச் செய்தார்...

ப்பா... இந்த நல்ல மனசு எத்தனை பேருக்கு அமையும்? ம்?

அது சரி, இத்தனை நல்லவராக வாழ்ந்து என்ன பிரயோஜனம் செய்த புண்ணியம் எதுவும் அவரை அந்த சனிக்கிழமை காப்பாற்றவில்லையே!

அப்புறம் எதற்காக நல்லவனாய் வாழ வேண்டும்?

கேட்டால் அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை— இது விதி என்கிறார்கள்...

பதில் கூறத் தெரியாவிட்டால் 'விதியின் விளையாட்டு' அப்படித்தானே!

சித்ராவுக்கு அலுப்பாக இருந்தது.

வாழ்க்கையில் இது நாள் வரை பெரியவர்கள் சொல்லி வந்திருந்த தெய்வம், விதி, பாவம், புண்ணியத்தில் அர்த்தங்கள் திடுமென மாறுபட்டுவிட்ட மாதிரி தோன்ற, குழப்பமாய் இருந்தது.

பாலத்தில் ஏறி இறங்கிய ஆட்டோ வட்டத்தை சுற்றிய போது வலது புறமாய்ச் சென்ற ஹாரிங்டன் சாலையைக் காண முடிய உடம்பு குலுங்கியது.

ஹாரிங்டன் ரோடு.

இங்குதான் கம்பனியின் வீடுகள் உள்ளன.

டைரக்டர்ஸ் க்வார்டர்ஸ் எங்க இருக்கு கோபி?

ஹாரிங்டன் ரோட் தெரியுமா? அங்கதான், 'லலித ப்ளேஸ்...பெரிய காம்பவுண்ட்ல பத்தே தா பன்னி

ரெண்டோ இருக்கு... எல்லாம் தனித்தனி பங்களா... நிறைய மரங்கள்... பொது ஷெட்டில் கோர்ட் கூட இருக்கு... பாத்தா நீ அசந்து போவே...

கோபி இருந்திருந்தால் டைரக்டர் ஹோதாவில் அவனும் அவளுமாக அந்த வீடுகளில் ஒன்றுக்குத்தான் குடிபெயர்ந்திருப்பார்கள்.

எப்படி இருக்கும் அந்த வீடுகள்?

போய்ப் பார்த்தால் என்ன?

முன்னால் சாய்ந்து சித்ரா ஆட்டோ சத்தத்தையும் மீறிக் கொண்டு கத்தினாள்.

''கொஞ்சம் திரும்பி ஹாரிங்டன் ரோடு வழியா போறீங்களா?''

ஹாரிங்டன் ரோடில் கொஞ்ச தூரம் போவதற்குள்ளாகவே கம்பனி பெயர் பதித்த காம்பவுண்ட் சுவர் கண்ணில்பட, சித்ரா ஆட்டோவை நிறுத்தச் சொன்னாள்.

''என்னங்க, வெயிட்டிங்ல போடவா?'' என்று ஆட்டோ டிரைவர் கேட்பதைக் காதில் வாங்காமல் இறங்கி, மெள்ள நடந்து மரத்தடியில் நின்றாள். எதிரில் தெரிந்த வீடுகளை வெறித்தாள்.

தெளிவாகப் பார்க்க முடியாமல் பார்வை மசமசத்தது...

ரொம்பப் பெரிசுதான்...

சோலையாய் மரங்கள்...

ஷட்டில் கோர்ட் எங்கே? பின்னால் இருக்கிறதா?

வெள்ளை ஷார்ட்ஸ், கான்வாஸ் ஷூ மட்டையுடன்



கோபி நின்று ''ரெடியா ராஜாத்தி? ஆரம்பிக்கலாமா?'' என்று கேட்பதைக் கற்பனை பண்ண முடிந்தது.

கற்பனை இனித்தது. உதட்டில் முறுவலைத் தோற்றுவித்தது.

நினைவுகள் அலைந்தன...

—இதுக்கே இப்படி அசந்து போனா எப்படி? சொந்த வீடு வேணும்னா கட்டிக்க கம்பெனி குறைஞ்ச வட்டில லோன் கூட கொடுக்கும்... அப்புறம்...

—சொந்த வீடு நமக்கே நமக்கு!

—நமக்கே நமக்குத்தான்...

—தனி வீடா, ப்ளாட்டா?

—உன் இஷ்டம் — உனக்கு எது வேணும்?

—ம்ஹ்ம்! தனி வீடு ரொம்ப ஆகும், எதுக்கு வீண் செலவு... ப்ளாட் போதாது?

—போதும்...

—எத்தனை பெட்ரூம்?

—நீ சொல்லு

—மூணு

—போதுமா?

நமக்கொண்ணு... நம்ம பசங்களுக்கு ஆளுக்கொண்ணு...

—அப்ப, ரெண்டோட நிறுத்திக்கணும்னு சொல்லு...

—ஏ... அப்பா— ரெண்டை ஆணாக்கினா போதாதா?

—சரி விருந்தாளிங்க வந்தா?

—வத்சா— பசங்களை ஒண்ணா படுக்க வச்சிடலாம்—இல்லை, நம்ம கூட படுக்க வைக்கலாம்.

—யாரு? விருந்தாளிங்களையா...

—ச்சி— நம்ம குழந்தைகளைச் சொன்னா...

—அதானே பார்த்தேன்... அப்புறம்?

—லைப்ரரி அறை விசாலமா, காத்தோட்டமா இருக்கணும். வயசான காலத்துல அக்கடானு உட்கார்ந்து புஸ்தகங்களைப் படிச்சு விவாதிக்க, நல்ல சங்கீதம் கேட்க, எல்லாத்துக்கும் லைப்ரரிய தயார் பண்ணணும்...

—உத்தரவு...

—சமையல்கட்டு வெளிச்சமா இருக்கணும்... நான் முக்கால் வாசி நேரம் அங்கதானே இருப்பேன்...

—அடக்கடவுளே... பெட்ரூம்ல இல்லியா?

ஆட்டோ ரிக்ஷாக்காரர் ஹாரனை ஒலித்து ''தாழ்[illegible]ருமாம்மா? என்று கேட்டதும் தூக்கிவாரிப்போட சித்ரா நிமிர்ந்தாள்.

அத்தனையும் கற்பனை... பைத்தியக்கார கற்பனை... அப்படித்தானே?

சடசடவென்று தன்னிரக்கம் பெருகியதில் நடு ரோடில் நிற்பதை மறந்து சித்ரா அழ முற்பட்டாள்.

# 19

பஸ்ஸில் கூட்டம் முண்டியது.

இப்படி அப்படி முகத்தைத் திருப்ப முடியாமல் சுற்றிலும் மனிதர்கள் நெருக்கினார்கள்...



கையை உயர்த்தித் தலைக்கு மேல் தொங்கின - பிடிமானத்தைப் பிடித்தபடி முன்னால் நின்றிருந்த பெண் மீது பஸ்ஸின் வேகத்தில் சாய முற்பட்ட போதெல்லாம் வியர்வை நெடி எழுந்து வயிற்றைப் புரட்டியது.

கால்களை அழுந்த ஊன்றிக் கொண்டு தன்னை நிலை நிறுத்திக்கொள்ள சித்ரா முயன்றாள்.

திருப்பங்களில் பஸ் திரும்புகையில் அதைச் சாதகமாக்கிக் கொண்டு பின்னாலும், பக்கவாட்டிலும் நின்றிருந்த ஆண்கள் தேவைக்கு அதிகமாக உராய்வது எரிச்சலைத் தந்தது

அநாகரிகமாய் நடந்து கொள்ளாதே என்று மிரட்டுகிற பார்வையோடு அடுத்தவனை ஏறிட்டபோது அவன் அது குறித்து இலட்சியம் பண்ணாததோடு அசிங்கமாய் இளிக்கவும் செய்ய சித்ரா அவசரமாய் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

வேலைக்குப் போகத் துவங்கிவிட்ட நாலு நாட்களாகவே இதே அவஸ்தைதான் காலையிலும் சரி, மாலையிலும் சரி, கண்டவனுடைய பார்வை புடவையை உரித்துப் போடாத குறையாய் மேய்வது ஒரு பக்கம் என்றால் சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும், எங்கெங்கே ஸ்பரிசிக்கலாம் என்று கழுகுகளாய்க் காத்திருப்பவர்கள் இன்னொரு பக்கம்...

ச்சே... என்ன கஷ்டம் இது!

இந்த மாதிரி இரண்டு வேளையும் பிழிந்துகொண்டு தான் போக வேண்டும் என்றால் கண்டிப்பாய்த் தாங்காது...

கோபியோடு ஸ்கூட்டரிலும், டாக்ஸியிலும் போய் சொகுசு கண்டுவிட்ட உடம்பு முரண்டு பண்ண, சித்ராவுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

போன வருஷம் வரைக்கும் ஒவ்வொரு நாளும் இதே மாதிரி இடிபட்டுக்கொண்டு பள்ளி கல்லூரி போய்வந்த உடம்பு ஏழே மாசத்தில் வசதிக்கு எப்படி அடிமையாகி விட்டது என்பது நம்ப முடியாததாகத் தோன்றியது.

இந்தச் சலிப்புக்கும், எரிச்சலுக்கும் காரணம் இத்தகைய வசதியும் இல்லாதது மட்டும் தானா?

இல்லை... இல்லை... எல்லாத்துக்கும் மேலாய் நான் இழக்கிறேன் உன்னைக் கவனித்து, பாதுகாத்து, அரவணைத்துச் 'செல்' என்கிற நினைவில் கூடவே இருந்த அந்த அன்யோன்யம்... அந்த ஸ்பரிசம்... அந்த இதம்... எனக்கு இவர் இருக்கிறார் என்கிற நிறைவு கர்வம்... அத்தனையும் அனுபவித்து ருசிகண்டு பழகிவிட்ட மனசு இன்று எல்லாவற்றையும் ஒட்டுமொத்தமாக இழந்துவிட்டதை ஏற்கத் தெரியாமல் பீறிட்டு எழும் ஆத்திரத்துக்கும் கோபத்துக்கும் எதை எதைக் காரணமாக்கலாம் என்று அலைவது தானே சரியான விளக்கம்.

ருசி கண்ட பூனை...

உன்னைதான்... ருசி தெரியாத வரையில் எந்த அவஸ்தையும் இல்லை... தெரிந்து ரசிக்கக் கற்றபின் இல்லை என்று ஆவதுதான் கொடுமை...

புருஷ சுகம்...

அதுதான் எத்தனை உயர்வானது, இனிமையானது— நிறைவைத் தருவது... அப்பட்டமான ஆண் ஒருத்தருடன் பழகி, வாழ்ந்து, படுத்து, பகிர்ந்து கொடுத்து எடுத்து, நிறைவு காண்பது என்பது எத்தனை அற்புதமான சமாசாரம்...

தாம்பத்தியம் என்பது வெறும் ஆண் பெண் கவர்ச்சி குழந்தைகள் என்னும் விஷயங்கள் நிறைந்தது தானா? ஊஹூம் இல்லையில்லை. நட்பு, ஆராதனை, அன்பு, விட்டுக்



கொடுத்தல், குறை நிறைகளோடு மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்ளல் என்று எத்தனை அருமையான பரிமாணங்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் உறவு அது!

உறவு என்றால் இன்று, நாளையோடு கலந்து, மறந்து விடும் உறவில்லையே!

ஆயுசு—பர்யந்தம் உனக்கு நான் எனக்கு நீ என்று கைகளை அழுந்தப் பற்றிக் கொள்வதோடு தோளோடு தோள் வைத்து சுக, துக்கங்களை ஒன்றாக எதிர் நோக்கி வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளும் பிணைப்பு அல்லவா?

ஆயுசுபர்யந்தம்... அப்படி என்றால்?

இந்த வார்த்தையை மனசுக்குள் இரண்டு முறை சொல்லிப் பார்த்தபோது சித்ராவுக்கு சிரிக்கத் தோன்றியது. அப்புறம் அழுகை எழுந்தது

“கொஞ்சம் நகர்ந்துக்கறீங்களா?”

தாட்டியான பெண்மணி ஒருவர் அதட்டலாய்க் கேட்டதும் சித்ரா 'ஆயுசுபர்யந்தத்தை' மறந்துவிட்டு விலகி ஓரமாய் நின்று கொண்டாள்.

இன்னும் எத்தனை நாழிகை இந்த நெரிசலில் இடிபட வேண்டும் என்கிற ஆயாசத்துடன் குனிந்து பஸ்ஸுக்கு வெளியில் பார்வையை வீசியவள் திடுக்கிட்டாள்.

கடவுளே! என் ஸ்டாப்பிங்கைக் கோட்டை விட்டு விட்டு தெப்பக் குளத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேனே!

அவசரமாய் முன்பக்கத்துக்கு நகர்ந்தவள் தன் அசட்டுத்தனத்தை எண்ணி நொந்தவாறு அடுத்த நிறுத்தத்தில் இறங்கினாள்.

ஒழுங்காக இறங்கியிருந்தால் பத்து நிமிஷ நடை கூட இல்லை... ஹூம்... இப்போது கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டருக்கும் அதிகமாய் நடந்து தொலைத்தாக வேண்டும்...

யோசனையுடன் நடந்த நாழிகையில் அவளைத் தாண்டிக் கொண்டு ஒரு பெண் மொபெட்டும், ஹெல்மெட்டு மாய்ச் செல்ல வீட்டில் சும்மா கிடக்கும் கோபியின் ஸ்கூட்டரிடம் புத்தி ஓடியது.

கோபி போய்விட்ட நாலாம் நாளோ, ஐந்தாம் நாளோ 'அந்த வீட்டுல இருக்குற ஸ்கூட்டர இங்க கொண்டு வந்திட்டா நீயாவது உபயோகிக்கலாம் இல்ல? சும்மா வச்சிருந்தா எதுக்கும் பிரயோசனம் இல்லாம வீணா போயிடப் போகுது' என்று பெரியப்பா கூறியதும் அதற்குப் பதில் சொல்லாமல் அப்பா இவளை வெறித்ததும் பிற்பாடு இந்த வீட்டுக்கு வந்துவிட்ட ஒரு நாளில் ''ஸ்கூட்டரை வேணா அப்பா உபயோகத்துக்காக'' என்று அம்மா தொடங்கும் போதே 'நோ... யாரும் அதத் தொடக்கூடாது... என் கோபி வண்டில வேற யாரும் உட்கார்ந்து ஓட்டக் கூடாது' என்று குரல் எடுத்துத் தான் கத்தியதும் இப்போது நினைவிற்கு வந்தது.

கோபி ஓட்டியதை யாரும் தொடக்கூடாது என்று இன்னும் எத்தனை நாட்கள் பிடிவாதம் பிடிக்கப் போகிறோம் என்கிற கேள்வியைத் தொடர்ந்து ஸ்கூட்டர் ஓட்டக் கற்று, ஏன் நாமே அதை உபயோகப் படுத்தக் கூடாது? அப்படிச் செய்வதன் மூலம் இப்படி நெரும்பு ஜன நெரிச்சலில் சிக்கிக் கொள்வதையாவது தவிர்க்கலாமே என்கிற நினைப்பும் எழ, யோசனையுடன் சித்ரா நடந்தாள்.

ஸ்கூட்டரைப் பெண்கள் ஓட்டுவது சுலபமா?



மொபெட் தானே எளிதில் சமாளிக்கக் கூடியது என்பார்கள்...

வேண்டுமானால் இந்த ஸ்கூட்டரை விற்றுவிட்டு ஒரு மொபட் வா...

சிந்தனை பாதியிலேயே தடைபட்டது...

கோபி ஸ்கூட்டரை விற்பதா?

என்ன பைத்தியக்கார எண்ணம் இது? ஒரு பக்கம் அவர் பொருட்கள் மேல் வேறு எவரின் விரல்கூடப் படக் கூடாது என்று தீவிரமாய் இருக்கிறேன்—இன்னொரு பக்கம் 'விற்கலாமா' என்று சிந்தனை...

என்னாயிற்று எனக்கு?

ஒரு சின்ன எண்ணம் தந்த குற்ற உணர்வுடனும், புது வேலையைக் கற்கும் மும்முரத்தில் நாள் முழுக்க உழைத்த அலுப்புடனும் சித்ரா அன்று வீட்டுக்குள் நுழைந்தபோது அம்மா மாலதியும், தங்கை சுஜாவும் அவளுக்காக முன்னறையிலேயே காத்திருந்தனர்.

நீண்ட நாட்கள் இடைவெளிக்குப் பின்னர் அம்மாவைப் பார்த்ததில் எழுந்த சந்தோஷத்தை அதிகமாய் வெளிகாட்டிக் கொள்ளாமல் சித்ரா லேசாகப் புன்னகைத்தாள்.

கைப் பையை முக்காலி மேல் வைத்துவிட்டு உட்கார்ந்தாள்.

''எப்ப வந்திங்க? ரொம்ப நாழியாச்சா?

''ம்''

அந்த ஒற்றை வார்த்தை அம்மா இன்னும் தன் மேல் கோபமாக இருப்பதை உணர்ந்து மேற்கொண்டு எதுவும்

பேசாமல் சித்ரா எழுந்து குளியல் அறைக்குச் சென்று முகத்தைக் கழுவிக் கொண்டாள்.

ஈரத்தைப் புடவைத் தலைப்பில் துடைத்தபடி சமையல் அறையை நோக்கி நடந்த நிமிஷத்தில் மாலதி அவளைப் பின் தொடர்ந்தாள்.

''பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு'னு சொல்லுவாங்க... அது எத்தனை சரியான வார்த்தைனு இப்பத்தான் புரியுது...' என்னை தனியா விட்டுட்டு எல்லாரும் போயிடுங்கனு கத்தினே... சரினு மனச இறுக்கிட்டு விட்டேனாம்... நாலு நாள்ல 'தான் ஆடாட்டாலும் சதை ஆடும்'னு சொல்லறத உண்மையாக்கிட்டு, தானா அம்மானு வருவேனு எதிர்பார்த்தேன்... ஒவ்வொரு தரம் 'கேட்' ஓசை படறப்பவும் வாசல்ல ஆட்டோ வந்து நிக்கறப்பவும் நீதான் வந்திட்டேனு ஓடி ஓடிப்போய் எட்டிப் பார்த்தேன். எங்க? நீதான் மனச கல்லாக்கிக்கிட்டியே... பந்தம் பாசம்னு எதுவுமே வேணாம்னு ஜடமா இருக்கத் துணிஞ்சிட்டியே... அப்புறம் உன்னண்ட அன்பை எதிர்பார்த்தது என் தப்புத்தானே?''

அம்மா மூச்சுவிடாமல் புலம்ப, சித்ரா குறுக்கே ஒரு வார்த்தை பேசாமல் ஆயா காய்ச்சி வைத்திருந்த பாலை மூன்று டம்ளர்களில் ஊற்றினாள்.

''அவர்களுக்கு நா காபி கலந்து கொடுத்திட்டேன்'' என்று அருகில் நின்ற ஆயா சின்ன குரலில் கூறியதும், தனக்கு மட்டும் கலந்து கொண்டு கூடத்துக்கு வந்தாள்.

பின்னோடு வந்த மாலதி உட்காராமல் இடுப்பில் கை வைத்தபடி நின்று கேட்டாள்.

''வேலைக்குப் போறயாமே சித்ரா?''

''ம்''

''எப்போலேந்து!''



''வேலைக்குப் போறது தெரிஞ்சிருக்கறப்போ அதுவும் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கணுமே!''

அவளுடைய குறுக்குக் கேள்வியை இலட்சியம் பண்ணாமல் மாலதி 'ப்ச்' என்றாள்.

''எங்களை பெரியவங்களா மதிச்சு 'விஷயம் இப்படி'னு நீ சொல்லாட்டியும் ஏதோ வந்த இடத்துல ஆயா சொல்லக் கொண்டு தெரிஞ்சுது... போகட்டும். என்ன சம்பளம்?''

சித்ரா நிமிராமலேயே தொகையைக் கூறினாள்.

''ம்ம்...உன் படிப்புக்கு இது குறைச்சல்தான். பரவா யில்ல விடு...ஆமா, கம்பனிலேந்து வரவேண்டிய பணம் வந்திருச்சா?''

''ம்''

''எவ்வளவு?''

சொன்னாள்.

''அதை என்ன செஞ்சிருக்கே?''

சித்ரா எரிச்சலுடன் நிமிர்ந்தாள்.

''எதுக்காக இன்கம்டாக்ஸ் ஆபீஸராட்டம் இத்தனை கேள்வி கேட்டுத் துருவறீங்க?... நா ஒண்ணும் குழந்தை இல்ல...பணத்தைப் பத்திரமா டெபாஸிட் பண்ணிட்டேன்—கவலைப்படாதீங்க...''

மாலதி அவள் எரிச்சல் நிறைந்த பதிலால் பாதிக்கப் படாமல் நீளமாய் பெருமூச்சு விட்டாள்.

''கவலைப்படாம இருக்க முடியுமா? பெத்துட்டேன் இல்ல...சின்னப் பொண்...ஏகமா பணம் வேற இருக்கு...

உன் வெகுளித்தனத்தைப் பயன்படுத்திகிட்டு அகப்பட்டதைச் சுருட்ட யாராச்சும் முனைஞ்சாங்கன்னா, பாத்துக்கிட்டு நிக்கச் சொல்றியா?''

''இங்க யாரும் அப்படிச் சுருட்ட நினைக்கல... நீங்க நிம்மதியா இருங்க...''

''எப்படி உன்னை இங்க தனியா விட்டுட்டு நாங்க அங்க அக்கடான்னு எப்படி இருக்க முடியும்? ஒரு மாசமா உங்கப்பாவுக்கும் எனக்கும் இதே வாக்குவாதம்தான்... 'என்னப் பொண்ண தனியா விடக்கூடாது'ன்னு நா பொலம்பறேன், 'அவளா தானே இருக்க விரும்பறா? பேசாம பட்டுகிட்டு வராதே'ன்னு அப்பா என்னை அடக்கிடறார்... இன்னிக்குத் தாங்க முடியாம அவர் பேச்சையும் மீறிக்கிட்டுதான் இங்க வந்திருக்கேன்...''

மாலதி பேசிக் கொண்டே சித்ராவின் அருகில் வந்தாள். அவள் கையை ஆதரத்துடன் பற்றி விசும்பலாய்ப் பேசினாள்...

''நாதான் கப்பு போட்டுச் சாப்பிடறேன்னு பிடிவாதமா இருக்கறத விட்டுட்டு எங்க கூடவே வந்திடு சித்ரா... உன்னை தனியா தவிக்க விட்டுட்டு என்னால நிம்மதியா இருக்க முடியல... சொன்ன பேச்சு கேளும்மா...''

சட்டென்று சித்ரா இளகினாள்.

இந்தப் பேச்சு, அன்பு, கரிசனத்துக்காகவே ஏங்கும் மனசை அடக்கத் தெரியாமல் முன்னால் கவிழ்ந்து அம்மாவின் மடியில் முகத்தைப் புதைத்து அழ முற்பட்டாள்.

மாலதி அவள் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

''நடந்ததை எல்லாம் கெட்ட கனவா மறந்திட்டு, அத்தனைக்கும் தலை முழுகு...போன வருஷம் வரைக்கும்



வீட்டுக்குருவியா திரிஞ்சிகிட்டிருந்த அப்பாவி பொண்ணை மயக்கி, திமிஷமா தாலிய கட்டி, அந்த வேகத்துலேயே பிரிஞ்சும் போயிட்ட அந்தப் பாவிய நினைச்சா என் உடம்பு பதறுது...பாவி...பதா பாவி நீ...விளையாட உனக்கு என் மகதான் கிடைச்சாளா?''

கோபியைக் கரிப்பது, சித்ராவை வெகுவாகப் பாதிக்கும் என்பதை இட்டிய மாலதி தொடர்ந்தாள்.

''அந்த அக்காக்காரியச் சொல்லு... அத்தனைக்கும் உடந்தையா இருந்திட்டு, இன்னிக்கு 'நீ எக்கேடு கெட்டா என்ன'ன்னு வெளிநாட்டுக்கு ஓடிட்டா பாரு...என்னாம தப்புதிங்க...இந்த அழகுல நம்ம வீட்டுப் படி ஏறி வந்து, 'நா வெளிநாட்டுக்குப் போறேன்— சித்ராவ பாத்துக்க வேண்டியது உங்க பொறுப்பு'ன்னு எங்களுக்குப் புத்தி சொல்லிட்டுப் போறா...ஒருவிதத்துல அவ போனதும் நல்லதுக்குத்தான்... இல்லாட்டி கம்பனி பணம் வந்ததும் நைஸா இதச் சொல்லி, அதச் சொல்லிக் கறந்தாலும் கறந்திருப்பா...இந்தக் காலத்துல யாரையும் நம்ப முடியலைம்மா...''

கோபியைக் குறை கூறியது போதாமல், துர்காவையும் சேர்த்துக் கண்மூடித்தனமாய் அம்மா குற்றப் பத்திரிகை வாசித்ததும், சித்ரா க்ஷண காலத்தில் மீண்டும் இறுகிப் போனாள்.

சரக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

அணைத்திருந்த அம்மாவின் கையைத் தட்டிவிட்டாள். ஆத்திரத்தோடு கத்தினாள்.

''அடுத்தவங்களையே எப்பப்பாரு குறை சொல்றீங்களே, நீங்க செய்யற தப்பை யார் கண்டிக்கறது?''

''நாங்க என்னடி அப்படித் தப்புச் செஞ்சிட்டோம், எங்கள ஒருத்தர் கண்டிக்கறத்துக்கு?''

"பெத்ததுக்கு என்மேல அக்கறை இல்லேனு புகார் படிக்கறியேம்மா, உங்களுக்கு மட்டும் இருக்கா?...இரண்டு மாசமாச்சு நீங்க இங்க எட்டிப் பாத்து, ஞாபகப் படுத்தலா?"

"நீதானே வர வேணாம்னு சொன்னே!"

"ஆமா, சொன்னேன்தான்... எப்ப? 'உனக்காக நா கஷ்டப்படறேன்'னு எப்பப்பாரு மூக்கால நீங்க அழுகப்ப சரி அதுக்காக சிரமப்பட்டுக்கிட்டாவது வரவேணாம்னு சொன்னேன்."

"சொல்றதையும் சொல்லிட்டு இப்பப் பழிய எங்க மேல போடறியா? இன்னும் என்னென்ன சொல்லணுமோ சொல்லிடு... கேட்டுக்கறோம்...பெத்ததுக்கு இது கூடச் செய்யாட்டி எப்படி?"

புடவைத் தலைப்பால் மாலதி கண்களைத் துடைத்துக் கொண்டதும், சித்ராவின் கோபம் அதிகமாயிற்று.

"ஆமா—ரொம்ப பாசந்தான் போங்க... கம்பனிலேந்து பணம் வந்திருக்கிற விவரத்தையும், வேலைக்குப் போகத் துவங்கிட்டதையும் கேட்டப்புறம் சரி, இனி இவ நமக்குப் பாரமாகமாட்டா... அதனால சேர்ந்து இருக்க தைரியமா கூப்பிடலாம்னு வந்திருக்கீங்க... அதானே உண்மை?"

இப்போது சுஜா குறுக்கிட்டாள்.

"எதுக்காக இப்படி குதர்க்கமா பேசற சித்ரா? உன்னை நினைச்சு அம்மா சரியா சாப்பிடாம, தூங்காம எப்படிக் கஷ்டப்படறாங்க தெரியுமா?"

சித்ரா விழிகளை உயர்த்தித் தங்கையை ஏறிட்டாள். "நானும்தானே யாரும் இல்லாமல் கஷ்டப்படுகிறேன்—என் நிலைமையைப் பார்த்து உனக்குப் பரிதாபப்படத்



தோன்றவில்லையா?" என்று வலிக்கிற மாதிரி கேட்க நினைத்ததைக் கேட்காமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"நீ ஒன்னும் கேட்டுடாத சுஜா...அவ புத்தி கெட்டுப் போயிட்டா...பழைய சித்ராவா அவ இப்ப இல்ல...ஏழு மாசத்துல அவங்க ரெண்டு பேருமா சேர்ந்துகிட்டு என்னென்ன சொன்னாங்களோ, என்ன மருந்து மாயம் வச்சாங்களோ...எம்பொண்ணு புத்தி மாறிப் போயிட்டா... அருமை பெருமையா வளர்த்த பெண், எடுப்பார் கைப் பிள்ளையாயிட்டா..."

கையிலிருந்த டம்ளரை சித்ரா முக்காலி மேல் வைத்த வேகத்தில் காபி தளும்பிக் கீழே சிந்தியது.

"இப்படி இல்லாததையும், பொல்லாததையும் சொல்லிப் புலம்பத்தான் வீடு தேடி வந்தீங்களாம்மா? தெரியாமத்தான் கேக்கறேன்...நிம்மதி எங்கே எங்கேனு பேயா நானே தேடிட்டு இருக்கறது புரியாம, ஏம்மா வலிய வந்து இருக்குற கொஞ்ச நஞ்ச நிம்மதியையும் எதை எதையோ சொல்லி விரட்டப் பாக்கறீங்க? அதான் உங்க யாரையும் வேணாம்னு ஒதுங்கிட்டேன்... அப்புறமும் ஏம்மா விரட்டிக்கிட்டே வந்து புண்படுத்தறீங்க?"

இரண்டு மாச தனிமையில் சித்ரா மாறி இருப்பாள், ஏதோ அசட்டுப் பிடிவாதத்தில் தள்ளி நிற்கிறாள்... போனால் போகிறது என்று நாமாகச் சென்றால் 'அம்மா' என்று அழுதுகொண்டு வந்து மடியில் விழுந்து விடுவாள் என்று தனக்குத்தானே ஒரு கணக்கைப் போட்டுக் கொண்டு வந்திருந்த மாலதி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாய் பழைய ரீதியிலேயே சித்ரா வார்த்தைகளைத் தணலாக வாரிக் கொட்ட, பதில் பேசத் தெரியாமல் விழித்தாள்.

அப்புறம் மெதுவாக சுஜா பக்கம் திரும்பி ''வா போலாம்'' என்றவள் சித்ராவை ஏறிட்டுப் பார்க்காமல் சின்ன மகள் தொடர வாசலுக்குச் சென்றாள்.

தனது வார்த்தைகளால் புண்பட்டு திரும்பிப் போகும் அம்மாவையும், தங்கையையும் ஓடிச்சென்று தடுக்க வேண்டும் போல இருந்தாலும் 'நான் தனி...இவர்கள் யாருக்கும் நான் தேவையில்லை...என் மனம் இவர்களுக்குப் புரியவில்லை...ஆயுசுக்கும் இனி நான் தனிதான்' என்கிற சுய பச்சாதாபம் அளவுக்கு மீறிப் பெருகியதில் ஒன்றும் புரியாமல் நின்று விட்டு, வலுக்கட்டாயமாக மனசைச் சரி செய்துகொண்டு 'மேனேஜ்மெண்ட்' — சம்பந்தமாய் லைப்ரரியிலிருந்து எடுத்து வந்திருந்த புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

புத்தகத்தைப் படித்தபோது எழுந்த சந்தேகங்களை ஒரு தாளில் குறித்தவள் மறுநாள் மதிய உணவு இடைவேளையில் 'சில விளக்கங்கள் புரியல; யார்கிட்ட அந்தச் சந்தேகங்கள கேக்கலாம்?'' என்று ட்ரேஸியிடம் வினவினதும் அவள் தயங்காமல் ''மிஸ்டர் சரவணன்' என' சித்ரா புருவங்களை உயர்த்தினாள்.

''சரவணன்னு இந்த கம்பனில ஒருத்தர் இருக்காரா என்ன?''

''என்ன அப்படிக் கேட்டுட்டீங்க மிஸஸ் கோபி? நீங்க இன்னும் அவர சந்திக்கலியா? புதுசா சேர்ந்திருக்கிற நிர்வாக மேனேஜர்ல அவரும் ஒருத்தராச்சே! ஒரு வேளை அவர் அடிக்கடி வெளியூர் போயிடறதால நீங்க பார்க்க முடியலையோ என்னவோ...?'

''அவர் ரூம் எது?''

''ஜி.எம்.ரூம்கு எதிர்ல...ரொம்பக் கெட்டிக்காரர் மிஸஸ் கோபி...டெல்லிக்குப் போயிருந்தவர் நேத்துத் திரும்பிட்டார்...நிச்சயமா உங்க சந்தேகங்கள திறமையா விளக்குவார்...போய் அவசியம் சந்தியுங்க...இன்னும் சொல்லப்போனா, மிஸ்டர் கோபியோட இடத்துக்கு சீக்கிரமே இவர உயர்த்தப் போறாங்கனு ஒரு பேச்சுக் கூட இருக்கு...''



கோபி இடத்தில் இன்னொருவரா?

அத்தனை திறமைசாலியா இந்த சரவணன்?

கோபியின் ஸ்தானத்துக்கு போட்டி போடுகிறவர் என்கிற எண்ணம் தலைதூக்கியதில் மதியம் மூன்று மணிக்கு மேல் சரவணனின் கதவை ஆள்காட்டி விரலால் தட்டி ''உள்ளே வரலாமா'' என்று சித்ரா கேட்டபோது நெஞ்சின் அடிவாரத்தில் கசப்பு லேசாக படர்ந்திருந்தது நிஜம்தான்.

# 20

நுழைந்தவள், லேசாகத் திடுக்கிட்டாள்.

இவனா? ஸாரி, இவரா?

பையன் மாதிரி இருக்கும் இவரா?

முதிர்ச்சியுடன் செயல்பட்ட என் கோபியின் ஸ்தானத்திலா?

திகைப்புடன் மீண்டும் ஏறிட்டபோது முதலில் நினைத்த மாதிரி அத்தனை சிறுவயசாக இருக்காது என்றும் தோன்றியது

காரணம் புரியாமல் ஒருவித எரிச்சல் கலந்த குழப்பம் உள்ளுக்குள் மண்ட நின்ற கணத்தில் ஏதோ ஃபைலில் ஆழ்ந்திருந்த சரவணன் நிமிர்ந்தான்.

''ஒரு நிமிஷம்'' என்று அடிக்குரலில் கூறினவன், உட்காருங்கள் என்கிற உபசரிப்பில ஒரு கையை நீட்டி நாற்காலியைக் காட்டிவிட்டுத் தொடர்ந்து கவனத்தை ஃபைலில் செலுத்த, சித்ராவின் எரிச்சல் அதிகமானது.

ஆனைப்பட்ட சேர்மன், ஜி.எம்.போன்றவர்களே என்னைக் கண்டுவிட்டால் புன்சிரிப்புப் படர எழுந்து நின்று வரவேற்று மரியாதை தரும்போது...இந்த சரவணன் இப்படி விட்டேத்தியாய் நடந்து கொள்கிறானே...ஸாரி, 'சே'...'ச்சே' வேண்டாம் வேண்டாம்—சின்ன பையனுக்கு மரியாதை என்ன வேண்டி கிடக்கிறது 'ன்' என்று குறிப்பிட்டால் ஒன்றும் குறைந்து விடாது...

சரவணனுக்கு மரியாதை தேவையில்லை என்று தீர்மானித்தது எரிச்சலைக் கொஞ்சம் குறைக்க, சித்ரா நாற்காலியில் அமர்ந்தாள்.

கையோடு கொணர்ந்திருந்த நிர்வாகம் பற்றின புத்தகங்களை மேஜைமேல் வைத்துவிட்டு எதிரில் தலை குனிந்து ஃபைலைப் படித்தபடி உட்கார்ந்திருந்த சரவணனை ஊன்றிப் பார்த்தாள்.

அலட்சியமாய் வாரப்பட்ட அடர்த்தியான முடி... தாடி, மீசை என்று எதுவும் இல்லாமல் வழுவழுவென்று ஷேவ் செய்யப்பட்ட சற்றே நீளமான முகம்...கறுப்பு நிறம்தான...ஆனால் அது இயல்பான நிறமாகத் தோன்றவில்லை...வெயிலில் அலைவதால் உண்டான கறுப்பு...ஒரு வேளை டென்னிஸ் கின்னில் விளையாடுவாரோ?

குறிப்பிட்ட எந்த நோக்கமும் இன்றி அவனைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தவளுக்குள் தேவையில்லாத ஆராய்ச்சியில் ஈடுபடுவது ஏன்?—என்கிற கேள்வி எழ, அவசரமாய்ப் பார்வையை அவனிடமிருந்து பிடுங்கி அறையைச் சுற்றிப் படர விட்டாள்.



மேஜைமேல் சரவணனைப் பார்த்தபடி, இவளுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு இருந்த போட்டோ ஃபிரேம் என்றோ அவளுக்கும் கோபிக்கும் இடையில் நடந்த பேச்சுக்களைத் தேடி இழுத்து வந்தது.

—போதும் கோபி...எனக்குக் களைப்பா இருக்கு; எடுத்தது போதாதா?

—போதாது என் ராஜாத்தி...இன்னும் ஒண்ணே ஒண்ணு...அந்த மரத்துல சாஞ்சுகிட்டு...அ...அப்படித்தான்...பச்சை இலைகள் வழியா சாயங்கால சூரியன் எட்டிப் பார்க்கற பின்னணியிலே நீ எப்படி இருக்கே தெரியுமா?

—எப்படி இருக்கேனாம்?

—காமராவ கீழ போட்டுட்டு, கிட்ட வந்து... உன்னை அலாக்கா தூக்கி...

—அப்பா...போதும்... போதும்... நுனி எடத்தக் கொடுத்தா மடத்தைப் பிடுங்கற ஜாதியாச்சே நீங்க... சட்டுனு எடுத்து முடிங்க...பார்க்ல இருக்கற எல்லோரும் நம்பளையே பார்க்கறாங்க...

—பார்க்கட்டுமே... என் பொண்டாட்டிய நா போட்டோ எடுக்கறேன்...எவனுக்கென்ன?

ஆமா, இத்தன தினுசு தினுசா எடுத்து என்ன செய்யப் போறீங்க?''

—ஒண்ணை என் பர்ஸ்ல வச்சுப்பேன்; ஒண்ணை என் பெட் சைட் டேபிள்ல வைச்சுப்பேன். இருக்கறத்துக்குள்ள பிரமாதமா இருக்கறத ப்ரேம் போட்டு ஆபீஸ் டேபிள் மேலே வைச்சுக்கிட்டு எப்பவும் உன்னைப் பார்த்துக் கிட்டே இருப்பேன்...

தொடர்ந்து அன்று நடந்த சமாசாரங்கள் மனசுக்குள் உல்லாசமாக ஊஞ்சலாடத் தொடங்கியதும் சித்ராவின்

காது மடல்கள் குறுகுறுக்க முற்பட்டன. இருதயத்துக்குள் ஒரு அசாதி படபடப்பு.

கடையிலே இன்னும் நாலைந்து படங்கள் எடுக்கப்படாமல் தங்கிவிட்டதில், பிலிம் சுருள் டெவலப் ஆகாத நிலையில் காமராவினுள் தங்கி இருப்பதுதானே உண்மை.

அதற்குள் என்னென்ன கற்பனைகள்; பேச்சுக்கள்!

நாவால் உதட்டை ஈரப்படுத்தி சித்ரா தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முயன்றாள்...

வலுக்கட்டாயமாக சரவணன்பால் கவனத்தைத் திருப்பினாள்.

இந்த சரவணன் டேபிள் மேல் இருக்கும் புகைப்படம் யாருடையதாக இருக்கும்?

மனைவி? தனியாய்? குழந்தைகளுடன்?

பார்த்தால் திருமணமாகி, குழந்தை குட்டி இருக்கும் வயசு போலத் தோன்றவில்லையே!

என்ன வயசிருக்கும்?

ம்ஹூம்—புரியவில்லை...

என்னைவிடப் பெரியவனாய் இருப்பானா—இல்லை சின்னவனா?

இன்னொருதரம் அழுத்தப் பார்த்தபோது எது வேணுமானாலும் இருக்கலாம் என்றே தோன்றியது.

''மிஸ்டர் சரவணன் ரொம்பக் கெட்டிக்காரர். மிஸஸ் கோபி...யூ.எஸ்.ல எம்.பி.ஏ. முடிச்சிட்டு அங்கயே ஒரு வருஷம் வேலை பார்த்தப்புறம் இங்க வந்து...நம்ப கம்பனில சேர்ந்திருக்கார்...இவர பத்தி சேர்மன் உயர்வா பேசி நா அடிக்கடி கேக்கறேன்—'' முதல் நாள் ட்ரெனி கூறினது ஞாபகத்துக்கு வர சித்ரா கணக்குப்போட்டாள்.



டிகிரி முடிக்க வயசோடு எம்.பி.ஏ. படித்தாலும், இருபது பிளஸ் இரண்டு இருபத்தி ரெண்டு வயசு...ஒரு வருஷ வேலை அனுபவம்...ஆக, இருபத்தி மூன்று...அதிக பட்சம் இருபத்திநாலு...

அப்படியென்றால் என் வயசுதானா?

''மிஸ்டர் கோபியோட எடத்துக்கு சீக்கிரமே இவர உயர்த்தப் போறாங்க'னு ஒரு பேச்சுக் கூட இருக்கு'' என்று ட்ரெனி சொன்னாளே?

இந்தச் சின்ன வயசில் அப்படி ஒரு வாய்ப்பா?

அத்தனை கெட்டிக்கா...

சடக்கென்று ஃபைலை மூடிவிட்டுச் சரவணன் நிமிர்ந்ததும் கையும் களவுமாய்ப் பிடிக்கப்பட்டுவிட்ட அவஸ்தையுடன் சித்ரா வேகமாய் வேண்டாத சிந்தனைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துக் கண்களைத் தழைத்தாள்.

அவளுடைய சங்கடத்தை உணராதவன் போலச் சரவணன் பெல்லை அழுத்தி ப்யூனை வரச்செய்தான்

''இதக் கொண்டுபோய் ஜி எம் அறைல வச்சிடுங்க'' என்றவன் சித்ராவிடம் 'காபி, டீ?'' என்று கேட்டு அவள் எதுவும் பதில் கூறாததால் ''சரி நீங்க போங்க'' என்று அவனை அனுப்பி வைத்தான். பிறகு, முன்னால் சாய்ந்து முதன் முதலில் ஒருவரைச் சந்திக்கும் அறிமுகப் புன்னகையோ அல்லது சித்ராவின் இழப்புக்காக வருந்தும் முகபாவனையோ இல்லாமல் பேசினான்.

''ஸாரி...ஃபைல் அவசரமா ஜி எம்க்குப் போக வேண்டி இருந்தது... நீங்க போன் பண்ணிட்டு வந்திருந்தீங்கன்னா, காக்க வச்சிருக்க மாட்டேன்...பத்து நிமிஷம் கழிச்சு வாங்கனு சொல்லி இருப்பேன்...''

''......''

மேஜை மீதிருந்த பேப்பர் வெயிட்டை எடுத்துச் சரவணன் இரண்டுதரம் சுழல விட்டான். சித்ரா தானாக வந்த காரியத்தைக் கூறுவாளா என்று அரை நிமிஷம் காத்துப் பார்த்துவிட்டு, அப்படி அவள் எதுவும் செய்ய முனையாதிருக்க இடது கையால் முடியை ஒரு தரம் கோதிவிட்டபடி ''சொல்லுங்க...வாட் ஐ டு ஃபார் யூ?'' என்றான்.

சித்ரா செருமித் தொண்டையைச் சரிசெய்து கொண்டாள்.

''நா மிஸஸ் கோபி.''

''தெரியும், சொல்லுங்க...''

தெரியுமா? எப்படித் தெரியும்? இவனை நான் இதற்கு முன் சந்தித்ததில்லையே...

வந்த வேலையைக் கவனிக்க விடாமல் கேள்விகள் எழுந்ததை ஒதுக்கி விட்டுச் சித்ரா தொடர்ந்தாள்.

''இந்த கம்பனில நா மேனேஜ்மெண்ட் ட்ரெயினியா சேர்ந்திருக்கேன்...பயிற்சி சம்பந்தமா வர்ற சந்தேகங்கள உங்ககிட்ட கேட்டு விளக்கம் பெறலாம்னு ட்ரேனர் சொன்னாங்க...அதான்...''

மேலே என்ன பேசுவது என்று புரியாமல் பாதியில் சித்ரா நிறுத்த, சரவணன் எழுந்து மேஜையைச் சுற்றிச் சுற்றிக் கொண்டு அவள் அருகில் வந்து நின்றான். தன்னோடு அவள் கொணர்ந்திருந்த புத்தகங்களை எடுத்துப் பிரித்துப் பார்த்தான்.

''இதெல்லாம் நீங்க படிக்கிறீங்களா?''

''ம்''

''இந்தப் புத்தகங்கள யாராவது குறிப்பிட்டுப் படிக்கச் சொன்னாங்களா?''



''இல்ல, நானாதான் லைப்ரரில எடுத்தேன்...''

''ம்ம்...இதைத் திருப்பிக் கொடுத்திட்டு நா சொல்ற சில புஸ்தகங்க பேர்கள குறிச்சிக்கிட்டு எடுத்து வந்து படியுங்க...முதல், இரண்டாவதுனு படிப்படியா போனாத்தான் மேல போறது சுலபமா இருக்கும்... எடுத்த எடுப்பிலேயே பத்தாவது படிக்கத் தாவ நினைச்சா அது சிரமமானது மட்டும் இல்லை, நடைமுறைக்குச் சரிபடாததும் கூட...''

அவன் சில பெயர்களைக் குறிப்பிட, சித்ரா குறித்துக் கொண்டாள்.

''இன்னிக்கு சாயங்காலம் அவசரமாக வீட்டுக்குப் போக வேண்டிய வேலை ஏதாவது இருக்கா?''

''ஏனாம்?''

''குட்...அப்ப, அஞ்சரை மணிக்கு இங்க வர்றீங்களா? நிர்வாகம்னா என்ன, அதை எப்படி அணுக, கையாளத் தெரியணும்ங்கறதைப்பத்தி எனக்குத் தெரிஞ்சதை உங்களுக்குச் சுருக்கமா சொல்றேன்...இன்னும் பத்து நிமிஷங்கள்ல ஒரு கிளையன்ஸ்டோட மீட்டிங் இருக்கு...''

சித்ராவின் பதிலுக்குக் காத்திராமல் கதவிடம் சென்று அவள் வெளியேறுவதற்காக அதைத் திறந்து பிடித்துக் கொண்டு சரவணன் நின்றதும் 'உனக்கு இது சௌகர்யப்படுமா படாதா' என்றுகூட அடிப்படை மரியாதையுடன் கேட்காத அவனின் நடத்தை அடக்கியிருந்த எரிச்சலைக் கிளப்பிவிட, சித்ரா எழுந்து நின்றாள்.

நிதானமாகப் புத்தகங்களை அடுக்கினாள்.

ஸாரி—என்னால் வரமுடியாது. வேலை இருக்கிறது—என்று கூறிவிடலாமா என்று நினைத்தவள், இவன் மேல் உள்ள கோபம் வேலை கற்கும் சந்தர்ப்பத்தைப் பாதித்து

விடக் கூடாது என்கிற முடிவுடன் நினைப்பை மாற்றிக் கொண்டாள்.

நன்றி கூறாமல் வெளியே வந்து, மெள்ள காரிடாரில் நடந்தபோது அவனுடைய முரட்டு—எடுத்தேன்—கவிழ்த்தேன்—பேச்சுக்கு இப்படி மௌனமாக வருவதன் மூலம் தகுந்த பதிலைத் தந்துவிட்ட திருப்தி எழுந்தாலும், தொடர்ந்து இப்படியே சமாளிப்பது இயலுமா என்கிற சின்ன நெருடலும் தலை தூக்கவே செய்தது.

ஆனால், நல்ல வேளையாக, அன்றும், அடுத்து வந்த மூன்று நாட்களும் அவள் பயந்தபடி எந்த அசம்பாவிதமும் நடக்காமல் மிகத் திறமையாக 'மேனேஜ்மெண்ட்' பற்றி விளக்கின கையோடு நான்காம் நாள் ஹைதராபாத், ஒரிஸாவுக்கு வேலை நிமித்தமாய் சரவணன் புறப்பட்டுப் போனதும் சித்ராவுக்கு அப்பாடா என்றே இருந்தது.

நாலு நாட்களாய் சரவணனை தினமும் ஒரு மணி நேரத்துக்கும், அதிகமாய்ப் பார்க்கிறான், பேசுகிறான் என்றாலும், வேலையைத் தவிர வேறு எது குறித்தும் இது வரை ஒரு வார்த்தை கூட அவளிடம் பேசாதது முதலில் எரிச்சலைத் தந்து பின்னர் அதுவே வியப்பாகிப்போனது உண்மை...

கம்பெனியின் செல்லப்பிள்ளையான கோபியை அகாலமாய் இழந்திருக்கிறேன்; துக்கத்திலிருந்தும் இன்னும் மீளாத நிலையில் தவிக்கிறேன். அழுந்திப் போகாமல் எப்படியோ மீண்டு விடவேண்டும்—என்கிற வெறியில் வாழ முயற்சி செய்கிறேன்—என்கிற விவரங்கள் இவனுக்குத் தெரியுமா? தெரியாதா?

இது உண்மையான தெரியாத்தனமா, இல்லை—நீ யாராக இருந்தால்—எனக்கென்ன—உன் வேதனை எப்படிப்பட்டதாக இருப்பின்—எனக்கென்ன—என்கிற அலட்சியமா?



ஆபீஸில் உடன் வேலைபார்த்த அத்தனை பேர்களும் இவளைக் கண்டு விட்டாலே முகத்தில் வண்டி பரிதாபத்தைச் சுமந்து கொண்டு பார்ப்பதும், குழைவதுமாக இருக்க, சரவணன் மட்டும் வித்தியாசமாக இருப்பது யோசிக்க சித்ராவிற்குக் குழப்பத்தையே தந்தது.

அப்படிக் குழப்பம் அதிகமாகி, ஆயாசமாகத் தொட்டு, 'சே—இவன் எப்படி நடந்து கொண்டால் எனக்கென்ன? சந்தேகம் கேட்டோமா, வந்தோமா என்று இல்லாமல் இந்த மரியாதை தெரியாதவனின் நடத்தைக்கு விளக்கம் தேடி வீணாய் அலைவானேன்?' —என்று தன்னைத்தானே கடிந்து கொண்ட ஒரு நாளில் சற்றும் எதிர்பாராத விதத்தில் கம்பெனி செகரட்டரி மாதவமேனன், மதிய உணவு நேரத்தில் சரவணன் சம்பந்தப்பட்ட சில விவரங்களை அவள் மடியில் தொப்பென்று போட்டார்.

ஆயா செய்து வைத்திருந்த சப்பாத்திகளைச் சாப்பிட டப்பாவைத் திறந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்த நிமிஷத்தில் சாப்பாடு அறைக்குள் எட்டிப் பார்த்த மேனன் புருவத்தை உயர்த்தினார்.

''என்ன மிஸஸ் கோபி, சாப்பிட இன்னிக்கு இவ்வளோ லேட்?'' என்று வினவினவர் அவள் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டார்.

''சீதாராம் அண்ட் கோ ஃபைலைப் பார்த்திட்டு இருந்தேன் ஸார்... நாழியாயிட்டது...''

மேனன் வாஞ்சையுடன் புன்னகைத்தார்.

''ரொம்ப தீவிரமா வேலைய பிடிச்சுக்கிறீங்கன்னு கேள்விப் பட்டேன்...வெரிகுட்...''

''யார் சொன்னாங்க ஸார்?''

'தேக்ஸ் ஜி. எம். கிட்ட சரவணன் தான் சொல்லிட்டு இருந்தார். 'புத்திசாலி—இத்தனை சீக்கிரத்துலேயும் திடீர்னு போயிடாம தைரியமா இருக்காங்க...சொல் லதை உடனே புரிஞ்சிக்கறாங்க'னு பாராட்டினார்... எனக்குச் சந்தோஷமா இருந்தது...''

வாயில் போட்ட சப்பாத்தித் துண்டத்தைக் கடிக் காமல் அப்படியே வெளியில் எடுத்து டப்பா மூடியினுள் சித்ரா போட்டாள்.

சரவணனுக்கு பாராட்டக் கூட தெரியுமா?

''கோபிமேலே சரவணனுக்கு அபார பிரியம்பா அன்னிக்கு அத்தனை பேரும் செயலிழந்து போயிட்டப்போ தைரிச் சமிட்டு...ஓடி...ஓடிக் காரியங்களைப் பொறுப்பா செஞ்சு முடிச்சது அவர் தான், தெரியும் இல்லே?''

''என்னிக்கு? எந்தக் காரியங்களை?''

''கோபி போன அன்னிக்குத்தான் பாடிய ஹாஸ் பிடல்லேந்து வாங்கிட்டு வந்து கிரிமடோரியத்துல காரியங்களை செஞ்சு முடிக்கிற வரைக்கும் எல்லாப் பொறுப்புகளையும் சரவணன்தானே எத்துக்கிட்டார்?''

சித்ராவுக்குப் புரை ஏறியது...ஒரு வாய் தண்ணீரைக் குடித்தாள்.

''அப்படீன்னா கோபிய மிஸ்டர் சரவணனுக்கு முன்னாலியே நல்லா தெரியுமா ஸார்? இவர் சமீபத்துல தான் கம்பனில சேர்ந்ததா கேள்விப்பட்டேனே''

'சேர்ந்து அதிக நாள் ஆகலைன்னாலும், அமெரிக் காவில் இருக்கறப்பலே சரவணனுக்கும் கோபிக்கும் பழக்கம் உண்டாமே, உங்களுக்குத் தெரியாதா? இந்தியா வுக்கு வர விரும்பின சரவணனுக்கு ஊக்கம் கொடுத்து, சேர்மன் அங்க வேலையா போனப்ப சரவணனைச் சந்திக்கச் செஞ்சு வேலைல சேர வைச்சதே கோபி தானாமே!...இன்ஃபாக்ட், கோபி தவறிப் போறத்துக்கு



முத நாள் டைரக்டர்ஸ் மீட்டிங் நடந்தது பாருங்க. கோபிய டைரக்டரா நியமிக்கணும்னு தீர்மானம் எடுத் தாங்களே. அன்னிக்குத்தான் சரவணன் வேலைல சேர்ந் தார்...மறுநாள் அந்த விபத்து நடந்த சேதி கேட்டதும் எல்லாரும் ஆடிப்போயிட்டோம்னாலும், சரவணன் 'நல்லதொரு வழி காட்டிய இழந்திட்டேனே'னு கண் கலங்கிட்டார், தெரியுமா?''

கோபிக்கு சரவணன் இந்த அளவுக்கு நல்லாகத் தெரியும் என்கிற சேதி தந்த அதிர்ச்சியோடு, சரவணன் அதற்குக் கண் கலங்கினான் என்பதும் சேர்ந்து தாக்க, சித்ரா கேட்டதை நம்ப முடியாமல் கண்ணகல பேசிய வரை வெறித்தாள்.

மேனன் நீளமாய்ப் பெருமூச்சை வெளியிட்டார்.

''ஆனா, பாவம் இந்தச் சரவணனுக்குத்தான்...''

சொல்ல வந்ததைக் கூறி முடிக்கு முன்னர் மாரிமுத்து அவசரமாய் லஞ்ச் ரூமுக்குள் ஓடி வந்து எதையோ அறிவிக்க—

''என்ன மாரி? சேர்மன் கூப்பிடறாரா...இதோ வந்திட்டேன்''...என்றபடி எழுந்த மேனன் 'வரேன் மிஸஸ் கோபி, அப்புறமா பார்க்கலாம்'' என்று கூறி விட்டு வேகமாய் வெளியே போனார்.

சாப்பிடப் பிடிக்காமல் சித்ரா சப்பாத்தித் துண்டங் களை டப்பாவினுள் போட்டு மூடினாள்.

கோபிக்குச் சரவணனை முன்னரே தெரியுமா? அப் படியானால் என்னிடம் இவனைப்பற்றி எதுவும் ஏன் சொல்லவில்லை...?

மறந்துவிட்டாரா... இல்லை சொல்லத் தேவை யில்லை என்று சும்மா இருந்து விட்டாரா?

இவளுக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லாத அலுவலக விஷயங்களை கோபி சொன்னதில்லைதான் என்றாலும் இது ஒன்றும் தலை போகிற ரகசியம் இல்லையே! அப்புறம் ஏன் சொல்லவில்லை...

ஒருவேளை சொல்லி நான்தான் காதில் சரியாக வாங்கிக் கொள்ளவில்லையோ...

அந்த வெள்ளிக்கிழமை டைரக்டராக நியமிக்கப்பட்ட அதே நாளில் சரவணன் வேலையில் சேர்ந்ததாக மேனன் கூறினாரே...

உற்சாகப் பரபரப்பில் மறந்துவிட்டாரோ...

அப்படித்தான் இருக்கவேண்டும்...இல்லாவிட்டால் என் கோபியா...

சுருக்கென்று மனசு ஒருதரம் சவுக்கடி பட்ட மாதிரி உதறியது.

அந்தச் சனிக்கிழமை காலை...

டி.வி.யில் கிரிக்கெட் பந்தயம் பார்க்கும் மும்முரத்தில் ஆழ்ந்து போயிருந்த சமயம்....

'புறப்படு, புறப்படு' என்று கோபியை கையைப் பிடித்து வாசலில் விடாத தோஷமாய் விரட்டிய நிமிஷம்.

—உன்கிட்ட முக்கியமான விஷயம் ஒண்ணு சொல்ல மறந்திட்டேன் சித்ரா...

—என்ன?

—டி.வி.ய நிறுத்து. சொல்றேன்...

—அப்ப நீங்க சொல்ல வேணாம்...

—ரொம்...ப முக்கிய சேதி...

—சாயங்காலம் சொல்லுங்க...பரவாயில்ல...



என்ன சொல்ல வந்தார் அன்று? சரவணனைப் பற்றிப் பேச விரும்பினாரோ?

ரொம்ப முக்கியம் என்றாரே!

என்ன முக்கிய சேதி அது?

முதல் நாள் தன் சிபாரிசில் வேலைக்கு வந்த சரவணனைப் பற்றினதாக இல்லாவிட்டால் வேறு என்ன கூற வந்தார்?

வேலைக்குப்புறப்படும் கணவரின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் எதற்காக அந்த அளவுக்கு அன்று கிரிக்கெட் மேட்சில் கவனம் செலுத்தினேன்?

முக்கியமாய் எதை சொல்ல நினைத்தார்?

எப்படி இத்தனை மாதங்களில் அந்தக் கடைசி நேரப் பேச்சுக்களை மறந்து போனேன்?

அடிபட்ட நிமிஷங்களோடு மறுபடியும் மனசு வாழ மறுத்து ஒரு திரையைப் போட்டுக் கொண்டதாலா?

ஐயோ...ஏன் இத்தனை நாட்களில் ஒரு தரம்கூட அந்த காலை சம்பாஷணையை நினைத்துப் பார்க்கவில்லை?

கோபி என்ன சொல்ல முனைந்தார்?

ஐயோ...என்ன? யாராவது கூறுங்களேன்.

தொண்டை இறுகி, இருதயம், எகிறித் துள்ள ஆரம்பித்த கணத்தில் கோபியை நிற்க விடாமல் தான் துரத்தியதும் தீவிரமாய் நினைவில் படர்ந்தது.

—நா ஆபீஸுக்குக் கிளம்பட்டுமா?

—ஏழாந்தரம்...

—அப்படின்னா?

—ஏழாவது தரமா 'நா கிளம்பட்டுமா'னு கேக்க றீங்கனு அர்த்தம்...

—என்ன நீ... கிளம்பு, கிளம்புனு வெரட்டிகிட்டே இருக்க?

—ஒரு துணுக்கு ஞாபகத்துக்கு வருது... புதுசா கல்யாணமான தம்பதி ஏழெட்டு ஒண்டுக்குடித்தனம் இருக்குற வீட்டுல குடி இருந்தாங்க...கல்யாணம் ஆகி முத நாள் ஆபீஸுக்குப் புறப்பட்ட புருஷன் 'போய்விட்டு வரட்டுமா?'னு கேட்டுகிட்டே வாசல் வரைக்கும் வந்தவன் புறப்பட மனசு இல்லாம இன்னொரு தரம் 'போய்விட்டு வரட்டுமா?'னு கேட்டதும் ஏழெட்டு ஜன்னல் கதவு திறந்துவிட்டு அத்தனை குடித்தனக்காரர்களும், 'போயித் தொலையேன்டா பாவி'னு தாங்கமாட்டாம கத்தி...

—அப்ப, என்னையும் போய்த் தொலையேன்டா பாவினு சொல்லாமே சொல்றே, அதானே?

—சீச்சி—மரியாதை இல்லாம அப்படி சொல்வேனா? 'போய்த் தொலைங்க கோபி'னு நான் சொல்வேன்.

போய்த் தொலைங்க கோபி...

போய்த் தொலைங்க கோபி...

என் நாக்கில் சனி புகுந்து கொண்டு அன்று அப்படிக் கூற வைத்ததா?

அதான் நிரந்தரமாய்ப் போய்விட்டாரா?

போய்த் தொலையுங்க கோபி...

கடவுளே...கடவுளே...

ஏன் என்று விளக்க முடியாதபடி இது நாட்கள்வரை நினைவுப் பெட்டியின் அடிவாரத்தில் புதைந்து கிடந்து



விட்டு இன்று முழுமையாய், முதல் தடவையாய் அந்த சனிக்கிழமை காலைப் பேச்சுக்கள் வெளிப்பட, சித்ரா வெலவெலத்துப் போனாள்.

பெரிதாய் குற்ற உணர்வு நெஞ்சில் ஏறி கனமாய் உட்கார்ந்ததில், மூச்சு முட்டியது. கைவிரல்கள் நடுங்கின. ஜுரம் வந்துவிட்ட நிலையில் உடம்பு சட்டென்று கொதித்தது

ஆபீஸில் இருக்கும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் அத்தனை பேர் நடுவிலும் உடைந்துபோவது சரியல்ல என்பதைப் புரிந்துகொள்ள முடிய, மணி ஐந்து நிமிஷங்கள் செல்லத்தக்கும் அனுமதி பெற்று, டாக்ஸி பிடித்து, வீட்டைப் பார்க்க ஓடிப் போனாள்.

## 21

''ரொம்ப பிஸியா? வரலாமா?''

நிமிர்ந்தவள் எதிரில் நின்ற பர்ஸனல் ஆபீஸர் ஸ்ரீனிவாசனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''வாங்க...உட்காருங்க...''

''வேலையா இருக்கிறப்ப தொந்தரவு பண்றேனா?''

''முக்கியமானது ஒண்ணும் இல்ல...போன வருஷ ஆடிட் ரிப்போர்ட்டைப் படிச்சுப் புரிஞ்சிக்க முயற்சி பண்ணிட்டிருக்கேன்—அவ்வளோதான்...''

ஸ்ரீனிவாஸ் பாராட்டும் தினுசில் தலை அசைத்துப் புன்னகைத்தான்.

"மேனேஜ்மெண்ட்டுக்கும், அக்கௌண்ட்ஸ்க்கும் என்ன சம்பந்தம்னு விட்டேத்தியா இல்லாம, இழுத்துப்போட்டுகிட்டு அத்தனையும் தெரிஞ்சிக்க முயற்சி பண்றீங்க... வெரிகுட்...அதான், உங்க திறமைய எல்லாரும் ஒட்டு மொத்தமா பாராட்றாங்க..."

யார் யார் என்னவென்று பாராட்டுகிறார்கள் என்று கேட்க நினைத்ததைக் கேட்காமல் சித்ரா முறுவலித்தாள். பின், "காபி சாப்பிடறீங்களா?" என்று வினவினாள்.

"ம்ஹூம்... வேணாம்... இப்பத்தான் சாப்பிட்டேன்...நா எதுக்கு வந்தேன்னு சொல்லிடறேன்...நாளன்னிக்கு, அதாவது வர்ற ஞாயித்துக்கிழமை, எங்க வீட்டுல சின்னதா ஒரு விருந்து...நம்ப சக ஆபீஸர்கள் எல்லாரையும் கூப்பிட்டிருக்கேன்... நீங்களும் அவசியம் வரணும்..."

சித்ரா கண்ணகல மறுத்தாள்.

"விருந்துக்கா? நா... நா வந்து... எங்கயுமே போறதில்..."

அவளை முடிக்கவிடாமல் ஸ்ரீனிவாஸ் குறுக்கிட்டான்.

"எந்த சாக்கு போக்கையும் நா ஏத்துக்க மாட்டேன்...நீங்க வந்தே தீரணும்... இன்ஃபாக்ட், போன வருஷம் கோபியோட நீங்க இந்த பார்ட்டிக்கு வந்திருக்கீங்க. நினைவு இருக்கு இல்லே? ஸோ, இப்ப வரமாட்டேன்னு சொல்றது நியாயமா படல..."

நினைவு இல்லாமல் என்ன?

திருமணமான கையோடு அவர்கள் இருவரும் சென்று வந்த விருந்துகளில் அதுவும் ஒன்றாயிற்றே, எப்படி மறக்க முடியும்?



அந்த விருந்தில்தானே அமெரிக்காவில் இருந்து வந்திருந்த கோபியின் பால்ய நண்பரை எதேச்சையாய்ச் சந்தித்தோம்! அவர் செய்த தவறுக்காக சின்ன வயதில் கோபி அடி வாங்கினதைக் கூடக் கூறி இருவருமாய் வாய் மூடாமல் சிரித்தார்களே!

ஆமாம், அந்த நண்பர் பேர் என்ன? முன்பு யோசனை பண்ணபோது நினைவுக்கு வரமாட்டேன் என்று முரண்டிய அந்தப் பேர் என்ன?

ஒரு வேளை மீண்டும் ஸ்ரீனிவாஸ் வீட்டுக்குச் சென்றால் நினைவுக்கு வருமோ? மறுபடியும் அந்த நண்பரும் வருவாரோ?

எங்கிருந்தோ எங்கோ தாவிய சிந்தனையைச் சித்ரா இழுத்து நிறுத்தினாள்.

'புரிந்து கொள்ளுங்களேன்' என்று கெஞ்சுகிற பாவனையுடன், சின்ன குரலில் பேசினாள்.

"இல்ல...நா என்ன சொல்ல வரேன்னா..."

"நோ...நோ...நீங்க சொல்ற எந்த விளக்கத்தையும் நா ஏத்துக்கறதா இல்ல...வருஷத்துக்கு ஒரு தரமாவது ஆபீஸ் ஸ்நேகிதங்கள வீட்டுக்கு விருந்துக்கு அழைக்கணும்னு என் வொய்ஃப்பும், நானும் நினைக்கிறோம்... அதுக்கு எங்க குழந்தை பிறந்த நாள காரணமா சொல்லிக் கூப்பிடறோம்...தட்ஸ் ஆல்..."

"தயவு பண்ணிப் புரிஞ்சுக்கங்க மிஸ்டர் ஸ்ரீனிவாஸ். நா வெளில எங்கயுமே போறதில்ல...முக்கியமா சாயங்கால வேளைல தனியா...ப்ளீஸ்"

ஸ்ரீனிவாஸ் தன் ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் தினுசில் மேஜைமேல் ஓங்கித் தட்டினான்

"அதனாலயேதான் வரணும்னு நா சொல்றேன். எல்லாத்துக்கும் ஒரு ஆரம்பம் இருக்கணும் இல்லே? எங்க

வீட்டு பார்ட்டியோட ஆரம்பிக்க...கமான் ப்ளீஸ் கோபி. இன்னும் எத்தனை நாளைக்கு தனியா எங்கேயும் போக மாட்டேன்னு நீங்க பிடிவாதமா இருக்க முடியும்? ம்? நா கூப்பிட்டா பத்தாதுனு நினைச்சீங்கன்னா, என் வொய்ஃபை விட்டு டெலிபோன்ல பேசச் சொல்லட்டுமா? நீங்க கட்டாயம் வந்தே தீரணும்னு அவ பிடிவாதமா இருக்கா...''

எதையும் காதில் வாங்காமல் தான் கூறுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பவனிடம் என்ன பேசுவது என்று புரியாமல் சித்ரா மௌனிக்க, ஸ்ரீனிவாஸ் எழுந்து நின்றான்.

''அப்ப, நிச்சயம் வரீங்கனு எடுத்துக்கட்டுமா? சாயங்காலம் ஏழு மணிக்கு மேல எப்ப வேணா வாங்க...நா வரேன்...''

அவன் சென்ற பிறகு போக வேண்டுமா, வேண்டாமா என்று சில நிமிஷங்களுக்கு அப்படியே அமர்ந்து சித்ரா யோசனை செய்தாள்.

கோபி மறைந்த பிறகு இன்னும் அவள் எங்குமே போகத் துவங்கவில்லை என்பது நிஜம்...போகவில்லை, போகத் தோன்றவில்லை என்பதோடு, யாராவது ஏதாவது சொல்லி விடுவார்களோ என்கிற பயம் வேறு சேர்ந்து கொண்டதில் கூட, கல்லூரிக்குச் செல்லக்கூட பிரயத்தனிக்கவில்லைதான்...

ஆனால், ஸ்ரீனிவாஸ் சொல்வது போல இன்னும் எத்தனை நாட்களுக்கு இப்படியே இருக்க முடியும்? என்றாவது ஆரம்பித்துத்தானே ஆகவேண்டும்?

போவது என்று தீர்மானித்த பிறகு குழந்தைக்கு என்ன பரிசு வாங்கலாம் என்பதைக் குறித்தும் அரை நிமிஷம் சிந்தித்தாள்.



முந்தின வருஷம் செய்ததைப் போலவே இந்த முறையும் ஒரு பரிசு காசோலையை உறையில் வைத்து வழங்குவதே சிறந்தது. நாளைக்கு மாரிமுத்துவிடம் பணத்தை அனுப்பி பாங்கிலிருந்து பரிசு காசோலை வாங்கி வரச் சொல்லிவிட்டால் ஆயிற்று வேலை—செய்ய வேண்டியவைகளை மனதில் குறித்துக்கொண்ட பின், விஷயத்தை அதோடு ஒதுக்கிவிட்டு ஆடிட் ரிபோர்ட் ஃபைலைக் கையில் தூக்கிக் கொண்டாள்.

ஞாயிற்றுக்கிழமை சரியா ஏழேகால் மணி அளவில் தயாராகி ஆயாவை ஒரு ஆட்டோ கொண்டுவரச் சொல்லி, 'ஒன்பது, ஒம்பதரைக்குள்ள நா வந்திடுவேன்—நீ அதுவரைக்கும் டி.வி. படம் பார்த்துகிட்டு இங்கயே இரு...நா வந்தப்புறம் போகலாம்' என்று அவளிடம் கூறி, மாடி வீட்டிலிருந்து ஜானகியம்மா 'இது என்ன, இந்த நேரத்தில் வெளியே கிளம்புகிறாள்—அதுவும் இந்த அலங்காரத்துடன்!' என்று கேட்கும் வகையில் தமிழ்ப் படத்தையும் விட்டு விட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்ப்பதை இலட்சியம் பண்ணாமல் புறப்பட்டு, ஸ்ரீனிவாஸின் வீட்டை அவள் அடைந்தபோது அங்கு கூட்டம் களைகட்டி இருந்தது.

குறுக்கும் நெடுக்கும் தலைக்குமேல் ஓடிய வண்ண பேப்பர் ரிப்பன்கள், கொத்தாய் பலூன்கள், மரங்களிலிருந்து கண்களைச் சிமிட்டின குட்டி சர விளக்குகள் என்று தடபுடல் ஒப்பனையோடு வாசல் புல்வெளி... விளையாடும் குழந்தைகளின் கத்தல்கள் ... எதை எதையோ பேசி அந்தக் குழந்தைகளுக்குச் சரியாய்ச் சிரிக்கும் பெரியவர்கள்...

ராம்ஜி, மனைவி சுதா, இரண்டு பசங்களுடன்; சுந்தர், மனைவி பிரேமா பிள்ளை ராஜா சகிதம்; ரகுநந்தன் நித்யா தம்பதி...கூடவே அறிமுகம் ஆகாத நாலைந்து பேர்கள் ஜோடி ஜோடி ஜோடியாய்...

அந்தச் சூழ்நிலைக்கும் தனக்கும் சம்பந்தம் இல்லாத அடக்கத்தோடு உள்ளே நுழைந்த சித்ராவை முதலில் பார்த்தது ஸ்ரீனிவாஸ்...

''ஹலோ...வாங்க...வாங்க...மஞ்சு, யார் வந்திருக்காங்கனு பாரு'' என்று அவளை வரவேற்றவன் குரல் எடுத்து மனைவியை அழைத்ததும், மற்றவர்கள் பேசுவதை நிறுத்திவிட்டு அவளை வெறித்ததும், சட்டென்று அங்கே ஒரு அமைதி நிலவியது. சில முகங்களில் ஆச்சர்யம்...சில கண்களில் பச்சாதாபம்...

எழுந்து வரலாமா, பேசலாமா வேண்டாமா என்று அவர்கள் யோசிக்கிற மாதிரி மனசுக்குப் பட, சித்ராவினுள் முந்தின வருஷத்து விருந்தின் வரவேற்பு சிறிக் கொண்டு எழுந்தது...

இவளும், கோபியும் வந்து நுழைந்ததும் அவர்கள் வருகைக்காகக் காத்திருந்த தினுசில் எப்படி ஆர்வத்துடன் மற்றவர்கள் சூழ்ந்து கொண்டார்கள்.

என்னமோ இவர்களின் வரவால் இந்த இடம் புனிதமாகிவிட்ட மாதிரி என்னமாய்க் கொண்டாடினார்கள்?

அன்று மேலே விழுந்து வரவேற்றவர்களுக்கு இன்று என்ன வந்துவிட்டது!

கோபி இல்லை என்பதற்காக நான் வேண்டப்படாதவள் ஆகிவிட்டேனா? இல்லை, அந்த வரவேற்பு அன்று கோபிக்காக மட்டுமே அளிக்கப்பட்டதா.

வேண்டாத குழப்பத்துடன் நின்றவளின் கையைப் பற்றி 'நீங்க வந்ததுல எனக்கு ரொம்ப சந்தோஷம்' என்று மஞ்சுளா கூற, நித்யாவும், சுதாவும் கூட்டத்தில் வந்து நின்று ஆதரவாய்ப் புன்னகைத்தார்கள்.

''எப்படி இருக்கீங்க மிஸஸ் கோபி?''



30205 4/6/97

''ஏன் இப்படி இளைச்சிட்டீங்க...''

''ஆபீஸுக்குப் போறீங்களாமே...''

''வேலை எப்படி இருக்கு, பிடிச்சிருக்கா?''

அக்கறையுடன் அவர்கள் கே[illegible] பொதுவாக புன்னகைத்தும், 'நல்லா இருக்கேன்' என்று பதில் கூறியும் சமாளித்தவள் சற்று முன் எழுந்த அசட்டுச் சந்தேகங்கள் குறித்துத் தன் மேலேயே கோபம் வர, மஞ்சுளா நீட்டிய குளிர்பானத்தைக் கையில் வாங்கிக் கொண்டு மெள்ள நகர்ந்து ஓரமாய் நின்றாள்.

கண்ணும், மனசும் சேர்ந்து சிரிக்க சந்தோஷமாக அத்தனை பேரும் இருக்கும் அந்தச் சூழ்நிலையோடு ஒட்ட முடியாமல் ஒருவித அவஸ்தை மெதுமெதுவாய் எழுந்து உடம்பு பூராவும் வியாபிப்பதை உணர முடிய, சித்ரா அருகில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

பார்வையைச் சுழல விட்ட போது 'தன்னைத் தவிர அங்கிருந்த அனைவருமே கணவன் மனைவி சமேதராய் வந்திருப்பது கண்களில் விழுந்து, மனசை உறுத்தியது.

ஜோக் ஒன்றை ராம்ஜி சொல்லத் துவங்க, அவன் மனைவி சுதா 'மேலே சொல்லாதே' என்கிற கெஞ்சலுடன் எட்டி வாயைப் பொத்த முன்வர, அத்தனை பேர்களும் சிரிக்க, எதேச்சையாய் சுதாவின் பார்வை மேல விழுந்ததும் ஏதோ நினைவுக்கு வந்த மாதிரி சட்டென்று கணவரிடமிருந்து விலகி நிற்க...

சித்ரா அவசரமாய்த் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

ஜோடி ஜோடியாய் எல்லாரும் இருக்கையில், நான் மட்டும் தனியாய் இருப்பது இவர்களுக்கும் ஒருவித சங்கடம்தானோ?

தவறு...

வந்தது தவறு...

மரியாதைக்கு ஸ்ரீனிவாஸ் கூப்பிட்டதை அப்படியே ஏற்று வந்திருக்கக்கூடாது...

என்னால் அவர்களுக்குச் சங்கடம், அவர்களால் எனக்கும் அவஸ்தை...

யோசிக்காமல் நடந்து கொள்வதை எப்போது நிறுத்தப்போகிறேன்?

கைவிரல்கள் நடுங்க முற்பட்டதில் சித்ரா தினாஸ் டம்ளரை நழுவ விட்டு விடுவோமோ என்கிற பயத்துடன் அதை இன்னும் இறுகப் பற்றிக்கொண்டாள்.

உலர்ந்துவிட்ட உதடுகளை நாவால் ஈரப்படுத்தினாள்.

இவளைத் தனியாக விட்டுவிடக் கூடாது என்கிற விழிப்புணர்வுடன், அருகில் வந்து அமர்ந்த நித்யாவை ஏறிட்டுச் சின்னதாகப் புன்னகைத்துவிட்டு, கவனத்தை வலுக்கட்டாயமாய் குழந்தைகள் பக்கம் திருப்பினாள்.

நண்டும் சிண்டுமாய், குழந்தைகள் கையில் ஊதல், பலூன்களுடன் ஒன்றை ஒன்று பிடிக்கும் விளையாட்டில் ஈடுபட்டிருந்தன...

அத்தனைக்கும் நடுநாயகமாய் அரவிந்த்—ஸ்ரீனிவாஸ் தம்பதியின் இரண்டு வயது செல்லப் பிள்ளை; அன்றைய வைபவத்தின் கதாநாயகன்...

கொழுக் மொழுக்கென்ற, நீல ஸபாரி உடையில் பெரிய பசங்களுக்குச் சரியாய் ஓடி, சிரிக்கும் குழந்தையை ஏறிடுகையில் இந்தப் பிள்ளைக்காக சுமார் பத்து வருஷங்கள் ஸ்ரீனிவாஸும் அவன் மனைவியும் தவமான தவம் இருந்து, விரதம் காத்ததை சென்ற வருஷம் மிகுந்த பெருமையுடன் அவர்களே தங்களிடம் கூறினது ஞாபகம் வந்தது.



தொடர்ந்து அன்று இரவு வீட்டுக்குத் திரும்பினதும் பார்ட்டி, குழந்தை, என்று தொடங்கிய பேச்சு, தங்கள் எதிர்காலத்தை வளைத்துக் கொண்டு சென்றதும் சுகமாய் நெஞ்சில் விரிந்தது.

—சித்ரா...

—ம்ம்...

—தூங்கிட்டியா ராஜாத்தி...கொஞ்சம் பேசலாமா?

—இப்பவா? தூக்கம் வருது கோபி...

—விழிச்சுக்கயேன்... ப்ளீஸ்...ஸ்ரீனிவாஸ் வீட்டுப் பார்ட்டிக்குப் போயிட்டு வந்ததுலேந்து மனசெல்லாம் குழந்தைய சுத்தியே வருது...

—எந்தக் குழந்தையை? அரவிந்தயா?

—இல்ல நமக்குப் பிறக்கப் போற குழந்தையச் சொல்றேன்.

—அட— அதான் ஒரு வருஷத்துக்கு வேணாம்னு தீர்மானம் பண்ணிட்டமே! அப்புறம்!

—பண்ணேன் தான்... அதுக்காகப் பேசக்கூடாதுன்னு இல்லியே...

—சரி—தூ எழுந்து உட்கார்ந்திட்டேன்; என்ன பேசணும்...சொல்லுங்க...

—பிள்ளை பெத்துக்கறத ஏனோ தானோனு செய்யக் கூடாது சித்ரா...உண்டாயிட்ட நாள்லேந்து சின்னச் சின்ன மாற்றத்தை உன்னிப்பா கவனிக்க, அவாதி சிரத்

தையோட குழந்தைய உருவாக்கணும்னே நா ஆசைப் பட்டேன்...

—எல்லா கணவன் மனைவிக்கும் உண்டாற ஆசை தானே இது கோபி...

—இருக்கலாம். ஆனாலும் ஒரு கணவன், தகப்பன்ற முறைல நா ரொம்ப மாறுபட்டு இருக்கவே விரும்பறேன் ...கர்ப்பம் தரிக்கறதும், பிரசவிக்கறதும், பெண்களோட அனுபவம்னு விலகி நிக்காம, கூடுமான—வரையில நானும் அத்தனையிலும் ஈடுபடவே விரும்பறேன்.

—ஹேய்...இது என்ன புதுக் கதை! அதுவெல்லாம் எப்படி உங்களால் ஈடுபட முடியும்? ஆசைப்பட்டா மட்டும் ஆச்சா?

—ஏன் முடியாது? சொல்றேன் கேளு...உண்டானப் புறம் உனக்கு மசக்கை ஏற்பட்டுச் சில பதார்த்தங்கள் பிடிக்காம போச்சுனு வச்சுக்க. அப்ப, அவைகளை நானும் சாப்பிடாம இருக்கப் போறேன்...டாக்டர உனக்கு எந்த டயட்—டக் கொடுக்கறாரோ, அதுதான் எனக்கும்...மருந்து சாப்பிடறதைத் தவிர, பாக்கி அத்தனை அனுபவங்கள்லேயும் மனப்பூர்வமா உன்னோட நானும் சேர்ந்து பங்கெடுக்கப் போறேன். உன் வலி, அவஸ்தை, இன்பங்கள நானும் கற்பனை மூலமா உணர முயற்சிப்பேன்...உன் வயத்துல குழந்தை உதைச்சதுன்னா அதைத் தொட்டுப் பார்த்து எனக்குள்ள நடக்கற மாதிரி நினைச்சிக்கப்போறேன்...முக்கியமா, பிரசவகாலத்துல இந்தண்டை அந்தண்டை போகாம கூடவே உன் கைய பிடிச்சுக்கிட்டு நின்னு உன் அவஸ்தைய பார்த்து, வலிய உணர்ந்து, அத்தனையும் நானும் அனுபவிக்கப்போறேன் —குழந்தைய உருவாக்கறதுல துவங்கி ஒவ்வொண்ணிலே யும் என்னையும். ஈடுபடுத்திக் கிட்டாத்தான் முழுமை



யான தகப்பனா என்னால இருக்க முடியும்னு நா நம்பறேன், அப்புறம்...

''கேக் வெட்டப் போறோம்.. வாங்களா மிஸ்டர் கோபி...''—மஞ்சுளா கிட்டத்தில் வந்து அழைக்க சித்ரா திடுக்கிட்டு நிமிர்ந்தாள்...

கண்களை இரண்டு தரம் சிமிட்டி ஓரமாய்ப் பூத்திருந்த நீர்ப்பூக்களை கலைத்துவிட்டாள்.

தவறு...

வந்திருக்கக் கூடாது...

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தத் தெரியாமல் இருக்கையில் பொது இடத்துக்கு வந்தது தவறுதான்..

மற்றவர்கள் பார்வை தன் மேலேயே இருப்பதை உணர்ந்தபோது படபடப்பு அதிகமாகி நிற்க முடியாமல் கால்கள் வெலவெலத்தன.

எழுந்தவள் ஒருவிதத் தவிப்புடன் மீண்டும் அமர்ந்தாள்...எதிரில் நின்று எவரையும் பார்க்க முடியாமல் கூசிப்போய் தலையைக் குனிந்து கொண்டாள்.

இப்போது என்ன செய்ய வேண்டும்— இவளை நெருங்கி சமாதானம் செய்ய வேண்டுமா, அல்லது தனித்து விட்டு விட வேண்டுமா என்கிற யோசனையுடன் ஸ்ரீனிவாஸ் மஞ்சுளா மற்றவர்களும் தயங்க,

இது நாழிகை ஒரு பக்கமாய் நின்று அத்தனையும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்த சரவணன் கையிலிருந்த டிபன் தட்டை வைத்து விட்டு ஸ்ரீனிவாசனிடம் வந்தான்.

''நா கிளம்பறேன்...வேலை இருக்கு...தாங்க்ஸ் ஃபார் இன்வைடிங்'' என்று கூறினவன் சித்ராவின் அருகில்

சென்று ''வாீங்களா, உங்களை வீட்டுல இறக்கி விட் டுட்டுப் போறேன்'' என்றான் குழைந்த குரலில்...

# 22

எதிரில் வரும் வண்டிகளின் 'ஹெட் லைட்' வெளிச்சம் முகத்தில் அறைந்த போதெல்லாம் கண்கள் கூசின.

சரவணனுக்கு இத்தனை அருகாமையில் அமர்ந்திருப் பது ஒருவித சங்கடத்தைத் தர, சித்ரா இன்னும் இடப் பக்கமாய் நகர்ந்து கதவோடு ஒட்டிக் கொண்டாள்.

''உங்க வீட்டு விலாசத்த சொல்றீங்களா மிஸஸ் கோபி?''

சாலையிலிருந்து கவனத்தை எடுக்காமல் சரவணன் வினவ, ஏறி உட்கார்ந்த உடனேயே தானாகச் சொல்லி யிருக்க வேண்டாமா—என்று தன் மேலேயே கோபம் சித்ராவுக்கு எழுந்தது.

சொன்னாள்.

லாரி ஒன்று பெரிசாய் ஹாரனை ஒலித்துக் கொண்டு அவர்களைக் கடந்தது.

''புரொபஸர் திருப்பற தேதி பத்தி ஏதாவது தெரிஞ்சுதா?''

எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அவன் திடுமென துர்காவைப் பற்றிப் பேசுவது சித்ராவுக்கு ஆச்சரியத் தைத் தந்தது.

பக்கவாட்டில் திரும்பி அவனை ஏறிட்டாள்.

''மாசக்கடைசில வர்றதா கடிதம் போட்டிருக் காங்க...ஆமா, அவங்களை உங்களுக்குத் தெரியுமா?''



''நல்லா...நா அமெரிக்காவுக்குப் படிக்கப் போற துக்கு முன்னாலே பக்கத்து பக்கத்து வீட்டுல இருந்தது பழக்கம்...''

''அப்படீன்னா, கோபிய அப்போலேந்தே தெரி யுமா?''

''ம்ம்...விலேகானந்தா சேந்தாப்ல லேவையா இருந் தவா, எப்படியாச்சும் இரண்டு நாள் விடுமுறை எடுத்து கிட்டு வருவார்...நா படிப்புக்காக ஸ்டேட்ஸ் போகத் தீர்மானிச்சப்புறம் 'படிக்கப் போ, தப்பில்ல...ஆனா, கத்துக்க வேண்டியதைக் கத்துகிட்டு நம்ப நாட்டுக்குத் திரும்பி வந்து, கத்துகிட்டதை இங்க ஆக்கபூர்வமா செய்து காட்டறதுதான் புத்திசாலித்தனம்'னு அழகா, தெளிவா சொல்லிக் கொடுத்ததே அவர்தானே...''

கோபியை இவனுக்கு, இவனுக்கு கோபியை...

இத்தனை நன்றாகத் தெரியும், ஆனாலும் அது குறித்து ஒரு தரம்கூட இருவருமே ஏனோ பேசியிராதது சட்டென்று ஓர் ஏமாற்றத்தை அவளுள் விதைத்தது.

''இதெல்லாம் நீங்க என்கிட்ட சொல்லவேயில்லியே''

சரவணன் தலையைத் திருப்பி இவளைப் பார்த்து விட்டு மீண்டும் கவனத்தைச் சாலையில் செலுத்தினான்.

''நீங்க கேக்கவே இல்லியே மிஸஸ் கோபி!''

''கேட்டாதான் சொல்லணுமா? கோபிக்கு உங்களை ஏற்கனவே தெரியும்னு எனக்கு எப்படி தெரியும்?''

''அவர் உங்ககிட்ட சொல்லி இருப்பார்னு நினைச் சேன்''

இல்லை, சொல்லவில்லை, ஏனோ சொல்லவில்லை, சொல்லச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையோ, இல்லை கிடைத்தும் நான்தான் காதில் வாங்கவில்லையோ—அல்லது மறந்து விட்டாரோ—ஏதோ ஒன்று...

இருந்தாலும் இவன் சொல்லியிருக்கக் கூடாதா? கோபியை எனக்கு நன்றாகத் தெரியும். அற்புதமான மனிதர், எனக்குப் பலவிதங்களில் உதவியாய் இருந்தார் என்று இத்தனை நாட்களில் ஒருதரமாவது இவனாகக் கூறியிருக்கக் கூடாதா?

அடக்கமாட்டாமல் சித்ரா வார்த்தைகளை வீசினாள்.

"கோபி சொல்லாதது இருக்கட்டும்— உங்களுக்கு அந்த நட்பு உயர்வா இருந்திருந்ததுன்னா, நீங்களா பேசியிருக்கலாமே! இல்லை...அதனாலேயே நீங்க அவரப் பத்தின பேச்சையே என்கிட்ட எடுக்கல... அதானே உண்மை? அதை விட்டுட்டு..."

சரவணன் அவள் கூற்றை மறுத்துத் தலை அசைத்தான்.

"கோபி பத்தி எதுவும் உங்ககிட்ட பேச வேணாம்னு நான் தீர்மானமா இருந்தது நிஜம்தான். ஆனா, அது நீங்க சொல்ற காரணத்துக்காக இல்ல... ஏற்கனவே தேவைக்கு மீறின அளவுல உங்களைச் சுத்தி இருக்கற அத்தனை பேரும் பேசி, உங்க வேதனையைக் கிளறி விடறப்போ, என் பங்குக்கு நானும் அதைச் செய்ய வேண்டாமேனுதான் பர்ஸனலா எதுவும் பேசாம இருந்தேன்..."

"அப்போ, மத்தவங்க மாதிரி இல்லாம நீங்க ரொம்ப அனுசரணையா நடந்துகிட்டீங்கனு சொல்ல வரீங்க. அப்படித்தானே?"

அவள் குரலில் தெரிந்த நையாண்டியைப் புரிந்து கொள்ள முடிந்ததில் சரவணன் பதில் கூறாமல்



மௌனிக்க, சித்ரா சட்டென்று தன்னை உலுக்கிக் கொண்டாள்.

என்னாயிற்று எனக்கு?

போனால் போகிறது என்று பச்சாதாபப்பட்டு அந்தப் பார்ட்டியிலிருந்து என்னை விடுவித்து வீட்டுக்கு அழைத்துப் போகும் இவனிடம் எதற்காக இப்படி காட்டமாகத் தர்க்கிக்கிறேன்?

வண்டியில் ஏறி உட்கார்ந்தோமா, மௌனமாய்ப் பயணித்தோமா, வீட்டில் இறங்கிக் கொண்டு 'நன்றி' என்று ஒற்றை வார்த்தையைக் கூறிவிட்டு போனோமா என்று இல்லாமல் இது என்ன அனாவசிய வாதம்!

மாசக்கணக்காய் என் சொந்த விவகாரம் குறித்து ஒரு வார்த்தை அனுதாபத்தோடு பேசாதவன், இன்று அதிசயமாய் ஏதோ கேட்டுவிட்டான் என்பதற்காக ஏன் எல்லை மீறி வாயாடுகிறேன்?

இவன் கோபியைப் பற்றிப் பேசினால் என்ன, பேசா விட்டால் என்ன?

என் வலியைப் புரிந்துகொண்டால் என்ன, கொள்ளா விட்டால்தான் என்ன?

இவனைப் புண்படுத்துவதினால் எனக்கு ஆதாயம் தான் என்ன?

ஏன் இப்படி புத்தியில்லாமல், உணர்ச்சிவசப்பட்டு நடந்து கொள்கிறேன்.

கோபிக்கு இப்படி இருப்பது துளியும் பிடிக்காதே—

—நமக்குதான் பேசத் தெரியும்னு வார்த்தைகள் வாரி விடறது மனுஷத்தனமே இல்ல சித்ரா—என்பாரே—அதை எப்படி மறந்து போனேன்?

குற்ற உணர்ச்சி சரமாகப் படர, சித்ரா தலை குனிந்தவாறு சன்னக் குரலில் பேசினாள்.

"ஸாரி...என்னமோ அவஸ்தைல எதையோ பேசிட் டேன்...அந்த பார்ட்டிக்கு நா வந்திருக்கக்கூடாது...என் னென்னமோ ஞாபகம் எல்லாம் எழுந்து ஒல் பொருந்தி உட்காரக் கூட முடியாம...ஐம் ஸாரி...அந்த வேகத்துல தான் உங்ககிட்டயும்..."

சரவணன் நிதமாகப் புன்னகைத்தான்.

"இந்த அவஸ்தைய உங்களுக்கு நானும் கொடுக்கக் கூடாதுனுதான் ஆபீஸ் நேரத்துல கோபி பத்திப் பேசவே விரும்பல இப்பப் புரியுதா?"

"இல்ல, உங்க கருத்த என்னால ஏத்துக்க முடியல... கோபியோட உங்களுக்கு இருந்த நட்பைப் பத்திப் பேசி யிருந்திங்கன்னா அது எனக்கு உண்மையாவே சந்தோ ஷத்தைத் தந்திருக்கும்"

"ஒத்துக்கறேன்...முதல்ல சந்தோஷத்தைத் தந்திருக் கும்...ஆனா, அதோட நின்னுடுமா? உங்களை நானும் கவனிச்சுட்டுத்தானே வரேன்...கோபியோட நினைவு களை சந்தோஷமா மட்டும் நினைச்சுப் பார்க்க முடியுதா? தொடர்ந்து இனிமே எதுவுமே இல்லேனு நினைப்பு எழுறதுல வேதனையோட நீங்க அழ ஆரம்பிக் கறதுதானே சகஜமா நடக்குது?"

"........."

சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க மிஸஸ் கோபி...உங்க நிலைக்காகப் பரிதாபப்படறது யாருக்கும் ரொம்ப சுலபம்...'ஐயோ இந்த வயசுல இத்தனை பெரிய இழப்பா?'னு பச்சாதாபப்பட்டு உங்ககிட்ட இரக்கத்தோட பேசிட்டுப் போறதுல எனக்கு என்ன கஷ்டம்? ஒண்ணும் இல்ல...ஆனா, அந்த வார்த்தைய



உங்களுக்குத் தற்காலிக இதத்தைத்தான் தருமே ஒழிய, வேற எந்த விதத்திலேயும் உதவாது... இன்னும் சரியா சொல்லணும்னா சுயபச்சாதாபத்தை அதிகமாக்கி, மீண்டு வரவே முடியாதபடி நீங்க வேகமா இடிஞ்சு போகத்தான் அந்த மாதிரி வார்த்தைகள் வகை செய்யும். சொல்லுங்க, நீங்க துக்கத்துலேந்து மீண்டு வந்து தன்னம்பிக்கையோட வாழறது முக்கியமா? இல்ல, எதுக்கும் உபயோகமில்லாம, தனக்கும் மத்தவங்களுக்கும் பாரமாயிட விரும்பறீங் களா? ம்?"

அலுவலக சம்பந்தமாய்ப் பேசியே மட்டும் பழகி யிருந்த சரவணன் முதல் முறையாய் இப்படி அக்கறை யுடன் பேசுவது ஒருவிதக் கூச்சத்தை எழுப்ப, சித்ரா சங்கடப்பட்டாள். சீக்கிரம் வீடு வந்து விடாதா, இந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியாதா என்கிற அவஸ்தையுடன் 'போதும் பேசியது' என்பது போலப் பார்வையை ஜன்னலுக்கு வெளியில் அலையவிட்டாள்!

ஆனால் அவளது இருப்புக் கொள்ளாமை பற்றிக் கவலைப்படாதவனாய் சரவணன் தொடர்ந்து பேசி னான்.

"பேசத் துவங்கியாச்சு...லோ பூராவுமே சொல்லிட றேன்... சுயபச்சாதாபம்ங்கறது துளித்துளியா ஆளை அழிக்கறதுலே புற்று நோயை விடக் கொடுமையானது நீங்க படிச்சிருப்பீங்க... பிரச்சனைகள் நிறைஞ்சதுதான் வாழ்க்கை... அதுவும் கொஞ்சமும் எதிர்பாராத திடுக்கிற இழப்புகள் நம்மைத் தாக்கறப்போ செயலிழந்து போற தும், ஐயோ—எனக்கு ஏன் இந்த நிலைன்னு துக்கிக் கறதும் மனித இயல்பு... ஆனா, அந்த இழப்பு நம்மை எந்த அளவுக்குப் பாதிக்க விடணும்ங்கறதுதான் முக்கிய மான கேள்வி...எந்த ஒரு இழப்பிலேந்தும் மீண்டு வர துக்கம் ஒரு பயிற்சியா செயல்படறதால, துக்கம் கொண்டாடறது அவசியமான ஒரு அனுபவம்னு முன்ன

அதனால் என்கிட்ட பேசிட்டு இருக்கப்போ புரொபஸர் சொன்னாங்க... இதுபத்தி எல்லாம் விரிவா நீங்க படிச்சிருப்பீங்க...ஆனா, அதையெல்லாம் மறந்திட்ட ரீதில நீங்க இன்னும் யதார்த்தமா செயல்பட ஆரம்பிக்காததுதான் எனக்குப் புதிரா இருக்கு... இன்ஸ்பெக்ட், ஸைட்டுக்குப் போறதுக்கு முன்னால புரொபஸரை கூட இது சம்பந்தமா என்கிட்ட வருத்தப்பட்டுக் கிட்டாங்க...''

சரவணன் பேசிக் கொண்டே போக, இது நாழிகை அவனிடம் அனாவசியமாகக் கடுமையாய்ப் பேசிவிட்டது நினைக்குக் குறுகுறுப்புடன் உட்கார்ந்திருந்த சித்ரா பளிச் சென்று நிமிர்ந்தாள்.

துர்கா இவனிடம் என்னைப் பற்றிக் குறைப்பட்டுக் கொண்டாரா? விவேகத்தோடு இழப்பிலிருந்து மீண்டு வரவில்லை என்று வருத்தப்பட்டாரா? உண்மையாகவா? என்னைப் பற்றி என்னிடம் பேசாமல் எதற்காக இவனிடம், அதுவும் ஒரு அன்னியனிடம், விமர்சிக்க வேண்டும்?

சுயபச்சாதாபம் கூடாது. அது ஆளை அழித்துவிடும் என்று ரொம்பத் தெரிந்தவர் மாதிரி எனக்கு அறிவுரை கூற இவன் யார்?

போனால் போகிறது என்று மன்னிப்புக் கேட்டது, தன் எல்லையை மீறும் துணிச்சலை இவனுக்குத் தந்து விட்டதா?

அடங்கியிருந்த கோபம் சரசரவென்று மனசு பூராவும் வியாபிக்க, சித்ரா படபடப்புடன் குரலை உயர்த்தினாள்.

''சுய பச்சாதாபம் கூடாது; உணர்ச்சிவசப்படக் கூடாது, விவேகத்தோடு இரு, யதார்த்தத்த எதிர்நோக்கக் கத்துக்க... கடவுளே! இன்னும் எத்தனை பேர்கிட்ட



எத்தனை முறை இந்த அறிவுரையை நா கேட்டாகணும்! அறிவுரை சொல்றது ரொம்ப சுலபமான விஷயம் ஆனா, அத நடைமுறைல காட்டறது ரொம்ப, ரொம்ப, கஷ்டமான பயிற்சி. அத மறந்திடாதீங்க... எனக்கு மட்டும் எப்பப்பாரு ஐயோ எனக்கு இந்த நிலை வந்திடுச்சேன்னு வருத்தத்துல மூழ்கி உட்காரு ஆசைனு நினைச்சீங்களா? இல்ல...கண்டிப்பா இல்ல...நானும் விடாம முயற்சி பண்ணத்தான் செய்யறேன்...ஆனா இது என்னையும் மீறின விஷயம்னு உங்களுக்கெல்லாம், ரூபாய்க்கு நாலு அட்வைஸ், வீசற உங்களுக்கெல்லாம், ஏன் புரியலை? தப்பு பண்ணி எனக்கு நல்லது செய்யறேன்னிட்டு கண்ட படி பேசி, இன்னும் மனசை ரணகளமாக்கிடாதீங்க... உங்கள கெஞ்சிக் கேட்டுக்கறேன்...''

அவள் உணர்ச்சிவசப்பட்டு விட்டதைப் புரிந்து கொள்ள நேர்ந்த சரவணன் அவசரமாய்ப் பேசினான்.

''நீங்க என்ன தப்பா புரிஞ்சுகிட்டீங்க மிஸஸ்கோபி... உங்களுக்கு அறிவுரை சொல்லணும்ங்கறது என் நோக்கம் இல்லை...நீங்க மனசு தேறி, தன்னம்பிக்கையோட வாழ ஆரம்பிக்கணும்ங்கற நல்லெண்ணத்துலதான்...''

அவனை முடிக்க விடாமல் சித்ரா குறுக்கிட்டாள். இரண்டு கைகளையும் கூப்பிட்டுக் கொண்டு, 'போதும்' என்கிற பாவனையுடன் ஏறிட்டாள்.

''ஒரு கதை சொல்லுவாங்க, தெரியுமா மிஸ்டர் சரவணன்? ஒரு சமயம் ஒரு வீட்டுல பிள்ளை ஒண்ணு செத்துப் போச்சாம்...குய்யோ முறையோனு கத்தி அழுத தகப்பனாரிடம் பக்கத்து வீட்டுக்காரர் வந்து 'எதுக் கப்பா இப்படி அழுறே? ஆத்மாவுக்கு ஏது சாவு? உடம் புக்குத்தானே அழிவு? அதனால சட்டை மாத்தற மாதிரி பழைய தேகத்தை விட்டுட்டு உன் மகன் வேற உடம் போட இன்னொரு இடத்துல நல்லா இருப்பான்... அவன்

ஆத்மாவுக்கு அழிவில்லேன்றத நினைச்சிட்டா துக்கம் குறைஞ்சிடும்'னு ஆறுதல் சொல்ல, அந்தத் தகப்பனும் மனசு தெளிஞ்சு தேறினானாம்...இது நடந்த மூணாம் மாசம் பக்கத்து வீட்டுக்காரர் மகன் திடும்னு இறக்க, அவர் நிலை குலைஞ்சு கதறி அழுதாராம். அப்ப மத்தவங்க வந்து, 'அடுத்தவருக்குத் தைரியம் சொல்ற வேலையான நீங்க இப்படி உடைஞ்சுப் போகலாமா?'—னு கேட்டப்போ இவர், 'நா என்னப்பா பண்ணுவேன்? அது அவன் பிள்ளை, இது என் பிள்ளையாச்சே... மனசு தாங்கலியே'னு கதறினாராம்...எதுவுமே அவங்க அவங்க பட்டாதான் வலியோட ஆழம் புரியும்...வேணாம்...தயவு பண்ணி என்னை என் போக்கிலேயே விட்டுடுங்க...நா அசடா, சுயபச்சாதாபம் நிறைஞ்சவனா, யாராலேயும் புரியாதவனாலே இருந்திட்டுப் போறேன்...ஆறுதல் சொல்றேன்னு என் வலி புரியாம...ப்ளீஸ்...ப்ளீஸ்...''

மேலே பேச முடியாமல் சித்ராவின் குரல் செம்பியது. உள்ளங்கையை வாயில் வைத்து அடக்க முயற்சிசெய்ததை மீறிக் கொண்டு அழுகை வெடித்தது. கண்ணோரங்களில் திரண்டு விட்ட நீர்முத்துக்கள் எதிரில் வந்த வண்டியின் விளக்கு வெளிச்சத்தில் பளபளத்தன. சரவணன் சட்டென்று காரை ஒடித்து ஓரமாய் நிறுத்தினான். ஸ்டீயரிங் வீலைப் பிடித்திருந்த விரல்களும், தாடையும் இறுகிப்போகக் கிசுகிசுப்பாய்ப் பேசினான்.

''நா அமெரிக்காவுக்குப் படிக்கப் போறத்துக்கு முன்னால எங்க வீட்டுல நடந்த ஒரு சம்பவத்த சொல்றேன் கேக்கறீங்களா மிஸஸ் கோபி? திருப்பதிக்குப் பிரார்த்தனை செலுத்த இரண்டு கார்ல குடும்பம் பூராவும் போயிருந்தோம். முதல்ல போன பியட்ல அம்மா, அண்ணன், அண்ணி, அவங்களோட நாலு வயசு மகன், தங்கச்சி...பின்னால வந்த மெடடார் வேன்ல அப்பா, நான்...வேற சில உறவினர்கள்...மறுநாள்



விடிகாலைல முக்கியமான வேலை இருந்ததால அண்ணன் வண்டிய விரட்டிகிட்டுப் போனாரு...ராத்திரி நேரம்... இரும்புத் தகடுகளை ஏத்திகிட்ட லாரி ஒண்ணு வலது பக்க ஹெட்லைட் இல்லாம எதிர்ல வர, மோட்டார் சைக்கிள்னு அண்ணன் நினைச்சாரோ என்னமோ ஒதுங்காம அதே எண்பது கிலோ மீட்டர் வேகத்துல போக...ஹெட் ஆன் கொலிஷன் அடிச்ச வேகத்துல கார் லாரிக்கு அடியிலே போயி, உள்ள இருந்த அத்தனை பேரும்...வண்டிய நிறுத்திட்டுப் பதறிகிட்டு ஓடறேன்... குத்துயிரா கிடந்த அம்மா தண்ணி, தண்ணினு முனகறாங்க... ரத்தவெள்ளத்துல பிணமா தங்கச்சி, அண்ணி, பையன்...ஸ்டீயரிங் அடில மாட்டிகிட்டு அண்ணன்...தண்ணி கேட்ட அம்மாவுக்கு அதக்கூட குடுக்க முடியாம போயி...என் கண் முன்னாலேயே... அவங்க...அவங்க...''

சரவணனின் குரலில் பிசிறு தட்டியது. கொஞ்சம் மௌனித்து, ஒருதரம் செருமி ப்ரயத்தனப்பட்டுத் தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொண்டு தொடர்ந்தான்.

'ராப்பூரா இண்டாடி, யார் யாரையோ கெஞ்சி, லாரி ஒண்ணுல அத்தனை பேரையும் ஏத்தி ஹாஸ்பிடலுக்குக் கொண்டுபோய்...மறுநாள் வீட்டுல அஞ்சு பிணங்கள வரிசையா வச்சு, இடுகாட்டுல எடம் இல்லாததால அரை மணிக்கு ஒத்தரா எடுத்திட்டுப்போய்...எ... எனக்கா வலின்னா என்னனு தெரியாதுனு சொல்றீங்க? நா...நா''

அவன் பேசப்பேச சித்ரா வெலவெலத்துப் போனாள். கேட்டது போதும் என்கிற பாவனையுடன் காதுகளைப் பொத்திக் கொண்டு, அப்படியே இரண்டாக மடிந்து முகத்தை கவிழ்ந்து கொண்டாள்.

இவனுக்குள் இத்தனை சோகமா?

இவன் வாழ்க்கையில் இத்தனை துக்கமா?

இத்தனை எதையும் வெளிக்காட்டாமல் இவனால் எப்படி வளைய வர முடிந்தது, முடிகிறது?

எனக்குத்தான் இப்படி வலி என்று புலம்பி... இவனுக்குள் இந்த மாதிரி ஒரு பயங்கர வேதனை இருக்கும் என்பதைத் துளியும் உணராமல் வார்த்தைகளை அள்ளி வீசி...

இதுவரை எதற்கெடுத்தாலும் குற்ற உணர்வு எழுந்து நெஞ்சை முட்ட அவஸ்தையில், சித்ரா உரக்க அழத்துவங்க, அவளை அப்படியே அழவிட்டுவிட்டுச் சரவணன் வண்டியைக் கிளப்பினான்.

ஒரு வார்த்தை பேசாமல் ஓட்டிச்சென்று அவளை வீட்டு வாசல் முன் நிறுத்திவிட்டுத் திரும்பி உட்கார்ந்தான். "இப்ப நீங்க எதுக்காக இப்படி உடைஞ்சு போய் அழுறீங்கனு எனக்குப் புரியலை...என் இழப்புக்கா, இல்லை அது உங்க சோகத்தைக் கிளறிவிட்டதாலயானு விளங்கலை —எதுவானாலும் சரி...ஒண்ணை மட்டும் நினைப்புல வச்சுக்கங்க... இயற்கையோட முரண்டறது அசட்டுத் தனம்... அது வரும் விதத்துலேயே ஏத்துக்கறதுதான் விவேகம்... இன்னொண்ணும் சொல்றேன்—உணர்ச்சி வசப் படலாம், தப்பில்லை...ஆனா, அத காட்டிக்காம இருக்கப் பழகறது அவசியம்...கண்ணீர் ரொம்ப உயர்வான சமாசாரம்...அத அதன் அருமை தெரிஞ்சவங்க முன்னால வெளிப்படுத்தினாதான் அதுக்கு அர்த்தமே இருக்கும்... நம்ம இழப்பு நம்பளுக்கு மட்டும்தான்...அதுலேந்து மீண்டு வர்றதும் அதுலேயே அமுங்கிப் போறதும் நம்ம கையில மட்டும்தான் இருக்கு...புரிஞ்சுக்கங்க..."

சொல்ல வேண்டியதைத் திருத்தமாகக் கூறிவிட்டு அவன் புறப்பட்டுபோக, அன்றைக்குத்தான் புது கோணத்திலிருந்து வாழ்க்கையை உணர்ந்து கொண்ட தெம்பு



பிறக்க, இந்த உலகில் வேதனையில் வாடுவது நான் மட்டும் இல்லை...என்னையும்விடப் பாதிக்கப்பட்டவர்கள் தலை நிமிர்ந்து வாழ முயற்சி செய்வதைப் புரிந்து கொண்டு, நாளும் தன்னம்பிக்கையுடன் வாழ்க்கையை எதிர்நோக்கப் பழகுவேன். கூடுமானவரையில் என் இழப்பைப் பறைசாற்ற மாட்டேன், கண்ணீர் விடமாட்டேன்—என்கிற வைராக்கியங்களை சித்ரா மனதில் பீடம் போட்டு ஏற்றி உட்கார வைத்தாள்.

# 23

புரிந்துகொள்ளுதல்— அற்புதமானது. நாம் எங்கே நிற்கிறோம், எந்த இலக்கை நோக்கிப் பயணிக்கிறோம், நம் உடனடித் தேவைகள் என்ன—போன்றவற்றைப் புரிந்து கொண்டு விட்டால், பரம சௌக்கியம். இதே போல, நமக்கு வேண்டியவர்கள் என்ன நினைக்கிறார்கள், எந்தக் கோணத்திலிருந்து சொல்கிறார்கள், எந்தக் கோணத்திலிருந்து செயல்படுகிறார்கள் என்பதைப்புரிந்து கொண்டு விட்டால், நிம்மதி. இதற்குச் சச்சிதமாய்த் தொடர்பு கொள்ளுதல் அவசியமாகிறது. கண், காது, மூக்கு வைத்துக் கூடுதலாகவும் இல்லாமல், சதா சோகத்தை உணர்க்க வேண்டிய குறைந்த தொடர்பும் அமையாமல், சரியான பார்வை, செயல், செய்கை, அமைந்து விட்டால் பிரச்சனையே இல்லை...

முழுக்க முழுக்க புரிந்து கொள்ளாவிடினும் பெருமளவுக்குத் தன்னையும், சரவணனையும் சரியான கோணத்திலிருந்து பார்க்க ஆரம்பித்துவிட்டதாக சித்ரா எண்ணியதில் மனசு சிலுசிலு என்றுதான் பத்து பதினைந்து நாட்களாகவே இருக்கிறது.

பாரத்தை இறக்கி வைத்துவிட்ட சௌக்யம் புழுக்கமான அறையின் சாளரங்களைத் திறந்து, அறை முழுக்கச் சுத்தமான காற்றும், வெளிச்சமும் சூழ்ந்து கொண்ட சந்தோஷமும்...ஸ்வாசிப்பது கூடச் சுலபமாக இருக்கிறதே! தொண்டையைத் துக்கம் அடைக்காமல், கண்களை இறுக்கிக்கொண்டு நீர் கிளம்பாமல் கைவிரல்கள் நடுங்காமல், முக்கியமாய் இழப்பும், பிரிவும், வலியும் எனக்கு மட்டும்தான் என்று பரிதவிக்காமல் இதுதான் வாழ்க்கை இதில் ப்ளஸும், மைனஸும், மாறிமாறி வரும்; இயற்கையோடு முரண்டிக் கொண்டிராமல் வருவதை ஏற்று வாழப் பழகுவதில்தான் மனித இனத்தின் மேன்மையே இருக்கிறது என்பதை எல்லாம் புரிந்து கொள்ள முற்பட்ட பிறகு, உளைச்சல், குழப்பம் வலி குறைந்த மாதிரி தானே தோன்றுகிறது!

நான் மட்டும் இந்த எதிர் நீச்சல் போட்டியில் தனி இல்லை; சரவணன் போன்று இன்னும் ஆயிரமாயிரம், இல்லை இல்லை, லட்சோபலட்சம் மக்கள் அன்றாடம் மூழ்கி மூழ்கிதான் எழுந்திருக்கிறார்கள்; கிடைத்த ஒரு நூலிழையின் நுனியைப் பிடித்துக் கொண்டு கரை ஏறத் துணிகிற...

''என்ன யோசனை?''

திரும்பினவள், முறுவலித்தாள்.

''எல்லாம் உங்களையும், என்னையும் பற்றின சிந்தனைகள்தாம்'' என்று அந்த முறுவல் பறைசாற்றியது.

''ப்ளேன் அரை மணி லேட்...அது வந்து கஸ்டம்ஸ் எல்லாம் முடிஞ்சு புரொபஸர் வெளில வர மேற்கொண்டு அரைமணி தாராளமாய் ஆகும். வர்றீங்களா, ரெஸ்டாரண்டுக்குப் போய் காபி சாப்ட்டு வரலாம்?''

சித்ரா அவனோடு கட்டிடத்தின் இடது புறத்தில் இருந்த சிற்றுண்டி சாலையைப் பார்க்க நடந்தாள்.



இப்படி சரவணனுடன் இரவு நேரத்தில், தாய் நாடு திரும்பும் துர்காவை வரவேற்க என, விமானக்கூடத்துக்கு வந்திருப்பதை நினைத்துப் பார்த்தால், 'நானா? சரவணனுடனா? வந்திருக்கிறேனா?'—என்கிற வியப்பு சன்னமாய் எழவே செய்தது. ஆனால், கூடவே தயக்கமோ, உறுத்தலோ இல்லாதது ஆரோக்யமான சந்தோஷத்தையும் தந்தது...

அன்று, ஸ்ரீனிவாஸ் வீட்டு பார்ட்டிக்கு சென்று திரும்பிய பின், சரவணனுடன் மனம் விட்டு பேசி, அவன் துக்கத்தைப் புரிந்து கொண்ட பின் மறுநாளிலிருந்து மற்றவர்களிடம் இன்னும் கொஞ்சம் சகஜமாய் இருப்பதும், சற்றே கலகலப்பாய்ப் பேசுவதும், ஏன், வாய்விட்டுச் சிரிப்பதும்கூட சாத்தியமானது நிஜம்தானே?

அப்பா அம்மாமேல் ஏற்பட்டுள்ள கசப்பு ஓரளவுக்குக் குறைந்து, 'ஒருநாள் அவர்களைப் போய்ப் பார்த்து வரலாமா?'' என்று யோசித்ததும் 'இந்த மேடம் சட்டென்று திரும்பக் கூடாதா'—என்று சின்னதாய் ஏங்கினதும் கூட திடமான மாற்றம் இல்லாமல் வேறு என்ன?

அதுவும் சரவணனிடம் வேண்டாத தயக்கங்கள் இன்றிக் கோபியைப் பற்றி நீள நீளமாய்ப் பேச முடிவது எத்தனை அற்புதமான சமாசாரம்!

ரெஸ்ட்டாரண்டில் நுழைந்து, கண்ணாடி ஜன்னல் அருகில் இருந்த மேஜையைத் தேர்ந்தெடுத்து, சித்ரா உட்காரவென ஏதுவாய் நாற்காலியைச் சரவணன் இழுத்துப் பிடித்ததும், அவள் சட்டென்று சிரித்தாள்.

''என்ன சித்ரா?''

''ஒண்ணும் இல்ல...கோபி ஞாபகம் வந்தது...இந்த மாதிரி பெண்கள் உட்கார நாற்காலிகளை இழுத்து கதவுகளைத் திறந்து பிடிக்கற பழக்கங்கள்ல அவருக்கு

நம்பிக்கையே இருந்ததில்லை... 'சுதந்தரம் வேணும்'னு சொன்னீங்க, அப்புறம் எதுக்காக இந்த எதிர்பார்ப்பு? சுதந்தரமின்னா, அப்பப்ப எங்களுக்கும் நீங்க இதெல்லாம் செய்ய வேணாமா?'னு கேட்டுக் கண்ணைச் சிமிட்டிவிட்டுச் சிரிப்பார்... நீங்க அக்கறையா எனக்குக் கதவைத் திறந்து, நாற்காலியை இழுக்கறதை பார்க்கறப்போ அந்த நினைவு தான் வந்தது..."

சிரித்தபடி அவள் பேச, சரவணனும் புன்னகையுடன் எதிரில் உட்கார்ந்தான்.

"என்ன சாப்பிடறீங்க?"

"காபி சாப்பிடலாம்னுதானே கூட்டிட்டு வந்தீங்க!' இங்க நல்லா இருக்கும்...".

"ஓ.கே...காபி...அப்புறம்? கட்லெட் சாப்பிடலாமா? இங்க நல்லா இருக்கும்..."

"வேணாம்..." என்றவள் தொடர்ந்தாள், "விவேகானந்தா கேந்த்ராவில இருந்ததாலயோ இல்ல, யோகா, அது, இதுனு பண்ணதாலேயோ, கோபி சாப்பாட்டு விஷயத்துல ரொம்ப ஸ்ட்ரிக்ட்...எண்ணையில பொரிச்சது தோறதுக்குத் இனி எல்லாம் தொடவே மாட்டார்...நா இதுக்கு நேர் எதிர்...கல்யாணத்துக்குப்புறம் என் பழக்கங்களை மாத்திக்க ரொம்பத்தான் கஷ்டப்பட்டேன்..."

செப்பந்தி வந்து நிற்க, அவன் பேசிக் கொண்டிருக்கையிலேயே சரவணன் "இரண்டு பேருக்கும் கட்லெட், காபி" என்று ஆர்டர் கொடுத்தான்.

செப்பந்தி நகர்ந்ததும் சித்ரா முன்னால் சாய்ந்து வினவினாள்.

"எனக்குமா சேர்த்து ஆர்டர் பண்ணி இருக்கீங்க?"

"ம்...பிடிக்கும்னு சொன்னீங்களே!"

"ஆனா இப்பவெல்லாம் சாப்பிடறத விட்டுட்டேன்னும் சொன்னேனே?"



சரவணன் ஒருதரம் தலைமுடியை கோதி விட்டுக் கொண்டான்.

"கோபிக்குப் பிடிக்கலைங்கறதுக்காக உங்களுக்குப் பிடிச்சதை விட்டுக் கொடுத்தாதான் அவர் மேல நீங்க வெச்சிருக்கிற அன்பை நிரூபிக்க முடியும்னு நினைக்கறீங்களா?"

"அ? அதெல்லாம் ஒண்ணும் இல்ல—அப்படி இருக்கறது எனக்குப் பிடிச்சிருக்கு அவ்ளோதான்..."

"ஏன்? நீங்க நீங்களா இருந்துகிட்டே பூரணமான அன்பை வெளிப்படுத்தறது கஷ்டம்னு நினைக்கறீங்களா? எந்த நபரையும் அவரவரோட பலம், பலவீனங்களோட ஏத்துக்கறதுல உங்களுக்கு நம்பிக்கை இல்லியா?"

புதுசாய் அவன் எதையோ கேட்கறமாதிரி தோன்ற அதற்குச் சரியான பதிலைச் சொல்லத் தெரியாமல் சித்ரா தண்ணீர் டம்ளரை எடுத்து ஒரு வாய் குடித்தாள்.

கண்ணாடி வழியாய் ரன்வேயில் நின்றிருந்த விமானங்களை பராக்கு பார்த்தாள்.

கட்லெட் வந்தது.

வெட்டி டொமேடோ ஸாஸில் தோய்த்துச் சாப்பிட்ட போது, ருசித்தது.

அடுத்த டேபிளில் ஒரு வடநாட்டுப் பெண்மணி இரண்டு குழந்தைகளுடன் வந்தமர்ந்தார். இரண்டும் ஐஸ்க்ரீம் வேண்டும் என்று ஒரே குரலில் கூவ, அதில் ஒன்று உருண்டை முகமும் பெரிய கருப்புக் கண்களுமாய் ஸ்ரீனிவாஸ் பிள்ளை அரவிந்தனை முன்னால் கொண்டு நிறுத்த, நாப்கினால் வாயைத் துடைத்துக் கொண்டவள். "அன்னிக்கு, நா என் அவ்னோ அப்ஸெட் ஆனேன்னு

நீங்க கேக்கவேயில்லியே சரவணன்?" என்றாள் மெல்லிய குரலில்.

"என்னிக்கு?"

"ஸ்ரீனிவாசன் வீட்டு பார்ட்டில..."

"ஓ! அதுவா...கோபி இல்லாம முதல் தடவை வந்ததும், முந்தின வருஷத்து நினைவுகள் எழுந்ததும் காரணமா இருக்கலாம். இல்ல, யாராவது தெரியாத் தனத்துல ஏதாவது பேசி உங்கள காயப்படுத்தி இருக்கலாம்..." அவனை முடிக்க விடாமல் சித்ரா குறுக்கிட்டாள்.

"அதுவும்தான்...ஆனா, அங்க எல்லாரும் ஜோடி ஜோடியா இருக்கறப்போ நா மட்டும்..."

சரவணன் சப்தம் இல்லாமல் சிரித்தான்.

"அப்ப உங்க கண்ணுல நா விழுவேயில்லனு சொல்லுங்கோ..."

சித்ரா கையில் எடுத்த கட்லெட் துண்டத்தை வாய்க்கு எடுத்துப் போகாமல் மீண்டும் தட்டிலேயே வைத்தாள்.

"அட—ஆ—மாம் இவன் அங்கேயே இருந்திருக்கிறான். அதை மறந்துவிட்டு ஜோடி ஜோடியாய் எல்லாரும் வந்திருக்கும்போது, எனக்கு இங்கே என்ன வேலை" என்று அசட்டுத்தனமாய் மனசுள் புலம்பி...

சித்ரா நிலைமையைச் சமாளிக்க முயன்றாள்.

"என்னை முடிக்க விடறீங்களா? முந்தின வருஷம் மேல விழுந்து வரவேத்தவங்க, இந்தமுறை ஏனோ தானோனு இருந்த மாதிரி பட்டுது...அதுவும், கோபி, இல்லேன்றதுக்காக கொஞ்சம் மரியாதைக் குறைச்சலா சில பேர் நடந்த மாதிரி கூடத் தோணிச்சு...அதான்..."



"மரியாதைக் குறைச்சல்—னா?"

"முன்னே மிஸஸ் கோபி—னு ராம்ஜி, ரகுநந்தன் கூடக் கூப்பிடுவாங்க...இப்ப என்னடான்னா எல்லார்க்கும் நா 'சித்ரா'தான்! அன்னிக்கு பார்ட்டில நா நுழைஞ்சதும் 'ஹாய் சித்ரா... 'என்ன குடிக்கறீங்க'னு ரொம்ப ஸ்வாதீனத்தோட ராம்ஜி கேட்டது எனக்குப் பிடிக்கவேயில்ல..."

"நா கூடத்தானே உங்களை சித்ரா—னு கூப்பிடறேன்?"

"அப்படிக் கூப்பிடச் சொல்லி நான் கேட்டுக்கிட்டப்புறம்தானே?"

"முன்னே நீங்க நம்ப ஆபீஸ்ல வேலை பார்க்கல... அதனால எல்லார்க்கும் மிஸஸ் கோபிதான்...இப்ப அப்படி இல்லியே...தினம் பார்க்கறதும் பழகறப்போ பேர் சொல்லிக் கூப்பிட்டு ஸ்நேகமா இருக்கறதுல என்ன தப்பு? எனக்கென்னமோ நீங்க அநாவசியமா மஞ்சக் கண்ணாடி மாட்டிகிட்டு உங்க இழப்ப நினைச்சுக்கிட்டே எல்லாரையும் பார்க்கறீங்கனுதான் தோணுது... இப்படி நா சொல்றது உங்கள புண்படுத்தினா, ஐம் ஸாரி" வெளிப்படையாய் அவன் குற்றம் சாட்டியதும் இவன் யார் இப்படிப் பேசுவதற்கு? என்கிற கோபம் எழாதது அவளுக்கு ஆச்சர்யத்தைத் தந்தது. ஒருவேளை அதுதான் உண்மை என்பதாலா?—

கட்லெட் தட்டை நகர்த்தி காபி கோப்பையை அருகில் எடுத்து வைத்துக் கொண்டாள்.

பக்கத்து மேஜை குழந்தைகள் ஐஸ்க்ரீமைக் கன்னம் மூக்கில் பூசியபடி ஆனந்தமாய் ருசித்துக் கொண்டிருந்தன.

மீண்டும் அரவிந்த் நினைப்பும் தொடர்ந்து தாங்கள் குழந்தையை எப்படிப் பெற்று, வளர்க்கத் திட்டமிட்டிருந்தோம் என்பதும் மனசும் மணக்க, அது பற்றிச் சரவணனிடம் பேசவேண்டும் என்கிற ஆர்வம் துளிர்த்தது...

"அன்னிக்கு அப்ஸெட் ஆனதுக்கு முக்கியமா இன்னொரு காரணம் இருந்தது—சரவணன்...முந்தின வருஷம் அரவிந்த் பிறந்த நாளுக்குப் போயிட்டு வந்தப்புறம் கோபி முதல் தடவையா எங்கிட்ட சில ஆசைகளைச் சொன்னார்...மசக்கை படுத்தறப்போ, எனக்குப் பிடிக்காத பதார்த்தங்களைத் தானும் சாப்பிடாம இருந்து பிரசவ வலி சமயத்துல கூடவே நின்னு...என் அவஸ்தைய உணர்ந்து...தானும்..."

மேலே பேச முடியாமல் குரல் பிசிறத் துவங்க சரவணன் "ஷ்...ஷ்...கூடாது அழக்கூடாது...உணர்ச்சி வசப்படக் கூடாது...கஷ்டமாயிருந்தா பேச வேணாம்" என்றான் கிசுகிசுப்பாய்...

கண்ணாடி டம்ளர் மேல் வியர்த்திருந்த தண்ணீர் துளிகளை சித்ரா வழித்தாள்...தலை நிமிராமல் பேசினாள்...

"அழமாட்டேன் சரவணன்—பயப்படாதீங்க... நீங்க சொன்ன மாதிரி கண்ணீர் ரொம்ப உயர்வான விஷயம்னு புரிஞ்சிக்கிட்டேன்...ப்ளீஸ் நா சொல்ல வந்தத சொல்லிடறேன்...தடுக்காதீங்க ... அன்னிக்கு கோபி ஆசைப்பட்ட விதத்துல நா கர்ப்பமாகி, அவர் என்கூட அத்தனையும் அனுபவிக்கத்தான் கொடுத்து வைக்கலை ஆனா இப்படி தன்னந்தனியா நின்னு, நா எதுக்காக வாழணும் இனிமே என் வாழ்க்கைக்கு அர்த்தம் என்ன—னு சதா உள்ளுக்குள்ள அழாம 'என் குழந்தைக்காகவாவது நா வாழ்ந்தே தீரணும்'னு பிடிப்பை உண்டாக்கற சூழ்நிலையாவது ஏற்பட்டிருக்கக்



கூடாதா? பிடிமானம் எதுவும் இல்லாம ஒரு பூஜ்யமா... நா...நா"

உடைய மாட்டேன் என்கிற வைராக்கியத்துடன் அடி உதட்டைக் கடித்து தண்ணீர் குடித்துத் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டதும் சரவணன் "உங்க கிட்ட ஒரு கேள்வி கேக்கலாமா? என்றான் மென்மையாய்...

"கேளுங்க..."

நீங்க ஆரம்பிச்சதால நானும் தொடர்ந்து கேக்கறேன்—உங்க மாதிரி நிலைல வேதனைப்படற பெண்களுக்கு, குழந்தை இருக்கறது நல்லதா இல்லாம இருக்கறது நல்லதா?"

சித்ரா நாவல் உதடுகளை ஈரப்படுத்திக் கொண்டாள்—தயக்கம் இல்லாமல் பதில் கூறினாள்!

கண்டிப்பாக குழந்தைகள் இருக்கறதுதான் வாழ்க்கைல ஒருபிடிப்பு ஏற்பட குழந்தைய நல்லவிதமாவளர்க்க வேண்டிய பொறுப்பு உதவாதா? தவிர, குழந்தை மேல கவனத்தைச் செலுத்தறது என் துக்கமே பிரதானம்னு உட்காராம இருக்கவும் வழி செய்யும்னே நா நினைக்கறேன்..."

"ம்ம்..."சரவணன் கண்களை இடுக்கிக் கொண்டு கொஞ்சம் யோசித்தான். பிறகு, இல்லை என்று தலை அசைத்தான்.

"ஸாரி—நீங்க சொல்ற கருத்த, என்னால முழுமையா ஏற்க முடியல. அடிப்பட்ட உடனே கொஞ்ச நாளுக்கு காயம் ஆறாத நிலைல இருக்கறப்போ, நமக்கு யாருமே இல்லையேங்கற ஏக்கம் உண்டாகறப்போ ஒருகமிட்மெண்ட் இருந்தா அதைக் காரணம் காட்டி, இழப்புலேந்து மீண்டு வர்றது சுலபமா இருக்கலாம். ஆனா, வருஷங்கள் போன பிறகு, இந்தக் காயம் தழும்பாக ஆகி, வலியோட வாழ்க்

கத்துக்கிட்டு, புதுசா இன்னொரு வாழ்க்கையை வாழத் துவங்கினா என்னன்னு நினைக்கறப்போ குழந்தை இல்லாம இருக்கறது ஒரு வரப்பிரசாதமாகவே இருக்கும்னு நா நம்பறேன். வேலையில தீவிரமாக ஈடுபடவோ, நினைச்சதை நிறைவேத்தப்போ செய்யவோ, ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக்க முடிவு எடுத்தாலோகூட, எந்தப் பிணைப்பும் இல்லாத தனி மனுஷியா இருக்கறது கூடுதலா உதவத் தானே செய்யும்? ம்...?

குறுக்கே பேச வந்தவளை சரவணன் கையை முன்னால் நீட்டித் தடுத்தான்.

''நீங்க என் கருத்தை ஏத்துக்கணும்...என்கறது இல்ல, ஆனா உடனடியா இதுக்குப் பதில் சொல்லிடாதீங்க, இந்தக் கோணத்துலேந்து நீங்க யோசனை பண்ணாம இருந்திருக்கலாம்...அதனால, ஆழமா சிந்திச்சிட்டு அப்புறம் உங்க கருத்தைச் சொல்லுங்க...அவசரம் இல்ல...''

பேசியவன் சிப்பந்தி கொணர்ந்துவைத்த பில்லுக்கான பணத்தோடு, டிப்ஸையும் சேர்த்துத் தட்டில் வைத்துவிட்டு, 'கிளம்பலாமா?'' என்று கேட்ட சமயத்தில் சிங்கப்பூர் விமானம் வந்து இறங்கி விட்டதாக அறிவிப்பு வர, எழுந்தார்கள்.

ஏற்கனவே அதிகாரிகளிடம் சொல்லி உள்கூடத்தருகே போக சரவணன் அனுமதி பெற்றிருந்தான். இடப்பக்கம் செல்ல இருந்தவளின் கையை முழங்கைக்கு மேலே பற்றி 'இப்படி சித்ரா' என்று அவளைத் திசை திருப்பிய போது சித்ராவுக்கு மயிர் கூச்சலிட்டது.

கையை எடுத்துவிட்டு, அது குறித்து எந்தச் சலனமும் இல்லாமல் சரவணன் பக்கத்தில் நடந்தாலும், அவனது விரல்கள் உண்டாக்கின ஸ்பரிசத்தில் சிலிர்ப்பு வளையம் வளையமாக மனசுக்குள் சுழன்றதிலிருந்து மீண்டு வர முழுசாய் சித்ராவுக்கு ஒரு நிமிஷம் பிடித்தது.

# 24

''ஹலோ''

''சித்ரா பேசறேன் மேடம்''

''எங்கேயிருந்து சித்ரா?''

''ஆபீஸ்லேந்துதான்...''

''சனிக்கிழமை கூட ஆபீஸ் போறயா என்ன?''

அந்தக் குரலில் விரவியிருந்த பாராட்டைப் புரிந்து கொள்ள முடிய, சித்ரா அடக்கமாய்ச் சிரித்தாள்.

''சோமசுந்தரம் எக்ஸ்போர்ட்ஸ் கம்பனிக்கு புதுசா சரவணன் ஒரு ப்ராஜெக்ட் செஞ்சிட்டு இருக்கார். அதுக்கு உதவி பண்ணத்தான் நானும் வந்தேன்...சனி, ஞாயிறுல போன், வந்து தொந்தரவு இல்லாம நிம்மதியா வேலை பார்க்க முடியறதே மேடம்...''

''வெரிகுட்...தீவிரமா வேலைல உன்னை ஈடுபடுத்திக் கறது எனக்கு ரொம்பப்புடிச்சிருக்கு சித்ரா...அடுத்தடுத்து வேலைகளைக் கவனிச்சுக்கிட்டே இருந்தா, எதைப் பத்தியும் நினைக்கறத்துக்கு நேரம் இல்லாம போயிடும்...''

சித்ரா பதில் கூறாது சில நொடிகளுக்கு மௌனித்தாள்.

சரவணனுடன் பழகத் துவங்கின பிறகு அவன் சொல்லி மனசில் பதிந்த பல விஷயங்களில் இந்தக் கருத்தும் ஒன்று என்பது துர்கா பேசியபோது ஞாபகத்துக்கு வந்தது.

''துக்கத்தை எத்து வாழ, கடினமா உழைக்கறது ரொம்ப உதவி பண்ணும்னே நா நினைக்கறேன்—

'மனசை நருப்பிடிக்க விட்டா, அது சைத்தான் குடியேற இடமாகிடும்'னு பழமொழி கேள்விப்பட்டிருப்பீங்களே... அது முழுக்க முழுக்க உண்மை ...வெறுமையா உட்கார்ந்து, போனதை நினைக்க அழறதைவிட, சுறுசுறுப்பா இருக்கப் பழகிக்கிட்டா, அழுகை இல்ல வலி இல்ல, அடுத்தவங்களுக்கு எல்லாம் இருக்கேன்ற ஆங்காரம் இல்ல... மனசு லேசாகி, மனுஷங்களைத்தோடு வாழறது சாத்தியமாகி... ஐ! நா என்ன சொல்றேன்னு புரியுதா சித்ரா? 'நீ ஏன் பிசாசா உழைக்கறே'னு என்னைத் தெரிஞ்சவங்க அடிக்கடி கேக்கறாங்க. ஒரு நாளைக்கு பதினெட்டு மணி நேரம் வேலை, வேலைன்னு உழைச்சி... அலுத்து, பசிக்குக் கொஞ்சம் சாப்பிட்டுட்டு, அப்பாடான்னு படுக்கையில விழுந்தா—அம்மாவோட முகம் ரத்த வெள்ளத்துல 'தண்ணி...தண்ணி'னு முனகினது ஞாபகத்துல வந்து கூத்தாடத் துவங்கறதுக்கு முன்னால—தூங்கிப் போயிடறேன்...அதுக்காக அவங்களை எல்லாம் நா மறந்திட்டேன், நினைக்கறதேயில்லேனு சொல்ல முடியுமா? இல்ல...வேலைல என்னை ஈடுபடுத்திக்கறதன் மூலம் என் இழப்பு என்னைச் செயலிழக்க வைச்சு மண் மேடாக்காம பாதுகாத்துக்கறேன்னுதான் சொல்ல வரேன..." பேசிக்கொண்டு போனவள் "நீங்களும் இன்னும் நாலு மடங்கு வேலைல உங்களை ஈடுபடுத்திக் கிட்டீங்கன்னா, இப்ப நீங்க அனுபவிக்கிற வேதனை கால் பங்கா குறைஞ்சிடும், சித்ரா—முயற்சி பண்ணிப் பாக்கறீங்களா? எனக்காக, ப்ளீஸ்..." என, அதற்கு மறுநாளிலிருந்துதானே ஆபீஸுக்கு ஒரு மணிநேரம் முன்னதாக வந்து இதர பிரிவுகளின் வேலைகளை வலிய இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வதை வாரத்துக்கு இரண்டு தரம் மாலைகளில் விடுமுறை நாட்களில், சாந்தி சதனத்துக்குச் சென்று பாட்டிகளுக்குப் புத்தகம் படித்துக் காட்டும் இல்லத்துக் கணக்குகளை எழுதுவதில் வார்டன் பார்வதிக்கு உதவும் வழக்கத்தை மேற்கொண்டாள்.



உட்கார, வம்பு பேச நேரம் இல்லாமல் மேலேமேலே வேலைகளை வரிசையாய்ச் செய்துவிட்டுக் களைத்து வீட்டுப் படி ஏறி, ஆயா சமைத்து வைத்திருக்கும் உணவைக் கொஞ்சமாய் உண்டு, டி.வி.யில் நியூஸ் பார்த்து முடிப்பதற்குள் கண்களைச் சுழட்டிக்கொண்டு உறக்கம் வந்துவிடுவது நிஜம்தானே!

வேதனையைக் குறைக்கச் சிலர் தெய்வத்தைச் சரணடைய செய்யலாம், சிலர் இசையில் தங்களை மூழ்க அடித்துக்கொள்ளலாம். சிலர் சமூக சேவையில், ஆக்க பூர்வமான பணிகளில் ஈடுபடுத்திக்கொள்ளலாம்.

ஏதோ ஒன்று—ஆனால், அப்படி எதையும் செய்யாமல் 'எனக்குத்தான் துக்கம்' என்று முக்காடு போட்டு மூலையில் உட்கார்ந்து சதாசர்வகாலம் அழுவதால் யாருக்கும் எந்த ஆதாயமும் இல்லை; இப்படித் துக்கம் கொண்டாடுவதால் மறைந்தவர்—பால் அன்பு அதிகம் இல்லை என்பதோடு மனசு பூராவும் ஒட்டடை கட்டிப் போய், ஏக்கமும், பொறாமையும் தாட்டாணம் பண்ணத் தொடங்கி... சிடுமுஞ்சியாகி, உள்ளுக்குள் காய்ந்து...காய்ந்து...

சித்ராவின் உடம்பு உதறிப் போட்டது.

"என்ன சித்ரா—இருக்கியா, வச்சிட்டியா?"

"இருக்கேன் மேடம்...ஒரு நிமிஷம்: சரவணன் உங்க கிட்ட பேசணும்னு சொன்னார்..."

சித்ரா ரிஸீவரைத் தழைத்தாள். அதை மூடியபடி எதிரில் அமர்ந்து இவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த சரவணனிடம் நீட்டினாள்.

"நீங்களே கூப்பிடுங்க...எனக்கு எப்படியோ இருக்கு..."

சரவணன் ரிஸீவரை வாங்கிக் கொண்டான்.

"குட்மார்னிங் புரொபஸர்..."

"வெரி குட் மார்னிங்...என்ன, சனிக்கிழமைகூட ரொம்ப பிஸி போல இருக்கு!"

"இருக்குற வேலைகளைச் செஞ்சு முடிக்க ஏழுநாள் போதமாட்டேங்குது புரொபஸர்...ஒரு வாரத்துக்குப் பத்து நாளாக்கிடக்கூடாதானு இருக்கு!"

அவன் சிரிக்க துர்காவும் சிரித்தார்.

"சித்ராவும் நானும் ஒன்பது மணிக்கே வந்திட்டமா, பசிக்குது. உட்லன்ஸுக்குப் போய் நல்ல சைவ சாப்பாடா சாப்பிடலாமின்னு தோணுச்சு... சனிக்கிழமை, நீங்களும் வீட்டுல இருப்பீங்களே, சேர்ந்து சாப்பிடப் போலாமானு..."

"தாங்க்யூ—ஆனா, என்னால வர முடியும்னு தோணல சரவணன்..."

"பாத்தீங்களா...இதுக்குத்தான் உங்களுக்கு போனே பண்ணி இருக்கக்கூடாது... நேரா வீட்டுக்கு வந்து 'கிளம்புங்க, எங்களுக்குப் பசிக்குது'னு சொல்லி இருந்தா என்ன செஞ்சிருப்பீங்க? ம்? வாங்க, புரொபஸர்; உங்க வீட்டுலேயும் சாப்பிடக் கூப்பிடமாட்டேங்கறீங்க, நா கூப்டாலும் வர மறுக்கறீங்க...இது...நியாயமில்லை... சாப்டுட்டு மூணு பேருமா ஒரு மாட்னி ஷோக்குப் போகலாமா? நா படம் பாத்து ரொம்ப நாளாச்சு...நீங்க சித்ரா, பத்து வருஷக்கணக்காயிருக்குமே!"

அவன் துர்காவிடம் இத்தனை ஸ்வாதீனத்துடன் பேசுவது அவர்களுக்கிடையில் இருந்த பழக்கத்தை வெளிப்படுத்த, சித்ரா லேசாக முன்னால் சாய்ந்து "மாட்டேன்னா ஒத்துக்காதீங்க"...என்று முணுமுணுத்தாள்.



"வரணும்னு எனக்கும் ஆசையாதான் இருக்கு சரவணன்—ஆனா, எனக்கு வேற வேலை இருக்கு... சாயங்காலம் 'அகில இந்திய பெண்கள் மாநாட்டுல' பேசணும்...அதுக்கு பாயிண்ட்ஸ் தயாரிக்கணும்—இந்த மீட்டிங் பத்தி சித்ராவுக்குத் தெரியுமே! நீ அவளை வேணா கேட்டுப்பாரு...நீங்க ரெண்டு பேரும் போயிட்டு வாங்க...அடுத்த வாரம் நாம சேர்ந்து போகலாம்..."

ரிஸீவரை வைத்துவிட்டு "புரொபஸருக்கு இன்னிக்கு மீட்டிங் இருக்காமே-உங்களுக்குக்கூடத் தெரியும்னு சொல்றாங்களே!" என்று சித்ராவிடம் சரவணன் கூற, அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

எப்படி மறந்து போனேன்?

ஏ.வி.எம். ராஜேஸ்வரி மண்டபத்தில் மிகப் பெரிய அளவில் நடக்கப்போகும் கூட்டம் பற்றி, ஏற்கனவே மேடம் பேசி இருந்தும் எப்படி மறந்து போனேன்?

கோபி இருந்த நாட்களில் மூவருமாய்ச் சேர்ந்து கொண்டு தானே எந்த ஒரு கூட்டத்துக்கும் போய் வருவோம்?

கூட்டம் முடிந்து டாக்ஸியில் வீடு திரும்பும்போது மேடத்தின் பேச்சை அணுஅணுவாய் ரசித்து, எத்தனை தரம் விமர்சித்திருக்கிறோம்?

மேடத்தின் பேச்சைக் கேட்க ஆர்வத்தோடு காத்திருந்த நானா, இன்று அவர் ஏற்கனவே கூறியும் மறந்து போனேன்?

மறதியா? ஆர்வமின்மையா? அல்லது அலட்சியமா?

ஒன்றும் புரியாத அவஸ்தையில் மனசு பரபரத்துப் போக சாப்பிட்ட நாழிகையில் சரவணன் கூறிய ஜோக்குகளுக்குச் சிரிக்காமல், அதிகம் பேசாமல் ஏனோ தானோ

என்று இருந்தவள் சாப்பிட்டு முடித்ததும் மெதுவாக சரவணனிடம் "படம் வேணாமே" என்றாள் சின்னக் குரலில்,

"ஏன் வேணாம்?"

"படத்துக்குப் போனா நாழியாயிடும்—நாம மேடத் தோட லெக்சருக்குப் போகலாம், ப்ளீஸ்."

"நேத்து நா படத்துக்குப் போகலாமானு கேட்டப் போ சரினு சொன்னீங்களே?"

"அப்ப இந்த லெக்சர் ஞாபகம் இல்ல சரவணன்... மேடம் ரொம்ப நல்லாபேசுவாங்க...கோர் இருக்கப்போ நாங்க ஒண்ணுவிடாம, போவோம்...அதுவும் இன்னிக்கு 'தன்னம்பிக்கை' பத்தி பேசப் போறாங்க..."

சரவணன் உதட்டைப் பிதுக்கித் தோளை உயர்த்தி னான்.

"தன்னம்பிக்கை எனக்கு நிறைய இருக்கு...நா வரலை..."

"கோபமா?"

"இல்ல... ஆனா லெக்சருக்கு வரணும்போல எனக்குத் தோணல...படத்துக்குத்தான் போப்போறேன்..."

இரண்டாம்தரம் அவளை வருகிறாயா என்று உபசாரம் பண்ணாமல் அவள் லெக்சருக்குப் போகவேண் டும் என்றதை ஏற்று, அதற்காகத் தன் முடிவை மாற்றிக் கொள்ளாமல் சரவணன் தீர்மானமாக இருக்க, மேற் கொண்டு எதுவும் பேசாமல் மௌனமாய் சித்ரா பயணித் தாள்.

வீட்டு வாசலில் இறங்கிக் கொண்டபோது மட்டும் முதல்நாள் வருகிறேன், என்று கூறிவிட்டு இப்போது



பேசாமல் இருப்பது ஏதோ தவறு செய்துவிட்ட உணர் வைத்தர, "நாளைக்கும் ஆபீஸுக்கு வரப் போறீங்களா சரவணன்?" என்றாள் மெதுவாக...

"ம்...ப்ராஜெக்ட் வேலை இன்னும் கொஞ்சம் இருக்கே..."

"நானும் வரலை!"

"அவசியம்னு தோணல..."

"அப்ப அதை முடிச்சிட்டு எங்க வீட்டுக்கு மதிய சாப் பாட்டுக்கு வரீங்களா?"

சரவணன் வெள்ளியதாய் விசில் அடித்தான்.

"புரொபஸரைக் கேட்டது உங்களுக்கு உறுத் திடுச்சா?"

"அப்படியொன்றும் இல்ல...கொஞ்ச நாளாவே உங்களைக் கூப்பிடணும்னுதான்..."

"ஓ.கே...கண்டிப்பா வரேன்...என்ன சமைக்கப் போறீங்க?"

"என்ன வேணும் சொல்லுங்க?"

"ம்ம்? பிஸிபேளா, பாதாம்கீர், மசால்வடை, அவியல், பகாளாபாத், எலுமிச்சை ரசம்...போதும்... எனக்கு எப்பவுமே சிம்பிளா இருந்தாதான் பிடிக்கும்..."

அவனுடைய குறும்புப் பேச்சு, சித்ராவுக்குச் சிரிப்பைத் தந்தது. சரவணன் ஜன்னல் வழியாக எட்டிப் பேசினான்...

"நிஜம்னு நினைச்சிடாதீங்க... நீங்க என்ன சாப்பிடப் போறீங்களோ, அதுவே எனக்கும் போதும்...எத்தனை மணிக்கு வரட்டும்...பன்னிரண்டு? ரைட்...பை..."

அன்றைக்கு மாலை துர்காவின் பேச்சு அருமையாக அமைந்த போதிலும் அதில் முழுமையாகக் கவனத்தைச் செலுத்த முடியாமல் சரவணனை மறுநாள் வீட்டுக்கு அழைத்திருப்பது நினைவில் எட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தது.

கூப்பிட்டிருக்கக் கூடாதோ?

யாராவது எதாவது நினைத்துக் கொண்டால்?

இதில் நினைக்க என்ன இருக்கிறது?

ஆபீஸ் நண்பர்... இது வரையில் என்னை இரண்டு மூன்று தரம் வெளியே சாப்பிட அழைத்துச் சென்று விட்டவரை பதிலுக்குக் கூப்பிடுவதுதானே மரியாதை?

மேடத்தையும் கூப்பிடலாமா?

சரவணனை விருந்துக்குக் கூப்பிடுவதை அவர் ஆட்சேபிப்பாரா?

என்ன ஆட்சேபம்?

புரியவில்லை—ஏதோ குழப்பமாய் இருந்தது.

யோசனையுடன் இரவு கூட்டம் முடிந்து வீடு திரும்பும்போது மறுநாள் சரவணனைச் சாப்பிடக் கூப்பிட்டிருப்பதைக் கூறி, 'நீங்களும் வாங்க மேடம்' என்பதற்குள் ஏனோ நாக்கு உலர்ந்து உள்ளங்கையில் வியர்வை ஊறியது.

வழக்கமாகப் பேச்சை விமர்சிப்பவள் இன்று வாய் மூடி வருவது குறித்துச் சிந்தனை செய்தபடி பயணித்த துர்கா, சரவணனை விருந்துக்கு அழைத்திருப்பதைச் சொன்னதும் புருவங்கள் உயர அவளை ஏறிட்டார்.

அவளின் சங்கடத்தைப் புரிந்து கொள்ள முடிய சன்னமாய்ச் சிரித்தார்.

"கொஞ்சம் கொஞ்சமா நீ பழைய சித்ராவா மாறிட்டு வர்றதைப் பாக்கறப்போ சந்தோஷமா



இருக்கு... எனக்கும் வரணும்ன்னு ஆசைதான்... ஆனா, முடியாது சித்ரா... நாளைக்குப் பதினோரு மணிக்கு மேல நாலு ஸ்டூடண்ட்ஸ் பாடம் கத்துக்க வராங்க... புரிஞ்சிக்க..."

அவள் கையை லேசாக அழுத்தி மீண்டும் ஒருதரம் துர்கா ஆமோதிப்புடன் சிரித்ததும், சரவணனை விருந்திற்கு அழைத்ததில் எந்தத் தவறும் இல்லை என்கிற தைரியம் பிறக்க, பதிலுக்குச் சித்ராவும் புன்னகைத்தாள்.

மறுநாள் காலையில் ஐந்து மணிக்கு மேல் உறங்க முடியாமல் எழுந்தவள் சரவணன் விளையாட்டாகக் கூறின அயிட்டங்களையே சமைப்பது என்கிற தீர்மானத்துடன், ஆயா வந்ததும் அதற்கேற்றவாறு காய்கறிகளையும், சாயபு கடையிலிருந்து 100 கிராம் பாதாம் பருப்பையும் வாங்கி வரச் செய்தாள்.

ரொம்ப நாட்களுக்குப் பிறகு தானே சமையல்கட்டில் நின்று சமைத்து முடித்து, துளி துளி சுவைத்து நன்றாக வந்திருக்கிறதா என்று பார்த்துத் திருப்தி அடைந்தாள். வெள்ளை கோட்டா புடவையைப் பிரித்து, 'ஹாய் தேவதை' என்று கோபி கண்களைச் சிமிட்டிக் கொண்டு சிரிப்பதை நினைத்துக் கொண்டே உடுத்தித் தயாரானாள்.

பன்னிரெண்டு அடிக்க ஐந்து நிமிஷங்கள் இருக்கையில் சரவணனின் கார் வாசலில் வந்து நின்றது.

சாப்பாட்டு மேஜையில் வந்து உட்கார்ந்து அவள் சமைத்திருந்த ஐட்டங்களைப் பார்த்ததும் நிஜமாகவே சரவணன் அதிசயித்துப் போனான்.

"என்னங்க நீங்க! நா விளையாட்டுக்குச் சொன்னதை சீரியஸா எடுத்துக்கிட்டு..."

என்று சங்கடப்பட்டாலும் ஒவ்வொரு வகையையும் 'ம் பிரமாதம்' என்று சப்புக் கொட்டிக் கேட்டு வாங்கி இரண்டாம் தரம் சாப்பிடவே செய்தான்.

உண்டு முடித்து, கை கழுவிக் கூடத்துக்கு வந்ததும் புத்தக அலமாரியிடம் சென்று நின்று சரவணன் ஊன்றிப் பார்த்தான்.

எல்லாம், தமிழ் புஸ்தகங்கள்தாம். தி. ஜானகிராமன் பாரதியார்—னா கோபிக்கு ரொம்பப் பிடிக்கும்... நீங்க அவங்க புஸ்தகங்கள படிச்சிருக்கீங்களா சரவணன்?''

''ரொம்ப இல்லை...ஒண்ணு இரண்டு படிச்சிருக்கேன்...''

சித்ரா அலமாரியிலிருந்து ஜானகிராமனின் 'மோக முள்' புஸ்தகத்தை எடுத்தாள்.

'கோபிய நா முத தடவை சந்திச்சப்போ இந்தப் புஸ்தகத்தைத்தான் படிச்சிட்டு இருந்தார்—நாங்க பேசின, முதல்பேச்சுக்கள், இதுசம்பந்தப்பட்டதுதான்னு சொல்லலாம்...''

கண்கள் பழைய நினைவுகளில் பளபளக்க நின்றிருந்தவளைக் கலைக்க மனமில்லாமல் மேல் தட்டிலிருந்த போட்டோ ஆல்பத்தை எடுத்து பார்க்கலாமா?' என்று கேட்டு, அவள் தலை அசைத்ததும் அதோடு சரவணன் சோபாவில் வந்து அமர்ந்தான்.

சித்ரா கோபி திருமண ஆல்பம்...

அவனருகில் அமர்ந்து சித்ராவும் படங்களைப் பார்க்க முற்பட்டாள்.

கண்ணும், முகமும் சிரிக்க சூரியகாந்திப் பூவாய் தான்...



'இவன் எனக்குச் சொந்தம்' என்கிற பெருமை கூத்தாட கோபி...

கல்யாணத்துக்குப் பெற்றவர்கள் சம்மதிக்காததையும், தாங்கள் எதிர்ப்பை மீறி மணக்கத் துணிந்ததையும், தன் பெற்றோர் குறித்துத் துளி மனக்கசப்பில்லாமல் கோபி பெருந்தன்மையோடு நடந்து கொண்டதையும் விவரித்துக் கொண்டு போன சித்ரா, மடியில் பூனைக் குட்டி மாதிரி உட்கார்ந்திருந்த மோகமுள் புஸ்தகத்தைத் தடவிக் கொண்டே பேசினாள்.

''உன்னைப் பெத்தவங்க எனக்கும் பெத்தவங்க மாதிரிதான். நா மருமகன் மட்டும் இல்ல, அவங்க பெறாத மகனும் கூடன்றத உணர்த்திட்டாங்கன்னா, என்னை மனப்பூர்வமா ஏத்துக்கிடுவாங்க...அப்படி நடந்து காட்டுறது என்கையில்தான் இருக்குது சொல்வார்...தப்பித் தவறிக்கூட அடுத்தவங்களை அனாவசியமா குறை சொல்லமாட்டார்...அற்புதமான மனுஷர்... ஆயுசு பூரா அவர் கைய பிடிச்சுக்கிட்டு நடந்திடலாம்னு நம்பினேன்...ஆனா...ஆனா...''

போட்டோ ஆல்பங்களில் இருந்த படங்களும், மடியில் கிடந்த புத்தகமும், பேச்சும், பழைய நினைவுகளைக் கிளறி வலியைத் திடுமென நிமிண்டி விட்டதில் கட்டுப்பாடு இல்லாமல் சித்ரா விசும்ப ஆரம்பிக்க...

அவசரமாய் சரவணன் ஆல்பத்தை மூடினான் தாள மாட்டாமல் வலதுகையை நீட்டி அவளை அருகில் இழுத்தான். தோளோடு சேர்த்தான். அவளது கண்ணீர் மார்பு சட்டையில் படரும்படி இறுக அணைக்க...

சித்ரா சிலிர்த்தாள். நெகிழ்ந்தாள், வரண்டு போன பாலைவனம் வாராது வரும் குளிர்ந்த மழையை கிரகிக்கும் ஆர்வத்தோடு, அப்பட்டமான ஆணின் ஸ்பரிசம்

எழுப்பிய பரவசத்தோடு, அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். கேவிக் கேவி அழத் துவங்...

இல்லை...நோ...

பரவசத்தையும், சிலிர்ப்பையும் மிதித்து அடக்கிக் கொண்டு குற்ற உணர்வு ராட்சஸனாய்க் கிளம்ப, சித்ரா வெலவெலத்தாள். பதறினாள்.

நானா? இன்னொரு ஆணின் தழுவலை ரசிக்கிறேனா?—என்கிற கேள்வி எழுந்து உடம்பை உதறிப் போட வைக்க, இரண்டு உள்ளங்கைகளையும் ஊன்றி சரவணனைப் பின்னுக்குத் தள்ளினாள்.

"கடைசில நீங்களும் சராசரி ஆண்தான்னு நிரூபிச்சிட்டீங்களே சரவணன்...என் தனிமையை வேதனையை சாதகமாக்கிக்கிட்டு ...நீ...நீங்க... நா...நோ... போயிடுங்க ...உடனே...போயிடுங்க ப்ளீஸ்...கெட் அவுட்..."

கடைசி வார்த்தை முழுசாக வெளிப்படாமல் தொண்டையிலேயே சிக்கிக்கொள்ள, இரண்டாக மடிந்து உட்கார்ந்தவள், பெரிசாய் அழ ஆரம்பித்தாள்.

## 25

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்...

குறுகுறுத்தது.

நெகிழ்ந்தது, அதிர்ந்து, சினந்து, அழுது முடித்தபிறகு குற்றஉணர்வு மட்டும் மனசு பூராவும் நெருஞ்சிமுள்ளாய்ப் படர்ந்து உறுத்த, சித்ரா எழுந்து குளியல் அறைக்குச் சென்று முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தாள். கூடத்து நாற்காலியில் அமர்ந்து யோசித்தாள்.



இன்றைக்கு அந்த சம்பவம் நடக்கக் காரணம் என்ன?

சரவணன் என்னை கைநீட்டி அணைக்கத் தூண்டியது தான் என்ன?

நான் அழுதது? உடைந்து போய்ப் பரிதவித்தது?

இது ஒன்றும் புதிசு இல்லையே! இதற்கு முன் எத்தனையோ முறைகள் நான் அவன் முன் அழுதிருக்கிறேனே?

அப்புறம்?

எங்களுக்குள் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு வரும் நட்பு தந்த ஸ்வாதீனம்?

வீட்டுக்குச் சாப்பிட அழைத்து, தன் அறையில் உட்கார வைத்து பேசிய உரிமை?

சரி, எல்லாமே காரணங்களாக இருக்கட்டும், ஆனாலும் என்னை அணைத்துச் சமாதானப்படுத்த அவன் எப்படித் துணியலாம்?

உண்மையிலே இதமாக நடந்து கொள்வதுதான் அவன் நோக்கமா? இல்லை சந்தர்ப்பச் சூழ்நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு என்னை அனுபவிக்க எண்ணமா?

'நீங்களும் ஒரு சராசரி ஆண்தானா?'—என்று கத்தினது நியாயம்தானா?

திருப்பித் திருப்பி இதையே யோசனை பண்ணிய போது இந்தக் குற்றச்சாட்டை முழுசாய் ஏற்க முடியாமல் மனசு முரண்டுவதைப் புரிந்துகொள்ள முடிய, ஒருவித இருப்புக் கொள்ளாமையுடன் சித்ரா எழுந்தாள். தவறு அவன் பேரில் மட்டும்தானா, இல்லை என் மேலுமா?

பானையிலிருந்து ஒரு டம்ளர் நீர் எடுத்துக் குடித்தவள், குறுக்கும் நெடுக்குமாய் நடந்தாள். நகத்தைக் கடித்தாள்.

அடி உதட்டை மடித்து, ஓர் இடத்தில் நின்று யோசித்த போது சரவணனின் அணைப்பைத் தொடர்ந்து சிலிர்த்ததும் உருகியதும் அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டதும் ஒவ்வொன்றாக நினைவில் மணி அடித்தது.

பத்துக் கணங்களோ, அரை நிமிஷமோ அந்த அணைப்பை ரசித்து அதில் லயித்தது நிஜம் தானே?

அப்புறம் தவறு அனைத்தும் சரவணனிடம் தான் என்கிற கோபம் எதற்கு?

எனக்கு எந்தப் பங்கும் இல்லை என்கிற வேஷம் எதற்கு?

கேள்விகள் கூட்டமாக எழ, சித்ரா படுக்கையில் அமர்ந்து முழங்கால்களைக் குத்திட்டு முகத்தை அவற்றில் புதைத்துக் கொண்டாள்.

கோபி, கோபி என்று மூச்சை உள்ளிழுக்கும் போதும், வெளிவிடும் போதும், உண்ணும் போதும், உறங்கும் போதும் ஸ்மரித்து, அவர் நினைவுகள் சுகந்தமாய் இருதயம் பூராவும் சதா மணக்க மணக்க ஒவ்வொரு நிமிஷங்களையும் கழிக்கும் தான் இன்னொரு ஆடவனின் அணைப்புக்கு இடம் கொடுத்ததும் அல்லாமல், அதை அனுபவித்ததும் நம்ப முடியாததாக இருக்க, சித்ரா பரிதவித்தாள்.

எதனால் இப்படி நடந்தது?

கோபி மேல் நான் கொண்டிருக்கும் காதல் மேலோட்டமானதா? அல்லது, அவர் மறைந்து விட்டதில் குறைந்து விட்டதா?



இல்லை... இல்லை... இல்லவேயில்லை...

அது சாத்தியம் என்றால் சரவணன் தொட்டபோது சிலிர்த்தது பொய்யா? வெறும் உடம்பு சம்பந்தப்பட்டது மட்டும் தானே? தானா? காம உணர்ச்சிக்கு அடிமையானவளா? அதுவும் கோபி மறைந்து இத்தனை சீக்கிரத்திலா? நம்ப முடியவில்லையே... ஒன்றும் புரியவில்லையே...

பரிதவிப்பு குற்ற உணர்வோடு சேர்ந்து கொண்டு ஹா ஹா என்று கூத்தாட முற்பட்டதில் அழுகை வெடித்துக்கொண்டு எழுந்தது.

எதுவும் யோசிக்க, செய்யத் தெரியாமல் அப்படியே அமர்ந்து அழுதவளுக்குத் தன் செயலை யாரிடமாவது கூறி மன்னிப்புக் கேட்கவேண்டும் என்கிற வெறியோடு, இப்படி நடந்து கொண்டதற்கான காரணத்தையும் தெரிந்து கொள்ளாவிட்டால் மண்டை சிதறிவிடும் என்கிற பதைப்பும் எழ, கலைந்திருந்த தலைமுடியைச் சீர்செய்து, கைப்பையை எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டு, கண்களில் தெரிந்த முதல் ஆட்டோவை நிறுத்தி, துர்காவின் விலாசத்தைக் கூறி, அங்குப்போய் இறங்கினாள்.

இவள் படியேறி உள்ளே சென்றபோது துர்கா ஸ்டீரியோவில் பாரதியாரின் பாடலை ஒலிக்க வைத்து விட்டு, கையில் இருந்த புத்தகத்தில் ஆழ்ந்திருந்தாள்...

...கண் திறந்திட வேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்,
பெண் விடுதலை வேண்டும்
பெரிய கடவுள் காக்க வேண்டும்,
மண் பயனுற வேண்டும்,
வானகமிங்குத் தென்பட வேண்டும்,

உண்மை நின்றிட வேண்டும்...

கோபிக்குப் பிடித்தமான அத்தனை பாடல்களையும் கொண்ட டேப் அது!

'பெண் விடுதலை வேண்டும்... வானகமிங்குத் தென் பட வேண்டும்...

உண்மை நின்றிட வேண்டும்' என்கிற வரிகளைக் கழுத்து நாளங்கள் புடைக்க, கண்கள் கலங்க... உதடுகள் துடிக்கப் பாடுவார் இல்லை? பாடல் முடிந்த பின்பும் 'ப்பா'... கவிஞர் என்றால் இவர் தான் கவிஞர்! என்னமாய் எழுதியிருக்கிறார்!' என்று ஒவ்வொரு முறையும் லயிப்போடு முனகுவார் இல்லை!

தற்போதைய மனநிலையை அந்தப் பாடல் அப்படியே பிரதிபலிக்கிற மாதிரி தோன்ற, சித்ரா வாசக் கதவுமேல் சரிந்து நின்றாள்.

''உண்மை வென்றிட வேண்டும்...''

எது உண்மை?

அதை அறியத்தானே மேடம் என்ன நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை உண்மை வெளிப்படுவது மட்டுமே முக்கியம் என்று ஓடி வந்திருக்கிறேன்...

முடிந்து விட்ட பாடலைத் தொடர்ந்து 'பாயும் ஒளி நீ எனக்கு' ஆரம்பித்ததும் சித்ராவின் உடம்பு உதறிப் போட முற்பட்டது.

'பாயும் ஒளி நீ எனக்கு... பார்வையடி நான் உனக்கு...'



இப்படி உருகி உருகி தாம்பத்தியம் நடத்திய நானா இன்றைக்கு அப்படி ஒரு சம்பவம் நடக்க இடம் கொடுத்தேன்? குற்ற உணர்வு அடங்கி இருந்த அழுகையைத் தூண்டில் போட்டு இழுக்க வேகத்துடன் சித்ரா நாலே எட்டில் துர்காவை நெருங்கினாள்.

அவர் மடியில் தலையைப் புதைத்துப் பெரிதாய் விசும்ப, அவள் வந்ததைக் கவனிக்காமல் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த துர்கா திடுக்கிட்டார்.

''யாரு? சித்ராவா? என்னம்மா... என்ன ஆச்சு? ஏன் இப்படி பதறிட்டு ஓடி வர்றே... என்ன நடந்தது? சொல்லும்மா... சொல்லாம அழுதா எனக்குப் எப்படிப் புரியும்... இங்கப் பாரு...''

ஒரு கையால் அவளை அணைத்தவர், இன்னொன்றை நீட்டி ஸ்டீரியோவை நிறுத்தினார்.

''என்னம்மா... சொல்லு''

''மே... மேடம் நா... நா...''

அழுகையினூடே எதையும் மறக்காமல் சொல்லி முடித்ததும் திமிர்ந்து துர்காவை எதிர்க்க கூசியவள் போல இன்னும் அழுத்தமாக முகத்தை அவர் மடியில் புதைத்துக் கொள்ள அவள் முதுகை இதமாகத் தடவிக் கொடுத்தார்.

இடக்கையால் முகவாயைப் பற்றி முகத்தைத் திமிர்த்தினார். விழிகளைத் துடைத்தார்.

''இப்ப என்ன நடந்து போச்சுன்னு இப்படித் துடிக்கறே சித்ரா?'' என்றார் நிதானமாக.

என்ன என்றா கேட்கிறீர்கள்—இது நாழிகை நான் கூறியது காதில் விழவில்லையா?—என்கிற தினுசில்

கண்ணைக் கலங்கிய சித்ராவை வெறித்த துர்கா மென்மையாய்ப் புன்னகைத்தார்.

"சரி; அதுக்குப் பதில் சொல்றதுக்கு முன்னால நீ இதுக்குச் சொல்லு... உனக்குப் பசிச்சா சாப்பிடறதானே?"

முக்கியமான விஷயத்தைப் பேச வந்திருப்பது புரியாமல் என்ன கேள்வி இது!—என்கிற அவளது பாவனையில் திகைப்போடு, லேசாகக் கோபமும் கலந்திருப்பதை உணர முடிய, துர்கா மீண்டும் புன்னகைத்தார் சற்று முன் கேட்டதையே கேட்டார்.

"சொல்லு சித்ரா—உனக்குப் பசிச்சா நீ சாப்பிடறதானே?"

"ம்"

"தூக்கம் வந்தா தூங்கறதானே?"

"ம்"

"அதுமாதிரி தானேம்மா இதுவும்!"

சித்ரா மூக்கை உறிஞ்சி, கண்களை இடுக்கிக் கொண்டாள்.

"எதுவும் மேடம்?"

"புரியாத மாதிரி கேட்காத சித்ரா—மத்தியானம் நடந்ததைத்தான் சொல்றேன்... அதெல்லாம் இயற்கையோட தேவைகள்னா இதுவும் அப்படிப்பட்டதுதானே?"

சித்ரா கேட்பதை நம்ப முடியாதது போல விழித்தாள்.

"மேடம்... நா... உங்கிட்ட வந்து..."

"இது; என்ன சொல்லவரேன்னு முதலில் புரிஞ்சிக்க. சரவணன் ஒரு ஆண், நீ பெண்; உங்க நடுவுல ஏற்பு



வர்றது இயற்கையான சமாசாரம், கொஞ்ச நாளாவே ஆரோக்யமான நட்போட நீங்க பழகறதைப் பார்த்து நா சந்தோஷப் பட்டிருக்கேன் நட்போட ஒரு எக்ஸ்டென்ஷன்தான் இன்னொரு வகை வெளிப்பாடுதான், இன்னிக்கு நடந்ததும் லோ என்னமோ பாவம் பண்ணிட்டமாதிரி அழுது புலம்பறதும், எங்கிட்ட ஓடிவந்து பாவமன்னிப்புக் கேக்கறது எதுக்கு?!"

"அப்படீன்னா இன்னிக்கு நடந்தது எதுவுமே தப்பு இல்லைன்னு சொல்ல வர்றீங்க?"

"நிச்சயமா..."

சித்ரா வாயைக் கையால் பொத்தி அரை நிமிஷம் மௌனித்துவிட்டு சின்ன குரலில் கேட்டாள்.

"கோபியும் நானும் வாழ்ந்த அற்புதமான வாழ்க்கையைப் பார்த்த நீங்களா இப்படிப் பேசறீங்க மேடம்? கோபி போய் ஒரு வருஷம் கூட ஆகாத நிலைல உணர்ச்சி வசப்பட்டு நாங்க நடந்துகிட்டத நியாயப்படுத்தி எப்படி உங்களால பேச முடியுது மேடம்?"

"அப்ப, கோபி, போயி ஒரு வருஷம்கூட பூர்த்தி ஆகலயேன்றதுதான் உன்னைச் சங்கடப்படுத்துதா சித்ரா! வருஷங்கள் ஆயிடிச்சன்னா தப்பில்லையா?"

சித்ரா அதிர்ந்தாள்.

"ஐயோ நா எதையோ சொன்னா, நீங்க என்னமோ புரிஞ்சிக்கறீங்களே மேடம். கோபி நினைப்பு சதா எனக்குள்ள பூவா மலரப்போ, அவரைப் பிரிஞ்ச வேதனை ஆறாத ரணமா துடிக்க வைக்கறப்போ... எப்படி மேடம் நீங்க சொல்றது சாத்தியம்! இது நா கோபிக்கு அவர் மேல வைச்சிருக்கற அன்புக்குச் செஞ்ச துரோகம் இல்லையா! வெளில தெரிஞ்சா என்ன 'பொம்பளை இல்'னு பழிக்க மாட்டாங்களா? தவறு பண்ணி என்ன

சமுதாயப்பட்டத்துற நோக்கத்துல மட்டும் பேசாம உண்மையை சொல்லுங்க மேடம்...''

ஆக்ரோஷத்தோடு, கத்தலாய்ப் பேசியவளின் தோளைத் துர்கா தட்டிக் கொடுத்தார்.

''நா இப்படிக் கேக்கறதுக்காக வருத்தப்படக் கூடாது சித்ரா—நீ பதறிட்டு ஓடி வந்து என் மடியிலே புதைஞ்சு அழுதது, சரவணன் உன்னைத் தொட்டுட்டான் அதை நீ ரசிச்சிட்டேன்றதுக்காக இல்ல கோபிக்குத் துரோகம் பண்ணிட்டோம், சமுதாயம் என்ன சொல்லுமோன்ற பயத்துல... அப்படித்தானே?

சித்ரா சரக்கென்று நிமிர்ந்தாள். நான் சொல்லறதைக் காதில் வாங்காமல் எதை எதையோ பேசத்தான் போகிறீர்கள் என்றாள், அந்தப் பேச்சு எனக்கு வேண்டாம் என்பது போல அவர் கையைத் தள்ளிவிட்டாள். எழுந்து நின்றாள்.

இரண்டடி எடுத்து வைத்தவளின் கையைப் பற்றித் துர்கா நிறுத்தினார்.

''சின்னக் குழந்தை மாதிரி நடந்துக்காதே சித்ரா... கோபி போன நாள்லேந்து நீ சாப்பிடாம, தூங்காம இருக்கியா, இல்லியோ! ஒரு விதத்துல அந்த மாதிரிதான் இதுவும்... சில விஷயங்களை அவசியமா கருதிச் செய்யறது உண்டுதான்—ஆளாளுக்கு ஏற்ப இந்த அவசியம் அளவியும் மாறலாம்? மாறும்... நமக்கு ஒண்ணு தேவையில்லைன்றதுக்காக அது தேவைப்படறவங்களை பழிக்கலாமா யோசி சித்ரா... நீ குழந்தை இல்ல. உனக்கு எது வேணும், வேணாம்னு நீ தான் தீர்மானம் பண்ணனும்... நடந்த விஷயம் உன் மனசுக்குப் பிடிக்கலைன்னா, இனி அது தொடராம இருக்க விழிப்போட நடவடிக்கை எடு... பிடிச்சிருந்ததுன்னா தலை நிமிர்ந்து ஆமா அப்படித் தான்னு ஒத்துக்க. அதைவிட்டுட்டு ஊர் என்ன சொல்லு



மோன்ற பயம் எதுக்கு, இல்ல கோழைத்தனம்தான் எதுக்கு வாஸ்தவமா சொல்றேன், சரவணன் அப்படி நடந்துகிட்டதுலியோ, நீ அதை அனுபவிச்சதுலியோ எந்தத் தப்பும் இருக்கறதா நா நினைக்கல... சரவணனோட அணைப்பை ஏத்துக்கிட்டதால கோபி மேல நீ வச்சிருக்குற அன்பு களங்கப்பட்டதாலோ, குறைஞ்சிட்டதாலோ நீ பதறினா, அது அசட்டுத்தனம்...என்னா கோபி இப்ப இல்ல.. அவன் இருந்திருந்தா சரவணனும் நீயும் நடந்திருக்க வேண்டிய முறையே வேற...இப்ப நீ தனி, இதுதான் நிஜம் அவன் மேல் நீ வச்சிருக்கிற அன்புக்கும், சரவணனோட பழகறதுக்கும் எந்த சம்பந்தமும் இல்ல... முதல் மனைவிய இழந்தப்புறம் ஒரு ஆணால இன்னொரு பெண்ணோட மனம் ஒப்பி வாழ முடியும்னா முதல் குழந்தைமேல உள்ள அன்பு கொஞ்சமும் குறையாம இரண்டாவதை ஒரு தாயால பெத்துக்க முடியும்னா, ஏன் இது மட்டும் சாத்தியம் இல்ல யோசிப்பியா ப்ளீஸ் முக்கியமா உங்களோட இந்தச் செய்கை யாரையும் காயப்படுத்தல... வேதனைல ஆழ்த்தல... இது உங்க ரெண்டுபேர் மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம் அதனால இந்த நெருக்கம் வேணுமா, வேணாமானு தீர்மானிக்க வேண்டியதும் நீங்க ரெண்டுபேர் மட்டும்தான்'' நீளமாய் நிறுத்தாமல் பேசிய துர்கா எழுந்து நின்றார்... ''நா சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன் அப்புறம் குழப்பறதும், தெளியறதும் உன் இஷ்டம்...''

பிரமை பிடித்த நிலையில் நின்றவளை அப்படியே விட்டு விட்டு உள்ளே சென்றவர் ஐந்து நிமிஷங்களில் சூடாய் காபி கலந்து எடுத்துக் கொண்டு திரும்பினார்.

''இத குடி...என்னோட இன்னும் எதையாவது பேசணும் போல இருந்தா பேசு... இல்ல, பேசினது போதும்னு தனிய சிந்திக்க விருப்பம்னா, அதச் செய்... இந்தா''

சித்ரா காபியை மெதுவாக உறிஞ்சிக் குடித்தாள். வாய் திறக்காமல் குளியலறைக்குள் சென்று கதவைச் சாத்தி குளிர்ந்த நீரை கண்கள் மேல் பளிச்சென்று அறைந்து ஈரம் சொட்ட பேனின் மேல் கவிழ்ந்து கொண்டு துர்கா இது நாழிகை பேசின பேச்சை, வார்த்தை வார்த்தைகளாகப் புரட்டி அலசினாள்.

அவள் கூடத்துக்கு வந்தபோது, மீண்டும் ஸ்டீரியோ பாரதியின் பாடல்களை மெல்லிதாய் ஒலித்துக் கொண்டிருந்தது.

''சாத்திரம் பேசுகிறாய் — கண்ணம்மா
சாத்திர மேதுக்கடீ!
ஆத்திரம் கொண்டவர்க்கே, கண்ணம்மா
சாத்திரமுண்டோடீ!
மூத்தவர் சம்மதியில் வதுவை
முறைகள் பின்பு செய்வோம்.
காத்திருப்பேனோடீ — இதுபார்
கன்னத்து முத்தமொன்று...''

கையிலிருந்த புத்தகத்தைக் கீழே வைத்துவிட்டுத் துர்கா அவளிடம் வந்தார்.

''கிளம்பிட்டியா?''

''ம்''

'போகணும்னா போ... இருந்து உன்னைத் தடுத்து நிறுத்தப் போறதில்ல...தெளிவா இரு...அதான் முக்கியம்... மனசுக்குப் பிடிக்காதத செய்யச் சொல்லி நம்ம கட்டாயப் படுத்த யாருக்கும் உரிமை இல்ல. ஆனா, நாம செய்யற காரியம் நியாயமானதுதானா, யாரையும் நோக அடிக்காம இருக்கணுங்கற நேர்மையான நினைப்பு மட்டும் நமக்கு இருக்கணும்...தைரியமா இரு...உன்னை மீறி உன் அனுமதி இல்லாம யாரும் எதுவும் உன்கிட்டே செஞ்சிட-



முடியாது... ஆழமான நட்பு ரொம்ப உயர்வானது... ஒரு ஸாரி'னு சொன்னா புரிஞ்சுக்கும்... பிடிக்கலைன்னத வெளிப்படுத்தினா, அந்தக் கருத்துக்குத் தலை வணங்கிப் பெருந்தன்மையோட விலகி நிக்கும்... யோசி.. எல்லாம் உனக்கே புரியும்...''

சித்ரா முயன்றாள்.

படபடப்பு இல்லாமல், உணர்ச்சி வசப்படாமல் விவேகத்தோடு யோசிக்க முயன்றாள்.

ராத்திரி நகர்ந்து, பொழுது புலர்வதற்குள் துர்கா சொல்வதுபோல விளக்க வேண்டிய ரீதியில் விளக்கினால் நட்பு புரிந்துகொள்ளும் என்கிற நம்பிக்கை துளிர்க்க— அலுவலகத்திற்குச் சென்றதும், செய்ய, சொல்ல வேண்டியவைகளை வரிசையாய் மனசில் குறித்துக் கொண்டாள்.

1. சரவணனைத் தேடிச் சென்று 'நேற்று அநாகரிகமாய்க் கத்தி உங்களை மட்டும் குற்றம் சாட்டினது தவறு, மன்னித்து விடுங்கள்' என்று கூற வேண்டும்.

2. 'இனியொரு முறை இப்படி நடப்பதைத் தவிர்த்து, மறந்து, நமது நட்பைக் காப்பாற்ற முயலலாமா?'' என்று கேட்க வேண்டும்.

3. எதுவும் நடக்காத மாதிரி மனசைச் சரி பண்ணிக் கொண்டு... எங்கே!

திட்டமிட்டபடி சரவணனை, சந்தித்து, கண்ணாமூச்சி ஆடிய வார்த்தைகளைத் தேடிப்பிடித்து, நடுங்கிய கைவிரல்களைப் புடவைத் தலைப்பில் மறைத்து 'என்னை மன்னிச்சிடுங்க சரவணன்... நேத்து' என்று ஆரம்பித்த அதைத் தொடரவிடாமல், எதிரில் வாட்டசாட்டமாய் நின்று, கண்களை ஏறிட்டு, துளி தயக்கம் இல்லாமல் ''நீங்களும் நானும் கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன சித்ரா?'' என்று சரவணன் கேட்டதுதானே கடைசியில் நடந்தது?

# 26

கடற்கரை.

ரொம்பக் கிட்டத்தில் ஒஷ் ஒஷ் என்ற சத்தத்தோடு வந்து மோதும் அலைகள்...

காரியமாய் கொடுக்குகளைத் தூக்கிக் கொண்டு ஓடும் நண்டுகள்...

தூரத்தில் மடித்த முஷ்டி அளவு தெரிந்த கப்பல்கள்... அவற்றில் மின்னிய விளக்குகள்...

இன்னும் பூரணமாய் இருட்டவில்லை...

முழங்கால்களை மடித்து இடது கையால் அவற்றை அணைத்தபடி உட்கார்ந்த சித்ரா வலக்கையால் மணலைத் தட்டிச் சமதளப்படுத்தினாள்.

ஆள்காட்டி விரலால் சின்னதாய்க் கோலம் ஒன்றைப் போட்டாள். அழித்துவிட்டுக் கோபி, கோபி என்று இரண்டு தரம் எழுதிக் கலைத்தாள். மீண்டும் கோபிப் பெயரை எழுத முனைந்தபோது எதிரில் சரவணன் அமர்ந்திருப்பது நினைவுக்கு வர, அவசரமாய் எழுதியதை அழுத்திவிட்டு, தன் செய்கையை அவன் பார்த்து விட்டானா என்று ஏறிட்டாள்.

சரவணன் காற்றில் அலைந்த முடியைக் கோதி விட்டுக் கொண்டான். கண்கள் அகல நிமிர்ந்தவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"இன்னும் எத்தனை நேரம் இப்படி எதுவுமே பேசாம உட்கார்ந்திருக்க எண்ணம்?"

சித்ரா முகத்தைத் திருப்பிக் கன்னத்தை முழங்கால் மேல் பதித்துக் கொண்டாள்.



நீங்கள் அன்று எந்தவிதப் பீடிகையும் இல்லாமல் "நீங்களும் நானும் கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன சித்ரா?" என்று கேட்டதும், திகைத்து, வெலவெலத்து, அரை நிமிஷம் அப்படியே நின்று, என்ன பதில் கூறுவது என்று புரியாமல் மலங்க மலங்க விழித்தாள். அப்புறம், ஒற்றை வார்த்தை கூடப் பேசமுடியாமல் தன் வீட்டுக்குத் திரும்பி வந்தவள், நேராக் குளியலறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

அழுகை ஆர்ப்பாட்டத்துடன் எழுந்தது. மனசை யாரோ பலமாய்ப் பிசைவது போல வலித்தது.

இது என்ன விநோத உணர்வு?

கல்யாணம் பண்ணிக் கொள்வோமா என்று சரவணன் கேட்டதும் சுர்ரென்று கோபம் அல்லவா சீறி அடித்திருக்க வேண்டும்?

இல்லையே... ஏன்?

ஆனால், ஏதோ வகையாக ஒளிப்பிவிட்ட நிம்மதி மனசு கரைந்து கண்களில் வெளிப்படுகிறதே? இது ஏன்...

கோபியின் இடத்தில் இன்னொருத்தரா? இது எப்படிச் சாத்தியம்?

இந்த மாதிரி கேள்வி சரவணன் கேட்க நான் எப்படிச் சம்மதித்தேன்?

இந்த ரீதியில் அவனுள் எண்ணம் வளர எவ்வாறு இடம் கொடுத்தேன்?

மூன்றாமவர் காதில் இந்தக் கேள்வி விழுந்தால் என்னைப் பற்றியும், கோபி மேல் நான் கொண்டுள்ள காதல், மரியாதை பற்றியும் என்ன நினைப்பார்?

30209
16.01.1997

"நீங்களும் நானும் கல்யாணம் பண்ணிக்கலாமா, சித்ரா?"

கல்யாணம்... மீண்டும் ஓர் ஆணுடன் பேசிப் பழகி, சதா உடன் இருந்து, அவனுக்காகச் சமைத்து, உடுத்தி, சிரித்து, படுத்து, கொடுத்து, எடுத்து, கலந்து—நிறைவு காண முடியுமா?

தெரியவில்லை...

பயமாக இருந்தது... ஆனால் இதமாகவும் இருந்தது...

எது சரி, எது தவறு?

புரியவில்லை... சுத்தமாய்ப் புரியவில்லை...

அடுத்து வந்த இரண்டு நாட்கள் அலுவலகத்துக்கு லீவு போட்டுவிட்டு, யோசிக்க, யோசிக்க அவள் அதிகம் குழம்பிப் போனாள்.

மேடத்தைச் சந்தித்து அத்தனையும் கூறி, என்ன செய்வது என்று கேட்கலாமா?

அவர் என்ன புதுசாய்ச் சொல்லப் போகிறார்?

—நீ குழந்தை இல்லை... உனக்கு எது வேணும் வேணாம்னு நீதான் தீர்மானம் பண்ணணும். உன் மனசுக்குப் பிடிச்சிருந்தா தலை நிமிர்ந்து ஆமா, அப்படித்தான்னு ஒத்துக்க...''—என்று ஏற்கனவே கூறினவர் தானே?

மீண்டும் அதே தினுசில் பேசி என்னை மூளைச் சலவை செய்ய மாட்டார் என்பது என்ன நிச்சயம்...

மேடம் ஒரு விஷயத்தைத் தீவிரமாகப் பேசிவிட்டால் மனசுக்கு அதுதான் சரி என்று தோன்றிவிடும் என்பதால் இப்போதைக்கு அவரைச் சந்திக்கவும் வேண்டாம், அவரின் அறிவுரையும் வேண்டாம்.



அவர் சொன்னபடி வேண்டுமா வேண்டாமா என்று தீர்மானிப்பது என் கையில் தானே இருக்கிறது!

சரவணனிடம் "உங்கள் முடிவை ஏற்பதற்கில்லை; மன்னிக்க வேண்டும்—இது இந்த ஜன்மத்தில் நடக்கும் விஷயமாகத் தோன்றவில்லை. பெண் என்பவள் ஒருமுறை தான் மாறுவாள் என்று நமது பண்பாடு, கலாச்சாரம் சொல்கிறது. அதன்படி கோபிக்கு மாலையிட்டு அவரின் மனைவியாய் வாழ்ந்து விட்ட எனக்கு எல்லாமே முடிந்து விட்டது. ஆக இனிமேலாவது இந்த எண்ணத்தோடு என்னை அணுகாதீர்கள்—என்று திட்டவட்டமாய்க் கூறி விடலாமா?

பிறகு?

ஆயுசுக்கும், தனி ஆளாய், ஆயா இருக்கும்வரை அவள் சமைத்துப் போடுவதைச் சாப்பிட்டு, அலுவலகத்துக்குச் சென்று வந்து, உழைத்து, தனியாய்ப் படுத்து, வாழ்ந்து...எதிர் காலத்தைக் கற்பனை பண்ணிப் பார்த்த போது அடிவயிறு முடிச்சுப் போட்டுக் கொண்டது...

தலைவலி, காய்ச்சல் என்றாலும் தானே வைத்தியரிடம் சென்று, தன்னந்தனி ஆளாய் ஆஸ்பத்திரியில் படுத்து, பேச்சுத் துணைக்குக்கூட ஆள் இன்றிப் பரிதவித்து...

உடம்பு முடிகிறவரைக்கும் பரவாயில்லை, அப்புறம் தள்ளாமை வந்து விட்டால்?

பிரயத்தனப்பட்டுச் சிந்தித்தபோது முடிவேயில்லாத பாலைவனத்தில் தான் மட்டும் தனித்து நடப்பது திகிலூட்டியது; வெளிச்சமே தென்படாத நீ...ண்ட குகையில் ஒற்றையாய்ப் பயணிப்பது அச்சமூட்டியது...

இன்னும் நாற்பது ஐம்பது வருஷங்களைத் தனியாய் வாழ முடியுமா?

"நீங்களும் நானும் கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன சித்ரா?"

ஏன், தவறு என்ன?

'கோபி இப்போது இல்லை—இதுதான் நிஜம். முதல் மனைவியை இழந்தப்புறம் ஓர் ஆணால் இன்னொரு பெண்ணோட மனம் ஒப்பி வாழ முடியும்னா, முதல் குழந்தை மேல உள்ள அன்பு கொஞ்சமும் குறைஞ்சிடாம இரண்டாவதா ஒரு தாயால பெத்துக்க முடியும்னா, இது மட்டும் ஏன் சாத்தியம் இல்ல?' என்று அன்று துர்கா சொன்ன கருத்துக்கள் நினைவில் முட்டின...

முடியுமா?

சரிதானா?

எதுவும் தெளிவாகாது போக, 'இன்னும் இரண்டு நாட்களுக்கு இது பற்றி நினைப்பதில்லை' என்கிற வைராக்கியத்துடன் சித்ரா அலுவலகத்துக்கு வந்து வேலையில் கவனத்தைப் பதிக்க முயன்றாள்...

என்ன பிரயாசைப் பட்டும் முழுசாய் வேலையில் புத்தி பதியாததோடு, எதுவுமே நடக்காத மாதிரி அவ்வப் போது எதிர்ப்படும் சமயத்தில் சரவணன் 'ஹலோ' என்று கூறி, புன்னகைத்து நகர்வதும் தவிப்பை அதிகமாக்க, இப்படிப் பயந்து ஓடுவதில் ஆகப்போவது எதுவும் இல்லை, பேசித் தீர்த்துவிடலாம் என்கிற முடிவெடுத்தாள்.

"சுண்டல் சாப்பிடறீங்களா சித்ரா? இந்தப் பையன் கிட்ட பிரமாதமா இருக்கும்..."

இவள் பதிலுக்காகக் காத்திராமல் சரவணன் சுண்டல் விற்ற பையனை அழைத்து "வழக்கம்போல ரெண்டு இல்ல தம்பி நாலா கொடு" என்றதும், என்ன மனிதன் இவன் என்கிற திகைப்பு சித்ராவினுள் தலை தூக்கியது.



இவள் கேட்ட ஒற்றைக் கேள்வியினால் நான் அரண்டு போயிருப்பது புரியவில்லையா, அல்லது புரிந்தும் அலட்சியமாய் இருக்கிறானா?

என்ன பதில் சொல்வோம் என்று பரிதவிப்பதற்கு ஏதுவும் வகையில் நடந்து கொள்ளாமல், எந்தக் கலவரமும் இன்றி சுண்டல் வாங்கி எனக்குக் கொடுப்பதும், தானும் தின்னுவதும் இவனுக்கு எப்படிக் கை வருகிறது!

அவன் நீட்டிய சுண்டல் பொட்டலங்களைச் சித்ரா வாங்கிக் கொண்டாள்.

கோபிக்கு இந்த மாதிரி பீச்சில், மற்றும் சுகாதாரம் கம்மியாக உள்ள இடங்களில் எதுவும் வாங்கி உண்ணுவது பிடிக்காது...

"சாப்பிடுங்க...சுண்டல் பிடிக்காதா?"

"ம்?" சித்ரா பொட்டலங்களைப் பிரிக்காமல் "இதெல்லாம் கோபிக்குப் பிடிக்காது" என்றாள் சின்ன குரலில்...

"அவருக்குப் பிடிக்குமான்னு நா கேக்கலை சித்ரா, உங்களுக்குப் பிடிக்குமான்னுதான் கேட்டேன்..."

நமுட்டாகப் பேசுகிறானோ என்கிற கேள்வியுடன் சித்ரா நிமிர்ந்தாள். ம்ஹூம் இல்லை— அரைகுறை இருட்டில், கண்களும், முகமும் சிரிக்கிற மாதிரிதான் பட்டது.

நீங்கள் அன்று பேசியது குறித்து அவனாக ஏதாவது பேசுவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தவள், உதடுகளை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள்.

"அன்னிக்கு நீங்க கேட்ட கேள்விக்கு...நா...வந்து..."

"சொல்லுங்க..."

"அது சரிப்பட்டு வரும்னு எனக்குத் தோணலை..."

"எது?"

"க...கல்யாணம் பண்ணிக்கறது..."

"ஏன்?"

"......"

"சொல்லுங்க...ஏன் சரிப்பட்டு வராது...?"

அவனை நிமிர்ந்து பார்க்க விருப்பம் இன்றிச் சித்ரா தூரத்துக் கப்பல்களை வெறித்தாள்.

"சொல்லுங்க சித்ரா... என்னை உங்களுக்குப் பிடிக்கலையா?"

"சேச்சே...அப்படி ஒண்ணும் இல்ல..."

"அப்புறம்?"

சித்ரா விழிகளைத் திருப்பி அவனைப் பார்த்துப் பேசியபோது, குரல் செம்மி வெளிப்பட்டது.

"இப்படித் துருவித் துருவிக் கேட்டா எனக்குப் பதில் சொல்லத் தெரியாது சரவணன்."

"ஸாரி—தெரிஞ்சுக்கணும். ஒரு விஷயத்த வேணாம்னு ஒதுக்கறத்துக்கான காரணம் தெரியாம செய்யறது மனமுதிர்ச்சிக்கான அடையாளம் இல்ல...சொல்லுங்க...எதுவானாலும் ஏத்துக்க நா தயார்தான்..."

"எனக்கே புரியல? நா உங்கள நேசிக்கறேனா இல்லையான்றது புரியல?"

"அது இல்ல..."



"நீங்க என்னை விரும்பறீங்களா இல்லையான்றது புரியலையா?"

"......"

"அப்படின்னா, இதுதான் உண்மைக் காரணமா?"

"நீங்களா எதையாவது கற்பனை பண்ணிக்காதீங்க சரவணன், ப்ளீஸ்...நானே ரொம்ப குழம்பிப் போயிருக்கேன்...ஊர் உலகம் என்ன சொல்லும், ஏன், என்னைப் பெத்தவங்களே இந்தப் பேச்சால எப்படிப் பாதிக்கப்படுவாங்கன்றத நினைச்சா, வயித்துல வெட்டுக்கிளிங்க தாவறா மாதிரி இருக்கு..."

சரவணன் தலைமுடியைக் கோதிப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டான்.

"ஓ! இந்தக் காரணமும் இருக்கா? அடுத்தவங்க என்ன நினைப்பாங்கன்ற பயம் உங்க சந்தோஷத்தைவிடப் பெரிசா தோணுது அப்படித்தானே?"

"வந்து—அதுவும் முக்கியம்தானே? இந்தச் சமுதாயம் என்ன சொன்னாலும் எனக்குக் கவலை இல்லேனு ஒதுக்கிட முடியுமா?"

"ஒதுக்க வேண்டியத ஒதுக்கித்தான் ஆகணும்...வேற வழி இல்ல...இப்ப நீங்க பல விஷயங்கள்ல சமுதாயத்த எதிர்த்துக்கிட்டுக் காரியங்கள செய்யலியா?"

"அ...அது...கோபிக்கு இப்படி இருந்தாத்தான் பிடிக்கும்...ஒருதரம் இல்ல, பல சமயங்கள்ல தன் கருத்த ஆணித்தரமா வெளிப்படுத்தி இருக்கார் அந்தத் தைரியத்துலதான்..."

சரவணன் சிரித்தான்.

"ஸோ, மறுமணம் செஞ்சுக்கலாம்ன்ற கருத்த கோபி தெரிவிச்சிருந்தா இப்படி யோசிக்க மாட்டீங்களா? உங்

களுக்கு இது தேவையா வேணாமான்னு தீர்மானிக்க முடி யாம இதை ஆதரிச்சு கோபி எதுவும் பேசிடலையேன்னு தடுக்கம் கட்டிப் போடுதா?''

குற்றம் காட்டுதலோ, ஏளனமோ கலக்காத குரலில்—உண்மையைத்—தொட்டுக் காட்டுகிறேன்— அவ்வளவு தான்— என்கிற தொனியில் மட்டுமே அவன் பேசுவதைப் புரிந்துகொள்ள முடிய, சித்ரா மௌனித்தாள்.

சரவணன் எழுந்து நின்றான். உடையில் ஒட்டியிருந்த தூசுகளைத் தட்டிவிட்டான்...

''போலாமா?... இன்னிக்கு டி.வி.ல நல்ல நிகழ்ச்சி ஒண்ணு இருக்கு... இப்பக் கிளம்பினாதான் உங்கள இறக்கி விட்டுட்டு போய்ப் பார்க்க நேரம் சரியா இருக்கும்...''

சித்ராவை வீட்டு வாசலில் இறக்கின நிமிஷத்தில் ''தயவு பண்ணி எதை நினைச்சும் அனாவசியமா குழம்பா தீங்க சித்ரா—யோசிச்சு ஒரு முடிவுக்கு வாங்க... ஒரு மாசம் போதுமா? அதுவரைக்கும், திரும்ப நானா இந்தப் பேச்ச எடுக்க மாட்டேன்... ஓகே?... குட்நைட்...'' என்று கூறிச் சென்ற தொனியில், அடுத்து வந்த நாட்களில் ஒரு தரம்கூட, 'என்ன முடிவு செய்திருக்கிறீர்கள்?' என்று கேட்கவில்லைதான்.

அதற்காக தீர்மானம் செய்யும் வரை விலகி நின் றானா என்றால், அதுவும் இல்லை...

அந்த வாரத்தில் டி ஸ்ரீனிவாசன் மாண்டலின் கச்சே ரிக்கும், லலித்கலா அகாடமியில் நடந்த ஓவியக் கண் காட்சிக்கும் அவளை அழைத்துப் போய் வந்தான். இரண்டு முறைகள் வெளியே சாப்பிடக் கூட்டிச் சென் றான்... ஊரில் இருந்த நாட்களில் முடிந்த போதெல்லாம் ஏழு மணிக்கு அவள் வீட்டுக்குள் வண்டியைக் கொணர்ந்து நிறுத்தி ஹாரனை ஒலித்து வெளியே எட்டிப் பார்த்த



வளிடம் 'வாங்க—பீச் வரைக்கும் போய் விறுவிறுனு நடந்திட்டு வரலாம்' என்று அழைத்தான்.

ஒரு மாச காலம் கான்டுலத்துக்குள் இவர்கள் இப்படி ஒன்றாக அடிக்கடி வெளியே போவதும் பழகுவதும் மற்றவர்களை உறுத்தத் தொடங்கியதில், மாடி வீட்டு ஜானகியம்மாவில் ஆரம்பித்து அலுவலக நண்பர்கள் வரை கசமுசா என்று முணுமுணுக்க முற்பட்டுவிட்ட தைப் புரிந்துகொள்ள முடிய, அன்று சரவணன் ''அமெரிக்கன் சென்டர்ல சார்லி சாப்ளின் படம் காட்ட றாங்க போலாமா?'' என்றபோது சித்ரா மறுத்தாள்.

''ஏன் வேணாம்?''

''வேணாம்னா, விட்டுடுங்க சரவணன்...''

''அதெப்படி காரணம் தெரியாம விட்டுட முடியும்?'' சித்ரா அலுப்புடன் 'ப்ச்' என்றாள்.

'கோபி என்ன எதற்குமே வற்புறுத்த மாட்டார்... நீங்க...''

அவளை முடிக்கவிடாமல் சரவணன் சின்ன சிரிப் புடன் குறுக்கிட்டான்.

''நா கோபி இல்ல சித்ரா... சரவணன் அத மறந்திட றீங்களே! சொல்லுங்க, ஏன் வர மறுக்கறீங்க?''

விடாக்கண்டனாக அவன் அப்படியே மறுபடியும் வினவ, சித்ரா விரல் நகங்களை ஆராய்ந்தாள்... தயக்கத் துடன் பேசினாள்.

''எல்லாரும் ஒரு தினுசா பார்க்கற மாதிரி தோணுது... அதான்...''

சரவணன் தலையைப் பின்னுக்குத் தள்ளிச் சிரித் தான்...

''இதானா நா என்னவோ ஏதோனு நினைச்சேட்

டேன், உங்களையாவது ஒரு மாதிரி பாக்கறதோட நிறுத்திட்டாங்க... ஆனா, என்கிட்டே கேக்கவே கேட்டுட்டாங்களே, அதுக்கு என்ன சொல்றீங்க?''

சித்ரா திடுக்கிட்டாள்.

''கேட்டாங்களா? யாரு? என்னனு?''

''ரகுநந்தன் போன வாரம் என்கிட்ட வந்து 'சொல்றேன்னு தப்பா எடுக்காதீங்க... உங்க நண்பன்ற அக்கறைல பேசறேன்... தனியா இருக்கற பெண்ணோட பலவீனத்த ஆதாயமாக்கிக்கிட்டு நீங்க பழகறீங்களும், நண்பனுக்கே துரோகம் செய்யறீங்களும் பின்னால மத்தவங்க பேசறத கேக்கக் கஷ்டமாயிருக்கு... அதான் எச்சரிக்கை செய்ய வந்தேன்'னு சொன்னாரே...''

சித்ரா கூசினாள்.

''நீ... நீங்க என்ன சொன்னீங்க?''

''தாங்க்ஸ் ரகுநந்தன்— எந்தத் தப்பும் பண்றதா நாங்க ரெண்டு பேரும் நினைக்கல—அதனால நீங்க அனாவசியமா வருத்தப்படாதீங்கனு சொல்லி அனுப்பினேன்... இப்ப அந்தக் கதையெல்லாம் எதுக்கு?...கிளம்புங்க... சார்லி சாப்ளின் படத்தைப் பார்த்துட்டு வரலாம்—''

அந்த 'கிளம்புங்க'ளுல மீற முடியாமல் புறப்பட்ட போது எது குறித்தும் குழம்பி, படபடக்காமல் தன் மனசுக்குச் சரி என்று தோன்றுவதை, உறுதியாகச் செயலில் காட்டும் அவனது தெளிவு தனக்கு ஏன் எப்போதும் இருப்பதில்லை என்கிற நியாயமான ஏக்கம் சித்ராவின் மனதை பூராவும் வியாபித்தது நிஜம்தான்...

# 27

இன்னிக்குத் தேதி என்ன தெரியுமா, சித்ரா?

தெரியாமல் என்ன! பதினொன்று... போன மாசம் இதே நாளில்தானே 'ஒரு மாசம் அவகாசம் எடுத்துக்கிட்டு யோசனை செஞ்சு ஒரு முடிவுக்கு வாங்க, அதுவரைக்கும் நா இது சம்பந்தமா எதும் பேசமாட்டேன்' என்று அவன் சொன்னது நடந்தது.

காலையில் சுமார் பதினோரு மணி அளவில் இவள் முன் வந்து நின்று, 'சாயங்காலம் என்கிட்ட சொல்லாம வீட்டுக்குக் கிளம்பிடாதீங்க... நாழியானாலும் தயவு பண்ணிக் காத்திருங்க...நாம சேர்ந்தே போகலாம்' என்று கூறியதுமே, அவன் முந்தின மாசம் பேசின பேச்சை மீண்டும் தொடப் போகிறான் என்பதை உள்ளுணர்வு முணுமுணுக்க, அதற்கப்புறம் சித்ராவால் கவனத்தை எதிலும் பதிக்க இயலாமல்தான் போயிற்று...

ஆறு மணி வரையில் ஒவ்வொரு நிமிஷமாகப் பிரித்து, படிக்க முடியாமல் நொடிக் கொண்டிருந்தவள், சரவணன் வந்து 'போலாமா?' என்று கேட்டதும் எழுந்து உடன் சென்றாள்.

ட்ரைவின் ரெஸ்ட்ராண்டில் வண்டியை மரத்தடியில் நிறுத்தி, ஹாரனை ஒலித்து, சிப்பந்தி வந்ததும், உணவு வகைகளை சித்ராவைக் கேட்காமலேயே ஆர்டர் கொடுத்த பிறகு, இவளை நோக்கி லேசாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டான்.

''ஸோ?''

சித்ரா சின்னதாகச் சிரித்துப் பதில் கூறாமல் சமாளிக்க முயன்றாள்.

''சொல்லுங்க...''

''என்ன சொல்லணும்...''

''உங்க பதிலைதான்...''

புரியாத நிலையில் புருவங்களை 'என்ன சொல்கிறீர்கள்?' என்கிற பாவனையுடன் உயர்த்த, சரவணன் 'இன்னிக்குத் தேதி என்ன தெரியுமா, சித்ரா?' என்றான் நிதானமாய்...

அந்தக் கேள்வி காதில் விழாத நிலையில் சற்றுத் தொலைவில் சறுக்குமரம், ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளை வெறித்தாள். பின் இனியும் சும்மா இருப்பது சரியல்ல என்கிற ஞானோதயம் தோன்ற விழிகளைத் திருப்பி சரவணனை ஏறிட்டாள்.

''என்னால எந்த முடிவுக்கும் வர முடியல... இன்னும் கொஞ்சம் அவகாசம் எடுத்துக்கக் கூடாதா?''

''சம்மதம்னோ, வேண்டாம்னோ, சொல்ல முப்பத்தஞ்சு நாளுக்கு மேல அவகாசம் தேவைப்படுதா சித்ரா.''

''சில பேருக்கு சீக்கிரமா ஒரு முடிவுக்கு வர்றது சாத்தியமாகலாம்... எனக்கு அப்படி இல்ல... கோபி என்னை மணக்க விரும்பினப்ப கூட, நா இரண்டு மாசத்துக்கும் மேலேயே குழம்பிட்டுதான் சரினு சொன்னேன்...அவர் புரிஞ்சிக்கிட்ட மாதிரி நீங்களும் என் நிலைமை உணர்ந்து இன்னொரு மாசம் காத்திருக்கக் கூடாதா சரவணன்?''

''கோபி ஒரு காரியத்தைச் செஞ்சார்ங்கறத்துக்காக நானும் அப்படியே செய்ய முடியுமா சித்ரா? அது இருக்கட்டும், ஏன் உங்களால ஒரு முடிவுக்கு வர முடியல? அதையாவது விளக்கமா சொல்லுங்க...''

சர்வர் உணவுப் பொருட்களைத் தட்டுகளில் கொணர்ந்து வைக்க, சரவணன் ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினான்.



''நாம ரெண்டு பேரும் சம வயசுக்காரங்க, அத நீங்க யோசிச்சுப் பார்த்தீங்களா சரவணன்?''

''இருந்தா என்ன?''

''மண வாழ்க்கையில ஈடுபடப்போறவங்களுக்கு வயசுப் பொருத்தம் வேணாமா?''

''வயசுப் பொருத்தம்னு நீங்க எதைச் சொல்றீங்க சித்ரா? உங்களுக்கும் கோபிக்கும் பத்து வயசு வித்தியாசம் இருந்தது. நீங்க சந்தோஷமா இல்லியா? எங்க சித்தப்பா நாப்பது வயசுல பெண்ணை கட்டிக்கிட்டார்... இப்ப அவங்க அருமையா தாம்பத்தியம் நடத்திட்டுதான் இருக்காங்க—அம்ருதா ப்ரீதம் தெரியுமா? ஞானபீட பரிசு வாங்கின பெண் எழுத்தாளர்—அவர் தன்னைவிட ஒன்பது வயது சின்னவரான அம்ரோஸ்கூட இருபத்தஞ்சு வருஷமா அற்புதமான வாழ்க்கை வாழ்ந்திட்டு வராங்க...ஆக, பொருத்தம் மனசுல இருக்கா, இல்ல வயசுலியா...யோசிங்க சித்ரா—வேணாம்னு சொல்லணும்னா சரியான காரணத்தை குறிப்பிடணும், அத விட்டுட்டு...''

சித்ரா கையிலிருந்த பதார்த்தத்தைச் சாப்பிடப் பிடிக்காமல் தட்டைத் தள்ளினாள்.

''எனக்கு ரொம்பப் பயமா இருக்கு சரவணன்...''

''பயமா? நா உங்களுக்குக் கடைசிவரை நல்ல புருஷனா இருப்பேனா, மாட்டேனா—னு?''

''ச்சே'' என்கிற மறுப்போடு, கண்கள் கலங்க வேகமாய் நிமிர்ந்து அவனைப் பார்த்தபோது 'என்ன இந்த மாதிரி கேவலமாய்க் கேள்வி கேட்கிறீர்கள்'' என்று அந்தப் பார்வை கேட்டது.

''அப்புறம்?''

''மத்தவங்கள நினைச்சா, அவங்க வம்புப் பேச்சை நினைச்சா, கலக்கமா இருக்கு...''

"கொஞ்சநாள் ஒண்ணு ரெண்டுபேர் பேசுவாங்க தான்—ஆனா, நாம நல்ல கணவன், மனைவியா வாழ்ந்து காட்டத் துவங்கிட்டா, மெது மெதுவா அந்தப் பேச்சு குறைஞ்சி மறைஞ்சிடும். அதுக்குப் பயந்துகிட்டு 'கல்யாணம் வேணாம்'னு சொல்றது கோழைத்தனம் இல்லியா?"

"ஆனாலும்..."

"வேண்டாத தயக்கத்தை தூக்கி எறிங்க சித்ரா—புத்தர் பத்தி ஒரு கதை சொல்லுவாங்களே, தெரியும் இல்லே? ஒரு நாள் ஒருவன் கண்டபடி ஏசினப்புறமும் புத்தர் சிரிச்சுகிட்டே இருக்கறதைப் பார்த்து இன்னொருவன் 'உங்களுக்குக் கோபம் வரலியா? அவன் திட்டினதுல வருத்தம் இல்லியா?'னு கேட்டப்போ புத்தர் சொன்னாராம்: 'ஒரு பொருளை நீங்க எனக்குத் தந்து நா வாங்கிட்டாதானே என்னுது. இல்லைன்னா அது உங்களுதுதானே? அந்த திட்டுகளை நா வாங்கிக்கலே இல்லியே—அப்புறம் எப்படி என்னை காயப்படுத்த முடியும்?'னு—இந்த மாதிரி தெளிஞ்சிட்டா, நமக்கும் எந்தப் பிரச்சனையும் இருக்காது..."

சித்ரா தண்ணீர் டம்ளரை எடுத்து ஜன்னலுக்கு வெளியே கையை நீட்டிக் கழுவிக் கொண்டாள். இவள் தின்னாமல் வைத்திருந்த தோசையைக் காகம் ஒன்று பறந்து வந்து கொத்தி எடுத்துச்சென்று, மரக்கிளையில் உட்கார்ந்தது.

"ஆயுசுக்கும் கோபி துணையா இருப்பார்னு நம்பினேன்...சொல்லாம கொள்ளாம தவிக்க விட்டுட்டு போனப்போ எப்படிடா கரை ஏறுவோம்னு ரொம்ப திக்குமுக்காடிதான் போனேன்... அழுது புலம்பி, நிக்க தரை கூட இல்லேனு பரிதவிச்சப்புறம், மெள்ள யதார்த்தத்தை ஏத்துக்கறதைத் தவிர வேறு வழியே இல்லேனு புரிய ஆரம்பிச்சுது...சரி, இனிமே யார் மேலே-



யும் சாய மாட்டேன்—அது கடவுளானாலும் சரி, என்னைப் பெத்தவங்களானாலும் சரி, என் சுமையை அடுத்தவங்க மேல சாய்ச்சு, நாளடைவில் யாருக்கும் பாரமாக மாட்டேன்றதோட, இனி, யார்கிட்டயும் அளவு கடந்த அன்பு வச்சு, காயப்பட மாட்டேன்—னும் வைராக்கியமா இருக்க ஆரம்பிச்சேன்...கடைப்பிடிக்க முடியாதபடி இப்ப நீங்க..."

உணர்ச்சி வசப்பட்டுவிட்டவளின் கையைச் சரவணன் எட்டி அழுந்தப் பற்றினான்.

"உங்களுக்கு அந்தப் பயமே வேணாம். நாம கல்யாணம் பண்ணிக்கறதால உங்க தனித்தன்மையை நீங்க இழக்க வேண்டியதில்லை சித்ரா. என்மேல சாயாம, தன்னம்பிக்கை நிறைஞ்ச பொண்ணா நீங்க என்னிக்கும் இருக்கணும்: நாம ஒருத்தர்க்கொருத்தர் நல்ல துணையா, தோழமை தந்துகிட்டு, ஒருத்தர் கையை இன்னொருத்தர் பிடிச்சிகிட்டு, யாருக்கும் சுமை ஆகாம, வாழ்நாள்பூரா சேர்ந்து நடக்கணும்ங்கறதுதான் என் ஆசை...ப்ளீஸ் புரிஞ்சுக்குங்க..."

சித்ரா கண்களை மூடிக்கொண்டாள். சரவணனின் தெளிவான பேச்சு, எதிர்காலத்தைப் பற்றின எண்ணம், தாம்பத்யம் வெற்றி பெற, நல்ல நண்பராக விளங்க வேண்டிய அவசியம் பற்றின் கருத்துக்களோடு, ஒரு அப்பட்டமான ஆணாகத் தன்னை உணர்த்திக்கொள்ளும் அர்த்தத்தில் இறுகக் கையைப் பிடித்திருந்த பிடியும் அவளுள் ஏகத்துக்கு பரவசத்தை உண்டாக்கின. உள்ளங்காலில் தொடங்கி வளையமாய் சந்தோஷ அலைகள் உடல் முழுவதும் தழுவிக்கொண்டதில், மனசு சிலிர்த்தது. வானவில் ஜொலித்தது.

ஆனாலும், நெஞ்சோரத்தில் குட்டியாய் ஏதோ தயக்கம் கலக்கம்...

சித்ரா அவன் பிடியிலிருந்து கையை மெள்ள விடுவித்துக்கொண்டாள். பரிதாபமாய் அவனை ஏறிட்டாள்.

''என்னால எந்த முடிவுக்கும் வர முடியல சரவணன், இதுதான் நிஜம்...''

சரவணன் நெற்றியில் கோடு விழ, கண்களை இடுக்கிக்கொண்டான்.

''அப்ப சரி, உங்களுக்கும் சேர்த்து நா முடிவு எடுத்திடவா?''

''.........''

''கல்யாணத்தை எப்ப வச்சிக்கலாம்?...''

குறும்பு கண்களில் வெளிச்சம் போட, அவளை உற்சாகப்படுத்தும் நோக்கத்தோடு சரவணன் பேசியதைக் கவனிக்காமல் சித்ரா நீளமாய் பெருமூச்சை வெளியிட்டாள். ஒருவித ஆயாசத்துடன் தலையைக் கையில் தாங்கியபடி பேசினாள்.

''இன்னும் ஒரு மாசம் அவகாசம் எடுத்துகிட்டு, நிதானமா ஒரு முடிவுக்கு வர, சம்மதிக்க மாட்டீங்களா? ப்ளீஸ்...கோபி எதுக்கும் இப்படி வற்புறுத்தினது இல்ல, எனக்காக முடிவு எடுத்ததும் இல்ல...'உன் சம்பந்தப்பட்ட விஷயங்கள் நீதான் முடிவு எடுக்கணும்'னு எப்பவும் பெருந்தன்மையோட சொல்லுவார்...'

அவள் பேசிக்கொண்டிருக்கையிலேயே சிப்பந்திக்குப் பணம் கொடுத்துவிட்ட சரவணன் வண்டியைக் கிளப்பினான். எதுவும் பதில் கூறாமல் மெதுவாக ஓட்டினவன், நுழைவாசல் அருகில் ஒரு பெண்மணி மல்லிகைப் பூ விற்பதைப் பார்த்து வண்டியை நிறுத்தினான். ஐந்து ரூபாய்த் தாளை எடுத்து நீட்டி, அவள் தந்த பூவை வாங்கி சித்ராவிடம் கொடுத்தான்.



''திருமணத்துக்கு முன்னாலயே கிட்டத்தட்ட ஆறுமாசம் பழகியிருந்தாலும், இந்த மாதிரி பூ மற்ற பரிசுகள் கோபி எனக்கு வாங்கித் தந்தது இல்லை...இதெல்லாம் சின்ன விஷயங்களா இருக்கலாம்; ஆனாலும் எனக்கு அதிசயமாத்தான். அவருகிட்டமா உரிமை எடுத்துக்க வச்சி பேரு சொல்லுவார்..'

மௌனம் மாற்றின சரவணன் சரக்கென்று திரும்பி அவளைப் பார்த்தான்.

''எந்த உரிமையும் எடுத்துக்கற உத்தேசத்தோட நா இத வாங்கித் தரல...பார்த்ததும் உங்களுக்கு வாங்கித் தரணும்னு தோணிச்சு...ஒரு நண்பனா இத செய்யக்கூடாதா? ம்?'' பேசினவன் சற்று தயங்கிவிட்டு மீண்டும் தொடர்ந்தான். ''நான் கோபி இல்ல...இத நீங்க அடிக்கடி மறந்திடறீங்க... என்னோட குணங்களோட பார்த்தாதான் என்னைச் சரியா உங்களால புரிஞ்சிக்க முடியும்...''

அந்தக் குரலில் லேசாக வருத்தம் இழையோடுவதைப் புரிந்துகொள்ள முடிய சித்ரா 'ஸாரி' என்று முனகினாள்.

சில நிமிஷங்களுக்கு மௌனமாகப் பயணித்து, தனக்குத் தானே ஏதோ தீவிரமாய் யோசனை செய்தவள் ''இப்படிச் செய்தா என்ன சரவணன்'' என்றாள் திடீரென்று.

''எப்படி?''

''அப்பா, அம்மா, மேடம் எல்லாரும் என்ன சொல்லுவாங்களோன்ற பயம்தான் ஒரு முடிவுக்கு வர முடியாம ஏகமா புரட்டி எடுக்குது...அதனால அவங்ககிட்ட நீங்க மட்டும் போய் இத பத்திப் பேசினா என்ன?''

''நா மட்டுமா? என்னன்னு?''

''சித்ராவ நா மணக்க விரும்பறேன்னு சொல்றது...''

"நீ விரும்பறது இருக்கட்டும், சித்ரா என்ன சொல்றா'னு அவங்க திருப்பிக் கேட்டா?"

"அவளுக்கும் சம்மதம்தான்னு சொல்லுங்க..."

"இது ஏன் அவளே வந்து சொல்லலேன்னு எதிர்கேள்வி கேட்டாங்கன்னா?"

சித்ரா லேசான எரிச்சலுடன் 'ப்ச்' என்றாள்.

"இது என்ன விதண்டாவாதம் சரவணன்—இஷ்டமில்லேன்னா நேரடியா சொல்லிடுங்களேன்..."

"சொல்லத்தான் போறேன்—கண்டிப்பா உங்க முடியால எதுக்க நா தயார் இல்ல. ஏன்னா, உங்க வீட்டுக்காரங்க கிட்ட நீங்க பேசறதுதான் முறை, மரியாதை, உங்களைத் தனியா விடாம நானும் கூடவந்து, நீங்க பேசின பிறகு என் பங்குக்கு எடுத்துச் சொன்னா அது நியாயம்..."

சித்ரா உதட்டைப் பிதுக்கி இல்லை என்று அவன் கூற்றை மறுத்தாள்.

"இது வெறும் சாக்குதான் எனக்குப் படுது சரவணன்...அனாவசியமாகக் காயப்பட நீங்க விரும்பல... அதானே உண்மை? ஒத்துக்கங்க...அதவிட்டுட்டு நியாயம், தர்மம்னு எதுக்காக வேண்டாத பேச்சு? எங்க வீட்டுல இந்தப் பேச்சைக் கேட்டதுமே தாண்டிக் குதிச்சு, அசிங்கமா கத்துவாங்கன்னு உங்களுக்குத் தெரியும்... அதை நீங்க அனுபவிக்க விரும்பல...பரவாயில்ல...நா புரிஞ்சிக்கறேன்...ஆனா, இந்த சந்தர்ப்பத்துல கோபியா இருந்தா இப்படி ஒதுங்கி நிக்க மாட்டார்னு நினைக்கறதை என்னால தவிர்க்க முடியல...எங்க திருமணத்திற்குச் சம்மதம் வாங்க அவரே முதல்ல வரேன்னுதான் சொன்னார். ஆனா, மேடம்தான் 'நா இருக்கறப்போ நீ ஏன் போகணும்'னு தடுத்திட்டாங்க... அவர் மாதிரியே



நீங்களும் தைரியமா, தன்னம்பிக்கையோட என்னைப் பெத்தவங்கள சந்திச்சு 'உங்களுக்கு நா மருமகனாக மட்டுமில்ல பெறாத பிள்ளையாகவும் இருக்க விரும்பறேன்'னு சொன்னீங்கன்னா..."

அவள் முடிக்கும் முன் இடக்கையை முன்னால் நீட்டி சரவணன் அவளை 'ப்ளீஸ்' என்று தடுத்தான்.

"ஏற்கனவே நிறைய தரம் சொல்லிட்டேன்—இப்ப மறுபடியும் சொல்றேன். நா கோபி இல்ல...கோபி மாதிரி என்னால நடந்துக்க முடியாது...இத நீங்க புரிஞ்சிக்காத வரையில் உங்க முடிவு, கணிப்பு, எதுவுமே நியாயமானதா இருக்காது. நா உங்க வீட்டுக்கு வர மறுத்தது தன்னம்பிக்கை, தைரியம் இல்லாம இல்ல...நீங்க விவரத்த எடுத்துச் சொல்றது உங்களுக்கு மதிப்பைத் தரும்ங்கற எண்ணத்துலதான்...அடிப்படை உண்மைகளை ஒத்துக்க மனசில்லைன்னா, மேல மேல பேசறதுல அர்த்தமே இல்ல சித்ரா..."

முதல் முறையாக சரவணன் கோபமும், வருத்தமும் கலந்து படபடப்பாகப் பேச, சித்ரா அடிபட்டுப் போனாள்.

இது என்ன—நான் எதார்த்தமாக ஒன்றைச் சொல்ல வந்தால் அதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் கோபியைக் குறிப்பிட்டுச் சொன்னதை மட்டும் எடுத்துக் கொண்டு 'நான் கோபி இல்லை புரிந்துகொள்' அனாவசியமாய் வருத்தப்படுகிறானே?

கண்கள் கலங்கி, நீர் கன்னத்தில் கோடு போட, சித்ரா விசும்பலாய்ப் பேசினாள்:

"எந்த அடிப்படை உண்மைய நா புரிஞ்சிக்கல சரவணன்? நா கல்யாணமானவ, கணவனை இழந்தவ, ஏக்கப்பட்ட வலியோட வாழறவ—ங்கற அடிப்படை

விஷயங்களை மறந்திட்டு நீங்க பேசறதுன்னா, சரி, இனிமே இந்தப் பேச்சே வேணாம்...''

[illegible] வேதனை என்கிற ரீதியில் வார்த்தைகளை அள்ளி வீசியவளைச் சரவணன் ஒரு தரம் அழுத்தமாக ஏறிட்டான். எதுவும் பதில் கூறாமல் கவனத்தைச் சாலையில் பதித்து வண்டியைச் செலுத்தி அவள் வீட்டு முன் நிறுத்தினவன் சித்ரா இறங்கும் முன் மட்டும் ''ஒரு நிமிஷம்'' என்றான்.

நிமிர்ந்து, அவள் கண்களைப் பார்த்து, வார்த்தைகளைச் சிரத்தையுடன் கோர்த்தெடுத்துப் பேசினான்.

''நீங்க சொல்றது சரிதான்—நடக்க முடியாத சமாசாரத்தைப் பத்தி வீணா பேசி, நேரத்தை கழிக்கறது தேவையில்லைதான்... உங்களை எனக்குப் பிடிச்சிருந்தது—உங்க புத்திசாலித்தனம், குழந்தைத்தனம், அழகு எல்லாம் என்னைக் கவர்ந்ததால கல்யாணம் பண்ணிக்கிட்டு, உங்கத் தனிமைய விரட்டி அழகான எதிர்காலத்த கொடுக்கணும்'னு நா ஆசைப்பட்டேன்—ஆசைப்பட்டா மட்டும் ஆச்சா? அது நடைமுறைக்கு ஒத்து வருமா? வராதானு பாக்க வேணாமா? அதுவும் உங்க இழப்ப ஒரு சால்வத கோட்டைக்கு அது தர சுயபச்சாதாப இருட்டுலேந்து மீண்டு வர நீங்க தயாரா இல்லாதப்போ, நான் எத்தனை முயற்சி பண்ணாலும் பலன் இல்ல...சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க சித்ரா—சுய நலம், சுய பரிதாபம் உங்ககிட்ட தேவைக்கு மேல அதிகமாகவே இருக்கு... இது நாளடைவில உங்களை எதுக்கும் லாயக்கில்லாம செல்லரிக்க வச்சிடும்...ஞாபகம் இருக்கட்டும்...நா வரேன்...இனியொரு தரம் இந்தப் பேச்ச பேச நா விரும்பல...'நாம கல்யாணம் பண்ணிக்கலாமா'னு கேட்டத நா மறந்திட்டேன், நீங்களும் மறந்திடுங்க...முடிஞ்சா நண்பர்களா இருக்கலாம்



—இல்லாட்டி, ஆபீஸ்ல சந்திக்கறதகூடத் தவிர்த்து விடலாம்...''

கட்டுக்கடங்காமல் வார்த்தை வார்த்தையாய்ச் சொல்லவேண்டியதைக் கூறிவிட்டு அவன் புறப்பட்டுப் போக, கேட்டது எதையும் நம்ப முடியாமல் சித்ரா மரத்துப் போனாள்.

இப்போது நான் என்ன சொல்லிவிட்டேன் என்று எல்லாவற்றையும் மறந்து விடலாம்—நான் மறந்து விட்டேன்' என்று அடிக்குரலில் பேசிவிட்டுப் போகிறான்?

திருமணம் என்பது விளையாடும் சமாசாரமா? அது மறுமணம் என்று வருகையில், நாலையும் யோசிக்கத் தானே வேண்டும்?

சுயபச்சாதாபக் கூண்டிலிருந்து நீ வெளிப்பட்டால் ஒழிய உனக்கு விமோசனம் இல்லை என்று கூறினானே—

அந்த அளவுக்கா இழப்பு என்னைச் செயலிழக்கச் செய்ய அனுமதித்திருக்கிறேன்!

நான் கோபி இல்லை—சரவணன்—இதை மறந்து விடாதே என்றால் என்ன அர்த்தம்?

கோபி மாதிரி சரவணன் இருக்க வேண்டும் என்று நான் விரும்புவதில் தவறு என்ன?

கோபி எத்தனை அற்புதமான மனிதர்! அவரை மாதிரி ஒருத்தர் இருக்கக் கொடுத்து வைக்க வேண்டாமா அதை ஒத்துக் கொள்ளாமல் 'நான் கோபி இல்லை' என்று பிடிவாதம் பிடிப்பது எதற்காக?

பழகின நாளாய் அலாதி மனமுதிர்ச்சியுடன் பேசி, நடந்து கொள்ளும் சரவணன், சற்று முன் பேசின வார்த்தைகள் அவன் குணத்திலிருந்து முரண்பட்டு தோன்ற சித்ரா ரொம்ப நேரத்துக்கு, மனசுக்குள் புலம்பித் தீர்த்தாள். குழம்பினாள்.

அந்தக் குழப்பம் நீங்காமலேயே ஆங்கிலச் செய்தி டிவியில் ஆரம்பிக்கவும் வேண்டா வெறுப்பாகச் சாப்பிட உட்கார வந்த நிமிஷத்தில் வாசல் மணி அழைத்தது.

சரவணன் தான்—ஏதோ வேகத்தில் பேசிவிட்டேன்—'ஸாரி' என்று சொல்ல வந்திருக்கிறான்.

சிரிப்பு உதடுகளை ஆக்ரமிக்க எழுந்து ஓடிக் கதவைத் திறந்தவள், கலைந்து போய் நின்றிருந்த துர்காவைக் கண்டு அதிர்ந்தாள்.

''என்ன மேடம்—இ... இந்த நேரத்துல?''

துர்கா எட்டி அவள் கைகளைப் பற்றிக் கொண்டார்.

''சரவணன் விபத்துக்குள்ளாகி, ரொம்ப மோ... மோசமான நிலைல இருக்கான் சித்ரா...போன் வந்தது... எ...எதுவுமே சொல்ல முடியாதுனு டாக்டர்கள் சொல்லிட்டாங்களாம்மா...'' என்றார் கிசுகிசுப்பாய்...

## 28

ஸ்தம்பித்தல்—இதற்கு அர்த்தம் புரிந்து சித்ரா இரண்டாவது முறையாக ஸ்தம்பித்தாள்



கோபி போய்விட்ட செய்தி வந்தபோது முதல் தரம் இது இரண்டாவது...

இருதயத்துடிப்பு நின்று.. ரத்த நாளங்கள் சில்லிட்டு, மனசு வெறுமையாகி, மூச்சுவிடுவது தடைப்பட்டு, கண்களில் பூச்சி பறந்து, காதுகள் கேட்க மறந்து, புத்தி செயலிழந்து, அண்ட சராசரத்தில் சலனம் நின்று, சர்வமும் ஸ்தம்பித்து...ஸ்தம்பித்து... ஸ்தம்பித்து...

கடவுளே!

அரை நிமிஷத்தில் சுயநினைவு ஆக்ரமிக்க, சித்ரா வாய்விட்டு அலறினாள்.

''இல்லே... நா நம்பமாட்டேன்... நீங்க விளையாடறீங்க, அப்படித்தானே? பொய் சொல்றீங்க... அதானே?... சொல்லுங்க... சும்மா சொன்னேன்'னு சொல்லுங்க...''

அந்த வார்த்தைகள்... அதே பதில் இல்லாக் கேள்விகள்...

கிட்டத்தட்ட ஒரு வருஷம் முன்னால் நம்ப முடியாமல் ஆத்திரத்தோடு வெளிப்பட்ட வினாக்கள்...

நினைவுகள் கன்னாபின்னா என்று அலைந்து எதை எதையோ ஞாபகப்படுத்தினதில் சித்ரா பரிதவித்தாள்.

கோபி மாதிரியே சரவணனும் விபத்துக்குள்ளாகியிருக்கிறான். அவர் மாதிரியே இவனும் பஸ் சக்கரத்தில் சிக்கி, கூழாகி'ச் சிதைந்து...

நோ...

அப்படி இருக்காது...இருக்கக்கூடாது...

கோபி மாதிரி சரவணன் இருப்பதில் என்ன தவறு?—

என்று கொஞ்ச நேரத்துக்கு முன் தனக்குத்தானே கேட்டுக் கொண்டது நினைவில் இடிக்க, சித்ரா அதிர்ந்தாள்.

இல்லை—கோபி வேறு; சரவணன் வேறு... அவர் மாதிரி இவன் இல்லை... இருக்கக் கூடாது...

சித்ரா வெறியுடன் துர்காவின் தோளைப் பற்றி உலுக்கினாள்.

"எதுவுமே சொல்ல முடியாதுனு டாக்டர் சொல்லி சொல்லி விட்டாரின்னா என்ன அர்த்தம் மேடம்? என் சரவணன் பிழைப்பாரா, மாட்டாரா? அவருக்கு என்ன ஆச்சு? ஐயோ—என்ன ஆச்சு? சொல்லுங்க... ப்ளீஸ்... ப்ளீஸ்..."

எதற்குமே ஒரு வார்த்தை கூடப் பதில் கூறாமல் துர்கா நிற்க சித்ரா மண்டியிட்டு, அவர் இடுப்பை அணைத்தபடி சின்னக் குழந்தையாய்க் கதறினாள்.

"ஏன் இப்படி எதுவும் பேசாம நிக்கறீங்க மேடம்? தயவு பண்ணிச் சொல்லுங்க...ப்ளீஸ்... ப்ளீஸ்... ஒரு தரம் அடிபட்டது போதும் மேடம்... இன்னொரு முறை அடி வாங்க எனக்குச் சக்தி இல்ல... சொல்லுங்க, 'சரவணனுக்குக் காயம் அதிகமில்ல. சீக்கிரம் சரியாயிடுவார்'னு சொல்லுங்க. என்னால தாங்க முடியல மேடம்... கோபி மாதிரி சரவணன் எல்லாத்துலேயும் இருக்கணும்னு ஆசைப்பட்டது தப்புனு புரிஞ்சுக்கிட்டேன்... கோபி மாதிரி சரவணன் இருக்க வேணாம்... அவரைப் போல இவரும் என்னைத் தவிக்க விட்டுட்டுப் போகவேணாம்... எனக்கு சரவணன் வேணும் மேடம்...எ...எனக்கு...ச... சர...வணன்...வே...ணும்...அ...ம்மா...ஆ..."

உடைந்து போய் அழுதவளை அப்படியே அழவிட்டு யோசனையுடன் புருவங்களை உயர்த்தி, உதட்டை



மடித்தவர் ஏதோ சொல்வதற்காக வாயைத் திறந்தார். ஆனால் நொடியில் முடிவை மாற்றிக் கொண்டவர் போல எதுவும் பேசாமல் அழுபவளின் தலையைத் தடவிக் கொடுத்தார். தன் கண்ணோரங்களில் பூத்திருந்த நீர்ப் பூக்களைத் துடைத்துத் தனக்குத் தானே ஏதோ சொல்லிக்கொள்கிற நினைப்பில் தலையை அசைத்துச் சின்னதாக முறுவலித்தார்—பிறகு எதையும் காட்டிக் கொள்ளாமல் குனிந்து சித்ராவின் தோளைப் பற்றித் தூக்கினார்.

"அழறதால நடக்கப் போறது எதுவும் மாறிடப் போறதில்ல...எதுவானாலும் யதார்த்தத்த எதிர்நோக்கக் கத்துக்கணும்... தெளிவா சிந்திச்சு, நடக்க வேண்டியத செய்யறத விட்டுட்டு இங்க உட்கார்ந்துகிட்டு அழறதுல என்ன பிரயோஜனம் ம்ம்... கிளம்பு... சரவணனைப் பார்க்க வேணாமா?"

போட்டது போட்டபடி கிளம்பினார்கள்.

வாசலில் நின்றிருந்த டாக்ஸியில் ஏறி, அது கிளம்பின பிறகு, காரோட்டி இருப்பதை மறந்து, தாளமாட்டாமல் சித்ரா புலம்பினாள்.

"என்னால நிதானமா இருக்க முடியல மேடம்... நா என்ன பண்ணுவேன்... இரண்டு மணி நேரத்துக்கு முன்னால என் கையப் பிடிச்சுகிட்டு 'எதுக்கும் அனாவசியமா பயப்படாதீங்க, நல்ல கணவன் மனைவியா நாம வாழ்ந்து காட்டிட்டா, அப்புறம் எந்தத் தயக்கத்துக்கும், பேச்சுக்கும் இடமில்லை'னு சொன்னத மனசு வாங்காம 'என்னால முடியாது, கோ...கோபி மாதிரி என்னை நீங்க சரியா புரிஞ்சுக்காத வரைக்கும் எதுவும் நடக்க சாத்தியம் இல்லே'னு எடுத்தெறிஞ்சு பேசி ...னுப்பினது மனசை எகத்துக்கும் பிராண்டறது போறா

தன்னை இப்ப இங்கச் சேர்ப்பேனா... நா... நா..." மேலே பேச முடியாமல் அரற்றியவனை துர்கா அழுத்திப் பார்த்தார்.

"அல்ல அவன் மனைவியாவரா? அப்பமன்னா?"

சித்ரா முகத்தை இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டாள்.

"ஒரு மாசம் முன்னால 'நாம கல்யாணம் பண்ணிக்கலாமானு' சரவணன் என்னைக் கேட்டார் மேடம்..."

"நீ என்ன சொன்னே?"

"யோசிச்சுச் சொல்றேன்னு சொன்னேன்..."

"அப்புறம்?"

"இன்னிக்கு மறுபடி அந்தப் பேச்சு வந்தது...கோபி மாதிரி நீங்க என்ன முழுசா புரிஞ்சுக்காத வரையில், இது நடக்காதுனு... சொன்னேன்..."

"........"

விரட்டிக் கொண்டு எழுந்த அழுகையை அடக்கும் வேகத்தில் சித்ரா வாயைப் பொத்திக் கொண்டாள். மீறி எழுந்த கேவல்கள் ஊடே பேசினாள்.

"நா கோபி இல்ல, சரவணன்... இத ஞாபகம் வச்சிக்க... என் குணங்களோட நீங்க என்னை ஏத்துக்காத வரையில் மேற்கொண்டு இது விஷயமா பேசறது வேணாம்...னு சொல்லிட்டு... போ... போயிட்டார்...?"

"ஏனா? கோபி மாதிரி சரவணன் இருக்கணும்னு நீ ஆசைப்பட்டது நடந்திச்சு இல்லியா? அவனைப்போலவே



இவனும் விபத்துல சிக்கி, உயிருக்கு மன்றாடி... அவன் ஸ்தலத்துலேயே போயிட்டான்... இவன் இன்னும்..."

முடிக்கவிடாதபடி சித்ரா முன்னால் சாய்ந்து அவர் வாயைப் பொத்தினாள்.

"சொல்லாதீங்க... உங்க வாயால ஒருதரம் கூட அப்படிச் சொல்லிடாதீங்க... இனிமே தப்பித் தவறிக்கூட கோபிமாதிரி சரவணன் இருக்கணும்னு நினைக்க மாட்டேன் அவர் வேற; இவர் வேற; புரிஞ்சுகிட்டேன் ப்ளீஸ் மேடம்... எனக்கு ஆறுதலா ஏதாவது சொல்லுங்க, மனசு தெளியணும்னு அடிக்கடி சொல்விங்களே அப்படி இப்ப தெளிஞ்சு பேசறது புரிஞ்சுக்கிட்டு 'சரவணனுக்கு ஒண்ணும் இல்ல-அவர் நல்லா இருப்பார்'னு வாழ்த்துங்க ப்ளீஸ் மேடம் ப்ளீஸ்"

துர்கா அரற்றியவளின் கையைப்பற்றி, மென்மையாய்ப் புன்னகைத்தார்.

"ஓகே-சொல்றேன் நல்லா கேட்டுக்க...சரவணனுக்கு ஒண்ணும் இல்ல...நீங்க ரெண்டுபேரும் பல வருஷங்களுக்கு அமோகமா வாழப்போறீங்க... போதுமா?"

அழும் குழந்தையிடம் மிட்டாயை நீட்டியதும் வலியை மறந்து, அது சிரிப்பதுபோல துர்காவின் வார்த்தைகள் கேட்க இதமாக இருக்க சில கணங்களுக்கு சித்ரா கண்களை மூடி, தன்னை அமைதி படுத்திக் கொள்ள முயன்றாள்.

மேடம் சொல்வதுபோலச் சரவணனுக்குப் பெரிசாய் எதுவும் இல்லை-லேசான காயமாகத்தான் இருக்கும்... நான் கிட்டத்தில் இருந்து இவனைக் கவனித்து, பேணி...

வண்டி குலுக்கலுடன் வேகத்தடை ஒன்றைத் தாண்ட, சித்ரா கண்களைத் திறந்தாள். பரிச்சயமான சூழல்...

இடது பக்கம் திரும்பி, முதல் வீட்டு காம்பௌண்டுக்குள் வண்டி நுழைய, அடங்கியிருந்த படபடப்பு மீண்டும் அவசரமாய் தலை தூக்கியது.

சரவணனின் வீடு...

எதற்காக ஹாஸ்பிடலுக்குப் போகாமல் இங்கு எதற்காக அழைத்து வருகிறார்.

ஐயோ—எல்லாம் முடிந்து உடலைக்கூட வீட்டுக்கு எடுத்து வந்து விட்டார்கள் என்று அர்த்தமா?

"ஏ... ஏன்?... இங்கே வரோம் மேடம்?"

"எந்த ஹாஸ்பிடல்னு விவரம் தெரியல சித்ரா... இங்க யாராவது இருப்பாங்க... கேட்டுடலாம்..."

அப்பாடி, அவ்வளவுதானா?

சித்ரா பெருமூச்சை வெளியிட்டுத் தன்னை ஆஸ்வாசப்படுத்திக்கொள்ள முனைந்தாள்.

வீடு அரவம் எதுவும் இல்லாமல் நிசப்தமாய் இருந்தது.

சரவணனுக்கு சீரியஸ் என்றால் இங்கு ஜன நடமாட்டம் இல்லாமலா இருக்கும்?

இல்லை—அவருக்குப் பெரிசாக எதுவும் இல்லை. வண்டி நின்றதும் துர்கா இறங்கினார்.

"வா சித்ரா..."



"நீங்க போய்க் கேட்டுக்கிட்டு வந்திடுங்க... நா இங்கேயே இருக்கேன்... உடனே போயிடலாம் மேடம்..."

"ஒரு நிமிஷத்துல ஒண்ணும் ஆயிடாது; வாயேன்..."

மனமில்லாமல் சித்ரா இறங்கினாள்.

மூடி இருந்த வாசல் கதவிடம் சென்றதும் அவளை முன்னால் துர்கா நிறுத்தினாள். வாசல் மணியை அடித்து விட்டு, இரண்டடி பின்னால் தள்ளி நின்று கொண்டார்.

கதவு திறந்தது.

"ஹலோ..."

புன்சிரிப்புடன், வாட்ட சாட்டமாய் கதவை அடைத்துக்கொண்டு-யார்?

சரவணன்!

"கடவுளே?"

உரக்க முணுமுணுத்த சித்ரா, தன் கண்களை நம்ப முடியாதது போல எதிரில் நின்றவனை வெறித்துப் பார்த்தாள்.

பின், அவனுக்கு ஒன்றும் இல்லை என்கிற நிம்மதி சரசரவென்று, மனசு பூராவும் பரவினதில் மென்மையாக விசும்ப முற்பட்டாள்.

"இப்படியே நின்னுகிட்டிருந்தா? உள்ளே போகலாம் வாங்க... வா... சித்ரா..."

வரவேற்பு அறைக்குள் நுழைந்த சித்ரா, சுவரில் சாய்ந்து நின்றாள்.

"என்ன நாடகம் இதெல்லாம்" என்று கேட்கும் கோபப் பார்வையுடன் துர்காவை ஏறிட்டவள், ஈன குரலில் "எதுக்காக மேடம்?" என்றாள்.

துர்கா அவளையும், சரவணனையும் மாறி மாறிப் பார்த்தார்.. தீவிரமாய்ப் பதில் கூறினார்.

"எதுக்காகவா? உன்னை உண்மையை ஒத்துக்க வைக்கத்தான்...உன்னையே நீ சரியா புரிஞ்சுக்க வைக்கத்தான்..."

"அதுக்காக? அதுக்காக...இப்படியா கதைல வர்ற மாதிரி நா...நாடகமாடி...எ...என்னை..."

"இரு...இரு...முதல்ல நா எதுக்காக இப்படிச் செஞ்சேன்னு தெரிஞ்சுக்கிட்டு அப்புறமா கத்து...நா தடுக்க மாட்டேன்...ஆமா...கதைல வர்ற மாதிரிதான் ஒரு காட்சி நடத்த வேண்டி வந்திருக்கு...ஏன்? ஏற்கனவே சொன்ன மாதிரி உன்னை தெளிய வைக்கத்தான்...சரவணன் சாயங்காலம் என்னை வந்து பார்த்தான். உங்க நடுவுல நடந்த பேச்சு வார்த்தைகளைச் சொன்னான். 'சித்ரா என்னை விரும்பறா, ஆனா சமுதாயத்தைக் கண்டு பயப்படறா; தவிர, கோபி மாதிரி நா இருக்கணும்னு எதிர்பார்க்கறா எப்படி அவளுக்கு உண்மையை உணர்த்தறதுனு புரியலை'னு வருத்தப்பட்டுக்கிட்டப்போ-நா தான் சொன்னேன்-'இந்த மாதிரி சுயபச்சாதாப மனப்பான்மைல சிக்கி இருக்கறவங்களை அதுலேர்ந்து மீட்க 'அதிர்ச்சி வைத்தியம் உதவும்'னு...சரவணன் முதல்ல மறுத்தான், ஆனா நா வற்புறுத்தினப்புறம் ஒத்துக்கிட்டான்..."

சித்ரா கோபம் குறையாமலேயே குறுக்கிட்டாள்

"விளையாட்டா நீங்க நடத்தின நாடகம் என்னை எந்த அளவுக்குப் பாதிச்சுதுனு உங்களுக்குத் தெரியுமா?"

துர்கா வருத்தத்துடன் தெரியும் என்று தலை அசைத்தார்.



"ஏன் தெரியாம? அந்த மாதிரி பாதிக்கப்பட்டாதான் உண்மையை நீ உணருவேனு நா எதிர்பார்த்ததுதான் நடந்தது...எனக்குச் சரவணன் வேணும்...னு ஒத்துக்கிட்ட இல்லை; மனசுக்குள்ள அவன் மேல ஏற்பட்ட அன்பு இருந்தாலும், ஊர் உலகம் என்ன சொல்லுமோனு பயந்துகிட்டு வாழ்ந்தவளை எனக்கு அவன் வேணும்னு வெளிப்படையா ஒத்துக்க வச்சது பெரிய விஷயமில்லையா? மறுமணம்ங்கறது விளையாடற சமாசாரம் இல்ல சித்ரா...ஆனாலும், துணை தேவைன்னு தீர்மானிச்சிட்டா அதை மத்தவங்க வம்புப் பேச்சுக்குப் பயந்துகிட்டு வெளியிடாம இருக்கறது கோழைத்தனம். மறுமணம் செய்ய விரும்பறவங்க முதல்ல ஆற அமர யோசிக்கணும்...ஒரு முடிவுக்கு வந்திட்டா, எந்தத் தயக்கமும் இல்லாம காரியத்துல இறங்கி, தெளிவா இருக்க முயற்சிக்கணும்... இல்லேன்னா நாளைக்கே இதுவே ஒரு குத்த உணர்வை வளர்த்து வாழ்க்கைய நாசமாக்கிடும்...புரியுதா சித்ரா?"

புரிந்தது...

சித்ரா நிமிர்ந்து துர்காவை ஏறிடத் துணிவின்றிப் பார்வையைப் பூமியில் படரவிட, துர்கா தொடர்ந்தார்.

"மறுமணம் செஞ்சுக்கப் போறவங்க இன்னொன்னையும் புரிஞ்சுக்கணும் சித்ரா... யாரும் யாருக்கும் பதிலாக முடியாது... கோபி ஒரு நபர்னா சரவணன் இன்னொரு நபர்...'ஏ' எப்படி 'பி' ஆக முடியும்? 'ஏ' வேற, 'பி' வேற... திரும்பச் சொல்றேன்! எதுவும், யாரும் எந்த இழப்புக்கும் சரி கட்ட முடியாது. பதிலி ஆக முடியாது... இது புரிஞ்சிருந்தா கோபி மாதிரி இருக்கணும்னு நீ சரவணனைக் கட்டாயப்படுத்தியிருக்க மாட்டே..."

இப்போது சரவணன் பேசினான்.

"கோபியப் பத்தி மணிக்கணக்குல உங்களோட பேச நா ரெடி சித்ரா. உங்களைப் போலவே என் நெருங்க வேயும் அவருக்கு நா தனி இடம் தந்திருக்கேன்... ஆனா, பேசி, ரசிக்கறது வேற, ஒப்பிடறது வேற; இந்த ஒப்பீடு தான் கூடாதுனு நா சொன்னேன்... சில விஷயங்கள்ல கோபி என்னைவிட உயர்வானவரா இருக்கலாம், நா சில குணங்கள்ல கெட்டிக்காரனா இருக்கலாம். யாரையும் அவரவர் பலம், பலவீனங்களோடு ஏத்துக்கிடறதுதான் எந்த ஒரு உறவையும் சாஸ்வதமா நிலைக்கச் செய்யும்... இத நீங்க உணரணும்ன்றதுதான் என் ஆசை... மத்தப்படி உங்கள அழ வைக்கறதும், திடுக்கிடச் செய்யறதுல எங்க நோக்கமே இல்ல... ப்ளீஸ் அண்டர்-ஸ்டாண்ட்..."

துர்கா எழுந்து சித்ராவின் அருகில் வந்தார்.

குனிந்திருந்த தலையை நிமிர்த்திக் கண்களைத் துடைத்து விட்டார், புன்னகைத்தார்...

"அவ புரிஞ்சுக்கிட்டா சரவணன்—வாய் விட்டு ஒத்துக்கிட்டதுக்கு நானே சாட்சி—அப்படித்தானே சித்ரா? 'எனக்குச் சரவணன் வேணும், அவர் கோபி இல்ல'னு அப்ப சொன்னவ இப்ப மறுபடி சொல்லேன்... சரவணன் கேக்கட்டும்" என்றவர் சித்ராவின் முகத்தைப் பற்றி இருகன்னங்களிலும் மென்மையாய் முத்தமிட்டார்.

"ஸாரி—என் திட்டம் மூலம் உன்னை வருத்தப்பட வச்சதுக்கு என்னை மன்னிச்சுடு—ஆனா, எனக்கு வேற வழி தெரியல... நீ புத்திசாலி... பூரணமான வாழ்க்கை கைக்கெட்டுற தூரத்துல இருக்கறத புரிஞ்சுக்கிட்டு, அதுக்கேத்தபடி நடந்துகிட்டா நா சந்தோஷப்படுவேன்... ஆல் தி பெஸ்ட்..."

பேசியவர் அவர்களைத் தனித்துவிட்டுவிட்டு உள்



பக்கம் சென்றுவிட ஒரு நிமிஷம் முழுசாய் மௌனத்தில் நகர்ந்தது.

இரண்டு கைகளையும் மார்புக்கு மேல் குறுக்காகக் கட்டியபடி நின்றிருந்த சரவணன் மெல்லப் பேசினான்.

"வாழ்க்கைங்கறது ஒரு பயணம் சித்ரா—அதுல பள்ளம், மேடு திருப்பங்கள் எல்லாம் சகஜம்... இப்ப நீங்க ஒரு திருப்பத்துல நிக்கறீங்க... திரும்பினா மலையோட அடுத்த பக்கம்... அது நந்தவனம், நீர்வீழ்ச்சி நிறைஞ்சதா இருக்கலாம், இல்ல, பாலைவனமாவும் இருக்கலாம்... இந்தப் பயணத்தோட அனுபவங்கள் எதுவாக இருந்தாலும் அத உங்கள தனியா செய்யவிடாம நானும்கூட வரணும்ங்கறது என் விருப்பம்... பிடிக்குதோ பிடிக்கலையோ பயணத்த பாதில நிறுத்திட முடியாது சித்ரா... தொடர்ந்து போய்க்கிட்டேதான் இருக்கணும்... யாருக்கும், எதுக்கும் அனாவசியமா பயந்துகிட்டு பயணத்த நிறுத்திட எண்ணறது சரியான முடிவு இல்ல... நா சொல்றது சொல்லிட்டேன்... இனிமே உங்க இஷ்டம்..."

பேசியவன் என்கூட வரத் தயாரா இல்லியா, என்று கேட்கும் விதத்தில் வலது கையை அவளை நோக்கி நீட்ட—சித்ரா நிமிர்ந்து அவனைச் சலனமில்லாமல் ஏறிட்டாள்.

வாஸ்தவம்...

வாழ்க்கை என்பது ஒரு பயணம்தான்.

வழியில்லை என்று மறந்துவிட்டால் தான் பின் தங்கி விடுவதோடு, எனக்குப் பின்னே வரும் கூட்டம் என்னை மிதித்து நசுக்கிவிடும் அபாயமும் உள்ளது...

சரியான துணையோடு பாதுகாப்புடன் பயணத்தைத் தொடர்வது விவேகமா? அல்லது கண்டவர்களின் காலடியில் மிதிபட்டு அல்லல் படுவது உயர்ந்ததா?

மலையின் அடுத்த பக்கம்...

அது வாசம் மிகுந்ததாக இருக்கட்டும்; நல்லவை நிறைந்ததாக இருக்கட்டும்; நம்பிக்கை, மனஉறுதியுடன் பயணிக்க வைப்பதாக இருக்கட்டும்;

சித்ரா மெதுவாக நடந்து நின்றிருந்த சரவணன் கையைத் தாண்டி, மார்பில் முகத்தைப் பதித்துக் கொண்டாள்.

இரண்டு கைகளாலும், ஆரத் தழுவி, வகிட்டிலிருந்த காதலோடு அவன் முத்தமிட்டபோதும் அவள் மனசும் உடம்பும் சிலிர்த்தன, நெகிழ்ந்தன, நீருற்றுக்கள் வர்ண ஜாலத்துடன் உயரே உயரே எழுந்து நர்த்தனமாடின; சுநாதமாய் வீணைகள் இழைந்தன.

தலையைத் திருப்பி, ஜன்னலுக்கு வெளியில் பார்வையை அலைய விட்டபோது அலட்சியமாய் வெட்டிப் போடப்பட்ட நகத் துண்டாய் நிலா தென்பட்டது.

எங்கோ, ஒற்றையாய்ச் செல்லும் ஆட்டோ ரிக்ஷாவின் சத்தத்தையும் மீறிக்கொண்டு கவர்கோழியின் கத்தல் ஓங்கி ஒலித்தது.

மூச்சை நீளமாய் உள்ளுக்கு இழுத்து வெளியிடுகையில் தோட்டத்தில் மலர்ந்திருந்த பாரிஜாத மலர்களின் வாசம் நாசிவழியாகச் சென்று நெஞ்சை சுகமாய் நிறைத்தது

இரைச்சலும், கண்சிமிட்டும் சிகப்பு விளக்குமாய்த் தாழப்பறந்த விமானம் ஒன்று சில கணங்களுக்குக் கண்களைக் கட்டிப் போட்டுவிட்டு மெள்ள மறைந்தது

இயற்கையை ரசித்த அந்த நிமிஷத்தில் உறுதியால் தெளிந்துவிட்ட மனசு சந்தோஷமாக இருந்ததை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது.



புரிந்து கொண்டது சந்தோஷத்தை இன்னும் அதிகமாக்க, சின்னதாகப் புன்னகை ஒன்று அவள் உதட்டோரத்தில் ஜனித்தது.

சித்ரா, சரவணனின் பயணம் அமைதி நிறைந்ததாய் இருக்க வாழ்த்தி விடைபெறுகிறேன்.

30708
4691797